# ஸ்ரீ

# மஹாபாரத விடை

## இரண்டாம் பாகம்

பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய, ஸௌப்திக, ஸ்திரீ

பர்வங்களடங்கியது

APPROVED BY THE TEXT BOOK COMMITTEE


மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல் முதல் உதவிபோதகரான

ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி.,

அவர்கள் இயற்றியது.



சென்னை

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மயிலாப்பூர், மதராஸ்.

1918

Madras:
PRINTED AT THE VAIJAYANTI PRESS,
(MADRAS TIMES PRINTING & PUBLISHING CO., LD.)
BY
W. F. GRAHAME ESQ., I. C S. (RETIRED) AT 32, MOUNT ROAD.

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY.
THIRUVANMIYUR :: MADRAS-41

# அட்டவணை


| நெ. | விஷயம். | வினுக்கள். | பக்கம் |
|---|---|---|---|
| 6 | பீஷ்ம பர்வம் | 75 | 1 |
| 7 | துரோண பர்வம் | 70 | 51 |
| 8 | கர்ண பர்வம் | 37 | 103 |
| 9 | சல்லிய பர்வம் | 35 | 135 |
| 10 | ஸௌப்திக பர்வம் | 24 | 161 |
| 11 | ஸ்திரீ பர்வம் | 18 | 174 |
| | அனுபந்தம் | | 183 |


ஆக வினுக்கள் 259

# மஹாபாரத வினாவிடை

## 6-பீஷ்ம பர்வம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

மேவரு ஞானனந்த வெள்ளமாய் விதித்தோனாகி
மூவருமாகி யந்தமூவர்க்குள் முதல்வனாகி
யாவரும் யாவுமாகி இறைஞ்சுவா ரிறைஞ்சப்பற்ப
றேவருமாகிநின்ற செங்கண்மால் எங்கள்கோவே.

வினா 1:—இவ்வாறு பாண்டவ கௌரவாது ஸேனைகள் குருக்ஷேத்திர மைதானத்தில் ஒன்றிற்கு ஒன்று எதிராய்வந்து தண்டிறங்கியதும் ஹஸ்தினாபுரியில் என்ன நடந்தது?

விடை:—ஹஸ்தினாபுரியில் திருதராஷ்டிரனுக்கு வியாஸர் பிரஸன்னமாகி அப்பொழுது உண்டாகும் அபசகுனங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, விதிவசமாய் வரப்போகிற துரியோதனாதியாது நாசத்திற்கு வீணாய்வருத்தப்பட்டு பிரயோசனம் இல்லை என்றும், ஒருவேளை திருதராஷ்டிரன் நினைத்தால், துரியோதனாதியருக்கு புத்திமதி கூறி அப்பொழுதும் சண்டை நிறுத்தினாலும் நிறுத்தலாம் என்றும் புத்திமதி கூறினார். இவ்வளவும் சொல்லி சண்டையைப்பார்க்க இஷ்டமிருந்தால் திருதராஷ்டிரனுக்கு எல்லாம் இருந்த இடத்தே தெரியும்படி திவ்யஞானக் கண்ணைக் கொடுப்பதாகச் சொன்னார்.

வினா 2:—அப்பொழுது திருதராஷ்டிரன் என்ன செய்தான்? வியாஸர் அவனை விட்டுப்போகுமுன் என்ன செய்தார்?

விடை:—தன் பிள்ளைகள் அடித்துக்கொண்டிறபபதைக் காணத் தனக்கு இஷ்டமில்லை என்றும், ஆனால் அவைகளைப்பற்றித் தனக்கு கேட்க ஆவலாயிருக்கிறது என்றும் திருதராஷ்டிரன் சொல்ல, வியாஸர் ஸஞ்ஜயருக்கு அந்த திவ்ய சக்ஷுஸைக் கொடுத்து யுத்தத்தில் பார்த்தவைகளை திருதராஷ்டிரனுக்கு ஆதியோடு அந்தமாகச் சொல்லும்படி ஏற்பாடுசெய்தார். மேலும், யுத்தகளத்தில் அலையுங்கால் ஸஞ்ஜயருக்கு சிரமம் தட்டாமலும், ஆயுதம் முதலியவைகளால் காயமுண்டாகாமல் இருக்கும்படியாகவும், பிராணபயம் இல்லாமல் இருக்கும்படியாகவும்

வியாஸர் அனுக்கிரஹித்தார். இதன் பின்பு திருதராஷ்டிரன் வேண்டுகோளின்படி ஜயம் வருங்கால் காணப்படும் சகுனங்களை விவரித்துச் சொல்லிவிட்டு வியாஸர் தமது இருப்பிடம் சென்றார்.

வினா 3:—பின்பு ஸஞ்ஜயர் என்ன செய்தார்?

விடை:—வியாஸர் மறைந்ததும், முதலில் ஸஞ்ஜயர் திருதராஷ்டிரனுக்கு பூமியின் மஹத்வம், பாரதவருஷத்தின் வர்ணனை, யுகலக்ஷணம் முதலியவைகளைப்பற்றிச் சொல்லி, யுத்தபூமிக்கு யுத்தம் தொடங்கியபின்பு போய் நடப்பவைகளை எல்லாம் வியாஸ ரனுக்கிரஹத்தால் பார்த்து அடிக்கடி வந்து திருதராஷ்டிரனுக்கு உள்ளபடி நடந்தவைகளை வெளியிட்டுக்கொண்டு வந்தார். (யுத்தபாகங்கள் முழுவதும் ஸஞ்ஜயர் திருதராஷ்டிரனுக்கு சொல்லிய மாதிரியாக பாரதத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.) இவ்வாறு வியாஸரனுக்கிரஹ மூலமாய் திருதராஷ்டிரனுக்கு இந்த உபகாரத்தை ஸஞ்ஜயர் செய்தார்.

வினா 4:—சேனைகள் எல்லாம் எவ்வாறு தயாராயின? அப்பொழுது இருபக்கத்திலும் என்னென்ன ஏற்பாடுகள் நடந்தன?

விடை:—இருதிறத்தாரது சேனைகளும் வந்து நின்றதும், துரியோதனன் துச்சாஸனனை நோக்கி வெகு ஜாக்கிரதையாய் சிகண்டிக்கும் பீஷ்மருக்கும் சண்டை நேர்ந்து பீஷ்மர் இறக்கும்படி வாராத வண்ணம் பீஷ்மரை பாதுகாக்கும்படி கட்டளையிட்டான். இதன் பின்பு பாண்டவர்களுக்கு நியாயமாய் ஜயம் வரவேண்டுமென்று மனதார பிரார்த்தித்துக்கொண்டு சோற்றுக்கடனைத் தீர்ப்பதற்காக பீஷ்மர் ஸகல அரசர்களையும் முன் வைத்த அடியைப் பின்வைக்காது பாண்டவர்களோடு சண்டை செய்யும்படி உத்ஸாகப்படுத்தினார். பீஷ்மர் துரோணர் முதலியோர் பதினொரு அக்ஷௌகிணி சேனைகளையும், விதம் விதமான வியூகங்களாக ஒழுங்குபடுத்தி நிறுத்த அதற்கேற்பப் பாண்டவர்களும் தமது அற்பமாகிய ஏழு அக்ஷௌகிணி சேனைகளையும் ஒரே வச்சிரவியூகமாக ஒழுங்குபடுத்தி நிறுத்தினார்கள்.

வினா 5:—இவ்வாறு வியூகமாகி இருபுறமும் நிற்க, பாண்டவர்கள் பக்கத்தில் என்ன விசேஷம் நடந்தது?

விடை:—இவ்வாறு வியூகமாகி இருபுறமும் நிற்பதைக் கண்டு யுதிஷ்டிரருக்குத் தமக்கு ஜயம் எவ்வாறுகிடைக்கும், துரியோதனுதி

யாது ஸேனையை எவ்வாறு தம்மால் கொல்லமுடியும் என்ற ஏக்கம் பிடிக்க, அப்பொழுது அர்ஜுனன் தருமபுத்திரரை நோக்கி, 'நியாயம் இருக்கும் இடத்தில்தான் ஜயம் வரும். மேலும் கிருஷ்ணபகவான் சேர்ந்திருக்கும் பக்கத்திற்கு ஜயம் வருவதற்கு என்ன ஸந்தேகம். ஸேனைகள் அதிகமாய் உடையவனுக்கே ஜயம் அவசியம் வரும் என்பது உண்மையல்ல,' என்று பலவாறாக எடுத்துச்சொல்லித் தேற்றினான். எல்லாத் தம்பிமார்களும் தமது ரதத்திலிருந்து சோபிக்கையில் கிருஷ்ண பகவான் அர்ஜுனனை நோக்கி, யுத்தத்தில் ஜயம் பாண்டவர்கள் பக்கம உண்டாவதற்காக துர்க்கையை ஸ்தோத்திரம் செய்யும்படி ஏவினார். அர்ஜுனன் அவ்வாறுசெய்ய, துர்க்கை பிரஸந்நமாகி கிருஷ்ணஸகாயம் உடைய உனக்கு ஜயம அவசியம் கிடைக்கும்' என்று அனுக்கிரஹித்து மறைந்தாள்.

## பகவத்கீதை

வினா 6:—இவ்வாறு அனுக்கிரஹம் பெற்று ஸந்தோஷமாய் இருந்த அர்ஜுனனுக்குத் திடீரென்று என்ன துக்கம் ஏன் உண்டாயிற்று?

விடை:—இவ்வாறு ஸந்தோஷமாய் அர்ஜுனன் இருக்கையில், இருதிறத்தாரும் தமது சங்கங்களை ஊதத்தொடங்க, யுத்தகளம் முழுவதும் ஏகசப்தமாய் விட்டது. அப்பொழுது அர்ஜுனன் பகவானை நோக்கி, துரியோதனனுக்கு ஸஹாயமாய் வந்திருப்பவர்களைப் பார்ப்பதற்காக தனது இரதத்தை இருதிறத்தாரது ஸேனைகளின் மத்தியில் கொண்டுபோய் நிறுத்தும்படி கேட்டுக்கொள்ள, பகவான் அவ்வாறே செய்தார். அப்பொழுது அர்ஜுனன் துரியோதனாதியர் ஸேனைகளின் பக்கம் கண்ணெடுத்துப் பார்த்தான்! அவன், கண்ணுக்கு எட்டியவரை சாகத்தயாராய் வந்து நிற்பவர்கள் யாவரும் அவனைது கிட்டின உறவினர்களாகவே இருப்பதைக்காண, தன்னையறியாமல் அவனுக்கு அப்பொழுது துக்கம் வந்துவிட்டது. அவன் அப்பொழுது பிரமை பிடித்தவன்போல் விழிக்கத் தொடங்கினான். அசைவற்று, நின்றுவிட்டான். 'அநியாயமாய் நமது உறவினர்கள் எல்லோரையும் கொன்றுவிட்டு நாம் இராஜ்யம் ஆளாவிட்டால் என்ன? யுத்தத்தால் தீங்குவிளையுமே ஒழிய நன்மை ஒன்றும் இல்லை' என்ற இம்மாதிரியான எண்ணங்கள் அவனுக்கு அப்பொழுது

உண்டாக, அவன் தேகம் பதறியது. அவனுக்கு சோர்வு உண்டாயிற்று. அவன் வில் கை நழுவி விழுந்தது. 'என்னைத் துரியோதனாதியர் இப்பொழுதே கொன்றுவிட்டாலும் எனக்கு ஸம்மதம், நான் அவர்கள்மேல் ஒரு பாணத்தையும் போடமாட்டேன்' என்று அலறிக்கொண்டு அர்ஜுனன் தேர்த்தட்டில் சாய்ந்து விட்டான்.

வின 7:—அப்பொழுது பகவான் என்னசெய்தார் ?

விடை: —அர்ஜுனனது துக்கத்தை பரிஹாஸம் முதலியவைகளால் விளையாட்டாகத் தீர்த்து பரிஹாஸ மூலமாயே அவனுக்கு யுத்த வெறி வரும்படி செய்துவிடலாம் என்று வழக்கம்போல் அவனை ஆண்மையற்றவன், எதிரிகளுக்கு பயந்தோடும் பேடி என்று பலவாறாக பகவான் கேலிபண்ணிப் பார்த்தார். இவைகளால் ஒன்றும் பயன்படாதது கண்டு, லோகத்தில் தர்மத்தை நிலைநிறுத்தும் ஸமயம் வந்துவிட்டது என்று அறிந்தவராய் அப்பொழுது புன்னகையுடன் பகவான் அர்ஜுனனை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு கீதையை உபதேசித்தார். (அந்த கீதாசாஸ்திரம் பதினெட்டு அத்தியாயங்களை உடையது. அதில் முதல் அத்தியாயத்திற்கு அர்ஜுனன் துக்கம் என்று பெயர். அதை நாம் முன்னமே கூறியாய்விட்டது. அந்த கீதா சாஸ்திரத்தின் இரண்டாம் அத்தியாயத்தின் ஆதியில் பகவான் அர்ஜுனனைப் பரிஹாஸம்செய்து திருப்பிவிடமுயன்றார்.)

வின 8:—கீதை இரண்டாம் அத்தியாயத்தின் பெயரும் அதில் அடங்கி இருக்கும் விஷயத்தின் சுருக்கமும் என்ன ?

விடை:—இரண்டாம் அத்தியாயத்திற்கு ஸாங்கிய யோகம் என்று பெயர். பகவான் பெரிதான துக்கத்தால் மதிமயக்கத்தில் விழுந்த அர்ஜுனனை நோக்கி அது சீக்கிரத்தில் தெளியும் பொருட்டு எவ்விடத்திலும் பரவி எல்லா ஜீவராசிகளிடத்தும் இருக்கும்படியான ஸத்தாகிய ஆத்மாவின் லக்ஷணத்தை, அவன் கேட்காமலிருக்கும்போதே வெகு சிறப்பாய் எடுத்துரைத்தார். இதனால் அர்ஜுனன் மனம் ஒருவாறு ஸ்தப்தமாகி யுத்தாதிகளை மறந்ததும் அவன் க்ஷத்திரிய தர்மப்படி சண்டைசெய்தே தீரவேண்டும் என்று எடுத்துரைத்து, கர்மயோகம் தகுந்தபடிசெய்தால், அது இவ்வாறு ஸாதாரண ஜனங்களை முடிவில் மோக்ஷம் அடையும்படி செய்யும் என்றும், இம்மாதிரி தருணங்களில் ஞானிகள் நடந்து

கொள்ளும் விதம் இன்னபடி என்றும், ஆகையால் அவ்வாறே அர்ஜுனனும் செய்யவேண்டும் என்றும் வற்புறுத்தினர். இதன்பின்பு அர்ஜுனன் ஸ்திர மனமுடைய ஸ்திதப் பிரஞ்ஞர்கள் எவ்வாறு இருப்பார்கள் என்று கேட்ட கேள்விக்கு, அவர்கள் உள்ளத் துறவுடையவர்களாயும், துவந்துவ பாவங்களிலிருந்து விடுபட்டவராயும், மனோ நிரோதம் பூர்ணமாய் உடையராயும், பிரபஞ்சாதிகளை பொய் என்றும் பிரம்மமாகிய பரம்பொருளை மெய்என்றும் ஸதாகாலமும் திருஷ்டியை உடையவராயும், உலகவிஷயங்களால் அசைக்க முடியாது ஆத்மானந்தத்தில் ஸதா இருப்பவராயும், காணப்படுவார்கள் என்றும், அவர்களிருக்கும் நிலையே பிரம்மநிலை என்றும், அதில் ஒருவன் சாகும் தருணத்திலாவது சற்று இருப்பானே யானல், அவனுக்கு மோக்ஷமே ஸித்திக்கும் என்றும் விஸ்தாரமாய் விடைகூறினர்.

வி 9:—இந்த அத்தியாயத்தில் மஹானை எவ்வாறு வர்ணிக்கப் பட்டிருக்கிறது?

விடை:—இதில் மஹானை ஸ்திதப்ரஞ்ஞனைப் பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'மனத்திலுள்ள காமாதிகளை அறவே விட்டு தன்னுள்ளேயே ஆத்மதிருப்தி உடனிருப்பவனே ஸ்திதப்ரஞ்ஞன் எனப்படுவான். துக்க காலங்களில் மனச்சஞ்சல மற்றவனும், ஸுக காலங்களில் மனம் பற்றில்லாதவனும், ராகம், பயம், கோபம் ஆகிய இவைகளிலிருந்து விடுபட்டவனுமாய் இருப்பான் அவன்.

எவ்விதப் பற்றுமின்றி, சுபாசுபங்கள் வந்தபோதிலும், விருப்பு வெறுப்பு அற்றவனாய் இருப்பவன் புத்தியே ஸ்திரமாயுள்ளது. அபாயகாலங்களில் தன்னை அறியாமலே தனது அங்கங்களை உள்ளிழுத்துக்கொள்ளும் தன்மைவாய்ந்த ஆமையின் குணத்தைப்போல, விஷய ஸம்பந்தப்படுங்கால் இந்திரியங்கள் முதலியன அந்தர்முகப்படும் குணமாகிய கூர்மவிருத்தி வாய்ந்த மஹானது புத்தியே ஸ்திரப்பட்டிருப்பது என்று கூறலாம்.

'விஷயங்கள் ஸாதாரணமாக ஒதுங்குபவரை வந்து அதிகமாகத் தாக்காவிடினும், விஷய ஆசை பரம்பொருளை உணர்ந்தக் கால்தான் முற்றிலும் நீங்கும். சஞ்சலமண்டையும் இந்திரியங்கள் அறிவுடையோர் முயற்சியை வீணாக்கி அவர் மனதை வேறு விஷயங்களில் இழுத்துச் செல்லும். இவைகளை எல்லாம் அறவே

அடக்கி, இந்திரியங்களை எல்லாம் தகைந்து பரமாகிய என்னை உணர்ந்து நிற்பவன் புத்தியே ஸ்திரப்பட்டிருப்பது.

'விஷயத்தை நினைத்ததும், அதனுடன் ஸம்பந்தம் ஏற்படுகிறது, இதனால் முறையே காமம், கோபம், மோஹம், அறிவு மயக்கம், புத்தி நாசம் முதலியவைகள் உண்டாகி ஸாதகன் அதோகதி யடைகிறான். ஆதலால் விஷயங்களுக்கிடையிலிருந்தும் விருப்பு வெறுப்பின்றி அடங்கிய விருத்தியுடையவன் சாந்திபெறுவன். இதனால் துக்க நிவிருத்தியும், ஸ்திரபுத்தியும் உண்டாகிறது.

'அயுக்தர்களுக்கு (தகாதவர்களுக்கு) புத்தி, பாவனைமுதலியவைகள் இல்லாமல்போக இவர்களுக்குச் சாந்தி ஏற்படாது, இவர்களுக்கு எப்படி ஸுகம் ஏற்படும்? சஞ்சலமான இந்திரியங்களுக்கு மனம் வசப்பட்டுவிட்டால் கடலில் புயல்காற்றுள் அகப்பட்ட கப்பல் கதி அதற்கு வந்துவிடும். ஆதலால் இந்திரியம் அடங்கப்பெற்றவர் புத்தியே திடப்பட்டது என்னலாம்.

'எல்லோருக்கும் இருளாக (விளங்காததாக) இருக்கும் பரமநிலை ஸ்திதப்ரஞ்ஞனுக்குப் பட்டப்பகல்போலவும் (நேரிட அறியக்கூடியதாகவும்); எல்லோருக்கும் பட்டப்பகல் போலவிருக்கும் உலகநிலை அவனுக்கு இருள்போலவும் காணப்படும். பாயும் ஆறுகளால் பூரிக்காத கடல்போல, தாக்கும் ஆசைகளால் அசையாத தன்மை வாய்ந்தவனே சாந்தி பெறுவன். ஆதலால் ஆசையைவிட்டு மற்ற அகங்காரம் மமகாரம் நீங்கப்பெற்றவனே சாந்தி பெறுவன். இதுதான் பரமநிலை; இதை அடைந்தவன் குழம்புவதில்லை. முடிவுகாலத்தில் இதில் நிலைபெற்ற போதிலும் பிரஹ்ம நிர்வாணத்தை அடைவான்.'

வினா 10:—கீதையின் மூன்றாவது அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இதற்கு கர்மயோகம் என்று பெயர். அர்ஜுனனுக்கு ஆத்மலக்ஷணத்தை உணர்ந்து ஞானியாதல் மேலானதா அல்லது யுத்தம் முதலிய கோரகர்மங்கள் செய்வது மேலானதா என்ற ஸந்தேகம் வர, அதற்கு பகவான் ஞானயோகம், கர்மயோகம் என்ற இரண்டு மார்க்கங்கள் துறவறத்தார் இல்லறத்தார் முறையே மோக்ஷம் எளிதில் அடைய ஏற்பட்டவழிகள் என்றும், அதில் அர்ஜுனன்போன்ற பரபரப்பான மனமுடைய கிரஹஸ்தர்களுக்கு கர்மம்செய்யாது விடுதல் மஹாபாபமேஹது

என்றும் ஆகையால் கடமைப்படி கர்மத்தைப் பலத்தில் இச்சை விட்டு ஈசுவரார்ப்பணம் செய்து, செய்வதே மேல்என்றும், ஆனால் ஞானியைக் கர்மம் பந்தப்படுத்தாதபோதிலும் அவன் லோகோபகாரார்த்தமாக கர்மங்களை ஒரு நோக்கமுமின்றி செய்துகொண்டிருப்பான் என்றும், ஆகையால் அவனே அவ்வாறு செய்யுங்கால் இல்லறத்தான் அதை செய்யாது ஒருநாளும் விடக்கூடாதென்றும் எடுத்துரைத்தார். அப்பொழுது அர்ஜுனன் ஸாதாரணமாய் கடமையான கர்மங்களைச் செய்தும் ஒருவன் எதனால், தன்னால் தடுக்க முடியாமலே, பாபங்களைச் செய்யவேண்டி வருகிறது என்று கேட்க, பகவான் ஞானிகளுக்கு ஸதா விரோதியாகிய காமக்குரோதாதிகளே இதற்குக் காரணம் என்றும், அவைகளுக்கு இருப்பிடம் தேகம், இந்திரியம் மனம் புத்தி என்றும், இதில் முன்னதைவிடப் பின்னது முறையே அதிஸூக்ஷ்மம் என்றும் இவைகளை எல்லாவற்றையும்விட ஸூக்ஷ்மமாயும் சிறந்ததாயும் உள்ளது ஆத்மா என்றும், அதை உள்ளபடி அறிந்து, அடக்குவதற்கு அரிதாகிய காமக்ரோதாதிகளை எளிதில் விலக்கலாம் என்றும் மறுமொழி கூறினார்.

வினா 11:—இதில் மஹான் எவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறான்?

விடை:—இங்கு அவன் க்ருதகிருத்யனாகக் கூறப்படுகிறான்.

'இவ்வுலகில் கர்மகதியைப் பின்பற்றி செய்யவேண்டிய கர்மங்களை செய்யாது இந்திரியங்கள் மூலமாக போகங்களை விடாது அனுபவித்து எவன் அழுந்துகிறானோ அவன் வாழ்க்கை வீணே. ஆனால் ஆத்மாவினிடத்தே உள்ளக்கிளர்ச்சி, திருப்தி, தடையற்ற ஆனந்தம் முதலியவைகள் உடையவன் எவனோ, அவன் செய்யவேண்டிய கர்மம் ஒன்றுமே இல்லை. செய்கை செய்யாமை என்பவற்றால் அவனுக்கு ஆவதும் ஆகாததும் ஒன்றுமில்லை. அவனுக்கு ஆகவேண்டிய காரியம் எந்த வஸ்துவையும் பொருத்ததல்ல. ஆகலால் நீ செய்யவேண்டிய கர்மத்தைப் பற்றில்லாது செய்; இவ்வாறு செய்தால் மேலான (க்ருதக்ருத்ய) நிலையை நீ அடைவாய்.'

வினா 12:—நான்காம் அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—அதற்கு ஞானயோகம் என்று பெயர். இதில் பகவான் அர்ஜுனனுக்கு துஷ்ட நிக்கிரகம் சிஷ்டபரிபாலனம், தர்மத்தை

நிலைநிறுத்தல் ஆகிய இந்த நோக்கங்களோடு, அதர்மங்கள் மேலிடுங்கால் தாமே மானிட உருக்கொண்டதுபோன்ற தோற்றத்தை உண்டாக்கி அவதரிப்பதாகவும், தாமே குணகர்ம வேறுபாட்டின்படி ஜாதிவர்ணாசிரமங்களை உண்டாக்கியபோதிலும், அவ்வாறு செய்ததின் கர்திருத்வாதி பந்தங்கள் தமக்கு இல்லை என்றும், இவ்வாறு கர்திருத்வாதிகளைப் பாராட்டாது கடைமைபட்டிருக்கும் கர்மங்களை செய்யும் ஒவ்வொருவனுக்கும் கர்ம பந்தம் கிடையாது என்றும் எடுத்துரைத்தார். இதன் பின்பு, ஆத்மாவின் அஸங்கரூபம், கர்திருத்வாதிகளால் பாதிக்கப்படாத நிலை ஆகிய இதையும், தொழில் செய்யாதிருக்கும் ஸ்திதியும் தொழில்செய்யும் ஸ்திதியைப்போல ஆத்மாவின் தர்மமல்ல தேகதர்மமே என்று அறியும் ஞானியே கர்மம் அகர்மம் ஆகிய இவைகளை உண்மையாய் அறிந்தவன், அவனது கர்மங்கள் எல்லாவற்றையும் 'ஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்கும்' அவனுக்கு கர்மபந்தம் எப்பொழுதும் வரமாட்டாது, அவன் கிட்டினவைகளைக்கொண்டு திருப்தி அடைவான், கேவலம் தேகம், தானே நழுவி விழும்வரையில் அது நிற்பதற்கு வேண்டிய கர்மங்களும் லோகோபகார கர்மங்களுமே அவனிடமிருக்கும், என்பதையும் பகவான் உரைத்து, யஞ்ஞத்தில் ஸம்பந்தப்பட்டவைகள் யாவும் பிரம்மம் என்று ஞானி அறிவான். உலகத்தில் அநேக யஞ்ஞங்கள் நடக்கின்றன, அவைகள் எல்லாவற்றையும்விட ஞான யஞ்ஞமே சிரேஷ்டம், அதை ஆசாரிய சிச்ரூஷை, வணக்கம், விசாரணை ஆகிய இவைகள் மூலமாய் அறியவேண்டும், இவ்விஷயங்களில் பக்தி சிரத்தை உள்ளவனுக்கே மோக்ஷம் ஸித்திக்கும், ஸந்தேகம் உடையவனுக்கு கதியே இல்லை, ஆகையால் ஞானமாகிய கத்தியால் ஸந்தேகத்தை சின்ன பின்னமாக்கி கர்மயோகம் நீ செய்யத்தொடங்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

வினா 13:—இந்த அத்தியாயத்தில் மஹான் எப்படி வர்ணிக்கப்படுகிறான்.

விடை:—இதில் ப்ரஹ்மஞானியாக அவன் பின்வருமாறு வர்ணிக்கப்படுகிறான்.

கர்மத்தில் அகர்மத்தையும் (தொழில் நடக்குங்காலும் ஆத்மா மாறாதவன் என்பதையும்) அகர்மத்தில் கர்மத்தையும் (செயலற்றிருப்பதும் ஓர்விதத் தொழில் என்பதையும்) உள்ளபடி

காண்பவன் எவனோ அவனே ஞானி, ஞானநிஷ்டை கைகூடி யவன். கர்மங்கள் எல்லாம் செய்து முடித்தவன். ஆசை அபி மானம் நீங்கியதும், ஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்கியது மான கர்மங்கள் எவனிடமுளவோ அவனே பண்டிதன். கர்ம பலத்தைக் கவனியாது, மாறாத்திருப்தி உடையவனாகி எதை யும் தனக்குத் தாக்காகக் கொள்ளாமல் அவன் எந்தக்கர்மங்கள் செய்தபோதிலும் அவன் செயலற்றவனே. ஒன்றையும் எதிர் பாராதவனாய், மனம் முதலியவைகளை அடக்கி, தனதானவை கள் எல்லாவற்றையும் விட்டு, தேஹதாரணமாத்திரமாக இவன் செய்யும் கர்மங்களால் இவனுக்குப் பாபம்ஒன்றும் ஏற்படாது. கிடைத்ததைக்கொண்டு திருப்தியாகியும், துவந்துவங்களுக்கு அப்பாற்பட்டவனாகியும், பொறாமையற்றவனாயும் காரியம் கை கூடினும் கூடாவிடினும் ஒரேமாதிரி இருப்பவனாகியும், உள்ள இவனை எந்தக் கர்மந்தான் பந்தப்படுத்தும்? பற்றில்லாது, விடு பட்டு, ஞானத்தில் நிலைபெற்று இருப்பதால் இவன் செய்யும் யாகம் கர்மம் முதலியன ஒடுங்கி விடுகின்றன. எந்தக் கர்மம் செய்தபோதிலும் அர்ப்பிப்பது ஹவிஸ் அக்னி ஆஹுதி, யஜ மானன், முடிவுஎல்லாம் பிரஹ்மம், இம்மாதிரி முடிவுபெறக் கூடிய யாகங்கள் வேதத்தில் அநேகம் உள. விஷய ஸம்பந்த மாகச் செய்யக்கூடிய இவ் யாகங்கள் எல்லாவற்றிலும் ஞான யஞ்ஞமே சிறந்தது. (அதை உள்ளபடி உணர்ந்தவன் இந்தப் பிரஹ்மஞானி.)

வி௫ 14:—ஐந்தாம் அத்தியாயத்தின் பெயரும் அதில் அடங்கி இருக்கும் விஷயமும் என்ன?

விடை:—இந்த அத்தியாயத்திற்கு ஸந்யாஸயோகம் என்றுபெயர். இதில் அர்ஜுனனுக்கு கர்மத்தை விட்டுவிடுதல் மேலானதா, கர்மம் செய்தல் மேலானதா என்ற ஸந்தேகம் வந்தது. மறுபடி அப்பொழுது பகவான், அர்ஜுனனைப் போன்றவர்களுக்குக் கர்மம் செய்வதே மேல் என்றும், இராகத்துவேஷாதிகளைவிட்ட வனே கர்மத்தை விடத்தகுந்தவன் என்றும் ஞானயோக கர்ம யோகங்கள் இரண்டும் ஒரே முடிவிற்கு ஏற்பட்ட வழியின் இரண்டு பாகங்கள், ஆகையால் எதைக் கடைப்பிடித்தபோதி லும் முடிவு கைகூடும் என்றும், இந்த ரகஸியத்தை அறிந்த வனே ஞானி என்றும், இந்த கர்மயோகம் செய்பவன் காலக் கிரமத்தில் பரமபதம் அடைவான், கர்மத்தை விட்டு மோக்ஷ

மடைவது மிகுந்த கஷ்டமானவழி; கர்மயோகம் செய்து முதிர்ந்த யோகிக்கு எல்லாம் இந்திரிய தர்மம் ஆத்மதர்மம் அல்ல என்ற ஞானம் இருப்பதால், இவனை ஒரு கர்மமும் பந்தப்படுத்த மாட்டாது. இவன் 'தாமரை இலைத் தண்ணீர்போல் ஜகத்துடன் கூடிவாழ்வான்' என்றும் எடுத்துரைத்தார். அதன் பின்பு கர்மயோகிகள் சித்தசுத்தியின்பொருட்டு திரிகாணங்களாலும் கர்மங்களை யோகமார்க்கப்படி முதலில் செய்வார்கள். இவர்களுக்கும் தேகம் வேறு நாம் வேறு என்ற ஞானம் பின்னர் வரும். இதனால் இவர்களுக்குப் பரம்பொருள் ஸதா தோன்றும், இவர்களுக்கு மறு பிறப்பில்லை, இவர்களுக்கு எல்லாம் ஸமமாய்த் தோன்றும், இவர்கள் பந்தத்திலிருந்து விடுபட்டிருப்பார்கள், இவர்கள் ஸதா நிரதிசய பிரம்மானந்தம் அனுபவித்துக் கொண்டிருப்பதால் இவர்களுக்கு சிற்றின்பங்கள் துச்சமாய்த் தோன்றும், இவர்கள்தான் சாகும்தருணம் வரை காமக்குரோத வேகத்தை தடுக்கவல்லவர்கள். இவர்களுக்கு எப்பொழுதும் எங்கும் ஆனந்தமாகவேதான் இருக்கும் என்று கர்மயோகத்தினுல் முதிர்ச்சி அடையும் ஞானியின் மேன்மையை பகவான் விளக்கினுர்.

வினு 15:—இந்த அத்தியாயத்தில் மஹான் எப்படி வர்ணிக்கப்பட்டிருக்கிறுன்?

விடை:—அவன் ஸந்யாசி என்றும் ஸமதர்சி என்றும் வருமாறு வர்ணிக்கப்படுகிறுன். எவன் விருப்பு வெறுப்பு அற்றவனுக இருக்கிறுனே, அவன் துவந்துவங்களிலிருந்து நீங்கி, கர்மபந்தத்திலிருந்து விடுபடுவன். அவன் கர்மயோகத்தில் தேர்ந்து பரிசுத்தனுகி, தேஹேந்திரியங்களை அடக்கி, தன் ஆத்மாவையே எங்கும் நிறைந்துள்ள ஆத்மாவாகக் கண்டவனுதலால் என்ன செய்தபோதிலும், அவனை ஒன்றும் ஒட்டாது உண்மையை உணர்ந்து தேர்ந்தவன், பார்த்தல் முதலிய ஞானேந்திரியத் தொழில்கள், பேசுதல்முதலிய கர்மேந்திரியத் தொழில்கள், தூக்கம் முதலிய மற்றைத் தொழில்கள், ஆகிய இவைகளுள் எது நடந்தபோதிலும், 'இந்திரியங்கள் விஷயங்களுள் உலாவுகின்றன! நான் செயலற்று நிற்கிறேன்!' என்று மதித்திருக்கவேண்டும். எவன் பகவத்பரமாக விருந்து கர்மம் செய்கிறுனே, அவன், தண்ணீரிலிருந்தும் தாமரை இலை நனையாதிருப்பதுபோலத் தாக்கற்றே நிற்பன். இவன் கர்மம் செய்

யுங்கால் அவைகளின் பலனைக் கவனியாது கடமையாகச்செய்து விடுவதால், இக்காலத்தும் நிஷ்டையின் பலனாகிய ஒழிவு இவனிடம் குடிகொண்டிருக்கும். மனத்தில் எல்லாக் கர்மங்களிலும் உள்ள பற்று நீங்கிவிட செய்பவன், ஏற்பவன் என்ற எண்ணம் நீங்கப் பெற்று இந்த நவத்வார நகரத்தில் ஸுகமாக அசைவற்றிருப்பான்.

ஸாங்கியத்திற்கும் யோகத்திற்கும் உள்ள பேதத்தை ஒரு பொருட்டாக மதியாது, இவைகளுள் ஒருவன் எதைப் பின்பற்றியபோதிலும் இரண்டன்முடிவும் கைகூடிவிடும் என்று காண்பவனே உள்ளபடி காண்பவன். பரம்பொருளிலேயே புத்தியுடையவனாகி, அதையே ஆத்மாவாகக்கொண்டு, அதையே சரணம் புகுந்தவன் ஞானத்தால் மனோபாவங்கள் தேயப் பெற்று, மீளாநெறி எய்துவன். இவன், ஒழுக்கமுடைய வேதியன், பசு, யானை, நாய், நாய் மாம்ஸம் உண்போன் ஆகிய இவர்களிடத்து எல்லாம்ஒன்றையேகாணும் பண்டிதன், பிரஹ்மம் பொதுவாகவிருப்பதால், மனம் நடுநிலை பெற்ற இவன் ஸந்தோஷம், துக்கம் இவைகளுக்கு ஆளாக முடியாது. வேறாகித் தனித்துத் தொடங்கி முடியும் குணமுள்ள வெளிவஸ்துக்கள் ஸம்பந்தமான ஸுகம் துன்பமே யாதலால் வெளிப்பற்றற்று, ஆத்மஸுகம் அடைந்து, எல்லாவற்றின் ஸுகத்தையும் பாவிப்பதால் இவன் பிரஹ்மானந்தத்தில் மூழ்குவன். இதனால் ஆசை சினம் இவைகளின் வேகம் இவனுக்கு ஒரு பொருட்டேயில்லை.

வினா 16:—ஆறும் அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இதற்கு தியானயோகம் என்று பெயர். கர்மயோகம் தியானத்திற்கு முதல் அங்கம். மனோ நிரோதம் இரண்டாம் அங்கம். மனது வழிப்பட்டு அடங்கி நிற்குங்கால், அது நமக்கு ஒரு ஸ்நேகிதன் போன்றது; சலித்துக்கொண்டு இருக்குங்கால் அதுவே நமக்கு விரோதி. இம்மனோ நிரோதத்தால் யோகிக்கு ஸ்திதபிரஞ்ஞையும் ஸ்திதப்பிரஞ்ஞன் லக்ஷணங்களும் எளிதில் உண்டாகும். தனிமையாய் ஓரிடத்தில் ஸுகாஸனத்தி லிருந்துகொண்டு ஏகாக்கிரமனத்தோடு பரம்பொருளை தியானம்செய்து இந்தயோகத்தில் ஸித்திபெறவேண்டும். மிதத்திற்கு மேற்பட்ட அல்லது கீழ்பட்ட சாப்பாடு தூக்கம் முதலியவைகள் உள்ளவருக்கு இந்தயோகம் பலிக்காது. இந்தயோகம் ஸித்தித்தவனே மஹானாவான். அவன்

மனம் நிவர்தஸ்தித தீபம்போல அசைவற்றிருக்கும். அந்த மனதில் அப்பொழுது சாந்தி பிறந்து அவனுக்கு நிரதிசய ஆனந்தப் பிராப்தியாகும். அவன் இதை எக்காலத்திலும் விட்டுப் பிரிந்திருக்கமாட்டான்' என்று பகவான் தியானத்தின் விசேஷத்தை எடுத்துரைத்தார். அப்பொழுது அலையும் மனதை அடக்குவது எவ்வாறு என்று ஸந்தேகித்த அர்ஜுனனை நோக்கிப் பகவான் 'மனதை வைராக்கியம் (ஒருவனுக்குத் தெரிந்த அல்லது தெரியாத வெளிவஸ்துக்களில் துவேஷ புத்தி துச்சபுத்தி) அப்பியாசம் (தியானம் சென்றடையும் பரம்பொருள், மனம்விட்டுப்போக அடிக்கடி ஊக்கத்தோடு அதை மனத்தின் முன்கொண்டு வந்து நிறுத்தல்) ஆகிய இவைகளால் கிரமமாக அடக்கலாம்' என்று மறுமொழி கூறினார். 'யோகத்தில் முடிவைக் காணுமலாவது அல்லது மனம் மாறுபட்டு பிரஷ்டனுயாவது ஒருவன் மரணத்தை அடைந்துவிட்டால், அவன் ஸ்வர்காதி ஸுகங்களை அனுபவித்த பின்னர் தனிகர்களான சுத்தர்கள் வம்சத்திலாவது, ஏழைகளான மஹான்கள் வம்சத்திலாவது பிறந்துவிட்ட குறைவந்து தொட்டுக்கொள்ள முடிவில் பிரஹ்மத்தையே அடைவான்' என்று பகவான் யோகப்பிரஷ்டன் கதியை நன்கு விளக்கி யோகியின் சிறப்பை நன்கு விவரித்தார்.

வின 17:—இந்த அத்தியாயத்தில் மஹான் எவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறன்.

விடை:—இங்கு யோகி என்று பின்வருமாறு வர்ணிக்கப் படுகிறன். தன்னைத்தானே அடக்குபவனுக்குத் தானே நண்பன். இவ்வாறு செய்யாதவனுக்குத் தானே பகைவன். அடங்கும் குணமுடையவனுக்கு, குளிர்வெப்பம், இன்பதுன்பம், மானஅவமானம், ஆகிய இவைகளில் மனம் ஒருமைப்பட்டு அசையாதிருக்கும், அறிவு அனுபவம் இவைகளால் இந்திரியஜயம், மண், கல், தங்கம் இவைகளை ஒன்றுகப் பார்த்தல், ஆகிய இவைகள் அமைந்த யோகியே நடுநிலைபெற்றவனுவான். எல்லோரிடத்தும் ஸமதிருஷ்டி வந்துவிடும்; இவ்வாறு மனம் அடங்கிய யோகி, முடிவான சாந்திபெறுவன். அடங்கிய இவன்மனம் ஆத்மாவினிடத்திலேயேநிலைபெறும்; காற்றில்லாவிடத்திலுள்ள விளக்குப்போல அசைவற்றிருக்கும். இந்திரியங்களால் உணர முடியாது புத்திக்கு அப்பாற்பட்டு நிற்கும் அனந்த ஆனந்தம்

இவனுக்கு விளங்கும், இதற்கு மேலான ஆனந்தம் ஒன்று மில்லை, எந்தக் கஷ்டம் வரினும இந்நிலையிற் பிரியான். துக்க ஸம்பந்தம் நீங்குபவனே யோகி, இவன் எங்கும் தன்னையும், தன்னுள் எல்லாவற்றையும் பார்ப்பான். இவனே எல்லா ஸன் மார்க்கர்களையும்விட மிகச் சிறந்தவன்.

வினு 18:—ஏழாம் அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:--ஏழாம் அத்தியாயத்திற்கு விஞ்ஞானயோகம் என்று பெயர். இதில் பகவான் தமது அபரபிரகிருதியாகிய பூதாதி விஷயங்கள், பரபிரகிருதியாகிய எங்கும் பரவி அந்தர்யாமி யாய் இருத்தல் என்பவைகளையும், தாம் நிராதாரனுய் இருந்து ஸகலத்திற்கும் ஆதாரமாய் இருப்பதையும், தம்மை அறிய முயலுபவர்களே மாயையைத் தாண்டவல்லவர்கள் என்பதை யும், அவ்வாறு சிறுபாலாரே முயலுவார்கள் என்பதையும் வெளியிட்டார். 'என்னைப் பொய்வளரும் நெஞ்சினரால் காண முடியாது. துக்கிகள், திரவ்ய ஆசை உடையவர்கள், எனனை அறிய முயலுபவர்கள், அறிந்து தெளிந்த ஞானி ஆகிய நால் வர்கள் என்னை உபாஸிக்கிறுர்கள். ஞானியே எல்லோரினும் சிறந்தவன். அவனுக்கும் எனக்கும் பேதமே இல்லை. அநேக ஜன்ம பரிபாகத்தால் ஒருவன் ஸர்வம் வஸுதேவ மயம் ஜகத் என்ற அனுபவ ஞானம் உடையவன் ஆவான். ஒவ்வொருவ னும் தனது ஆசையின் பேதத்திற்கு ஏற்றபடி தாழ்நத தேவ தைகளை வழிபடுகிறுன். அவன் மனப்பூர்வமாய் மாத்திரம் வழி படுவானேயானுல நானே அவன் வழிபடும் மூர்த்தியாய் இருந் து அவன் ஆசையைப் பூர்த்திசெய்து, பக்தியைத் திடப்படுத்து கிறேன். ஆனுல் அவனுக்கு ஸ்திரமான பலன் ஒன்றும் கிடைக் கமாட்டாது. இராகத் துவேஷாதிகளால் மூடப்பட்டு எனது மாறு ஸ்வரூபத்தை அறியாமல் ஸாதாரண ஜனங்கள் வழிபடுவ தால் அவர்களுக்குப் பரமபதம் மாத்திரம் ஸித்திக்காது. அது வேண்டும் என்ற ஆவலோடு என்னை உள்ளவாறு அறிந்து வழி படுபவர்களுக்கே அது ஸித்திக்கும் இவ்வாறு ஆராதிபபவர்க ளுக்கே கர்மம், ஆத்மா, பிரஹ்மம் இவைகளின் ஸ்வரூபம் உள்ள வாறு விளங்கும்' என்று பகவான் தம்மை உள்ளவாறு அறியும் விதத்தையும் அதனுல் வரும் பேரின்பத்தையும் நன்கு விளக் கினுர்.

வினா 19:—இந்த அத்தியாயத்தில் மஹான் எப்படி வர்ணிக்கப் படுகிறான்?

விடை:—ஆத்மஞானி என்ற பெயரால் பின்வருமாறு வர்ணிக்கப் படுகிறான்.

நான்கு வகையான நல்லோர்கள் என்னைப் பற்றுகின்றனர். அவர்கள், துக்கத்தில் மொத்துண்டவர்கள், உண்மையை உணர விரும்புபவர்கள், பொருள் விரும்புவோர், ஞானி, ஆகிய இவர்களே. இவர்களுள் ஒன்றிலேயே மாறுப்பற்றுடன் ஒருமைப் பட்டு நிற்கும் ஞானியே சிறந்தவன். ஞானிக்கு என்னிடத்திலும் எனக்கு ஞானியிடத்திலும் மிகுந்த விருப்பம் உண்டு. எல்லோரும் பெருந்தன்மை உடையவர்களாயினும், மனம் நிலை பெற்று என்னையே பரமபதமாக அடையும் ஞானியே ஆத்மா என்று யான் மதிக்கிறேன். பல பிறவிகளின் முடிவில் ஞானி 'எல்லாம் வாஸுதேவன்' என்று அநுபவித்து என்னை அடைவான். இந்த மஹாத்மா கிடைப்பதரிது. ஆயிரம்பெயர்களுள் ஒருவன்தான் ஸித்திபெற முயல்கின்றான். இம்மாதிரி முயன்று ஸித்தி பெற்றவர்கள் அநேகருள் ஒருவன்தான் என்னை உள்ள படி உணர்வன்.

வினா 20:—எட்டாம் அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இதற்கு அப்பியாஸயோகம் என்று பெயர். இதில் பகவான், 'சாகும் காலத்தில் எந்த எண்ணத்தோடு ஒருவன் சாகிறானோ அதற்கேற்பவே அவனுக்கு மறு ஜன்மம் உண்டாகும். ஆகையால் ஒவ்வொருவனும் தனது கடமைகளையே செய்து கொண்டு என்னை எப்பொழுதும் தியானம் செய்து வரவேண்டும். இப்படி இருப்பவன் சாகுங்காலத்தில் மனத்தை வெளிச் செல்ல ஒட்டாது அடக்கி ஓம் என்று உச்சரித்து என்னைத் தியானம் செய்யவேண்டும். அப்படியானால் அவன் இறந்தபின் பரமபதத்தை அடைவான். அவனுக்கு மறுபடி பிறப்பே யில்லை. பிரஹ்மாமுதல் ஸ்தம்ப பரியந்தமுள்ள மற்றவைகள் யாவும் பிறந்து பிறந்து இறக்க வேண்டியதுதான். புழுக்கள் போன்றவைகள் பிறந்ததும் இறக்கும், பிரஹ்மா முதலியவர்கள் கல்பாந்தங்களில் மறைவார்கள். இவைகளுக் கப்பாற்பட்ட அழிவற்றதா யுள்ளது பரமபதம். இதை அடைவதற்குக் குருவாதி ஸாதனங்களும் பரம்பொருளை உள்ளபடி அறிவதுமே தக்கவழி. நிஷ்காம்யகர்மம் தியானாதிகள் மூலமாய் ஜ்யோதி மார்க்கங்கள்

வழியே பிரஹ்மத்தைக் காலக்ரமத்தில் அறிந்து ஞானிகள் போக்குவரவு அற்ற பரமபதம் எய்துவர். யாகாதி காம்ய கர்மங்களைச் செய்பவர் தூமமார்க்கமாகச் சென்று ஸ்வர்க்காதி லோகங்களில் ஸுகங்களை அனுபவித்துவிட்டுப் புண்யம் குறைந்ததும் அடிக்கடிப் பிறந்து கஷ்டப் படுவார்கள், ' என்று பகவான் நேர்மையான அப்பியாஸத்தின் மேன்மையையும் அதன் பலனையும் நன்கு விளக்கினார்.

வினா 21:—ஒன்பதாவது அத்திபாயத்தின பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இதற்கு ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம் என்றுபெயர். இதில் பகவான், ' நான் பிரபஞ்சம் முழுவதும் ஒன்றோடும் ஸம்பந்தப்படாது பரவி யிருக்கிறேன். காற்று ஆகாயத்தில் அடங்கி ஸஞ்சரிப்பதுபோல ஜீவராசிகளும் என்னுள் அடங்கி ஸஞ்சரிக்கின்றன. எனது ஸந்நிதானவிசேஷத்தினாலேதான், பிரளயத்தில் பிரகிருதியில் ஜீவராசிகள் யாவும் அடங்குகின்றன, அதன் மூலமாகவே பின் வெளிவருகின்றன. இந்த ரகஸ்யத்தை அறியாது என்னைச் சிலர் மனிதன் என்கிறார்கள். இந்த அறியாமையோடு என்ன கர்மம் செய்யினும் பயன்படாது. ஞானிகளோ என்னையே ஸதா தியானித்துக்கொண்டும் என்னைப்பற்றியே ஸதா பேசிக்கொண்டும் இருப்பார்கள். என்னை அநேகர் அநேக விதமாய் ஆராதிப்பார்கள். எல்லாம் நானேயாய் இருப்பதால் எல்லா ஆராதனைகளும் என்னையே வந்து அடைகின்றன. என்னை நிர்குணனாய் எங்கும் பரவியிருப்பவனாக, ஆசைகளற்ற சுத்த மனத்தோடு சிலர் ஆராதிப்பர். அவர்களது யோகக்ஷேமங்களை நானே தாங்குகிறேன். அறியாமையால் என்னை வெவ்வேறு விதமாய் ஆராதிக்கும் ஸாதாரண ஜனங்களுக்கு அவரவரது ஆசைகள் பூர்த்தியாகும். பரமபதம் எளிதில் அவருக்குக் கிடைக்காது. ஒருவன் சுத்த மனத்தோடு எனக்கு எந்த வஸ்துவை அர்ப்பணம் செய்தபோதிலும், அதை நான் அங்கீகரிப்பேன். நீயும் உனது கடமைகளை அவ்வாறு அர்ப்பணம் செய்து, விடாது செய். நெருப்பு எவ்வாறு அணுகியவரது குளிரைப் போக்குகிறதோ அவ்வாறே நான் என்னை அடுத்தவரை எனது ஸ்வபாவத்தால் மோக்ஷம் அடையும்படி செய்கிறேன். நான் இதை பக்ஷபாதத்தால் செய்பவன் அல்ல. மஹாபாபியும் என்னை அணுகினால் நல்வழிப்பட்டு மேன்மையடை

வான். ஆகையால் உலகில் பிறந்துழலும் யாவரும் இந்த ரஹஸி யங்களை அறிந்து என்னை அவசியம் வழிபடவேண்டும். இந்த ரஹஸியத்தை குருமுகமாய் எளிதில் அறியலாம்' என்று சிறந்த ரகஸியத்தை அர்ஜுனனுக்கு வெளியிட்டார்.

வினா 22:—இந்த அத்தியாயத்தில் மஹான்கள் எவ்வாறு வர்ணிக்கப் பட்டிருக்கின்றனர்?

விடை:—இங்கு ப்ரஹ்மநிஷ்டனாக மஹான் வர்ணிக்கப்படுகிறான் பின்வருமாறு.

மஹான்கள் தெய்வ ஸம்பத்தாகிய ஸத்வ குணத்தைப் பின் பற்றி வேறொன்றிலும் மனம் செல்லாது என்னை அழிவில்லா ஆதிகாரணமாக உணர்ந்து வழிபடுகிறார்கள். என்னைப்பற்றியே இடைவிடாது பேசிக்கொண்டு, விடாமுயற்சி, திடவிரதம், ஆகிய இவைகளுடன் என்னிடம் நிலைபெற்று என்னைப் பக்தி யாக வணங்குகின்றனர். இவர்களுள் சிலர் என்னை ஞானமா கிய யஞ்ஞத்தால் வழிபட்டு, எங்கும் நோக்குபவனாகி, ஒன்று யும் பலவாயும் நிற்பதாக மதித்து வணங்குகின்றனர்.

வினா 23:—பத்தாவது அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இதற்கு விபூதியோகம் என்றுபெயர். இதில் பகவான் அர்ஜுனனை நோக்கி தமது மாயாத்தோற்றங்களுக்குமுடிவில்லை என்றும், அவைகளை அறிவது தேவதைகளாலும் முடியாது என்றும், அவைகளை ஒருவாறு அறிந்தவர்களுக்கு யோகம் நிலைபெறும் என்றும், அவைகளை அறிந்த மஹான்களது ஹிரு தயத்தில் தாம் ஞானரூபமாய் இருந்து அறியாமையை ஸதா நீக்கிக் கொண்டிருப்பதாகவும் சொல்லி 'எல்லா ஜீவராசிகளுள் ளும் இருப்பவன் நானே. தேவதைகளுள் இந்திரன்; தேவ ரிஷிகளுள் நாரதர், மரங்களுள் அரசு, தைத்யர்களுள் பிரஹ்லா தர் போன்ற உலகத்தில் காணப்படும் வஸ்துக்களுள் சிறந்தவஸ் துக்கள் நானே. நான் இல்லாது ஒன்றும் உயிர் தரிக்கமாட் டாது. ஏதாவது ஒரு சிறப்புற்றுக் காணப்படும் ஒவ்வொரு வஸ்துவிலும், எனது ஸந்நிதான வைபவலேசம் இருக்கிறது' என்று விஸ்தாரமாகவும் தமது விபூதிகளை வெளியிட்டார்.

வினா 24:—பதினோராம் அத்தியாயத்தின் பெயரும் விஷயமும் என்ன?

விடை:—இதற்கு விசுவரூபதர்சனயோகம் என்றுபெயர். இதில்

அர்ஜுனன் பகவானது ஸகல விபூதிகளும் அடங்கிய விசுவ ரூபத்தைக் காணவிரும்ப, அவர் அவனுக்குத் தமது விசுவ ரூபத்தைக்காணும் சக்திவாய்ந்த ஞானக்கண்ணைக்கொடுத்து விட்டு, அவன் முன்பாகத் தமது விசுவரூபத்தை எடுத்துக் கொண்டார். உடனே பகவான் ஜகத் ஜ்யோதியாகவும், எங் குங் கால் எங்குங் கை முதலியவைகளோடு இருப்பதாகவும், பிரபஞ்சம் முழுவதும் அவருள் ஏகதேசபாகத்தில் இருக்கும் இடம் தெரியாமல் அடங்கிக் கிடப்பதாகவும், அர்ஜுனன் கண்ணுக்குத் தோன்றியது அப்பொழுது அர்ஜுனன் பக வானை வாயார வர்ணித்துத் துதித்து மிகுந்த வியப்போடு நின்றான். உடனே பீஷ்மர், துரோணர் முதலிய வீரர் பகவான் வாயில்பட்டு மாய்வதைக் காண அவன் மனதில் பயம் உண்டா யிற்று. அப்பொழுது பகவான் 'அர்ஜுனா பார்த்தாயா, யுத்த வீரர்கள் எல்லோருக்கும் இறக்கும் தருணம் வந்து விட்டது, நீ அவர்களை நாசம்செய்து கீர்த்தியைப் பெற்றுக்கொள். உனக்கு ஜயம் அவசியம் வரும்' என்று சொல்ல அர்ஜுனன், 'நான் உமது விஷயத்தில் செய்த பெரும் பிழைகளைப் பொறுத்தருள வேண்டும். சீக்கிரம் ஸாதாரண ரூபத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். முடிவில் பக வான், 'வேதாத்யயனம், தானதர்மங்கள், காயக்கிலேசாதி கள் என்னசெய்தாலும் என்னை இவ்வாறு காண்பது அரிது. என்னை இடைவிடாது உள்ளபடி தியானம் செய்பவர்களே இந்த திவ்ய காட்சியைக் கண்டுகளித்து மஹான்களாவார்கள்' என்றுசொல்லித் தமது ஸாதாரண ரூபத்தை எடுத்துக்கொண் டார்.

வினா :—25 பன்னிரண்டாம் அத்தியாயத்தின் பெயரும் சுருக்க மும் என்ன ?

விடை:—இதற்கு பக்தியோகம் என்று பெயர். விசுவரூபத்தியா னம் செய்பவர்கள் மேலா, அல்லது நிர்குணத்தியானம் செய்ப வர்கள் மேலா என்றுகேட்ட அர்ஜுனனுக்கு பகவான், யோக வழியில் நடப்பவருள் என்னை விசுவரூபமாகத் தியானம் செய் பவர்களே சிறந்தவர்கள். என்னை நிர்குணமாய்ப் பாவித்து தியானம் செய்பவராகிய ஸகல நற்குணங்கள் வாய்ந்தவரும் என்னை வந்து அடைவார்கள். என்னை நிர்குணமாக ஸாதாரண மனிதர்களால் எளிதில் தியானம் செய்யமுடியாது, ஆகையால்

ஸகுணத்தியானமே ஸுலபமான வழி. இதைச் செய்யமுடியாதவர், இந்தத் தியானத்தை செய்ய அடிக்கடி சிரத்தையாய் முயலவேண்டும். இது முடியாவிடில் நீ செய்யவேண்டிய கடமைகளை என் பொருட்டாகச் செய். இதுவும் முடியாவிடில் மனதை ஒருவாறு அடக்கிக்கொண்டு நீ செய்யும் அவசியத் தொழில்களின் பலன்களை எனக்கு அர்ப்பணம் செய்துவிடு, இதுதான் சிறந்தவழி' என்று சொல்லி பகவான் தம்மை நிற்குணமாய் தியானம் செய்யும் அக்ஷர உபாஸகர்களும் ஸ்திதப்பிரஞ்ஞனைப் போலிருப்பார்கள் என்று அவர்களது குணாதிசயங்களை நன்றாய் எடுத்துரைத்து அவர்களிடம் தமக்கு இருக்கும் பிரீதியையும் வெளியிட்டார்.

வின :—26 இதில் மஹான் எவ்வாறு வர்ணிக்கப்படுகிறான்.

விடை:—இங்கு மஹான் பகவத்பக்தனாக வர்ணிக்கப்படுகிறான் பின்வருமாறு.

எனக்குப் பிரியமான பக்தன், எந்தப் பிராணியிடத்தும் த்வேஷம் இல்லாதவனாயும், ஸ்நேஹம், தயை உடையவனாகவும், அகங்காரம் மமகாரம் (நான் எனது என்ற எண்ணங்கள்) அற்றவனாகவும், ஸுகதுக்கங்களை ஸமமாகக் காண்பவனாகவும், பொறுமையுடையவனாகவும், மாறாத் திருப்தியுள்ளவனாகவும், அடங்கியமனத்தையும், உறுதியான நிச்சயத்தையும் உடையவனாகவும், மனம் புத்தி ஆகிய இவைகளை என்னிடமே ஒப்புவித்தவனாகவும் இருப்பான். இவனைக்கண்டு உலகம் நடுங்காது, இவனும் உலகைக் கண்டு நடுங்கான்; மகிழ்ச்சி, பொறாமை, அச்சம், கலக்கம் இவை இவனை அணுகா. இவன் விருப்பற்றவனாயும், தூயவனாயும், தேர்ந்தவனாயும், கவலையற்றவனாயும், குழப்பமற்றவனாயும், முயற்சியற்றவனாயும் காணப்படுவான். ராகம், த்வேஷம், துக்கம், காமம், சுபாசுபங்கள் ஆகிய இவைகளற்றவனாக இருப்பான் என் பக்தன். நண்பன் பகைவன், மான அவமானம், சீத உஷ்ணம், ஸுகதுக்கம் ஆகிய த்வந்த்வங்களில் ஒரேமாதிரி இருப்பதும், பற்றற்று இருப்பதும், இகழ்ச்சி புகழ்ச்சிகளை ஒன்றாகப் பார்ப்பதும், மௌனம் குடிகொண்டிருப்பதும், எது வந்தபோதிலும் திருப்தியுடனிருப்பதும் வீடில்லாதிருப்பதும், அலையுமனம் நிலையில் நிற்கும் குணமுடையதுமே என் பரமபக்தனிடம் எப்பொழுதும் காணப்படும். என்னிடம் பக்தியுள்ளவர்களாகிய முற்கூறிய லக்ஷணங்

களைப்பின்பற்றி யார் பழகுகிறார்களோ அவர்களும் என் பக்தர்களே.

வினா 27:—பதின்மூன்றாம் அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இந்த அத்தியாயத்திற்கு க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞ விபாக யோகம் என்று பெயர். இதில் பகவான் 'அறியப்படும் பொருளுக்கு க்ஷேத்திரம் என்றும், அறியும்பொருளுக்கு க்ஷேத்ரஞ்ஞன் என்றும் பெயர். இதை நன்றாய்ப் பகுத்தறியும் அறிவே சிறந்த அறிவு. எங்குங்காணப்படும் க்ஷேத்திரஞ்ஞனும் நானே. பஞ்சபூதங்கள், புத்தி, அகங்காரம் முதலிய தத்துவங்கள் யாவும் க்ஷேத்திரத்தின் ரூபபேதங்கள், அடக்கம், பொறுமை, குலகுருசேவை, நேர்மை, மனோ நிரோதம், ஸமதிருஷ்டி, ஈஷணாத்திரயம் இன்மை, ஏகாந்தப் பழக்கம், பக்தி, பரமபத ஸ்வரூப ஞானம் முதலிய நற்குணங்கள் இருந்தால்தான் ஒருவனுக்கு க்ஷேத்திரஞ்ஞனுடைய உண்மை உருவு விளங்கும் அப்பொழுதுதான் பிரம்மம் எங்கும் நிறைந்தவஸ்து நிர்க்குணம், என்ற உண்மைகள் அவனுக்கு நன்றாய் விளங்கும். அனாதியான க்ஷேத்திர க்ஷேத்திரஞ்ஞரது ஸம்பந்தத்தால் பிரபஞ்சம் உண்டாக க்ஷேத்திரத்தினது மேம்பாட்டால் பிறப்பும் இறப்பும் உண்டாகின்றன. இவைகளை உள்ளபடி அறிபவர்களுக்கே மோக்ஷம் ஸித்திக்கும். அவர்களுக்கே ஸகல கர்மங்களும் க்ஷேத்திரத்தினது தர்மம் க்ஷேத்திரஞ்ஞன் அஸங்கன் என்பது வெளியாகும்' என்று அறிபொருள் அறிபடுபொருள் ஆகிய இவைகளின் உண்மையான உருவை வெளியாக்கினார்.

வினா 28:—பதினான்காவது அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இதற்குத் திரிகுண விபாகயோகம் என்று பெயர். இதில் பகவான் 'எல்லாம் என்னிடம் இருந்து வருகின்றது. பிரகிருதி ஸம்பந்தமான ஸாத்வீக ராஜஸ தாமஸம் என்ற முக்குணங்களே ஆத்மாவைத் தேகத்தோடு பந்தப்படுத்துகின்றன. ஸாத்வீகம், சுத்தமாயும் தெளிவாயும் இருந்துகொண்டு ஸாவதான ஸுகரூபமாகவும், ராஜஸம், கர்த்திருத்வம், பரபரப்பு, காமக்குரோதம் முதலிய மனோபாவ ரூபமாகவும், தாமஸம், அஞ்ஞானம், சோம்பல் முதலிய ரூபமாகவும் தமது தொழிலைச் செய்கின்றன. இக்குணங்களுள் ஏதாவது ஒன்று ஒரு காலத்தில்

ஓங்கியும் மற்றிரண்டு அடங்கியும் இருக்கும். ஸாத்வீகம் அதிகம் இருக்குங்கால் ஞானம், பகுத்தறிவு முதலியவைகளும் ராஜஸம் மேலிடுங்கால் பரபரப்பு ஆவல் முதலியவைகளும், தாமஸம் ஓங்குங்கால் அசிரத்தை சோம்பல் முதலியவைகளும் ஒருவனிடம் காணப்படும். ஒருவன் இறக்குங்கால் அவனுக்கு ஸத்வம் அதிகமாயிருந்தால் பிரம்மலோகம் போன்ற சுத்தபதவியும், ராஜஸம் மேலிட்டிருந்தால் கர்மிகள் மத்தியில் ஜன்மமும், தாமஸம் ஓங்கி இருந்தால் அஞ்ஞானிகள் மத்தியில் ஜன்மமும் கிடைக்கும். ஒருவன் இவைகளிடம் அகப்படாது தப்பிப் பிழைக்கவேண்டுமாயின் இக்குணங்களுக்கு அப்பாற்பட்ட என்னை அறிந்து தெளியவேண்டும். உடனே அவனுக்கு மோக்ஷம் ஸித்திக்கும்' என்று சொல்லி அர்ஜுனனுக்கு திருகுணாதீதனது லக்ஷணமும் ஸ்திதப்பிரஞ்ஞனது குறிகள் போல இருக்கும் என்றும் விவரித்தார்.

வி 29:—இதில் மஹான் எவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறான்.

விடை:—இதில் திரிகுணாதீதனாக அவன் பின்வருமாறு வர்ணிக்கப்படுகிறான்.

'விளக்கம், முயற்சி, மோஹம் ஆகிய எவை வந்தபோதிலும் ஒன்றையும் வெறுக்காது, போனவற்றை எண்ணி விரும்பாது, தாக்கற்றுக் கவலையின்றிக் குணங்களால் அசைக்கப்படாமலிருந்து 'குணங்கள் தொழில் நடத்துகின்றன' என்றுணர்ந்து நிலைபெற்றிருப்பான் திரிகுணாதீதன். ஸுகம் துக்கம்; ஓடு, பொன்; இஷ்ட அநிஷ்டம், இகழ்ச்சி புகழ்ச்சி ஆகிய துவந்துவங்களில் ஒரே நிலைமையுடையவனாக விருந்துகொண்டு தன்னிடமே நிலைபெற்றுத் தீரனாக இவன் இருப்பான். மானவமானங்கள், நண்பன் பகைவன் இன்றி, முயற்சியற்றவனாக விருப்பான் குணாதீதன். என்னை பக்தியோகத்தால் கடைப்பிடித்தவன் குணங்களைத் தாண்டுவான்.

வி 30.—பதினைந்தாவது அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இந்த அத்தியாயத்திற்கு புராண புருஷோத்தம யோகம் என்று பெயர். இந்த அத்தியாயத்தில் பகவான் ஸம்ஸாரம் என்பதை மேலே பிரம்மத்தில் வேர் உடையதும், கீழே பிரபஞ்சத்தில் இலை காய்கள் முதலியவைகளை உடையனவும் ஆகிய ஒரு விருக்ஷமாக உருவகப்படுத்தி, அதை அஸங்கம் என்ற

கத்தியால் வெகு மன உறுதியோடு வெட்டி, மாறுதலே அடையாதிருக்கும் பரமபதத்தை அடைய முயலவேண்டும் என்றும், அந்த பரமபதம் ஸ்வயம் பிரகாசமாய் ஸூர்ய சந்திராதி பிரகாசங்களால் எட்டமுடியாததாய் இருக்கும் என்றும், ஜீவாத்மாவானது தமது அம்சம் என்றும், அதன் நிஜஸ்வரூபத்தை ஸாதாரண ஜனங்களால் அறிய முடியாதென்றும், யோகமூலமாகவே அவனை அறியவேண்டும் என்றும் தாம் ஸகல வஸ்துகளுக்கும் பிரகாசம் கொடுப்பவர் என்றும், எல்லா வஸ்துக்களேயும் தாங்குபவர் என்றும், எல்லா ஜீவராசிகள் வயிற்றிலும் ஜாடராக்னியாய் இருப்பவர் என்றும், தாம் அழிவற்றவராகிய புருஷோத்தமர் என்றும், தம்மை இவ்வாறு அறிந்து ஞானிகள் ஆராதிப்பார்கள் என்றும், பகவான் அர்ஜுனனுக்கு தமது மேன்மையான நிலையை எடுத்துரைத்தார்.

வி 31:—பதினாறுவது அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இந்த அத்தியாயத்திற்கு தேவாஸுரஸம்பத் விபாகயோகம் என்று பெயர். இதில் பகவான் அபயம் முதலிய தெய்வ ஸம்பத்தையும், டம்பம் முதலிய அஸுரஸம்பத்தையும் எடுத்துச் சொல்லித் தேவஸம்பத்துள்ளவர்கள் எளிதில்மோக்ஷம் அடைவார்கள் என்றும், அஸுரஸம்பத்து உள்ளவர்கள் வெகு காலம் கஷ்டப்பட்டு முடிவில் தேவஸம்பத்தை அடைவார்கள் என்றும், சொல்லி, அவர்கள் இந்திரிய திருப்தியே மோக்ஷம் என்ற எண்ணத்துடன், மரணம் அடையும் வரையில் வருந்துவார்கள் என்றும், அவர்களுக்கு அகங்கார மமகாரங்கள் அதிகமாய் இருக்கும் என்றும், காமக்ரோதலோபம் ஆகிய முக்குணங்களுமே ஒருவனை நரகம் அடையும்படி செய்யும் குணங்கள் என்றும் எடுத்துரைத்து, வேதமே எல்லாவிஷயங்களிலும் பிரமாணம் ஆகையால் அதன்படி யாவரும் நடக்கவேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்.

வி 32:—இந்த அத்தியாயத்தில் மஹான் எப்படி வர்ணிக்கப் பட்டிருக்கிறான்?

விடை.—இங்கும், 13-ம் அத்தியாயத்திலும் மஹான் ஸத்குண ஸம்பூர்ணனாக வர்ணிக்கப்படுகிறான்:

பணிவு, அடக்கம், குற்றமின்மை, பொறுமை, நேர்மை, ஸத்குருஸேவை, பரிசுத்தம், உறுதி, மனமடக்கல், விஷயப்பற்

றின்மை, அகங்காரமின்மை, பிறப்பு இறப்பு மூப்பு பிணி துக்கம் இவைகளில் தோஷதிருஷ்டி, பற்றின்மை, ஈஷணாத்ரயமின்மை (மண் பெண் பொன் ஆகிய இவைகளில் பற்றில்லாதிருத்தல்). விருப்பு வெறுப்பு உண்டாக்கக் கூடியவைகள் வந்த விடத்தும் ஒரே தன்மையுடனிருத்தல், என்னிடம் மாறுபக்தி, தனித்திருக்க விரும்புவது, பாமரர் சேர்க்கை விரும்பாமை; ஆத்மஞானத்தில் நிலைபெறுதல், உண்மை ஞானத்தின் முடிவை உணர்தல், நிர்பயம், மனத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைபெறுதல், கொடை, மன அடக்கம், ஆராதித்தல், தன் வேதம் ஓதுதல், தவம், நேர்மை, அஹிம்ஸை, ஸத்யம், கோபம் அடக்குதல், துறவு, சாந்தம், புறஞ்சொல்லாமை, ஜீவகாருண்யம், பிறர்பொருள் விரும்பாமை, மனக்கனிவு, முன்வாராமை, சஞ்சலமின்மை, தேஜஸ், கோபமின்மை, மனோதைர்யம்பரிசுத்தம், வெறுப்பின்மை, கர்வமின்மை, ஆகிய இவைகள் நிறைந்தவனே ஸத்குணபரிபூர்ணன்.

வினா 33:—பதினேழாம் அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இதற்குச் சிரத்தாத்திரய விபாகயோகம் என்று பெயர். இதில் பகவான் "சாஸ்திர ஞானம் இல்லாத அநேகருக்குப் பக்தி இருக்கலாம். அவர்கள் ராஜஸ தாமஸ ஸாத்வீக பக்தர்கள் என மூன்றுவிதமாகக் காணப்படுவர். அவர்கள் ராஜஸ தாமஸமான ஆகாரங்கள், யஞ்ஞம், தபஸ், தானம் ஆகிய இவைகளை விட்டுவிட்டு ஸாத்வீகமான முன் சொன்னவைகளைக் கைப்பற்றிச் சுத்த ஸத்வநிலையை அடைய முயலவேண்டும். முன் சொன்ன நான்கு அங்கங்களில் ஏதாவது குறைகள் காணப்படுமாயின் பிரம்மத்தைக்குறிக்கும் ஓம்தத்ஸத் என்ற பதங்களை உச்சரித்து அவைகளைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். தமது புத்தியைச் சுத்தப்படுத்திக்கொண்டு வேதபடனம், பிரம்மவிசாரம் முதலியவைகளையும்அவர்கள் செய்துவரவேண்டும். இதனால் அவர்கள் உண்மையை உணர்ந்து முடிவில் பரமபதம் அடைவார்கள்" என்று பக்தியின் விபாகத்தை நன்கு விளக்கினார்.

வினா 34:—பதினெட்டாம் அத்தியாயத்தின் பெயரும் சுருக்கமும் என்ன?

விடை:—இதற்கு மோக்ஷ ஸந்யாஸ யோகம் என்று பெயர். இதில் முன்னுள்ள எல்லா அத்தியாயங்களிலும் அடங்கியுள்ள விஷ

யங்களை எல்லாம் சொல்லியிருப்பதால் இதற்கு ஸம்க்ஷேப அத்தியாயம் என்ற வேறு பெயரும் உண்டு. இதில் பகவான் முன் சொன்னவைகளை சுருக்கிச் சொல்லுவதோடுங்கூட, ஸந்நியாஸம், தியாகம் இவைகளின் வித்யாஸம், தர்மத்தை விடும்விதங்கள், கர்மத்திற்கு காரணமாகிய ஐந்து அங்கங்கள் அவைகள் ஒவ்வொன்றும் ஸாத்விக ராஜஸதாமஸ மூலமாக மும்மூன்று விதமான வகை, புத்தி ஸ்திரம் ஸுகம் ஆகிய இவைகளும் மும்மூன்றானவிதம், வர்ணாச்சிரம குணங்கள், ஸ்வதர்மாசரணம், நிஷ்காம்ய கர்மானுஷ்டானம், இதனால் வரும் மோக்ஷம், மோக்ஷத்தின் மார்க்கம், இவைகளைப்பற்றிச் சொல்லிக் கடைசியில் அர்ஜுனனை நோக்கி 'ஸகல தர்மங்களையும் துறந்தவனாய், என்னையே சரணமாக அடை, நான் உன்னை ஸகல பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்' என்று சொல்லி அவனை பலத்தில் இச்சைவிட்டு எடுத்த காரியத்தைப் பின் வாங்காது நடத்தும்படி சொன்னார்.

வினா 35:—மஹான்கள் அநேகவிதமாக கீதையில் வர்ணித்ததிலிருந்து நாம் உணரவேண்டியதென்ன ?

விடை:—கீதா சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள மஹான்களின் வர்ணனைகளை எடுத்துக் கூறியாகிவிட்டது. இவைகளை வாசிப்போர்களுக்கு முக்கியமாக ஒரு விஷயம் உடனே விளங்கும். அதாவது எல்லா வர்ணனைகளிலும் பொதுவான பாகங்கள் மிக உள என்பதே. அவைகளை ஒருவாறு சுருக்கிக் கூறினால், துவந்துவங்களில் ஓரேமாதிரி யிருத்தல், ஸமதிருஷ்டி, தன்னுள்ளும் எங்கும் மாறாப்பொருள் ஒன்று உண்டு என்ற உணர்ச்சி அனுபவம், ஸகல ஸத்வகுணங்கள் ஆகிய இவைகளாகும். இவைகளில் எல்லாம் முக்கியமான பாகம், மாறாப்பொருள் உணர்ச்சியே. இதனால் தான் மற்றைய குணங்கள் எல்லாம் உண்டாகி நிலைப்பது. முன்கூறிய பதினொரு மஹான்களிடத்தும், 'நாம் தேஹாதி மாறும் விஷயங்களல்ல: இவைகளுள்ளே எல்லாம் ஆடும் பரஞ்ஜோதியே' என்று உள்ள இடைவிடா அறிவே இங்கு கூறப்பட்டுள்ள நற்குணங்களுக்கெல்லாம் ஆதாரம். இந்த திடப்பாக்ஞை ஒன்றில்லாவிடில் இந்த மஹான்கள் எல்லோரும் அப்யாஸிகளாகிவிடுவர். ஆதலால் பதினொரு மஹான்களைக் கீதையில் வர்ணித்திருந்தபோதிலும், இந்தப் பொதுலக்ஷணத்தால் மஹான் ஒருவனே அவனை

அப்யாஸிகள் நன்மைக்காகப் பதினொரு விதமாக வர்ணித்திருக்கின்றது என்பது வெளியாகும். இவர்களது நிலை என்னமோ ஒன்றுதான்: அதைப் பலவிதமாகக் கருணையால் பகவான் அநேகவிதமாக எடுத்துப் பாராட்டி வெளியிடுகிறார் என்பதைக் கூறவும் வேண்டுமா?

வினா 36:—பதினொரு விதமாக வர்ணிக்க இடம் தரும் நிலையாது? இம்மஹான்களின் பொதுப்பெயர் என்ன?

விடை:—இம்மஹான்களுக்கு எல்லாம் 'மாறுதலடையும் எல்லாம் நானல்ல, மாறாப்பொருள் நான்' என்ற திடப்ரக்ஞை வந்திருக்கிறது. மாறாப்பொருள் இன்னது என்று இப்பொழுது நம்மால் உணரப்படாவிடினும், மாறும் பொருள்கள் யாவை என்பது எல்லோரும் அறிந்த விஷயம். வெளிப்ரபஞ்சம் முழுவதும், எண்ணங்களாலாகிய உட்ப்ரபஞ்சம் முழுவதும் மாறுபாடுடையவை. இவைகளுக்கு ஏற்ப இவைகளைவிட சற்றுஉயர்ந்ததாகக் காணப்படும் கர்த்தா, போக்தா என்று தோற்றும் ஒரு வஸ்துவும் மாறுபடும் குணமுள்ளதே. இவ்வஸ்துவுக்கு ஜீவனென்று பெயர். இவைகளுள் உள்ளும் வெளியுமாகிய ப்ரபஞ்சங்கள் நானல்ல என்று தள்ளிவிடுவதுஎளிது. கர்த்தா போக்தாவாகிய ஜீவன் நானல்ல என்று தள்ளுவது மிகக்கடினம். இது அநேக ஜன்ம புண்ய பரிபாகம், திடமான அப்யாஸம் இவைகளால் ஏற்படவேண்டியது. மஹான்கள் விஷயத்தில் இந்த நிலையும் கைகூடியிருக்கும். ஆகவே இந்த மஹான்களுக்கு எல்லாம் 'ஜீவன் நான்' என்ற பாவம் நீங்கியிருக்கும். நமது விஷயத்திற்கு 'எது நான்' என்றபாவம் அவர்களிடம் நிறைந்திருக்கும் என்பதை விசாரிக்கவேண்டியதில்லை. இவர்கள் எல்லோரும் ஜீவபாவம் நீங்கி நிற்பதால் இவர்களுக்கு ஜீவன்முக்தர்கள் என்ற பொதுப்பெயர் பொருந்தும். இவர்கள் நிலைக்கு ஜீவன் முக்தியென்றுபெயர். இந்த ஜீவன்முக்திநிலை உபநிஷத்துக்களில் நேரிட வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இதை எல்லோரும் எளிதில் உணர்ந்து அடையமுயலும்பொருட்டு பகவான் கீதையில் பதினொருவிதமாக வர்ணித்து வெளிப்படுத்தியிருக்கிறார்.

வினா 37:—கீதையில் பகவான் முக்யமாக என்ன ரகஸியங்களை வெளியிட்டிருக்கிறார்?

விடை:—கீதையில் பகவான் மூன்று ரகஸியங்களை வெளியிட்டிருக்கிறார். அவையாவன ஸ்வதர்மாசரணம் (பலத்தில் இச்சை

விட்டு நிஷ்காம்யமாய் ஒவ்வொருவரும் தமக்கு ஏற்பட்ட கர்மத்தைச் செய்தல்), நித்யாநித்ய வஸ்துவிவேகம் (ஆத்மா இன்னது, பிரபஞ்சம் இன்னது என்ற பகுத்தறிவு), கடவுளது ஸர்வ வியாபகநிலை ஆகிய இவைகளே. இவைகளில் முறையே முன்னதைவிட பின்னது அதிரகஸியமான உண்மை.

வினு 37:—இவ்வித சிறந்த உண்மைகளைப் பகவான் பாண்டவருள் அர்ஜுனனை நோக்கி வெளியிடுவானேன்? இதை இந்த யுத்த ஸமயம் பார்த்து வெளியிடுவானேன்?

விடை:—அர்ஜுனன் ஸாதாரண மனிதனது நிலையிலிருப்பவன். தருமபுத்திரர் முதலியவர்களைப்போல மேலான நிலையில் இருப்பவன் அல்ல. ஆகையால் அவனுக்கு நன்ருய்ப் படும்படி ரகஸியங்களைச் சொல்லிவிட்டால் உலகில் எல்லாருக்கும் நன்ருய் அவைகளை வெளியிட்டதாகும். கர்மம் நன்ருய் நிலைபெறும் என்று எண்ணியே பகவான் அவனை நோக்கித் தமது கீதையைச் சொன்னுர். மேலும், யுத்தஸமயத்தில் அர்ஜுனனுக்கு மனத்தளர்ச்சியுண்டாக அப்பொழுதுதான், உண்மையை உணரவேண்டும், தனக்கு ஒன்றும் தெரியாது, என்ற பரபரப்பு அவனுக்கு உண்டாயிற்று. இதன் முன்பு இந்தமாதிரியான பரபரப்பே அவனுக்கு உண்டானது இல்லை. இந்தப் பரபரப்பே உபதேசகாலத்தில் சிஷ்யனுக்கு அவசியம் இருக்கவேண்டியது. இது இருந்தால்தான் அவன் மனதில் குரு உபதேசம் நன்ருய்ப் பதியும். இந்த லக்ஷணம் அர்ஜுனனுக்கு இந்த யுத்த ஸமயத்தில்தான் உண்டானதால், பகவான் அந்தத் தருணம் வந்ததைக் கண்டு அவனுக்குக் கீதையை உபதேசிக்கத் தொடங்கினுர்.

வினு 38:—இவ்வாறு பகவான் அர்ஜுனனுக்குக் கீதை உபதேசித்ததும் அவன் நிலை என்னமாய் இருந்தது? மேல் என்ன நடந்

விடை:—பகவான் கீதையைச்சொல்லி முடித்ததும் அர்ஜுனனுக்கு யுத்த விஷயமாய் இருந்த ஸந்தேக அபிமானங்கள் யாவும் சின்னுபின்னமாய்ப் போக, அவன் யுத்தம் செய்ய மிகுந்த வீர்யத்தோடு எழுந்தான். இவ்வாறு அர்ஜுனன் யுத்தத்திற்குத் தயாராகி நிற்குங்கால் யுதிஷ்டிரர் தமது கவசபாணுதிகளைக் கீழே எறிந்துவிட்டு மஹாவியஸனத்துடன் நிராயுதபாணியாய் கௌரவர் சேனையை நோக்கிப் புறப்பட்டார். அவர் பின்னே, கிருஷ்ண பகவானும் அவர் நோக்கத்தை அறிந்து புறப்பட

எல்லாப் பாண்டவ வீரர்களும் மிகுந்த மனக்கலக்க முடைய வராய் பகவான் பின்னே கௌரவஸேனையை நோக்கிப் புறப் பட்டார்கள்.

வி‌ன 39:—இவ்வாறு எல்லா வீரரது மனத்தையும் கலங்கச்செய்து கொண்டு போன யுதிஷ்டிரர் அங்குபோய் என்ன செய்தார்? மேல் அங்கு என்ன நடந்தது?

விடை:—யுதிஷ்டிரர் நேரே பீஷ்மரிடம் சென்று அடிபணிந்து அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு சண்டையை விதிப்படி தொடங்க அனுமதி கேட்டார். அப்பொழுது பீஷ் மர் யுத்தத்திற்கு அநுமதி கொடுத்துவிட்டுத் தாம் சோற்றுக் கடனுக்காகத் துரியோதனியர் பக்கத்தில் சண்டையிடவேண்டு மாயினும் மனதாரப் பாண்டவர்களது ஜயத்தையே கோருவ தாகச் சொன்னார். இதன்பின்பு தமது தேகஸஹாயம் தவிர வேறு ஏதாவது ஒரு வரனைத் தம்மிடமிருந்து கேட்டுவாங்கிக் கொள்ளும்படி பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு அநுமதி கொடுத்தார். அப்பொழுது யுதிஷ்டிரர் 'உம்மைக் கொல்லும்வழியை எனக் குத் தெரிவிக்கவேண்டும்' என பீஷ்மர் 'எனக்கு இன்னம் இறக்குங்காலம் வரவில்லை, வேறு ஒரு ஸமயத்தில் என்னை வந்து கேட்டால் நான் உங்களுக்குத் தகுந்த உபாயஞ்சொல்லிக் கொடுக்கிறேன்' என்று சொன்னார். உடனே யுதிஷ்டிரர் துரோணரிடம் சென்று இவ்வாறுசெய்து அவரது மரணஹே துவையும் கேட்க, அவர் பீஷ்மர் சொல்லியது போலவே சொல்லி 'நான் சண்டை செய்துகொண்டிருக்குங்கால் என்னை ஒருவராலும் கொல்லமுடியாது; நான் தகுந்த ஸத்துக்களிட மிருந்து அசுபஸங்கதியைக் கேள்விப்பட்டால் யுத்தம் செய்து கொண்டிருக்கையிலேயே எனது ஆயுதத்தை எறிந்துவிடுவேன். அப்பொழுது தான் என்னை யாராவது அடித்துக் கொல்லலாம்' என்று தமது மரணஹேதுவை யுதிஷ்டிரருக்கு வெளியிட்டார். பின்பு யுதிஷ்டிரர் கிருபரிடம்போய், வந்தன வழிபாடுகள் செய்ய அவரும் பீஷ்மத் துரோணர்களைப்போலச் சொல்லி விட்டு, 'நான் சிரஞ்சீவி என்னை ஒருவராலும் கொல்லமுடியாது, ஆனாலும் பயப்படவேண்டாம். ஜயம் முடிவில் உங்களுக்குத் தான்' என்று பாண்டவர்களைத் தைரியப்படுத்தினார். பின்பு பாண்டவர்கள் சல்லியனிடம் சென்று அனுமதிபெற்றுக் கர் ணன் பலத்தைக் குறைப்பதாகச் சொன்ன வாக்கையும்

அவனுக்கு ஞாபகப்படுத்திவிட்டுத் தமது சேனையை நோக்கி யுதிஷ்டிரரை முன்னிட்டுக்கொண்டு புறப்பட்டார்கள்.

வினா 40:—இவ்வாறு பாண்டவர்கள் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கையில் பகவான் என்ன செய்தார்? அதன்பின்பு யுதிஷ்டிரர் என்ன செய்தார்?

விடை:—பாண்டவர்கள் பெரியவர்களிடம் யுத்தத்தைத் தொடங்க அநுமதி பெற்றுக்கொண்டு திரும்புகையில் பகவான் பின்தங்கி கர்ணனை நோக்கி 'நீயோ பீஷ்மர் இறக்கும் வரையில் சண்டை இடுவதில்லை என்று பிரதிக்ஞை செய்திருக்கிறாய். உனக்கு ஒருவரிடத்தும் பக்ஷபாதமில்லாவிடில் பீஷ்மர் இறக்கும்வரையில் பாண்டவர்கள் பக்கம் சண்டை செய்துவிட்டுப் பின்பு துரியோதனன் பக்கம் போய்விடலாம்' என்று கர்ணனைக் கலைக்கப் பார்த்தார். கர்ணன் இதற்கு உடன்படவில்லை. உடனே பகவான் யுதிஷ்டிரரோடு பாண்டவ சேனையை நோக்கிப் புறப்பட்டார். யுதிஷ்டிரர் சேனைகளின் மத்தியில் வந்ததும், இத்தருணத்தில் யார் எமக்கு ஸகாயமாய் சண்டைசெய்வதாக வந்தபோதிலும் அவர்களை நாங்கள் அங்கீகரிக்கத் தயாராயிருக்கிறோம்' என்று உரக்கக்கூறினர். இதைக்கேட்டதும், யுயுத்ஸு (திருதராஷ்டிர ராஜாவுக்கு ஒரு வைசிய ஸ்திரீயினிடம் பிறந்த தர்மாத்மா) தனது படைகளோடு துரியோதனன் பக்கத்தை விட்டுப் பாண்டவர்கள் பக்கம் வந்தான். அவனைத் தருமபுத்திரர் வெகு ஸந்தோஷத்தோடு அங்கீகரித்தார். தருமபுத்திரரது வணக்கம் முதலிய நற்குணங்களைப் பார்த்திருந்தவர்கள் யாவரும் அவரைப் புகழ்ந்து பேசினர்.

வினா 41:—இவ்வாறு எல்லாம் ஸரியாக முடிந்ததும் முதல் நாள் நடந்த யுத்தத்தில் என்னென்ன விசேஷங்கள் நடந்தன?

விடை:—முதல்நாள் யுத்த ஆரம்பத்தில் யுத்தகளத்தில் ஒரு பக்கத்தில், அர்ஜுனன், பீஷ்மர்; ஸாத்யகி, கிருதவர்மா; யுதிஷ்டிரர், சல்லியன்; கடோத்கசன், அலம்புஷன்; சிகண்டி, அசுவத்தாமா; துருபதன், ஜயத்ரதன்; இராவான், சுருதாயுஸ்; உத்தரன், உலூகன்; ஆகிய இவர்கள், ஆகாயத்தில் வந்து கூடியிருந்த ஸித்தர்கள் தேவர்கள் முதலியவர்கள் வியக்கும்படி ஜோடி ஜோடியாய் கோரமான துவந்தயுத்தம் செய்துவந்தனர். மற்றொருபக்கத்தில் ஏகக்குழப்பமாக ஸேனாதிபதிகள் தமது ஸேனைகளை நடத்திக்கொண்டு யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

இவ்வாறு நடந்ததால் முதலில் செய்திருந்த வியூகங்கள் கலைந்து வருகையில் பீஷ்மர் வெகு லாஹவமாய் அனேக வீரர்களை மாய்த்துவந்தார். இப்படியிருக்கையில், அபிமன்யுவுக்கும் அவருக்கும் யுத்தம் உண்டாயிற்று. இவர்கள் இருவருக்கும் கொஞ்சகாலம் ஸமயுத்தம் நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது அபிமன்யுவைச் சல்லியன், கிருபர், கிருதவர்மா முதலியவர்களும் வந்து எதிர்க்க, அபிமன்யு இவர்கள் எல்லோரையும் ஒருவனாகவே தடுத்துவந்தான். முடிவில் அபிமன்யு பீஷ்மரது கொடியை வெட்டிச் சாய்த்தான். பின்பு பீமனுக்கும் பீஷ்மருக்கும் சண்டை உண்டாயிற்று. இங்கு இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில் சல்லியனுக்கும், உத்தரனுக்கும் சண்டை வேறொரு பக்கத்தில் தொடங்கிற்று. சல்லியன் உத்தரன் ஏறி வந்த யானையை வெட்டிக்கொன்றுவிட்டு முடிவில் உத்தரனையும் கொன்றான்.

வினா 42:—இவ்வாறு உத்தரன் இறந்ததும், இதனால் வேறு என்ன விபரீதச் சண்டை யுண்டாயிற்று?

விடை:—இதைப் பார்த்திருந்த இவன் ஸகோதரனான சுவேதன் மிகுந்த ஆவேசத்தோடு சல்லியனிடம் யுத்தத்திற்கு வந்தான். இந்த யுத்தத்தில் வெகு ஸாமர்த்தியமாய் சுவேதன் சல்லியனை அபஜயப்படுத்தத் தொடங்கும் தருணத்தில், துரியோதனனும் பீஷ்மரும் சல்லியனை வந்து காப்பாற்ற, அவன் பிழைத்தான். பீஷ்மரைத் தவிர வேறு ஒருவராலும் சுவேதனை எதிர்க்கமுடியாமல் போகச், சுவேதனுக்கும் பீஷ்மருக்கும் மிகுந்த கோரமான சண்டை யுண்டாயிற்று. இருவரும் வெகு காலம் ஸமயுத்தம் செய்து வந்தனர். முடிவில் பீஷ்மர் சுவேதனைக் கொன்றுசாய்த்து துரியோதனாதியருக்கு ஹிதத்தைச் செய்தார். பாண்டவர்கள் மிகுந்த துக்கத்தோடு தமது படைவீடுகளுள் புகுந்தனர். மத்தியானகாலத்தில் யுத்தம் மறுபடியும் தொடங்க விராடராஜன் மற்றொரு பிள்ளையாகிய சங்கன் என்பவன் சல்லியனை எதிர்த்தான். பீஷ்மர் அப்பொழுது சல்லியனுக்கு ஸஹாயமாய் வருவதைக்கண்டு அர்ஜுனன் சங்கனுக்கு ஸஹாயமாய் வந்தான். கொஞ்சகாலம் அர்ஜுனனுக்கும் பீஷ்மருக்கும் யுத்தம் நடக்க, பீஷ்மர் மெதுவாக அர்ஜுனனை விட்டுவிட்டு இதர ராஜாக்களை எதிர்க்கத் தொடங்கினார். அப்பொழுது அவர்செய்த யுத்தத்தால் பாண்டவஸேனை முழுவ

துமே அல்லோலகல்லோலப்பட சிதறி ஓடியது. இத்தருணத்தில் ஸூர்யாஸ்தமனமாக ஸேனைகள் யாவும் ஸேனாதிபதிகள் கட்டளைப்படி தத்தம் இருப்பிடம் சேர்ந்தன.

வினு 43:—இவ்வாறு பாண்டவர்கள் கைதாழ்ந்து படை வீடு சென்றதும் மறுநாள் சண்டைவிஷயமாய் என்னவென்ன ஏற்பாடுகள் எவ்வாறு நடந்தன?

விடை:—யுதிஷ்டிரர் பகவானை நோக்கிப் பீஷ்மர் உயிரோடிருந்தால் தமக்கு ஜயம் வருவது அஸாத்தியம் என்று சொல்லி, அன்று பகலில் பீஷ்மர் யுத்தம் செய்து பாண்டவஸேனைகளை ஈவு இரக்கமின்றி மாய்த்ததை எண்ணித் துக்கிக்கலானார். அப்பொழுது பகவான், அர்ஜுனன் திருஷ்டத்யும்னன் முதலிய மஹா வீரர்கள் அவர் பக்கத்திலிருக்கையில் கொஞ்சமேனும் அவர் மனங் கலங்க வேண்டியதில்லை என்று யுதிஷ்டிரரைத் தேற்றினார். அப்பொழுது திருஷ்டத்யும்னன் வெகு உத்ஸாகத்தோடுபேசத் தர்மபுத்ரர் மனந்தேறி திருஷ்டத்யும்னனைத் தமது ஸேனைகளைக் கிரௌஞ்சாருண வியூகமாக மறுநாள் அமைத்துச் சண்டை தொடங்கும்படி சொன்னார். அவ்வாறே மறுநாள் அவன் ஸேனைகளைக் கிரௌஞ்சாருண வியூகமாக அமைத்து அதில் அர்ஜுனனை முதலிலும் மற்றைய வீரர்களை ஒழுங்காகக் கண், இறகு முதலிய இடங்களிலும் வைத்தான். அப்பொழுது கௌரவ ஸேனையும் பீஷ்மத்துரோணர்களால் வியூகங்களாகக் கட்டப்பட்டுச் சண்டைக்குத் தயாராக இரண்டாம் நாள் போர்தொடங்கியது.

வினு 44:—இரண்டாம் நாள் நடந்தபோரில் யார் யார் எவ்வாறு சண்டையிட்டு வந்தனர்?

விடை:—முதலில் பீஷ்மருக்கும் அர்ஜுனனுக்கும் அன்று போர் உண்டாயிற்று. அதில் அர்ஜுனன் வெகு ஸாமர்த்தியமாக யுத்தம் செய்ய கௌரவஸேனை மிகுந்த குழப்பத்தை அடைந்தது. அப்பொழுது துரியோதனன் மிகுந்த பயத்தோடு பீஷ்மரை நோக்கி, "தாதா உமக்காகவே கர்ணனும் போர் செய்யாதிருக்கிறான். இந்த ஸமயத்தில் நீரும் இவ்வாறு அசட்டையாய் இருந்துவிட்டால் எனக்கு வேறு என்னகதி' என்று முறையிட்டுக்கொண்டான். உடனே பீஷ்மருக்கு யுத்தாவேசம் வந்துவிட்டது. அர்ஜுனனை மிகுந்த பரபரப்போடு வந்து எதிர்த்தார். இருவருக்கும் வெகுகாலம் ஸமயுத்தம் நடந்தது. உலகம் உள்ள

வரையில், இவர்கள் இருவரும் இவ்வாறே சண்டை யிட்டுக் கொண்டிருப்பார்கள்போலத் தோன்றியது.

வினு 45:—இங்கு இவ்வாறு ஸமயுத்தம் நடந்து வருகையில் வேறு யார் யாரை எதிர்த்து எவ்வாறு சண்டையிட்டனர்?

விடை:—யுத்தகளத்தில் வேறோரிடத்தில் துரோணருக்கும் திருஷ்டத்யும்னனுக்கும் கொடியபோர் உண்டாயிற்று. இருவரும் வெகுகாலம் யுத்தம் செய்தனர். துரோணருக்கு, எதிரி விடும் பாணங்களை இசைவாய்த் தடுக்க முடிந்ததே ஒழிய மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. இவ்வாறு இருக்கையில் திருஷ்டத்யும்னனுக்கு ஸஹாயமாகப் பீமஸேனன் அங்கு ஓடிவந்தான். இதைக்கண்ட துரியோதனனால் ஏவப்பட்ட கலிங்க தேசாதிபதி துரோணருக்கு ஸஹாயமாய் தனது ஸேனையோடு வந்து நின்றான். இதற்குள் துரோணர் த்ருஷ்டத்யும்னனை விட்டுவிட்டு விராடராஜனையும், துருபதராஜனையும் எதிர்த்துப் போர்புரியச் சென்றார். திருஷ்டத்யும்னனும் தர்மபுத்திரருக்கு ஸஹாயம செய்யப் போய்விட்டான்.

வினு 46:—இவ்வாறு துரோணரும் திருஷ்டத்யும்னனும் பிரிந்து போனதும் எவர்களுக்குள் சண்டையுண்டாயிற்று? அது எவ்வாறு முடிவு பெற்றது?

விடை:—அந்த ஸமயத்தில் யுத்தகாலத்தில் பின்தங்கிய பீமனுக்கும் கலிங்கராஜனுக்கும் போர் விளைந்தது. இவ்வாறு பீமனைக் கலிங்கராஜன் ஸேனை தாக்கியதும், சேதிதேசத்தரசனும் மத்ஸ தேசத்தரசனும் தமது ஸேனைகளோடு பீமனுக்கு ஸஹாயமாக வந்தனர். பீமஸேனன் கலிங்கஸேனையை விழுந்து வெகுகொடுமையாய்க் கலக்கினான். இவனது முரட்டுயுத்தத்தால், அந்த ஸேனை சின்னாபின்னமாய்ச் சிதறிப் போயிற்று. அப்பொழுது பீமன் யுத்தகளத்தில் வெறிகொண்டு உலாவுங்கால் யமனைப் போலிருந்தான். அவனைப் பார்த்தவுடன் பயந்து ஸேனைகள் நாலாபக்கங்களிலும் வெருண்டு ஓடின.

வினு 47:—இரண்டாம் நாள் யுத்தம் எவ்வாறு முடிவுபெற்றது?

விடை:—அன்று ஸாயங்காலம் துரியோதனன் பிள்ளை லக்ஷ்மணனுக்கும், அபிமன்யுவுக்கும் கோரயுத்தம் உண்டாக, துரியோதனன் தன் பிள்ளைக்கும், அர்ஜுனன் தன் பிள்ளைக்கும் ஸஹாயமாக வந்தார்கள். இதைக்கண்டு பீஷ்மரும் துரோணரும் அர்ஜுனனை எதிர்க்க வந்தனர். அங்கு பெரிய யுத்தமுண்

டாக அதில் முடிவில் அர்ஜுனன் கௌரவஸேனையைச் சிதற அடித்தான். அந்த ஸேனை ஓடத் தொடங்கிற்று. அத்தருணத்தில் அர்ஜுனனும், பகவானும், தமது சங்கங்களை ஊத, கௌரவஸேனைக்குப் பீதி அதிகரித்துவிட்டது. இந்த ஸமயத்தில் ஸூர்யன் அஸ்தமிக்க இருதிறத்தாரும் தமது ஸேனைகளைத் திருப்பி யுத்தத்தை நிறுத்தினர்.

வினு 48:—மூன்றும் நாள் காலையில் இருபக்கத்திலும் யுத்தத்திற்கு வேண்டிய என்ன ஏற்பாடுகள் நடந்தன? காலையில் யுத்தம் எவ்வாறு நடந்தது?

விடை:—மூன்றும் நாள் காலையில் கௌரவர்கள் கருடவ்யூகத்தைக் கட்டிக்கொண்டு, பாண்டவர்கள் தயார் செய்திருந்த அர்த்த சந்திரவ்யூகத்தை எதிர்த்துப் போருக்கு வந்தனர். அப்பொழுது நடந்த யுத்தத்தில் அர்ஜுனன் பீமஸேனன், கடோத்கசன் முதலிய பாண்டவவீரர்கள் வெகு கொடுமையாய்ச் சண்டையிட, கௌரவரது ஸேனை சிதறி ஓடத்தொடங்கியது. அப்பொழுது துரியோதனன் பீஷ்மரிடம் வந்து 'உமக்குப் பாண்டவரிடம் இருக்கும் பக்ஷபாதத்தால் உமது முழு பலத்தைக் காட்டாது இவ்வாறு எதிரிகளுக்கு ஸஹாயம் செய்கிறீர் போலிருக்கிறது. அவ்வாறு செயவதைவிட்டு என்பேரில் கருணை வையும்' என்று கெஞ்சிக் கேட்டான். அப்பொழுது பீஷ்மர் 'பாண்டவர்களை இந்திரனுல் கூட ஜயிக்க முடியாது. நான் முன்னமே எத்தனையோ தரம் இதை உனக்குச் சொல்லியாய் இருக்கிறது. நானே கிழவன். என்னுல் கூடியவரையில் சண்டையிட்டுப் பார்க்கிறேன்,' என்று சொல்லிச் சிதறிப்போன தமது ஸேனைகளை மறுபடியும் சேர்த்துக்கொண்டு மூன்றும் நாள் ஸாயங்கால ஸமயத்தில் கோர யுத்தத்தைத் தொடங்கினர்.

வினு 49:—ஸாயங்காலம் நடத்த சண்டையில் என்ன விசேஷம் நடந்தது? அன்று சண்டை எவ்வாறு முடிவு பெற்றது?

விடை:—மிகுந்த பரபரப்போடு அன்று ஸாயங்காலம் பீஷ்மர் யுத்தம் செய்யத்தொடங்கினர். பாண்டவ ஸேனை தத்தளிக்க ஆரம்பித்தது. கொஞ்ச நாழிகைக்கெல்லாம் பாண்டவ ஸேனையில் ஒரு பெருங்கூக்குரல் உண்டாக, உடனே அது சிதறி ஓட ஆரம்பித்தது. அப்பொழுது சில அரசர்கள் அர்ஜுனனிடம் வந்து பீஷ்மரது பராக்கிரமத்தால் தமது ஸேனைக்கு வந்தகேட்டை எடுத்துரைத்துச சீக்கிரம் பீஷ்மரைச்சென்று எதிர்த்து

ஓடும் ஸேனைகளைத் தடுக்கும்படி அவனை அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். உடனே, அர்ஜுனன் வேண்டுகோளின் பேரில் பகவான் ரதத்தை வெகு தந்திரமாய் பீஷ்மர் முன் கொண்டு நிறுத்த, இருவருக்கும் பெரும்போர் உண்டாயிற்று. இருவரும் கொஞ்சகாலம் ஸமயுத்தம் செய்தனர். இப்படி யுத்தம் நடந்துவருகையில் பீஷ்மாதுபாணவேகத்தை அர்ஜுனனால் தாங்க முடியாமல் போயிற்று. அர்ஜுனன் கை கொஞ்சம் சளைத்தது. மேலும் பீஷ்மர் கொடிய போர்செய்ய வந்திருக்கும் உறுதியும் பகவானுக்கு ஞாபகம் வர, பீஷ்மரைக் கௌரவப் படுத்துவதற்காகவும், அதே ஸமயத்தில் அர்ஜுனன் பாண்டவ ஸேனைமுதலியவர்களைத் தேற்றுவதற்காகவும் பகவான் அர்ஜுனனை நோக்கி, 'என்ன அர்ஜுனா! தாது என்று அம்பு எய்யாமலிருக்கிறாய், சண்டையில் இப்படியிருந்தால் என்ன முடியும்? இதோ நானே பீஷ்மரைப்போய்க் கொன்றுவிடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு யுத்தவெறி கொண்டவர்போல் கடிவாளங்களை எறிந்துவிட்டுப், பகவான் சக்கிராயுதத்தைச் சுழற்றிக்கொண்டு பீஷ்மரை நோக்கி ஓடினார். 'யுத்தத்தில் ஆயுதம் எடுக்கமாட்டேன்' என்ற தமது பிரதிஜ்ஞை பொய்யான போதிலும் தமது பக்தனைக் கௌரவப் படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு பகவான் வருவதைக் கண்ட பீஷ்மர் ஆயுதங்களை எறிந்துவிட்டு, பகவானுக்கு நமஸ்காரம் செய்து, 'உம்மால் நான் இறந்தால் எனக்கு மிகுந்த மேன்மை. என்னைச் சீக்கிரம் கொன்றுவிடும்' என்று தலை கவிழ்ந்து நின்றார். இதற்குள் அர்ஜுனன் ஓடிவந்து பகவானைத் தடுத்து இரதத்திற்கொண்டு வந்து வைத்து ஸமாதானப் படுத்தினான். அதன் பின்பு அர்ஜுனன் வெகு உத்ஸாகத்தோடு விசித்திரமான சண்டை செய்தான். அவனை எல்லாரும் புகழ்ந்து பேசினர். அன்று சண்டை ஒருவாறு பொதுவாக முடிய, பாண்டவ கௌரவர்கள் தமது கூடாரத்துள் புகுந்தனர்.

வினா 50:—நான்காம் நாள் யுத்தம் எவ்வாறு நடந்து முடிவு பெற்றது?

விடை:—நான்காம் நாள் காலையில் இருதிறத்தாரும் தகுந்த வியூகங்களைக் கட்டிக்கொண்டு கொடிய சண்டையைச் செய்யத்தொடங்கினர். அதில் சல்லியனுக்கும் திருஷ்டத்யும்னனுக்கும் கோர யுத்தம் நடக்க, அப்பொழுது சல்லியன் கை உயரும் தருண

மாய் இருப்பதைப் பீமசேனன் முதலியோர் அறிந்து திருஷ்டத்யும்னனுக்கு ஸஹாயமாய்ப்போயினர். சல்லியனுக்கு ஸஹாயமாகத் துரியோதனன் முதலியோர் வர, சல்லியன் திருஷ்டத்யும்னன் ஆகிய இவர்களைச் சாக்கிட்டுப் பெரும் போர் அங்கு உண்டாயிற்று. அதில் பீமனை முன்னிட்டுக்கொண்டு எல்லாருமதுரியோதனாதியரைத் தாக்கினர். பீமன் யமனைப்போல் எல்லா எதிரிகளையும் கொன்று எதிரி சேனையைச் சின்னாபின்னப் படுத்திவிட்டான். இவ்வாறு இங்கு இருக்கையில் வேறு ஒரு பாகத்தில் ஸாத்யகிக்கும் பகதத்தனுக்கும் சண்டை உண்டாக அவர்கள் மூலமாய் அநேக வீரர்வந்து அங்கு சேர, அங்கும் கொடியபோர் நடக்கத்தொடங்கியது. அப்பொழுது பீமனும் துரியோதனனது தம்பிமாரும் அங்கு வர, சண்டையில் பீமன் துரியோதனன் தம்பிமாரில் சிலரைக் கொன்று விட்டான். அதன் பின்பு பகதத்தன் தன் யானைமேலிருந்தபடியே பீமனோடு யுத்தம்செய்து அவனுக்கு மூர்ச்சை வரும்படி அடித்தான். இதைப் பார்த்திருந்த கடோத்கசன் தன் தகப்பனாகிய பீமனைக் காப்பாற்ற தன் மாயையால் சிருஷ்டிக்கப்பட்ட யானையின்மேல் ஏறிக்கொண்டு பகதத்தனை எதிர்த்துத் தன் மாயையின் வல்லமையால், அவனையும் பின்பு அநேக எதிரிகளையும் வென்றான். பீஷ்மர் துரோணர் முதலியோருக்கும் கடோத்கசனோடு யுத்தம் செய்வது அஸாத்தியம் என்று அப்பொழுது பட்டது. மேலும் அப்பொழுது ஸூர்யாஸ்தமனம் ஆய்க் கொண்டிருந்தபடியால் பீஷ்மாது உத்தரவின்பேரில்மெதுவாகக் கௌரவஸேனை யுத்தகளத்திலிருந்து திரும்ப, பாண்டவர்களும் பீமஸேனன் கடோத்கசன் ஆகிய இவர்களை முன்னிட்டுக் கொண்டு தமது இருப்பிடம் சென்றனர்.

வினா 51:—அன்று இரவு துரியோதனாதியர் படை வீட்டில் என்ன நடந்தது?

விடை:—துரியோதனன், அன்றிரவு தனது தம்பிமாரில சிலர் பீமனால் இறந்ததைப்பற்றி வெகுவாகத் துக்கிதனுவிட்டுப் பீஷ்மரைநோக்கிப் பாண்டவர்களுக்கு இரண்டு நாளாக ஜயமேவரக் காரணம் என்ன என்று கேட்டான். அப்பொழுது பீஷ்மர் 'பாண்டவர்களில் அர்ஜுனன் நரன், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பரப்பொருளாகிய நாராயணர். அவர்களது மேன்மையை எடுத்துக் காட்டியும் உணராது நீ அநியாய யுத்தம் செய்கிறாய். அவர்களை

ஒருவராலும். ஜயிக்கமுடியாது. ஆகையால் பாண்டவர்களுக்கு ஜயம் வருகிறது' என்று சொல்லிப் பகவானது மேன்மையை எடுத்துரைத்தார். அதன்பின்பு துரியோதனனை நோக்கிப் பீஷ்மர்' 'நியாயஸ்தராய் இருக்கும் பாண்டவரிடம் பகவானுக்கு ஸதா பிரீதி உண்டு. ஆகையால் நீ பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொண்டால் உன் தம்பிமாரோடு நீ வெகுகாலம் அரசாட்சி செய்துகொண்டு ஸுகமாய் வாழலாம். பகவானை அலட்சியம் செய்து சண்டை செய்வாயாகில் உனக்கு நாசம் சீக்கிரம் வந்துவிடும்' என்று புத்திமதியும் கூறினர். துரியோதனனுக்கு அன்றிரவோடு இந்தப் புத்திமதி மறந்துபோய் விட்டது.

விஞ 52:—ஐந்தாம் நாள் யுத்தம் எவ்வாறு நடந்து முடிவு பெற்றது?

விடை:—ஐந்தாம் நாள் காலையில் வழக்கப்படி அர்ஜுனனும் பீஷ்மரும் யுத்தகளத்தை இரத்தப் பிரவாஹமாக அடித்தனர். அப்பொழுது துரியோதனன் துரோணரைச் சென்று வேண்டிக்கொள்ள, அவர் யுத்தவெறிகொண்டு பீஷ்மரைப் போலவே தொடங்கிவிட்டார். முதல் நாள் ஏற்பட்டபடியே அன்றும் வெகு கோரமாகத் துவந்த யுத்தங்களும் நடந்தன. அதில் அபிமன்யு துரியோதனன் பிள்ளையாகிய லக்ஷ்மணனை எதிர்த்து அவனது குதிரைகள் எல்லாவற்றையும் வெட்டிச்சாய்த்து அவனையும் கொல்ல யத்தனித்தான். அப்பொழுது கிருபாசாரியர் லக்ஷ்மணனைத் தமது தேரில் எடுத்து வைத்துக்கொண்டு யுத்தகளத்தைவிட்டுத் தேரை வெளியே கொண்டுபோய் லக்ஷ்மணனைக் காப்பாற்றினர். இப்படி இருக்கையில் ஸாத்தியகிக்கும், பூரிச்ரவஸுக்கும் கொடிய போர் உண்டாக அதில் ஸாத்தியகிக்கு ஸஹாயமாக அவனது பத்து பிள்ளைகள் வந்தனர். அவர்கள் எல்லாரையும் பூரிச்ரவஸ் வெட்டிச் சாய்த்து விட்டான். உடனே இருவரும் கீழே குதித்துத் துவந்த யுத்தத்திற்கு நின்றனர். அத்தருணத்தில் ஸாத்தியகியைப் பீமனும்; பூரிச்ரவஸைத் துரியோதனனும் தமது ரதங்களில் எடுத்துக் கொண்டு போய்விட்டனர். இதற்குள் ஸாயங்கால ஸமயமாக யாவரும் தமது இருப்பிடம் சென்றனர்.

விஞ 53:—ஆறாம் நாள் யுத்தம் எவ்வாறு நடந்து முடிவு பெற்றது?

விடை:—ஆறாம் நாள் பீஷ்மர் துரோணுதிகள் கொடிய சண்டை செய்துகொண்டிருக்கையில் பீமன் தன் தேரை ஸாரதியிடம்

ஒப்புவித்துவிட்டுத் தனிமையாகக் கௌரவ ஸேனையுட் புகுந்து கலக்கத் தொடங்கினன். இதை ஸாரதிமூலமாய் அறிந்த திருஷ்டத்யும்னன் பீமனுக்கு ஸஹாயமாகக் கௌரவஸேனையுட் புகுந்து மோஹனாஸ்திரப் பிரயோகம் செய்தான். உடனே துரியோதனாதியர் மயங்கி விழுந்தனர். கொஞ்சநாழிகைக்கெல்லாம் துரோணர் அவர்களது மயக்கத்தைத் தெளிவிக்க யாவரும் சண்டை செய்யத் தொடங்கினர். அப்பொழுது துரோணருக்கும் திருஷ்டத்யும்னனுக்கும் சண்டை உண்டாயிற்று. அத்தருணத்தில் தருமபுத்திராது உத்திரவின்பேரில் அபிமன்யுவை முன்னிட்டுக்கொண்டு அநேக வீரர்கள் பீமனுக்கு ஸஹாயமாகக் கௌரவஸேனையைச் சிதற அடித்துக்கொண்டு உள்ளே புகுந்தனர். துரோணர் அப்பொழுது இவர்கள் எல்லோரையும் வெகு நேர்த்தியாகத் தடுத்தார். பீமனும் சிறந்த யுத்தத்தைச் செய்தான். அந்த ஸமயத்தில் துரியோதனனோடு சண்டையுண்டாக அவன் மூர்ச்சை போட்டு விழும்படி பீமன் அடித்தான். கிருபர் அத்தருணத்தில் அவனைக் காப்பாற்றினர். பீஷ்மரோ அன்று மிகுந்த ஆவேசத்தோடு சண்டை செய்தார். ஸூர்யாஸ்தமன சமயம் ஆனவுடன் எல்லாரும் தமது படை வீடுகள் சென்றனர்.

வினா 54:—ஏழாம் நாள் யுத்தம் எவ்வாறு நடந்து முடிவு பெற்றது?

விடை:—ஏழாம் நாள் காலையில் துரியோதனனது வேண்டுகோளின் பேரில் அன்று தமது உயிரைக்கூடக் கவனியாது கொடிய யுத்தம் செய்வதாகப் பீஷ்மர் வாக்களித்து யுத்தத்தைத் தொடங்கினர். அன்றைய தினம் அநேக துவந்த யுத்தங்கள் ஏற்பட்டன. பகதத்தனுக்கும் கடோத்கசனுக்கும் யுத்தம் உண்டாயிற்று. இதில் கடோத்கசன் தோல்வி அடைந்தான். நகுல ஸஹதேவாளுக்கும் சல்லியனுக்கும் உண்டான சண்டையில் சல்லியன் மூர்ச்சைபோட்டுக் கீழே விழுந்தான். சேகிதானனுக்கும் கிருபருக்கும் வெகுகால ஸமயுத்தம் நடந்தது. அதன் முடிவில் சேகிதானன் தளர்ந்துபோக அவனைப் பாண்டவ வீரருள் ஒருவன் தன் தேரில் வைத்துக்கொண்டுபோய் காப்பாற்றினன். இவ்வாறு சண்டை நடந்துவருங்கால் யுதிஷ்டிரர் சிகண்டியிடம் வந்து, 'பீஷ்மர் மஹா கோரயுத்தம் செய்கிறார். அவரை நீ கொல்லுவதாகச் சொன்னாயே, அவ்வாறு சீக்கிரம் செய்துவிடு'

என்றார். இதைக்கேட்டதும் சிகண்டி பீஷ்மரை எதிர்க்க அதிவேகமாக ஓடிவந்தான். இதைக்கண்ட பீஷ்மருக்குச் சிகண்டியின் ஸ்திரீத்வம் ஞாபகம் வர அவர் யுத்தகளத்தில் யுத்தம் செய்ய வேறோர் பாகத்திற்குத் திரும்பினார். அன்று இருதிறத்தார் பக்கத்திலும் ஸமயுத்தம் நடந்து முடிவுபெற்றது.

வினா 55:—எட்டாம் நாள் யுத்தம் எவ்வாறு நடந்தது?

விடை:—எட்டாம் நாள் காலையில் பீமனுக்கும் பீஷ்மருக்கும் போர் உண்டாயிற்று. அதில் துரியோதனனும் அவன் தம்பிமாரில் சிலரும் சேர்ந்து வந்து பீஷ்மரை வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகார்த்துக்கொண்டு அவருக்கு ஸஹாயம் செய்யத் தொடங்கினர். யுத்தம் வெகு ஆரவாரத்தோடு நடந்து வருகையில் பீமன் பீஷ்மரது ஸாரதியைக்கொல்ல அவரது குதிரைகள் அடக்குவாரில்லாது வெருண்டு பீஷ்மரை யுத்தகளத்தை விட்டு இழுத்துக்கொண்டு ஓடின. இவ்வாறு பீஷ்மர் யுத்தகளம் விட்டுப்போனதும் பீமன் துரியோதனன் தம்பிமாரில் சிலரை யுத்த வெறியில் கொன்று சாய்த்தான். இதைக்கண்ட துரியோதனன் பீஷ்மரிடம் சென்று துக்கிக்க அவர், 'நானும் விதுரரும் முன்னமேயே இதை அறிந்து சொல்லவில்லையா? பீமனோடு யார் யார் சண்டைக்குப் போகிறார்களோ அவர்களுக்கு வீரஸ்வர்க்கமே கதி' என்று வற்புறுத்திச் சொன்னார். பீமன் இவ்வாறு சண்டையிட்டு வருகையில் நகுல ஸஹதேவர்கள் கௌரவ சேனைகளைத் தாக்கி அவைகளைச் சின்ன பின்னப் படுத்தினர்.

வினா 56:—இவ்வாறு யுத்தம் நடந்துவருகையில் யார் பாண்டவர்களுக்கு எங்கிருந்து ஸஹாயமாய் வந்தது? அவன் கதி யாரால் எவ்வாறு ஆயிற்று?

விடை:—அர்ஜுனன் இந்திர லோகத்தில் வஸித்துக்கொண்டிருந்த காலத்தில் உலுபியினிடம் அவனுக்குப் பிறந்த பிள்ளையாகிய இராவான் வந்து தனது பிறப்பு முதலியவைகளைச் சொல்லித் தான் அர்ஜுனனுக்குப் பிள்ளை என்று சொல்லிக்கொண்டான். அப்பொழுது அர்ஜுனன் இராவானைப் பின் நடக்கப்போகும் யுத்தத்தில் தன் பக்கத்தில் ஸஹாயம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தான். அந்த வார்த்தை நாகலோகத்திலிருந்த இராவானுக்கு ஞாபகம் வர பாதாள லோகத்திலிருந்து பாண்டவர்களுக்கு ஸஹாயமாக அவன்வந்து எட்டாம் நாள் யுத்தத்தில் சிறந்த யுத்தத்தைச் செய்ய ஆரம்பித்தான். அந்த

யுத்தத்தில்" அனேகம் பேர் மாண்டுபோகத் துரியோதனன் ஸேனையில் ஒரு குழப்பம் பிறந்தது. இதைக் கண்ட துரியோதனன் அலம்புஷன் என்ற ராக்ஷஸனை இராவானோடு சண்டை செய்யும்படி ஏவினான். அவன் இவனோடு கொஞ்சகாலம் ஸமயுத்தம் செய்துவருகையில் இராவானால் வெட்டுண்டு மிகுந்த கஷ்டமடைய உடனே தனது மாயை மூலமாய் ஒரு பெரிய ரூபத்தையெடுத்துக்கொண்டு இராவானை எதிர்த்து வந்தான். இராவான் தானும் தனக்குத் தெரிந்த ஸர்ப்பமாயையால் அனேக ஸர்ப்பங்களை உண்டாக்கி அலம்புஷனை மூடிவிட்டான். இதில் இராவானுக்கு உறவாகிய ஒரு நாகன் அவனுக்கு மிகுந்த ஸஹாயம் செய்தான். இவ்வாறுமூடப்பட்ட அலம்புஷன் தன் மாயையால் கருடரூபம் தரித்து ஸர்ப்பங்களைத் தின்று அழிக்க இராவானுக்கு மனக்குழப்பம் உண்டாயிற்று. இதை அறிந்த அலம்புஷன் சீக்கிரத்தில் இராவானது தலையை வெட்டி எறிந்துவிட்டான். இதை அர்ஜுனனுக்கு ஒருவரும் அப்பொழுது தெரிவிக்கவில்லை. இந்தச் சமயத்தில் பீமன், ஸாத்யகி முதலிய பாண்டவ வீரர்கள் கோரயுத்தத்தைச் செய்துகொண்டிருந்தனர்.

வினா 57:—இராவான் இவ்வாறு இறந்ததும் அங்கு என்ன நடந்தது?

விடை:—இராவான் இறந்த ஸமாசாரம் கடோத்கசனுக்குத் தெரிய வந்ததும், அவன் பயங்கரமான கர்ச்சனையைச் செய்தான். இதைக்கேட்டதும் துரியோதனன் அவனை எதிர்த்துச் சண்டைக்குப்போனான். உடனே கடோத்கசனுக்குத் துரியோதனன் பாண்டவர்கள் விஷயத்தில் செய்தகொடுமைகள் எல்லாம் ஞாபகம் வர யுத்தவெறியுண்டாய் கோரமான யுத்தம் செய்யத் தொடங்கினான். அப்பொழுது துரியோதனனுக்கு ஸஹாயமாகச் சில வீரர்கள் வந்தார்கள். வந்தவர்களை எல்லாம் கடோத்கசன் தோல்வி அடையும்படி செய்ய, துரியோதனன் கொஞ்சம் நிதானித்து உடனே கொடிய பாணங்களைப் பிரயோகிக்கத் தொடங்கினான். வெகு தந்திரமாய் கடோத்கசன் அவைகள் தன்மேல் விழாமலிருக்கும்படி இடம் விட்டு இடம் மாறிக்கொண்டே இருந்தான். அப்பொழுது கடோத்கசன் செய்த கர்ச்சனைகள் பீஷ்மர் காதில் விழ துரியோதனனுக்கு ஸஹாயமாய் சில அரசர்களை அவர் அனுப்பினார். அவர்கள்

வந்தும ஒன்றும் பயன்படவில்லை. கடோத்கசன் அவர்களை யும் வென்று துரியோதனனைக் கொல்ல முயற்சி செய்யத் தொடங்கினான். இப்படி இருக்கையில் இவனது கர்ச்சனைகளைக் கேட்ட யுதிஷ்டிரர் பீமனை இவனுக்கு ஸஹாயமாய் அனுப்பி னார். பீமனைக்கண்டதும் மிகுந்த பயத்தோடு கௌரவவீரர்கள் ஓடத்தலைப்பட்டனர். துரியோதனனுக்கும் பீமனுக்கும் நடந்த யுத்தத்தில் பீமன் அடி பொறுக்க முடியாது சற்று நேரம் திகைத்து நிற்க கடோத்கசன் ஸஹாயம் செய்தான். அதற்குள் பீமன் தெளிந்து எழுந்து முன்னிலும் மிகுந்த ஆவேசத் துடன் போர்செய்தான். அப்பொழுது அவனது தேர்க்குதிரை களைத் துரியோதனனுக்கு ஸஹாயமாய் வந்த துரோணர் கொல்ல பீமன் கதையை எடுத்துக்கொண்டு கீழே குதித்து அவரை நோக்கிச் சென்றான். உடனே அங்கு அபிமன்யு முதலிய பாண்டவ வீரர்களும், அசுவத்தாமன் முதலிய கௌரவ வீரர்களும் வர, பெரும்போர் உண்டாயிற்று. இவ்வாறு சண்டை பலப்பதைக்கண்ட கடோத்கசன் தன் மாயையால் ஒவ்வொரு கௌரவ வீரர்களுக்கும் மற்றைய கௌரவ வீரர் விழுந்து இறப்பதாகத் தோன்றும்படி செய்ய கௌரவஸேனை சின்னபின்னமாகச் சிதறி ஓட வாரம்பித்தது.

வினு 58.—இவ்வாறு ஸேனைகள் சிதறி ஓடுகையில் துரியோதன னும் பீஷ்மரும் என்ன ஏற்பாடு செய்தார்கள்? அப்பொழுது அங்கு யார் சண்டையிட வந்து என்ன செய்தார்? பின்பு என்ன நடந்தது?

விடை:—பீஷ்மர் ஸேனைகளை ஓடவேண்டாம் என்று சொல்லித் தடுத்துவிட முயன்றார். இதற்குள் துரியோதனன் வந்துபீஷ்ம ரிடம் தான் படுங்கஷ்டத்தைச் சொல்லிக்கொள்ள, பீஷ்மர் பகதத்தனை அழைத்து கடோத்கசனோடு சண்டைக்குப்போகச் சொல்லிவிட்டுத் தாம் வேறோர் இடத்தில் சண்டை செய்யச் சென்றனர். பகதத்தன் யானைமேல் ஏறிக்கொண்டு கடோத் கசனை எதிர்த்துவர அதற்குள் பீமஸேனன், அபிமன்யு முத லிய வீரர்கள் கடோத்கசனுக்கு ஸஹாயமாய் வந்து நின்று சண்டை தொடங்கினர். பகதத்தன் ஒருவன் இவர்கள் எல் லோரையும் எதிர்த்துப் போர்செய்து முடிவில் பீமன் ஸாரதி மூர்ச்சைபோட்டு விழும்படியும், மற்றைய வீரர்கள் தளர்ந்து போகும்படியும் செய்தான். உடனே பீமன் கதையைக் கையில்

எடுத்துக்கொண்டு தேரைவிட்டுக் கீழே குதித்துப் பகதத்தனை அடிக்கப்போனான். அத்தருணத்தில் அர்ஜுனன் கௌரவ வீரர்களை மடித்துக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். அர்ஜுனன் அங்கு வந்ததைக்கண்டு துரியோதனனும் அங்கு வந்துவிட்டான். இதற்குள் பகதத்தன் பாண்டவ வீரர்களைச் சின்னபின்னப் படுத்திவிட்டு யுதிஷ்டிரரையே அடிக்கப் புறப்பட்டான். இவ்வாறு சண்டை நடந்து வருகையில் பீமன் அர்ஜுனனுக்கு இராவானது மரணத்தைத் தெரிவித்தான். உடனே அர்ஜுனனுக்குத் துக்கம் வர கீதோபதேசத்திற்கு முன்பாக அவனுக்கு வந்த சோகத்தைப் போன்ற சோகம் உடனே உண்டாயிற்று. அதைத் தானே ஒருவாறு தேற்றிக் கொண்டு யுத்தத்திற்குத் தொடங்கி அநேக வீரர்களை வெட்டிச் சாய்த்தான். பீமன் இதற்குள் துரியோதனன் தம்பிமாருள் சிலரைக் கொன்றுவிட எல்லாக் கௌரவருக்கும் பயம் உண்டாய் விட்டது. மற்றைய பாண்டவ வீரர்களும் எட்டாம் நாள் ஸாயங்காலம் வெகு உத்ஸாகத்தோடு சண்டையிட்டனர். அன்று மாலை படுகளம் மிகுந்த கோரரூபத்தோடு இருந்தது. இருபக்கத்தாருக்கும் அப்பொழுது களைப்பு உண்டாக அவரவர்கள் தத்தமது இருப்பிடம் சென்றனர்.

வினா 59:—எட்டாம் நாள் இரவில் துரியோதனுதியர் படை வீட்டில் என்ன நடந்தது? அது எவ்வாறு முடிவு பெற்றது?

விடை:—இரவில் துரியோதனன், சகுனி, துச்சாஸனன், கர்ணன் முதலியோர் ஆலோசனை ஸபையில் பீஷ்மத்துரோணுதிகள் தம்மால் இயன்றமட்டும் போர்செய்தும் பாண்டவர்களை வெல்ல முடியாத விஷயத்தைப் பற்றி பேசத்தொடங்கினர். துரியோதனனுக்கு மிகுந்த துக்கம் வர, அவன் புலம்பத் தொடங்கினுன். அப்போது கர்ணன் எழுந்து, 'நான் உனக்கு ஹிதத்தையே செய்ய எண்ணுகிறவன். ஆனால் பீஷ்மர் சண்டையிடுகிறவரையில் நான் ஆயுதம் எடுப்பதாக இல்லை. பீஷ்மரோ பாண்டவர்களிடம் பக்ஷபாதமாய் இருப்பதால் ஸரியானபடி சண்டை செய்கிறார் இல்லை. ஆகையால் அவரை யுத்த களத்தில் ஆயுதம் எடுத்து வாராமலிருக்கும்படி செய்துவிட்டால் நான் கூடிய சீக்கிரத்தில் பாண்டவர்களை நாசம் செய்து உனக்குத் திருப்தியை உண்டாக்குவேன்" என்று தன்னைப் பற்றியே புகழ்ந்து பேசிக்கொண்டான். இதைக்கேட்டவுடன்

துரியோதனன் தனது தம்பிமார்களோடு பீஷ்மரிடம் சென்று தனது கஷ்ட ஸ்திதியைச் சொல்லிக்கொண்டு அவரை ஒதுங்கி கர்ணன் சண்டை செய்ய இடங்கொடுக்கும்படி மிகுந்த விநயத்தோடு கேட்டுக்கொண்டான். பீஷ்மருக்கு இந்த வார்த்தை மிகுந்த துக்கத்தை உண்டாக்கத் துரியோதனனை நோக்கி, 'என்னால் கூடியவரையிலும் சண்டை செய்தும் பாண்டவர்கள் அழியவில்லை என்றால் அவர்களை ஜயிப்பது அஸாத்தியம் என்று இன்னமும் உனக்குத் தோன்றவில்லையா? இதற்கு முன்னால் விராட நகரத்தில் மாடுபிடி சண்டையிலேயே இந்த உண்மையை நீ உணர்ந்திருக்கவேண்டும். கர்ணன் என்னமோ சாதிக்கப் போகிறான் என்று எண்ணுகிறாய்; அவன் மாடுபிடிசண்டையில் பட்டபாடு உனக்குத் தெரியாதா? நாளையதினம் நான் சிகண்டியைத்தவிர மற்றைய பாண்டவவீரர்களோடு விசித்திர யுத்தம் செய்கிறேன். பயப்படாதே. எப்படியிருந்தபோதிலும் பாண்டவர்களை ஜயிப்பது அஸாத்தியமான காரியம். நான் உயிரோடிருக்கும் வரையில் என்னால் கூடியவரையில் பார்த்து விடுகிறேன். நான் யுத்தகளத்தில் இறந்தாலும் இறப்பேனே ஒழிய சும்மா திரும்புவதில்லை' என்று அவர் தைரியப்படுத்தினார். மறுநாட் காலையில் எல்லாக் கௌரவவீரர்களும் யுத்தகளம் வர யுத்தம் பழயபடி தொடங்கியது.

விஞ 60:—ஒன்பதாம் நாள் காலையில் நடந்த போரில் என்னென்ன விசேஷங்கள் நடந்தன?

விடை:—ஒன்பதாம் நாள் முதலில் கௌரவர்கள் சண்டைக்கு வருங்கால் அவர்கள் முன்பு அநேக அபசகுனங்கள் காணப்பட்டன. அவர் யுத்தகளம் வந்து சண்டை தொடங்கியதும், அலம்புஷனுக்கும் திரௌபதி பிள்ளைகளுக்கும் பெரும்போர் உண்டாக, அதில் அலம்புஷனுக்கு மூர்ச்சை வரும்படியான ஸ்திதி வந்துவிட்டது. அப்படி இருந்தபோதிலும், அலம்புஷன் வெகு விசித்ர யுத்தம் செய்ய, இதை அறிந்த அபிமன்யு தன் ஸஹோதரருக்கு ஸஹாயமாக ஓடிவந்தான். அப்பொழுது அபிமன்யுவுக்கும் அலம்புஷனுக்கும் யுத்தம் உண்டாயிற்று. அதில் அவன் எவ்வளவோ மாயைகளைப் பிரயோகித்துக்கொண்டு யுத்தம்செய்தான். இதனால் எங்கும் இருள் மூடிக்கொண்டது. அபிமன்யு இதை ஆதித்யாஸ்திரத்தால் மாற்றி அலம்புஷனைக் கொடிய பாணங்களால் அடித்துத் தோல்வி அடையும்படி

செய்தான். இங்கு இப்படி இருக்க வேறு பக்கத்தில் ஸாத்யகிக்கும், அசுவத்தாமனுக்குஞ் சண்டை உண்டாயிற்று. அதில் அசுவத்தாமன் தோல்வி அடையும் தருணத்தில் இருப்பதைத் துரோணர் கண்டு, தன் பிள்ளைக்கு அவர் ஸஹாயமாய் வந்தார். இதைக்கண்ட அர்ஜுனன் துரோணரை எதிர்த்துச் சண்டைக்கு வந்தான். அப்பொழுது துரோணருக்கு ஸஹாயமாகச் சுசர்மா வரப் பெரும்போர் உண்டாயிற்று. பகதத்தன் முதலிய வீரர்கள் தமது யானைக்கூட்டங்களோடு பீமனையும் தருமபுத்திரரையும் போய் வளைத்துக்கொண்டனர். அப்பொழுது பீமன் தன் கெதையால் கோரமான யுத்தத்தைச் செய்தான்.

வினா 61:—ஒன்பதாம் நாள் நடுப்பகலில் யுத்தம் எவ்வாறு நடந்தது?

விடை:—அன்று நடுப்பகலில் ஸோமகர்களுக்கும் பீஷ்மருக்கும் போர் தொடங்கியது. அதில் பீஷ்மர் வெகு ஆவேசத்தோடு போர் செய்து பாண்டவ ஸேனையை அழித்துவந்தனர். அப்பொழுது திருஷ்டத்யும்னன், விராடராஜன், சிகண்டி, துருபதன் ஆகிய இவர்கள் பீஷ்மரை எதிர்த்து வந்து பாணப்பிரயோகம் செய்தனர். பீஷ்மருக்குச் சிகண்டியின் ஸ்திரீத்வம் ஞாபகம் வர, அவன் எவ்வளவு தம்மை அடித்தபோதிலும் அவனை அவர் அடிக்கவில்லை. அவன் இருந்த பக்கம்கூட அவர் திரும்பவில்லை. மற்றையவர்களைச் சோர்ந்து விழும்படி பீஷ்மர் வெலுவெலுக்க அடித்துவிட்டார். அப்பொழுது பீஷ்மர் உண்டாக்கிய இரத்தநதியைக்கண்ட அரசர்கள் யாவரும், 'துரியோதனன் முரட்டுத் தனத்தால் விளையும் தீங்குகளைப் பாருங்கள்! பாபி, திருதராஷ்டிரன் ஏன் பாண்டவர்களிடம் விரோதம் பாராட்டவேண்டும்? அதனால் அன்றோ நாம் இவ்வாறு கஷ்டப்படும்படி நேரிட்டிருக்கிறது' என்று அலறினர். அந்தஸமயத்தில் துரியோதனன், பீஷ்மர், துரோணர், கிருபர் முதலியவர்களைச் சளைக்காது சண்டையை நடத்தும்படி தூண்டினான். இவ்வாறு இங்குக் கோரயுத்தம் நடந்துகொண்டிருக்கையில் ஸாத்யகிக்கும் கிருதவர்மாவுக்கும் சண்டை யுண்டாக அதில் கிருதவர்மா இரதத்தை இழந்து ஓடிப்போய் லக்ஷ்மணன் இரதத்தில் ஏறிக்கொண்டான். ஸாத்யகி பீஷ்மரிடம் வந்து அவரை அடிக்கத்தொடங்கினான். அப்பொழுது அநேக பாண்டவ யுத்தவீரர்கள் வந்து பீஷ்மரை வளைந்து கொண்டனர்.

பீஷ்மருக்கு ஸஹாயமாயும் அநேகம் வீரர்கள் துரியோதன னால் ஏவப்பட்டு வந்தனர். அங்குக் கொடிய போர் நடந்தது.

வின 62:—இவ்வாறு பீஷ்மருக்கும் பாண்டவ வீரர்களுக்கும் யுத்தம் நடந்து வருகையில் யார் அங்கு வந்தது? அப்பொழுது என்ன விசேஷம் நடந்தது? அன்று யுத்தம் எவ்வாறு முடிந்தது?

விடை:—இங்குச் சண்டை பலமாய் நடந்துவருகையில் பகவான் அர்ஜுனனை நோக்கி, 'நீ, விராட நகரத்தில் பீஷ்ம துரோணாதிகளைக் கொன்று விடுவேன் என்று செய்த சபதத்தை நிறைவேற்றும் காலம் வந்து விட்டது. நீ பீஷ்மரைக் கொல்ல முயற்சி செய்யவேண்டும்' என்று ஏவினர். அப்பொழுது பீஷ்மரைக் கொல்லும்படியான கதி தனக்கு வந்ததே என்று சற்றுத் துக்கித்துவிட்டு அர்ஜுனன் முடிவில் யுத்தம் செய்வதாகத் தீர்மானித்தான். இதை உணர்ந்த பகவான் அர்ஜுனன் இரதத்தைப் பீஷ்மர் இருக்குமிடம் ஓட்டிச் சென்றார். அர்ஜுனன் பீஷ்மருடன் வெகு ஆவேசத்தோடு யுத்தம் செய்தான். பகவானும் வெகு தந்திரமாய்த் தேரை நடத்திப் பீஷ்மர் விடும் கொடிய பாணங்கள் அர்ஜுனன்மேல் விழாமலிருக்கும்படி செய்துவந்தார். அப்பொழுது அர்ஜுனன் வெகு லாஹவமாய் பீஷ்மரது வில்லை அறுத்துவிட்டான். பீஷ்மர் அர்ஜுனனது ஸாமர்த்தியத்தைப் புகழ்ந்துகொண்டு, மிகுந்த ஆவேசத்தோடு யுத்தம் செய்தார். எவ்வளவுதான் அர்ஜுனன் போர் செய்த போதிலும், அவன் மனதில் இருந்த துக்கத்தால் அவனால் உத்ஸாகமாய் சண்டை செய்ய முடியவில்லை. இதையறிந்த பகவான் அவனை உத்ஸாகப்படுத்தும் பொருட்டு, தமது கையிலிருந்த கடிவாளங்களைக் குதிரைகள்மேல் எறிந்துவிட்டு யுத்தவெறிகொண்டவர்போல் பீஷ்மரைக் கொல்ல அவரை நோக்கி ஓடிப்போனர். பகவான் வருவதைக் கண்ட பீஷ்மர் தமது ஆயுதங்களை எல்லாம் எறிந்துவிட்டு மஹா விநயத்துடன் பகவானால் அடிபட்டு இறக்கத் தயாராய் இருந்தார். இதற்குள் அர்ஜுனன் ஓடிவந்து பகவானைத் தடுத்து, ஆயுதம் எடுப்பதில்லை என்று அவர் முன்னமே செய்திருந்த சபதத்தை ஞாபகப்படுத்தித் தேருக்கு இழுத்துவந்து, தான் பீஷ்மரைக் கூசாது கொல்லுவதாகப் பகவான் முன்பாகச் சபதம் செய்தான். அதன் பின்பு பீஷ்மர் கொடிய போர் செய்துவர வீரர்களுக்கு

யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. அப்பொழுது ஸூர்யனும் அஸ்தமித்தான். இருதிறத்தாரும் தமது படைவீடு சென்றனர். பாண்டவர்கள் பக்கத்தில் அன்று வீரர்கள் அனேகர் இறந்தனர். பீஷ்மரது பராக்கிரமத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு துரியோதனுதியர் ஆனந்தித்தனர்.

வினு 63:—ஒன்பதாம் நாள் இரவில் நடந்த விசேஷங்கள் என்ன?

விடை:—பீஷ்மர் துரியோதனனுக்காகச் செய்த யுத்தத்தைக்கண்டு பயந்த தருமபுத்திரர் பீஷ்மர் உயிரோடிருந்தால் தமது பக்கத்திற்கு ஜயம் எவ்வாறு வரும் என்று பிரலாபிக்கத் தொடங்கினுர். அப்பொழுது பகவான் அர்ஜுனனுக்குப் பீஷ்மரை மறுநாள் கொல்ல மனம் வராவிட்டால் தாமே அவரைக் கொன்றுவிடுவதாகச் சொன்னுர். அதற்குத் தருமபுத்திரர், 'உம்மை ஸஹாயமாய் உடைய எனக்கு ஒரு குறைவும் இல்லை. ஆயினும் உமது சபதத்திற்கு விரோதமாய் நீர் ஆயுதம் எடுத்து எங்களுக்காக யுத்தம் செய்யவேண்டியதில்லை. முன்னமேயே பீஷ்மர் நமக்குத் தகுந்த உபாயங்கள் சொல்லுவதாக வாக்களித்திருக்கிறுர். இப்பொழுது நாம் அவரிடம் சென்று அவரை ஜயிக்க உபாயம் கேட்போம்' என்று மறுமொழி கூறினுர். இதைப் பகவானும், மற்றையப் பாண்டவர்களும் ஒப்புக்கொள்ள, பாண்டவர்களும் பகவானும் தமது ஆயுதம் கவசங்கள் முதலியவைகளைக் களைந்து விட்டுப் பீஷ்மரது படைவீடு

வினு 64:—பீஷ்மரைப் பாண்டவர்கள் என்ன கேட்டார்கள்? அவர் என்ன பதில் சொன்னுர்?

விடை:—பாண்டவர்கள் பீஷ்மரிடம் ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு நிற்க அவர் எதற்கு வந்தீர்கள் என்று கேட்டார். உடனே தருமபுத்திரர், 'இந்த யுத்தத்தில் நாங்கள் எவ்வாறுஜயம் பெற்று இராஜ்யத்தை அடைவது, வர வர எங்கள் ஸேனைகளோ மாண்டுகொண்டே வருகின்றனவே. நாங்கள் என்ன செய்வது' என, பீஷ்மர் 'நான் உயிரோடிருந்து ஆயுதமெடுத்து சண்டை செய்கிறவரையில் ஜயம் உங்களுக்கு வாராது. நான் இறந்தால்தான் ஜயம் உங்களுக்கு வரும். என்னைக்கொல்லும் விஷயத்தில் நீங்கள் தயங்கவேண்டாம். உங்கள் இஷ்டப்படி என்னைக்கொல்ல உங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். வீணுக என் விஷயத்தில் மரியாதைவையாது என்னைக்

கொன்று விடுங்கள்' என்றார். அப்பொழுது தருமபுத்திரர் 'உம்மைக் கொல்லுவதற்கு என்ன உபாயம்?' என்றுகேட்டார். அதற்குப் பீஷ்மர் 'நான் கையில் ஆயுதமெடுத்துச் சண்டைசெய்யும் வரையில் என்னை ஒருவராலும் கொல்ல முடியாது. ஸ்திரீகள், பயந்தவர்கள், சரணமடைந்தவர்கள் முதலியவர்களோடு நான் சண்டை செய்வதில்லை. மேலும் உமது பக்கத்தில் மிகுந்த பராக்கிரமத்தோடு சண்டை செய்து வரும் சிகண்டியுடன் நான் சண்டை செய்வதில்லை என்று பிரதிக்ஞை செய்திருக்கிறேன். ஏனெனில் அவன் முதலில் ஸ்திரீயாகப் பிறந்து பின் புருஷரூபத்தை அடைந்தான். அவனை முன்னிட்டுக்கொண்டு அர்ஜுனன் என்னுடன் சண்டைக்கு வரட்டும். நான் சிகண்டியைக் கண்டதும் பாணம் போடுவதை நிறுத்திவிடுவேன். இந்த ஸமயம் பார்த்து அர்ஜுனன் மேல்மேலும் என்னைச்சீக்கிரமாய் பாணங்களால் அடிக்கட்டும். உடனே நான் கீழே விழுந்து விடுவேன். கிருஷ்ணார்ஜுனர்களைத் தவிர என்னை வீழ்ப்பவர்கள் வேறு ஒருவருமே இல்லை' என்று ஒளிக்காது உண்மையான உபாயத்தைச் சொல்லிவிட்டார்.

வினா 65:—பாண்டவர்கள் இதை அறிந்து தமது படைவீடு சென்றதும் அர்ஜுனன் நிலை எவ்வாறு இருந்தது?

விடை:—'என்னை வெகு நாளாக அன்பாய் வளர்த்த தாதாவை நானே கொல்லும் தருணம் வந்துவிட்டதே! இதை நான் எவ்வாறு செய்வது? எனக்கு ஜயம் வந்தாலும் வரட்டும், அபஜயம் வந்தாலும் வரட்டும், பீஷ்மர் எனது ஸேனைகளை அழித்தாலும் அழிக்கட்டும், நான் அவரோடு சண்டை செய்ய மாட்டேன்' என்று அர்ஜுனன் பகவானிடம் புலம்பி அழுதான். அப்பொழுது பகவான், பீஷ்மருக்குச் சாகுங்காலம் வந்துவிட்டது, உன்னைத்தவிர அவரைக் கொல்லத்தகுந்தவன் வேறு ஒருவனுமில்லை, மேலும் நமக்கு விரோதியாக வருபவன் எப்படிப்பட்டவனாகிலும் அவனைக் கொல்லவேண்டியதே க்ஷத்திரிய தர்மம், என்று பலவாறாக நியாயம் சொல்லி அவனைத் தேற்றினார். அப்பொழுது அர்ஜுனன் ஒருவாறு தேறி பீஷ்மரைக் கொல்லுவதாக ஒப்புக்கொண்டான்.

வினா 66:—பத்தாம் நாள் காலை நடந்த யுத்தத்தின் வரலாறு என்ன?

விடை:—பத்தாம் நாள் காலையில் பீஷ்மர் தம் உயிரை வெறுத்துச்

சண்டைசெய்து அநேக பாண்டவவீரர்களைக் கொன்று வருகையில் சிகண்டி அவரை நன்றாகப் பாணங்களால் அடித்தான். அதுவரையில் எல்லோரையும் அடித்து வந்த பீஷ்மர் தமது தலையைத் தூக்கி 'அடே சிகண்டி, நீ என்னை எவ்வளவு அடித்த போதிலும், நீ பெண்ணாய்ப் பிறந்தவன்தானே. பின்புதானே உனக்கு ஆண் உருவம் வந்தது. ஆகையால் நான் உன்னை அடிக்கவே மாட்டேன்,' என்றார். உடனே சிகண்டி அதிக கோபத்தோடு, 'இன்றைக்கு நான் உம்மோடு பாண்டவாளது ஹிதத்திற்காகச் சண்டையிட்டு உம்மைக் கொல்லப்போகிறேன். ஆகையால் இவ்வுலகத்தை நன்றாய்ப் பார்த்துக்கொள்ளும்,' என்றான். இவ்வாறு சிகண்டி சொல்லிக்கொண்டிருக்கையில் அர்ஜுனன் சிகண்டி பின்புவந்து நின்றுகொண்டு பீஷ்மரை நன்றாய் அடிக்கும்படி ஏவினான். இதற்குள் அர்ஜுனன் முதலிய பாண்டவ வீரர்கள் இட்ட சண்டையால் பாண்டவர்கள் கை மெல்ல மெல்ல உயர்ந்துகொண்டும் துரியோதனாதிகள் கை மெல்லத் தணிந்துகொண்டும் வந்தது. உடனே துரியோதனன் பீஷ்மரிடம் சென்று விட்டுக்கொடுக்காது சண்டை செய்யும்படி கேட்டுக்கொண்டான். அப்பொழுது பீஷ்மர், 'என்னை ஏன் வீணாக இவ்வாறு அடிக்கடிக் கஷ்டப்படுத்துகிறாய், நான் சென்ற ஒன்பது நாளாக, நாள் ஒன்றுக்கு 10,000 க்ஷத்திரியர்களைக் கொல்லாது திரும்பவில்லை. இன்றைக்கு நானாவது இறந்துவிடுகிறேன் அல்லது பாண்டவர்களையாவது கொன்று சாய்க்கிறேன். இன்றைக்கு உன் சோற்றுக்கடனைப் பூர்ணமாகக் கழித்துவிடுகிறேன்,' என்று சொல்லிக்கொண்டு கொடிய போரைச்செய்யத்தொடங்கினார். அப்பொழுது சிகண்டியைமுன்னிட்டுக்கொண்டு அர்ஜுனன் பீஷ்மரை நோக்கி ஓடிவந்தான். திருஷ்டத்யும்னன் விராடன் முதலிய பாண்டவவீரர்களுள் அநேகர் அர்ஜுனனுக்கு ஸஹாயமாய் வந்தனர். இதைக்கண்ட கௌரவ வீரர்களில் அநேகர் ஓடிவந்து பாண்டவ வீரர்களைத் தடுக்க அதில் துச்சாஸனன், அர்ஜுனன் முதலிய முக்கியவீரர்களைத் தடுத்தான். அர்ஜுனன் அப்பொழுது எவ்வளவு முயன்றபோதிலும் அவனால் பீஷ்மர் அருகில் போக முடியவில்லை.

வினா 67:—இவ்வாறு பீஷ்மர் அருகில் சண்டை பலமாக நடந்து வருகையில் மற்றைய பாகங்களில் யுத்தம் எவ்வாறு நடந்தது?

விடை:—அலம்புஷனுக்கும் ஸாத்யகிக்கும், ஸாத்யகிக்கும் பகதத்த

னுக்கும், அர்ஜுனனுக்கும் துச்சாஸனனுக்கும், நகுலனுக்கும் விகர்ணனுக்கும், கடோத்கசனுக்கும் துரியோதனன் தம்பிக்கும், இவைபோன்ற மற்றைய பாண்டவ கௌரவவீரர்களுக்கும் துவந்த யுத்தங்கள் மிகுந்த மும்மரமாய் நடந்தன. இவைகளால் துரியோதனன் ஸேனைக்கு வரவர வலி குறைந்து கொண்டே வந்தது. இவ்வாறு நடந்துவருகையில் துரோணர் அசுவத்தாமனை நோக்கித் தாம் அதுவரையில் கண்ட அபசகுனங்களையும், அவைகளால் அன்று பீஷ்மர் அர்ஜுனனால் அடிபட்டு விழப்போகிறார் என்று அறிந்ததையும், அதற்குச் சிகண்டி காரணமாய் இருக்கப்போகிறதையும், விஸ்தாரமாகச் சொல்லி முடித்தார். இதற்குள் பீமனும், அர்ஜுனனும் மிகுந்த ஆவேசத்தோடு சண்டையிட்டுத் துர்யோதனுதியரை வருத்தி வந்தனர். பத்துநாளாகத் தாம் சோற்றுக்கடனைக் கழிப்பதற்காகச் செய்த கொலைத்தொழிலைப்பற்றிய எண்ணங்கள் பீஷ்மருக்கு வர, அவருக்கு உலகவாழ்க்கையின்மேல் வெறுப்புஉண்டாயிற்று. அப்பொழுது அந்த யுத்தகளத்திலேயே அவர் தர்மபுத்திரரை நோக்கி, 'எனக்கு இந்தத் தேகத்தில் வெறுப்புஉண்டாய் விட்டது. நான் செய்த சண்டை போதும். இனிமேல் என்னைச் சீக்கிரம் கொல்லுவீர்களாகில் அதுவே எனக்கு ஒரு பெரிய நன்மையாகும் என்றார். தருமபுத்திரர், அர்ஜுனன் முதலிய பாண்டவ வீரர்களுக்கு இந்த ஸங்கதியைத் தெரிவிக்க, எல்லாரும் மிகுந்த ஆவலோடு சண்டையிட்டனர். சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு அர்ஜுனன் எவ்வளவோதரம் பீஷ்மர் அருகில் போக முயன்றான். அவனால் முடியவில்லை. இவர்களைக் கௌரவவீரர்கள் வெகு தந்திரமாய் எல்லா ஸமயங்களிலும் தடுத்து வேறு இடத்தில் கொண்டுபோய் சண்டை உண்டாகும்படி செய்துவிட்டார்கள். அப்பொழுது நடந்த சண்டை மிகுந்த கோரமாகவே இருந்தது. எல்லாப் பாண்டவ வீரர்களும் எவ்வளவோ தரம் பீஷ்மரை நோக்கி ஓடிவந்து பார்த்தார்கள். பீஷ்மரும் தமது உயிரை வெறுத்துக் கொடிய போர் செய்தார். இவ்வாறு அனேகதரம் முயன்று நினைத்த காரியம் முடியாமல்போக, எல்லாப் பாண்டவவீரர்களும் ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு ஒழுங்காக மிகுந்த ஆக்ரஹத்தோடு சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு கடைசித்தரமாக எண்ணி அன்று மாலை தம்மைத் தடுத்தவர்களை எல்லாம் சிதற அடித்துக்கொண்டு

வந்து பீஷ்மரை எல்லாரும் வளைந்துகொண்டு கௌரவர்கள் அங்கு அதிகமாக வர இடங்கொடுக்காது அவரை அடிக்கத் தொடங்கினா.

வினு 68:—அப்பொழுது பீஷ்மரை யார் எவ்வாறு அடித்துத் தள்ளியது? அத்தருணத்தில நடந்த விசேஷங்கள் என்ன?

விடை —சிகண்டியை முன்பாக நிறுத்திக்கொண்டு அர்ஜுனன் தான் கொடிய பாணங்களால் பீஷ்மரை அடிக்கத்தொடங்கினுன் சிகண்டியும் பீஷ்மரை இடைவிடாது அடித்தான். சிகண்டி தம் முன் இருப்பதாலும், கிருஷ்ணபகவானது கிருபை பாண்டவர்களுக்கு இருப்பதாலும், அப்பொழுது பீஷ்மரால சண்டையிட முடியாமறபோயிற்று உடனே ரிஷிகளும வஸுக்களும ஆகாயத்தில வந்து 'சண்டைசெய்ய வேணடும என்ற எணணத்தை விட்டுவிடு, சீக்கிரம தேகத்தைத் தள்ளிவிடப்பா' என்று பீஷ்மருக்குப புத்தி கூறினா அந்தத் தருணத்தில தேவதுந்துபிகள ஆர்த்தன; இளமதென்றல் வீசியது இதைக் கண்டதும பீஷ்மா கொஞசநாழிகை சண்டை செய்தார். வரவர அர்ஜுனன் அடி பலமாகக் கடைசியாக ஒரு ஈட்டியை அர்ஜுனன் மேல் எறிந்தார் அதை அர்ஜுனன் வெட்டிவிட கத்தியையும் கேடயத்தையும எடுத்தார் அவா தேரை விட்டுக கீழே இறங்குவதற்குமுன் அவா கேடயத்தை அர்ஜுனன் துண்டு துண்டாக்கிவிட்டான். பீஷ்மரைக் கௌரவவீரர்களில சிலர் தமமாலியனறமட்டும எவ்வளவோ காப்பாற்றிப பார்த்தார்கள். அப்படி இருந்தபோதிலும அவா தேகம முழுவதிலும் அர்ஜுனனது பாணங்கள தைத்து விட்டன. அர்ஜுனன அந்தத் தருணத்தில மேலமேலும பாணங்களை விட, பீஷ்மா சூரியசை போய் கீழ் கேரிலிருந்து சாய்ந்துவிட்டார் ஆனுல அவா தேகம பூமியில படவில்லை அர்ஜுனனது பாணங்கள அவரை அந்த ரத்ததிலே தாங்கிவிட்டன அக்காலத்தில குளிர்ந்த மழை பெய்தது.

வினு 69:—இவ்வாறு பீஷ்மர் விழுந்ததும அவர் என்ன செய்தார? ஏன்?

விடை:—பீஷ்மர் இவ்வாறு பத்தாம் நாள மாலை யுத்தகளத்தில அடிபட்டு விழுந்ததும, அநேக ரிஷிகள அன்னங்கள் உருவத்தோடு பீஷ்மா காதில் படும்படியாக 'இப்பொழுது தக்ஷிணயன காலம. ஆகையால் நீர் இறக்கத் தக்ககாலம் இதன்று,' என்று எச்ச

ரிக்கை செய்தனர். இதைக்கேட்ட பீஷ்மர் அந்த அம்புப் படுக்கையிலேயே உத்தராயணம் வரும்வரையில் எல்லா வேதனைகளையும் பொறுத்துக்கொண்டு உயிரை வைத்துக்கொண்டிருப்பதாகத் தீர்மானித்தார்.

வினா 70:—இவ்வளவு பாணம் பீஷ்மர்மேல் தைத்திருந்தும் அவர் உயிர் ஏன் தேகத்தைவிட்டுப் பிரியாமலிருந்தது?

விடை:—பீஷ்மர் தம் தகப்பன் சந்தனுவைத் திருப்தி செய்வதற்காக ஆயுள் முழுவதும் பிரம்மசாரியாக இருந்து விடுவதாகச் சபதம் செய்திருந்தார் என்று முன்னே ஆதிபர்வத்தில் சொல்லியிருக்கிறது. அப்பொழுது அவரது இஷ்டமில்லாமல் பீஷ்மருக்குச் சாவு அணுகக்கூடாது என்ற வரத்தைச் சந்தனு அவருக்குக் கொடுத்திருந்தான். ஆகையால் எத்தனை பாணங்கள் தம் தேகத்தில் பட்டிருந்தபோதிலும் மரணம் தம்மை உத்தராயணம் வரையில் அணுகாமலிருக்கும்படி அவரால் தடுக்க முடிந்தது. பீஷ்மர் மஹாயோகியாகையால் தமது தேகத்தில் பாணங்களால் உண்டாகும் வலியைப் பொறுத்துக்கொண்டு உத்தராயணம்வரை அவருக்கு உயிர் தரித்திருக்க முடிந்தது.

வினா 71.—பீஷ்மர் இவ்வாறு தீர்மானித்த பின்னர் என்ன நடந்தது?

விடை.—பீஷ்மர் அடிபட்டு விழுந்த ஸமாசாரம் யுத்தகளம் எங்கும் பரவ அதைக்கேட்டுத் துரோணர் மூர்ச்சைபோட்டு விழுந்தனர். எல்லாரும் யுத்தத்தை நிறுத்திவிட்டு, பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருந்த இடம் வந்தனர். பாண்டவ கௌரவர்கள் எல்லாரும் தமது விரோதங்களை மறந்து பீஷ்மர் விஷயமாகத் துக்கிக்கத்தொடங்கினர். தாம் செய்ய வேண்டியவைகளை ஒழுங்காய்ச் செய்துமுடித்து யுத்தகளத்தில் க்ஷத்திரியனுக்குத் தகுந்த நிலையில் பீஷ்மர் இருப்பதைக் கண்ட தேவதைகள் அவரைப் புகழ்ந்து பேசினர். இவ்வாறு எல்லாரும் வெவ்வேறு விதமாகப் பீஷ்மரைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்தனர்.

வினா 72:—இவ்வாறு இருதிறத்தாரும் பீஷ்மரிடம் வந்ததும் அவர் என்ன கேட்டார்? அவரை யார் எவ்வாறு திருப்தி செய்தது?

விடை :—தம்மைச் சுற்றி நிற்பவர்களை நோக்கித் தமது தலை தொங்குவதாகவும் அதற்கு ஒரு தலையணை வேண்டுவதாகவும் பீஷ்மர் சொன்னார். உடனே அருகிலிருந்த அரசர்கள் மெதுவாகிய

பஞ்சுத் தலையணைகளைக் கொண்டுவர, அவைகள் யாவும் தமக்குத் தகுந்தவைகள் அல்லவென்று தள்ளிவிட்டு, அர்ஜுனனிடம் தமது விருப்பத்தை வெளியிட்டார். உடனே அர்ஜுனன் தனது வில்லில் இரண்டு பாணங்களைத் தொடுத்துப் பீஷ்மர் தலைக்கு நேரே கீழே தைத்துக் கிட்டியைப் போல் குறுக்காய் நின்று அவர் தலை உயரத்தில் தாங்கும்படி பிரயோகம் செய்தான். அதுவே தமக்குத்தகுந்த தலையணை என்று சொல்லி அர்ஜுனனது புத்தியைப் பீஷ்மர் மிகப் புகழ்ந்து பேசினர்.

வினு 73:—இவ்வாறு தலையணை கிடைத்ததும் பீஷ்மர் வேறு என்ன வேண்டும் என்று கேட்டார்? அவரை அர்ஜுனன் எவ்வாறு திருப்திப் படுத்தினன்? மேல் என்ன நடந்தது?

விடை:—பீஷ்மருக்கு அப்பொழுது தேகத்தில் தைத்திருந்த பாணங்களால் உண்டான எரிச்சல் அதிகரிக்க, கொடிய தாகம் உண்டாயிற்று. அதனால் அவர் தமக்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்க கௌரவவீரர்கள் பொற்பாத்திரத்தில் குளிர்ந்த தண்ணீர் கொண்டுவந்தனர். இறப்பவர்களுக்கு இப்பாத்திரங்கள் எதற்கு என்று அவைகளை நிராகரித்துவிட்டு அவர் அர்ஜுனனை நோக்கினர். உடனே அவன் பர்ஜன்யாஸ்திரத்தை மந்திரித்து அது பீஷ்மரது முகத்திற்குக் கொஞ்சம் வலதுபுறம் பூமியில் தைக்கும்படி விட உடனே பூமி பிளந்து அதிலிருந்து குளிர்ந்த தண்ணீர் கிளம்பி ஸதா இலேசாகப் பீஷ்மரது வாயில் விழத்தொடங்கியது. பீஷ்மருக்கு அர்ஜுனனிடம் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. பீஷ்மர் அங்கேயே இருப்பதாகச் சொல்ல இரவில் நாய் நரிகள் அவரை உபத்திரவப் படுத்தாதிருக்கும்படி அவர் இருக்கும் இடத்தைச்சுற்றி அரசர்கள் அகிழ்வெட்டித் தகுந்த ஏற்பாடு செய்தனர்.

வினு 74:—இவைகளால் ஒருவாறு பீஷ்மர் தெளிந்ததும் தமது பேரப் பிள்ளைகளுக்கு என்ன புத்திமதி கூறினர்? அது எவ்வாறு முடிந்தது?

விடை:—துரியோதனனைத் தன் அருகில் அழைத்துப் பீஷ்மர், பாண்டவர்களது பல விசேஷத்தையும், அவர் பக்கம் நியாயம் இருப்பதையும், அவர்களுக்கு இருக்கும் பகவத் ஸஹாயத்தின் மஹிமையையும் ஆகையால் அவர்களை ஒருவராலும் வெல்ல முடியாது என்பதையும் விஸ்தாரமாக எடுத்துச்சொல்லி, அவர்களுக்குப் பாதி ராஜ்யம் கொடுத்து, போரை நிறுத்தி ஸமா

தானம் செய்துகொண்டு கிருஷ்ண பரமாத்மாவின் கிருபைக்கு ஆளாகித் தம்பிமார் முதலியவர்களோடு ஸுகமாக வாழ்ந் திருக்கும்படி புத்திமதி கூறினர். இவைகளைத் துரியோதனன் ஒப்புக்கொள்ளாமல் பீஷ்மரிடம் விடைபெற்றுத் தனது இருப் பிடம் சென்றான். உடனே எல்லா அரசர்களும் தமது இருப் பிடம் சென்றனர்.

வி 75:—அன்று இரவு பீஷ்மரிடம் யார் வந்து என்ன செய்தார் கள்? பீஷ்மர் என்ன செய்தார்?

விடை:—பீஷ்மர் அடிபட்டு விழுந்ததைக் கேள்விப்பட்ட கர்ணன் அன்றிரவு ஓடிவந்து பீஷ்மர் காலில் விழுந்தான். அவர் விஷயத் தில் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று மஹாவினயத்துடன் அவன் கேட்டுக்கொண்டான். அப்பொ ழுது பீஷ்மர் கர்ணனுக்கு அவன் பிறப்பு முதலியவைகளை எடுத்துச்சொல்லி அவனைப் பாண்டவர்களோடு சேரும்படி சொன்னர். கர்ணன், அந்தத்தருணத்தில் துரியோதனனை நடுத் தெருவில் விட்டுப்போவது நியாயமன்று என்றும், அப்பொழுது தனக்குப் பாண்டவர்களிடம் இருந்த விரோதம் மாறுவது கஷ் டம் என்றும் ஆகையால் தனக்குத் துரியோதனன் பக்கத்தில் சண்டை செய்ய அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் பீஷ் மரை வேண்டிக்கொண்டான். அப்பொழுது அவர் கர்ணனுக் குக் கோபம் பொறுமை முதலியவைகள் இன்றி யுத்ததர்மத்தை நடத்தும் வழியை எடுத்துச்சொல்லி, ‘விதியை யாரால் வெல்ல முடியும். ஆகையால் நீ ஜாக்கிரதையாய் சண்டையிடு’ என்று அனுமதி கொடுத்தார். உடனே பீஷ்மருக்கு வந்தனம் செய்து விட்டுக் கர்ணன் தனது இருப்பிடம் சென்றான்.

# 7. துரோண பர்வம்

காயமும் புலனு மந்தக் கரணமு மாகி யெல்லாத்
தேயமும் பரந்து நின் று மீளவுஞ் சித்த சித்து
நேயமு மாகி நீங்கா நிறைசுக ஞானு நந்த
மாயவெம் பெருமா னென்னை யாண்டரு ளாழி யானே.

வின 1.—பீஷ்மர் யுத்தம் செய்யமாட்டாது விழுந்ததும் மறுநாள் யுத்தகளத்தில் முதலில் என்ன நடந்தது?

விடை:—பீஷ்மர் பத்தாம் நாள் மாலை சொன்ன புத்திமதியைக் கேளாது துரியோதனன் யுத்தத்திற்குத் தயாராகி யுத்தகளம் வர சேனாதிபதி ஒருவரில்லாது யுத்தத்தை எவ்வாறு ஒழுங் காய் நடத்துவது என்ற ஏக்கம் அவனுக்கு வந்துவிட்டது. அப்பொழுது அவனுக்கும் மற்றுமுள்ள வீரர்களுக்கும் கர்ணன் ஞாபகம் வந்தது. அதற்குள் கர்ணன் பீஷ்மரிடம் சென்று வெகுவாக அவருக்கு வந்த கஷ்டத்தைப்பற்றிப் பிரலாபித்து விட்டு அவரிடமிருந்து தான் யுத்தம் செய்ய அனுமதிபெற் றுக்கொண்டு மிகுந்த கம்பீரத்தோடும் உத்ஸாகத்தோடும் துரி யோதனுதிகள் இருக்கும் இடம் வந்து சேர்ந்தான்.

வின 2:—கர்ணன் இவ்வாறு வந்து சேர்ந்ததும் ஸேனாபதி விஷய மாக என்ன ஆலோசனை நடந்தது? அது எவ்வாறு முடிவு

விடை:—கர்ணனைக் கண்டதும் அவனுக்கே ஸேனாபதிப் பட்டம் கொடுக்கவேண்டும் என்று எல்லாருக்கும் தோன்றிற்று. அப் பொழுது எல்லாரும் ஸபை கூடி இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கலாயினர். கர்ணனது வேண்டுகோளால் துரியோ தனன் எழுந்து பேசத்தொடங்கிக் கர்ணன் முதலியோரை நோக்கி 'யாருக்கு இத்தருணத்தில் ஸேனாபதிபட்டங் கட்ட லாம்? அவர் பீஷ்மருக்கு ஸமானமாக இருக்கவேண்டும்' என்று சொன்னான். அதற்குக் கர்ணன், 'நமக்கெல்லாம் ஆசாரியரா யும், பிராம்மண சிரேஷ்டராயும் உள்ள துரோணரே அந்த ஸ்தா னத்துக்குத் தகுந்தவர். அவரை ஸேனாபதியாக அபிஷேகம் செய்துவிடலாம்' என்று சொல்ல அதை எல்லாரும் ஒரு தலை யாய் அங்கீகரித்தனர். உடனே துரியோதனன் எழுந்து மஹா

விநயத்துடன் துரோணரை ஸேனுபதிப்பட்டத்தை அங்கீகரிக்கும்படி வேண்ட அவரும் அதை ஒப்புக்கொண்டார், எல்லாரும் 'துரோணருக்கு ஜயம் வரட்டும்' என்று கோஷித்தனர்.

விஞ 3:—அப்பொழுது துரோணர் என்ன செய்தார்?

விடை:—இந்தக் கோஷத்தைக் கேட்டதும் துரோணர், 'எனக்கு எல்லா அஸ்திரங்கள் தெரிந்திருந்தும் நான் திருஷ்டத்யும்னனை மாத்திரம் கொல்லமாட்டேன். அவன் என்னைக்கொல்ல ஏற்பட்டவன். இதைமாத்திரம் நீங்கள் கவனிக்கவேண்டியது' என்று சொல்லிவிட்டு ஸேனையை அணிவகுத்து நிறுத்தி யுத்தத்தைத் தொடங்கத் தயாராயினர்.

விஞ 4:—அந்த ஸமயத்தில் துரியோதனுதியர் ஸேனையில் என்ன ஆலோசனை நடந்தது? அதன் தீர்மானத்தை அறிந்தபின்பு பாண்டவர்கள் என்ன ஏற்பாடுகள் செய்தார்கள்?

விடை:—இவ்வாறு எல்லாரும் யுத்தத்திற்குத் தயாராய் நிற்கையில் துரோணர் துரியோதனுதியரை நோக்கி, 'எனக்குச் சிறந்த பீஷ்மரது ஸ்தானத்தைக் கொடுத்து என்னை மிகுந்த கௌரவப்படுத்தினீர்கள். உமக்கு நான் என்ன பதில் உபகாரம் செய்யவேண்டும், அதைக் குறிப்பிடுங்கள்,' என்று சொல்லத் துரியோதனன் எழுந்து, 'தருமபுத்திரரை உயிரோடு பிடித்து எங்களிடம் ஒப்புவித்து விடவேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது துரோணர், 'அவர்களுக்குக் கொடிய விரோதிகளாகிய நீங்கள்கூட அவரைக் கொல்லாது பிடித்துத் தரவேண்டும் என்றல்லவோ கேட்டீர்கள். நீங்கள் ஒருவேளை உங்களது பராக்கிரமத்தைக் காட்டிவிட்டுப் பின்பு தருமபுத்திரருக்கு ராஜ்யத்தைக் கொடுக்கவேண்டும் என்று எண்ணி இருக்கலாம். அப்படிச் செய்வதே நலம்,' என்று சொன்னர். இதைக்கேட்டதும் துரியோதனன் பொறுக்காது, 'நான் அந்த எண்ணத்தோடு சொல்லவில்லை. தருமபுத்திரரை முன்பு கொன்றுவிட்டால் அர்ச்சுனன் நம்மை எல்லாம் நிச்சயமாய்க் கொன்றுவிடுவான். அம்மாதிரி நாசம் அடைவதைவிட முன்பு தருமபுத்திரரை உயிரோடு பிடித்து அவரோடு மாயச் சூதாடி அவரைக் காட்டிற்குத் துரத்திவிட்டால் மற்றையப் பாண்டவர்களும் அவரோடு போகவேண்டியதுதான். அப்பொழுது நாம் ஸுகமாக ராஜ்யமாளலாம் என்ற எண்ணத்துடன் இவ்வாறு கேட்டேன்' என்று தனது உண்மையான

எண்ணத்தைச் சொல்லிவிட்டான். இதைக்கேட்டதும் துரோணர் சற்று யோசித்து, அர்ஜுனன் யுதிஷ்டிரருக்கு ஸஹாயமாக இருந்து போர் செய்யாவிடில் தருமபுத்திரரைப் பிடித்து அப்பொழுதே கொடுத்து விடுவதாக ஒருவாறு பிரதிக்ஞை செய்துகொடுத்தார். இதை அவர் தவறாது நிறைவேற்றுவதற்காக, எல்லாரும் அறியும்படி இந்த விஷயத்தைத் துரியோதனனே வெளியிட்டான். இது பாண்டவர்கள் காதில் எட்டியதும் அர்ச்சுனன் தான் எப்போதும் தனது தமயனை ஜாக்கிரதையாய்ப் பாதுகாப்பதாகச் சபதம் செய்துகொண்டான்.

வினா 5.—இதன்பேரில் தொடங்கிய பதினோராம் நாள் யுத்தம் எவ்வாறு நடந்தது?

விடை:—இதற்குள் மத்தியான ஸமயம் வர துரோணர் வெகு உத்ஸாகத்தோடு பாண்டவ ஸேனையைச் சின்னபின்னப் படுத்திக்கொண்டு உலாவிவர அவரை ஒருவராலும் தடுக்க முடியவில்லை. இதற்குள்ளாக, ஸகாதேவனுக்கும், சகுனிக்கும்; பீமனுக்கும், விவிம்சதிக்கும்; நகுலனுக்கும், சல்லியனுக்கும்; ஸாத்யகிக்கும், கிருதவர்மாவுக்கும்; விராடராஜனுக்கும், கர்ணனுக்கும்; துருபதனுக்கும், பகதத்தனுக்கும்; சிகண்டிக்கும், பூரிச்ரவஸுக்கும்; கடோத்கசனுக்கும், அலம்புஷனுக்கும்; பௌரவனுக்கும், அபிமன்யுவுக்கும்; வெவ்வேறாகத் துவந்தயுத்தம் தொடங்கிற்று. இவைகளில் அன்று அபிமன்யு பௌரவனோடு பெரும்போர் செய்து அவனை அலங்கோலப் படுத்திவிட்டான். இதைப் பார்த்திருந்த ஸிந்து தேசாதிபதியாகிய ஜயத்ரதன் அதிகவேகமாக ஒருகத்தியை எடுத்துக்கொண்டு வந்து அபிமன்யுவைத் தடுத்தான். அப்பொழுது இருவருக்கும் சண்டை தொடங்கியது. அதன் முடிவில் ஜயத்ரதன் தோல்வி அடைய அதைக்கண்ட சல்லியன் சண்டைக்கு வந்தான். அப்பொழுது நடந்த சண்டையில் ஒரு கொடிய ஆயுதத்தைச் சல்லியன் அபிமன்யுமேல் எறிய அதை வெகு அலக்ஷியமாய் அவன் கையில்பிடித்து, மறுபடியும் சல்லியன்பேரில் எறிந்தான். அது சல்லியனது ஸாரதியைக் கொன்றது. உடனே சல்லியன் ஒரு கதையை எடுத்துக்கொண்டு சண்டைக்குப் புறப்பட்டான். அந்தத் தருணத்தில் பீமன் குறுக்கே வந்து அவனை எதிர்க்க இருவருக்கும் போர் உண்டாயிற்று. இந்தக் கதாயுத்தம் இருவரும் ஸமமாகக் கொஞ்சகாலஞ் செய்துவிட்டு முடிவில் ஒருவரை ஒருவர் பலமாகக்

கதைகளால் மண்டைகளில் அடித்துக்கொள்ள இருவரும் மூர்ச்சைபோட்டுக் கீழே விழுந்தனர். இதற்கு முன்பு சல்லியன் இரண்டொருதரம் அந்தச்சண்டையிலே மூர்ச்சைபோட்டு விழுந்துவிட்டமையால் அவனை அப்பொழுது கிருதவர்மா வந்து தனது தேரில் ஏற்றிக்கொண்டுபோய்விட்டான். பீமன் கொஞ்ச நாழிகையில் மூர்ச்சை தெளிந்து எழுந்து கர்ச்சிக்கத் தொடங்கக் கௌரவஸேனை முழுவதும் சிதறி ஓடத் தொடங்கியது. நகுலன் பிள்ளையும் கர்ணன் பிள்ளையும் ஓரிடத்தில் சண்டை செய்து வருகையில் அவர்களுக்கு ஸஹாயம் செய்வதற்காக இருபுக்கத்திலும் எல்லாரும் அங்கு வரச் சண்டை அங்குப் பலப்பட்டது. அதில் பாண்டவர்கள் கை பலப்பட அங்கிருந்தும் கௌரவஸேனை சிதறி ஓடத்தலைப்பட்டது.

வினு 6:—இவ்வாறு பாண்டவர்கள் பக்கம் பலப்பட்டு வருகையில் அவர்களுக்கு என்ன ஆபத்து வந்து எவ்வாறு தீர்ந்தது?

விடை:—இவ்வாறு வெருண்டு ஓடும் ஸேனையைத் துரோணர் தடுத்து யுத்தகளத்தில் போர்செய்யும்படி நிறுத்திவிட்டு, தருமபுத்திரரை எதிர்த்துச்சென்றார். அங்கு உண்டான சண்டையில் துரோணர் கொடிய பாணங்களால் தருமபுத்திரரை அடிக்க, அவரைக் காப்பாற்ற வந்த குமாரன் என்பவன் தருமபுத்திரருக்கும் அடிவிழாமல் வெகு தந்திரமாகக் காப்பாற்றினான். உடனே துரோணர் அந்தக் குமாரனை வெட்டிச் சாய்த்துவிட்டுத் தருமபுத்திரரை நோக்கிச் சென்றார். அப்பொழுது அவரை எதிர்த்துத் தருமபுத்திரரைக் காக்கவந்த சிகண்டி நகுலன் முதலிய வீரரைக் கிட்ட வரவொட்டாது தூரத்திலேயே நிறுத்திவிட்டு யுதிஷ்டிரரைப் பிடித்துக் கட்டுவதற்காக அவர் அருகில் துரோணர் வந்துவிட்டார். அப்பொழுது விராடன், துருபதன், ஸாத்யகி முதலியோர் துரோணரைத் தடுக்க, மிகுந்த கஷ்டத்தின்பேரில் அவர்களைத் துரோணர் தோல்வி அடையும்படி செய்துவிட்டுத் தருமபுத்திரரைப் பிடிக்க அவர் தேர் அருகில் வந்து நின்றார். உடனே பாண்டவ ஸேனையில், 'தருமபுத்திரர் இறந்தார்' என்ற கூக்குரல் உண்டாய் விட்டது. அந்த சமயத்தில் எங்கிருந்தோ கொடிய சண்டை செய்துகொண்டே அர்ச்சுனன் ஓடிவந்து துரோணரைத் தடுத்துக் கௌரவஸேனையை எல்லாம் சரக்கூடுபோட்டு மறைத்து விட்டான். முன்னமேயே அடிபட்டுக் களைத்திருந்த கௌரவ ஸேனை சிதறி ஓட

ஸூர்யாஸ்தமனமாகும் தருணமாய் இருந்ததால் இருதிறத்தாரும் தமது ஸேனைகளைத் திருப்பிக்கொண்டு தமது படைவீடுகள் சேர்ந்தனர். மிகுந்த துக்கத்தோடிருந்த துரியோதனனைத் துரோணர் தேற்றி மறுநாள் நல்ல ஸமயம் வாய்த்ததானால் தருமபுத்திரரை அவசியம் பிடித்துத் தருவதாக வாக்களித்தார்.

வினா 7:—பன்னிரண்டாம் நாள் காலையில் நடக்கவேண்டிய யுத்த விஷயமாய் என்ன ஏற்பாடுகள் இருபக்கங்களிலும் நடந்தன?

விடை:—இவ்வாறு துரோணர் சொன்னதும் ஸம்ஸப்தகர்களும் திரிகர்த்தர்களும் எழுந்து, 'எங்களை அர்ஜுனன் அநேகம் தரம் தோல்வி அடையும்படி செய்திருக்கிறான். அவனோடு நாங்கள் சண்டை செய்து அவனைக் கர்வபங்கப்படுத்தி வதம் செய்யஸமயம் பார்த்துக்கொண்டிருந்தோம். நாளையதினம் நாங்கள் அர்ஜுனனைச் சண்டைக்கு அழைத்து யுத்தகளத்தில் தெற்கு ஓரமாக இழுத்துக்கொண்டு போய் அவனைச் சண்டையில் கொன்றுவிடுகிறோம். அதற்குள் துரோணர் தர்மபுத்திரரைச் சிறைபிடிக்கட்டும்' என்று விண்ணப்பம் செய்துகொண்டனர். இதை எல்லாரும் அங்கீகரிக்க, ஸமஸப்பதர்களும், திரிகர்த்தர்களும் அக்கினியை வளர்த்துத் தாம் அர்ஜுனனைக் கொல்லாது யுத்தகளத்தைவிட்டு வருவதில்லை. அவ்வாறு பயந்து செய்யவேண்டிவந்தால் தமக்குப் பஞ்சமாபாதகங்கள் செய்த கொடியபாபிக்கு வரும் நரகம் வரட்டும்' என்று சபதம் செய்துகொண்டார்கள். இதைக்கேள்விப்பட்ட அர்ஜுனன் தருமபுத்திரரை நோக்கி, 'என்னை ஸம்ஸப்தகர்கள் யுத்தத்திற்கு அழைத்துவிட்டனர். இனிமேல் நான் அவரோடு சண்டைசெய்யப் போகாமலிருப்பது நியாயமன்று. நான் அவர்களை ஸம்ஹாரம் செய்துவரும் வரையில் உம்மை ஸத்யஜித் என்ற பாஞ்சாலன் ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வருவான். அவன் இறந்தபின்பு நீர் யுத்தகளத்தில் நிற்கக்கூடாது,' என்றுசொல்லி அவரிடம் அனுமதி பெற்று ஸம்ஸப்தகரோடு யுத்தம் செய்ய அர்ஜுனன் பன்னிரண்டாம் நாள் காலை தெற்குநோக்கிப் புறப்பட்டார்.

வினா 8:—ஸம்ஸப்தகருக்கும் அர்ஜுனனுக்கும் அன்று நடந்த யுத்தத்தின் விவரம் என்ன?

விடை:—அர்ஜுனன் யுத்தகளத்தின் தென்பாகத்தில் ஸம்ஸப்தகர்களை எதிர்த்துப் போர் செய்யப் போய்ச் சேர்ந்தான். அப்

பொழுது அவர்கள் மிகுந்த உத்ஸாஹத்தோடு அர்ஜுனனுடன் போர் செய்யத் தொடங்கினர். எல்லாப் புறங்களிலிருந்தும் ஸம்ஸப்தகர்கள் அர்ஜுனனைப் பாணங்களால் தாக்க அவன் ஒருவனாகவே எல்லாரையும் நன்றாகத் தடுத்து வந்தான். இவ்வாறு சண்டை நடந்து வருகையில் அர்ஜுனன் வெகு லாகவமாக ஸம்ஸப்தகருள் சிறந்தவனாகிய ஸுதாமா என்பவனது தலையை வெட்டிச் சாய்த்துவிட, அவனது அடி பொறுக்க முடியாது ஸம்ஸப்தகர்கள் பயந்தோடத் தலைப்பட்டனர். அப்பொழுது திரிகர்த்தர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்த அவர்களும் நாராயணர் என்ற இடைய ஜாதியாரும் ஒன்றாகச் சேர்ந்து அர்ஜுனனை எதிர்த்துச் சண்டைக்கு வந்தனர். அப்பொழுது அர்ஜுனன் தேவதத்தம் என்ற தனது சங்கத்தைப் பூரித்துக்கொண்டு வெகு உத்ஸாகத்தோடு யுத்தத்தைத் தொடங்கி மோஹனாஸ்திரத்தைப் பிரயோகிக்க அநேக அர்ஜுனனைப்போன்ற சாயைகள் உண்டாகிவிட்டன. அப்பொழுது ஸம்ஸப்தகர்கள் முதலியோருக்கு எங்குப்பார்த்தாலும் அர்ஜுனனிருப்பதாகத் தோன்ற, அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு மாளத்தொடங்கினர். அப்பொழுது அவர்களுள் அநேகர் அர்ஜுனன் மேல் பாணவருஷங்களை வருஷிக்கக் கிருஷ்ணார்ச்சுனர் கொஞ்சகாலம் மூடப்பட்டுத் தத்தளித்தனர். முடிவில் அவைகளை அர்ஜுனன் வாய்வ்யாஸ்திரப் பிரயோகஞ் செய்து சின்னாபின்னப்படுத்தினான். இதனால் அநேக ஸம்ஸப்தகர் மிகுந்த வருத்தத்தை அடைந்தனர். இவ்வாறு அர்ஜுனனுக்கும் ஸம்ஸப்தகர்களுக்கும் அன்று சண்டை நடந்துகொண்டிருந்தது.

வினா 9:—அன்று பாண்டவர்களுக்கும் கௌரவருக்கும் யுத்தம் எவ்வாறு நடந்தேறியது?

விடை:—துரோணர் தமது ஸேனைகளை ஸுபர்ண வியூகமாகக் கட்டிக்கொண்டு சண்டைக்குத் தொடங்க, தருமபுத்திரர் திருஷ்டத்யும்னனை நோக்கித் தம்மைத் துரோணர் அன்று சிறை பிடிக்காமலிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார். அப்பொழுது அவன் தானே அன்று துரோணரோடு சண்டைசெய்து அவரை அவ்வாறு செய்யவொட்டாது தடுப்பதாகத் தருமபுத்திரருக்கு வாக்களித்ததும், உடனே சென்று வெகு தைரியமாகத் துரோணரை எதிர்த்தான்.

இவனை அன்று கண்டதும் அவருக்கு யமனைக் கண்டபோலாக அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இதைக்கண்ட துரியோதனன் தம்பிகளுள் ஒருவன் திருஷ்டத்யும்னனை எதிர்க்க, இருவருக்கும் கொடிய போர் உண்டாயிற்று. மற்றைய இடங்களிலும் அப்பொழுதே சண்டை தொடங்க எங்குப்பார்த்தாலும் பயங்கரமான காட்சிகளே காணப்பட்டன. இவ்வாறு நடந்துவருகையில் யுதிஷ்டிரரைப் பிடிக்க எண்ணித் துரோணர் அவர் அருகில் போய்ச் சண்டை செய்யத் தொடங்க, தம்மை எதிர்த்து வந்த ஸத்யஜித் என்பவனையும் மிகுந்த கஷ்டத்தின் பேரில் கொன்று தள்ளிவிட்டார். உடனே அர்ஜுனன் சொல்லியது யுதிஷ்டிரருக்கு ஞாபகம் வர அவருக்குப் பயம் அதிகரித்தது. உடனே அவர் குதிரைகள் வெருண்டோட அவர் யுத்தகளம் விட்டுப் போய்விட்டார். அப்பொழுது அநேக ராஜாக்கள் துரோணரை எதிர்த்துப் போர்புரிய எல்லோரையும் துரோணர் தாமாகவே அடித்துத்தள்ள அநேகர் மாண்டு விழுந்தனர். அப்பொழுது துரோணர் செய்யும் கொடிய யுத்தத்தைக்கண்டு கர்ணன் மகிழ்ந்து துரியோதனனுக்குச் சொல்ல அவன் அநேகரைச் சேர்த்துக்கொண்டு அவருக்கு ஸஹாயமாக வந்தான். (இந்த ஸமயத்தில் ஸஞ்ஜயர் இருபக்கத்திலிருந்த வீரர்கள், கொடிகள், தேர்கள், குதிரைகள் முதலியவைகளைப்பற்றித் திருதராஷ்டிரனுக்கு விஸ்தாரமாக எடுத்துரைத்தார்). அந்த ஸமயத்தில் பீமனுக்கும், துர்மாஷணனுக்கும்; தருமபுத்திரருக்கும் சல்லியனுக்கும் ; விராடனுக்கும் விந்தானு விந்தானுக்கும்; திரௌபதி பிள்ளைகளுக்கும் அசுவத்தாமனுக்கும்; கடோத்கசனுக்கும் அலம்புஷனுக்கும்; இதுபோல இருதிறத்தாரில் அநேகருக்கும் துவந்த யுத்தம் உண்டாயிற்று

வினு 10.—இவ்வாறு யுத்தம் நடந்துவருகையில் யார் பாண்டவர்களை எதிர்த்து வந்தது? அவனை யார் எவ்வாறு எதிர்த்தது?

விடை —இந்த ஸமயத்தில் நரகாஸுரன் பிள்ளையாகிய பகதத்தன் தனது யானைமீதில் ஏறிக்கொண்டு சண்டைக்கு வந்து சேர்ந்தான். அவனைப் பீமன் எதிர்த்துப் போர்செய்து அவனது யானையை அப்பொழுது படுத்தாத பாடெல்லாம் படுத்திவிட்டான். இவ்வாறு இவன் செய்துகொண்டிருக்கையில் பீமனுக்கு ஏதோ ஆபத்து வந்திருக்கும் என்று எண்ணித் தரும புத்திரர் அநேகரை அழைத்துக்கொண்டு பீமனுக்கு

ஸஹாயமாகவந்து பகதத்தனை வளைத்துக்கொண்டார். அப்பொழுது அந்த யானையும் விசித்திரமாகச் சண்டை செய்தது, பாண்டவர்கள் கை தாழத்தொடங்கியது. யுயுத்ஸுவினது குதிரைகளை யானை நசுக்கிக்கொல்ல அவன் பயந்து ஓடிப்போனான். இவ்வாறு பாண்டவஸேனை சின்னாபின்னமாகச் சிதறியது.

வினா 11:—இத்தருணத்தில் அர்ஜுனன் நிலை என்னவாய் இருந்தது? அவன் அப்பொழுது எவ்வாறு நடந்துகொண்டு என்னென்ன செய்தான்?

விடை:—பகதத்தன் யுத்தத்திற்கு வந்து பாண்டவ ஸேனையைக் கலக்குகிறான் என்ற செய்தியைக் கேழ்விப்பட்டு அர்ஜுனன் ஸம்ஸப்தர்களிடமிருந்து திரும்பித் தனது ஸேனைகளைக் காப்பாற்றப் போகவேண்டுமென்று புறப்பட்டான். அப்பொழுது ஸம்ஸப்தகர்கள் அவனை முன் ஏற்பாட்டின்படி பகதத்தனிருக்கும் இடம் போகவிடாதிருப்பதற்காக அர்ஜுனனைச் சண்டைக்கு அழைத்தனர். இதைக்கேட்டதும் அர்ஜுனனுக்கு இன்னது செய்வது என்று தோன்றவில்லை கொஞ்சநாழிகை கழிந்ததும் ஸம்ஸப்தர்களைத் தோல்வி அடையும்படி செய்துவிட்டே தருமபுத்திரரிடம் போவதாக அர்ஜுனன் தீர்மானித்து அவர்களோடு கொஞ்சகாலம் கோரயுத்தம் செய்து முடிவில் பிரம்மாஸ்திரப் பிரயோகம்செய்து அவர்களில் அநேகரைக் கொன்று தள்ளி மற்றவர்களைச் செயலற்று நிற்கும்படி செய்துவிட்டு, பகதத்தனிருக்குமிடம் நோக்கி அர்ஜுனன் தனது ரதத்தை ஓட்டும்படி பகவானை வேண்டிக்கொண்டான். அவன் துரோணரிருக்கும் இடத்தை நோக்கிச் சண்டைக்கு வருகையில் அவனைத் திரிகர்த்த தேசாதிபதியாகிய ஸுசர்மா எதிர்த்தான். அவனை அர்ஜுனன் மூர்ச்சை போகும்படி செய்து துரத்தி அடித்தான். அதன்பின்பு அர்ஜுனன் பகதத்தனை எதிர்த்துப் போர்புரியத் தொடங்கினான்.

வினா 12:—பகதத்தனோடு நடந்த யுத்தம் எவ்வாறு நடந்து முடிவு பெற்றது?

விடை:—பகதத்தனோடு நடந்த கொடிய சண்டையில் பகவானுக்கும் அர்ஜுனனுக்கும் ஒருபெரிய ஆபத்து வந்திருப்பதாகவே எல்லாரும் எண்ணினார்கள். அந்த யுத்தத்தில் பகதத்தனது யானையைக் கொல்ல அநேக நல்லஸமயங்கள் கிடைத்தபோதிலும் தருமயுத்த முறைமையை உத்தேசித்து அர்ஜுனன்

அதைக் கொல்லாது விட்டான். இவ்வாறு வெகு கோரமாய் யுத்தம் நடந்து வருகையில் பகதத்தன் அர்ஜுனனை உத்தேசித்து வைஷ்ணவாஸ்திரத்தைப் பிரயோகிக்க அதைப் பகவான் தாங்கினார். அது அவர் கழுத்தில் பூமாலையாக விழுந்து விடவே பகதத்தனிடம் திரும்பிப் போகவில்லை. அப்பொழுது அர்ஜுனன் தன்னிடத்தில் அந்த அஸ்திரத்தை நேரே விடாது பகவானை தாங்கியதற்காக அவரைக் கடிந்துகொள்ள, அவர், அதை ஒருவராலும் தாங்க முடியாதென்றும், அது எவன் மேல் விழுந்தாலும் அவன் இறக்கவேண்டியதாகையால் தாமே அதை அவ்வாறு தாங்கியதாகவும் சொல்ல அர்ஜுனன் திருப்தி யடைந்து முன்போலவே உத்ஸாகத்தோடு சண்டைசெய்யத் தொடங்கினன். இவ்வாறு பகதத்தன் தன் தகப்பன் நரகாஸுரனால் அடையப்பட்ட திவ்ய அஸ்திரத்தை இழந்ததும், அவனுக்கு வலி குறைந்துகொண்டே வந்தது. அந்த யுத்த முடிவில் அர்ஜுனனது பாணங்களால் அடிபட்டுப் பிரஞ்ஞை இழந்து தனது யானையிலிருந்து பகதத்தன் கீழே சாய்ந்து இறந்தான்.

வினு 13:—பின்பு பன்னிரண்டாம் நாள் யுத்தம் எவ்வாறு நடந்து முடிவுபெற்றது?

விடை:—பகதத்தன் இறந்த பின்பு யுத்தம் வெகு கோரமாய் நடந்தது. அதில் சகுனி அர்ஜுனனை எதிர்த்து அநேக மாயைகளின் ஸஹாயத்தோடு போர்புரியத் தொடங்கினன். அவனது மாயைகள் எல்லாவற்றையும் அர்ஜுனன் தனது அஸ்திர விசேஷத்தால் சிதற அடிக்கச் சகுனி பயந்து முதுகு காட்டி ஓடத் தலைப்பட்டான். இதன் பின்பு அசுவத்தாமனுக்கும் நீலனுக்கும் போர் உண்டாக, அதன் முடிவில் நீலன் தலையறுபட்டு இறந்தான். உடனே பாண்டவ ஸேனைகளில் ஒரு பெரிய குழப்பம் உண்டாயிற்று. அந்த ஸமயத்தில் பீமனும் அர்ஜுனனும் சேர்ந்து குழப்பத்தை அடக்கிவிட்டுச் சண்டைக்கு வந்து கௌரவஸேனைகளைக் கலக்கத் தொடங்கினர். அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் அப்பொழுது கொடிய போர் உண்டாகக் கர்ணனது பிள்ளைகள் அவனுக்கு ஸஹாயமாக வந்தனர். அர்ஜுனன் கர்ணன் பிள்ளைகளை எளிதில் கொன்றான். அப்பொழுது பீமன் அர்ஜுனனுக்கு ஸஹாயமாக வந்தான். இதைக்கண்டு அவ்விடத்திலேயே திருஷ்டத்யும்னன் அபிமன்யு

முதலியோரும் வந்து கூடினர். அங்கு நடந்த சண்டையில் துரியோதனன் ஸேனை சின்னாபின்னப்பட்டுப் போயிற்று. ஸூர்யன் அப்பொழுது அஸ்தமிக்க அன்றும் தருமபுத்திரர் நன்றாகக் காக்கப்பட்டிருந்தமையால் துரோணர் தமது வாக்கை நிறைவேற்ற முடியாமல் தமது ஸேனைகளைப் படைவீட்டை நோக்கித் திரும்பினர். பாண்டவர்களும் அன்று மாலை தமது படைவீடு சேர்ந்தனர்.

வினு 14:—பதின்மூன்றும் நாள் காலையில் அன்று நடக்கவேண்டிய யுத்த விஷயத்தில் என்ன ஏற்பாடுகள் இருபக்கத்திலும் நடந்தன?

விடை:—மறுநாட் காலையில் துரியோதனன் துரோணரைப் பாண்டவர்களிடம் பக்ஷபாத முடையவர் என்றும், ஆதலால்தான் அவர் தருமபுத்திரர் தம் கையில் அகப்படும் தருணமாய் இருந்தபோதிலும் அவரைப் பிடிக்காது விட்டார் என்றும், குற்றங் கூற, அதற்குத் துரோணர், 'அர்ஜுனனை ஒருவராலும் வெல்ல முடியாது. இன்றையதினம் அர்ஜுனனைமாத்திரம் நேற்றுக் கொண்டுபோனதுபோல் ஒதுப்புறமாக யாராவது கொண்டு போவார்களேயானல் நான் பாண்டவர்கள் பக்கத்திலிருக்கும் ஒரு முக்கிய வீரனைக் கொன்றுவிடுகிறேன். அதற்காகவே நான் இன்னொரு புதிய வ்யூகம் ஒன்று கட்டப்போகிறேன்' என்று சொன்னர். இதைக் கேட்டதும் ஸம்ஸப்தகருள் மீதி இருந்தவர்களும், திரிகர்த்தர்களும் முன்னுள் அர்ஜுனனோடு சண்டை செய்ததுபோல அன்றும் சண்டை செய்வதாக ஒப்புக்கொண்டு அர்ஜுனனை யுத்தகளத்தில் ஓர் பாகத்திற்கு இழுத்துச்சென்றனர்.

வினு 15:—இவ்வாறு அர்ஜுனன் சென்றதும் யுத்தகளத்தில் துரோணர் என்ன செய்தார்? பின்பு பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?

விடை:—துரோணர் உடனே தமது ஸேனையைப் பத்மவ்யூஹமாக நிறுத்தி அதன் முகத்துவாரத்தில் ஜயத்ரதனையும் மற்றுமுள்ள சிறந்த வீரர்களையும் வைத்து, பாண்டவர்கள் தோற்கும்படியான உபாயங்கள் எல்லாவற்றையும் செய்தார். இதற்குள் பாண்டவர்கள் அந்த வ்யூஹத்தைக் கலைத்து உள்ளே புகுவதற்குப் பீமனை முன்னிட்டுக்கொண்டு எவ்வளவோ பாடுபட்டனர். ஒன்றும் பயன்படாமல் போக யுதிஷ்டிரர் அபிமன்யுவை நோக்கி 'உனக்கு இந்த வ்யூகத்தைக் கலைக்க முடியுமாகில் நீ

அவ்வாறே செய். அப்பொழுது நாங்கள் எல்லோரும் நீ புகுந்து உள்ளே செல்லும் வழியே உள்ளே வந்து உனக்கு வேண்டிய ஸஹாயத்தைச் செய்கிறோம்,' என்று சொன்னார். அதே மாதிரி பீமன் முதலியோரும் சொன்னார்கள்.

வி 16:—அப்பொழுது அபிமன்யு என்ன செய்தான்? பின்பு என்ன நடந்தது?

விடை.—இவ்வாறு இவர்கள் சொன்னதும் அபிமன்யு உத்ஸாகத்துடன் அவ்வாறே செய்துவிடுவதாக ஒப்புக்கொண்டு எழுந்து யுதிஷ்டிரரை நோக்கி, "என் தகப்பனார் எனக்கு இந்த வ்யூஹத்தை உடைத்துக்கொண்டு உள்ளே போகும் வழியைமாத்திரம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். ஆகையால் எனக்கு இப்பொழுது உள்ளே போகத் தெரியுமே ஒழிய வெளியே வரத் தெரியாது. நீங்கள் என் பின்னாலேயே உள்ளே புகுந்துவிட வேண்டும்" என்று சொல்லித் தனது ஸாரதியைப் பத்மவ்யூஹத்தை நோக்கித் தனது ரதத்தைச் செலுத்தும்படி ஏவினான். அப்பொழுது ஸாரதி 'துரோணர் முதலியோராகிய சிறந்த வீரர்களிடம் நீ இவ்வளவு முரட்டுத்தனமாய் சண்டைக்குப்போவது தகுதியன்று. நீ எடுத்துக்கொண்ட காரியம் உன்னால் செய்ய முடியுமா என்று தீர்க்காலோசனை பண்ணிச் செய்' என்று புத்திமதி கூற, அதைக் கவனியாது மிகுந்த உத்ஸாஹத்தோடு அபிமன்யு பத்மவ்யூஹத்தை நோக்கிப் புறப்பட்டான்.

வி 17:—அப்பொழுது அபிமன்யு வ்யூஹத்தை எவ்வாறு பேதித்து என்ன செய்தான்? அப்பொழுது பாண்டவர்கள் செய்த பிரயத்தனங்கள் என்னமாய் முடிந்தன?

விடை:—அபிமன்யு வ்யூஹத்துவாரத்திற்கு வந்ததும் அநேக கௌரவவீரர்கள் அவனை எதிர்த்தனர். அவர்களில் அநேகரை அவன் கூடிய சீக்கிரத்தில் கொன்று தள்ளிவிட்டு மற்றையவர்களைக் கைதூக்கவொட்டாமல் அடித்துவிட்டு வ்யூஹத்தை ஒரு பக்கத்தில் சிதற அடித்துக்கொண்டு உள்ளே புகுந்துவிட்டான். அப்பொழுது பாண்டவர்கள் அதன் வழியே உள்ளே போக யத்தனிக்கையில் ஜயத்ரதன் வந்து அவர்களைத் தடுத்து அங்கேயே நிறுத்திவிட்டான். அப்பொழுது மஹாதேவரது அனுக்கிரஹத்தால் ஜயத்ரதனுக்குப் பாண்டவர்களையும் மற்றையவர்களையும் அன்று உள்ளே போகவொட்

டாது தடுக்கும் சக்தி வா அவன் அவ்வாறு செய்தான். (ஆரண்ய பர்வம், பக்கம் 151, வினு 117-ஐ பார்க்க).

வினு 18:—பத்ம வ்யூஹத்துள் அபிமன்யு எவ்வாறு சண்டை செய்து தனது திறமையைக் காட்டினுன்?

விடை:—அபிமன்யு பத்மவ்யூஹத்தை உடைத்துக்கொண்டு உள்ளே போனதும் அவனை அநேக கௌரவவீரர்கள் வந்து எதிர்க்க அவன் ஒருவனுகவே எல்லாருடனும் தகுந்தபடி போர்செய்து வந்தான். அப்பொழுது துரோணர், கிருபர் முதலிய பெரியயோரும் அவனை எதிர்த்துச் செல்ல அவர்களையும் அவன் தோல்வி யடையும்படி செய்தான். அந்தச் சமயத்தில் கௌரவவீரர்கள ஒருவராலும் அவனை அணுகிப் போர் செய்ய முடியவில்லை. இவ்வாறு எல்லாரும் தத்தளிப்ப தைதத துரோணா கண்டு அபிமன்யுவின் பல பராக்ரமத்தை அந்த யுத்தகளததிலேயே புகழ்ந்து பேசி மெச்சிக்கொண்டார். இதைக் கேட்டதும் துரியோதனனுக்கு வயிற்றெரிச்சல் உண்டாயிற்று. இதைத் தணிக்கத் துச்சாஸனன் கொஞ்ச நாழிகையில் இநதச் சின்னபபயலை நசுக்கிவிடுகிறேன்' என்று வீண்பெருமை பேசிக்கொண்டு அபிமன்யுவை எதிர்த்துவர, இருவருக்கும் போர் உண்டாயிற்று. அதில் துச்சாஸனன் தன்னுல் இயன்றமட்டும் அபிமன்யுவை அடித்துத் தள்ளப்பார்க்க முடியாமலபோக, முடிவில் அவன் அபிமன்யுவாலேயே அடிபட்டுத் தன் தேர்த்தட்டில் மூர்ச்சைபோய் விழுந்தான். உடனே அவன் ஸாரதி துசசாஸனனை யுத்தகளம்விட்டு ஒதுப்புறமாகக் கொண்டுபோய்விட்டான். இயமாதிரி எளிதில் அபுமன்யு செய்த பெருங் காரியத்தை நோக்கி வ்யூகததிற்கு வெளியி லிருநத பாண்டவர்கள் அட்டஹாஸம் செய்து ஆனந்தித்துக் கொண்டு தம்மால் இயன்றமட்டும் வ்யூகத்தில் புகுந்து அபிமன்யுவுக்கு வேண்டிய ஸஹாயஞ்செய்ய எவ்வளவோ முயன்றனர். ஜயத்ரனது பலவிருத்தியால் பாண்டவர்கள் பிரயத்தனங்கள் யாவும் வீணுயின. இதற்குள் அபிமன்யுவைக் கர்ணன் எதிர்த்து வந்து வெகுகாலம் போர் செய்து தோல்வியை அடைந்து வெட்கி ஓடிப்போனுன். இவ்வாறு அநேக வீரர்கள் அவனது கொடுமையைத் தாங்க முடியாது சிதறி ஓடுகையில் துரியோதனனும் தன்னுல் இயன்றமட்டும் அவனைத் தடுக்கப் பார்த்தான். முடிவில் அவனும் பயந்தோடிவிட்டான். அதன்

பின்பு பிரஹத்பலன் அவனால் இறந்தான். அன்று கர்ணன், கிருபர், துரோணர் முதலியோரையும் அடிக்கடி அபிமன்யு வருத்தித் தோல்வி யடையும்படி செய்துகொண்டும் மற்றைய வர்களைத் தைரியமாக வெட்டிச் சாய்த்துக்கொண்டும் அன்று மாலைவரை விசித்திர யுத்தம் செய்துகொண்டு வந்தான்.

வினா 19:—இவ்வாறு சண்டை செய்துவந்த அபிமன்யுவின் கதி எவ்வாறு எப்படியாயிற்று?

விடை:—அபிமன்யு மிகுந்த வெறிகொண்டு எல்லாரையும் தோற்க அடித்துக்கொண்டு யுத்தம் செய்துவருகையில், துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் துரியோதனனிடம் துரோணர் நோக்கி 'அபிமன்யு வில்லை எடுத்துச் சண்டை செய்துவரும்வரையில் அவனைத் தேவர்களாலும் மற்றுமுள்ளவர்களாலும் கொல்லவே முடியாது. ஆகையால் வீரர்களாகிய நீங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்துகொண்டு ஒருவன் அவன் வில்லையும், மற்றொருவன் அவன் தேரையும், மற்றொருவன் அவன் குதிரைகள், ஸாரதி முதலியவைகளையும் பங்கு பிரித்துச் சின்னபின்னமாக்க, வேறொருவன் அவனை வெட்டிச்சாய்த்துக் கொல்லவேண்டும். இவ்வாறின்றி வேறு எவ்விதத்திலும் இந்த அஸஹாயசூரனைக் கொல்வது அஸாத்தியம்' என்று சொன்னார். உடனே கர்ணன், கிருதவர்மா, கிருபர் முதலியோர் ஒன்று சேர்ந்துகொண்டு முறையே அபிமன்யுவினது வில், தேர்க்குதிரைகள் பக்க பலங்கள் முதலியவைகளைச் சிதற அடிக்க அபிமன்யு தன்னு வியன்றமட்டும் விசித்திர யுத்தஞ்செய்து பார்த்தான். மற்றும் சிலர் அபிமன்யுவின் கவசம், கேடயம் முதலியவைகளை உடைத் தெறிந்தனர். இவ்வாறு தனது ஸஹாயங்கள் யாவும் போன போதிலும் ஒன்றையும் லக்ஷியம் செய்யாது தன்னை எதிர்த்து வந்த கௌரவர்கள் எல்லோரையும் கொஞ்சகாலம் தடுத்து அபிமன்யு போர்செய்து வந்தான். அப்பொழுதும் அநேகர் அவன் கிட்டே வர முடியாது தோல்வி அடைந்து ஓடத் தலைப் பட்டனர். இவ்வாறு கவசம் முதலியவைகள் இழந்துதான் ஒருவனாக அன்று ஸாயங்காலத்திலும் விடாது சண்டை செய்த அபிமன்யுவுக்கு ஸஹாயமாகப பாண்டவர்கள் பத்ம வ்யூகத்தை உடைத்துக்கொண்டு வர எவ்வளவோ முயன்றனர். மஹாதேவரது அனுக்கிரஹ பலத்தையுடைய ஜயத்ரதனை அன்று அவர்களால் தோல்வியடையும்படி செய்ய முடியாமற்

போனமையால் அபிமன்யுவுக்கு அவர்களால் ஸஹாயம் செய்ய முடியாமற் போயிற்று. இவ்வாறு அபிமன்யு ஒரு ஸஹாயமு மின்றிச் சண்டை செய்து வருகையில் அவனை எதிர்த்து ஒரு கதையை எடுத்துக்கொண்டு துச்சாஸனன் பிள்ளை வர இரு வருக்கும் கதாயுத்தமுண்டாயிற்று. அதில் ஒருவரை ஒருவர் கதையால் அடித்துக்கொண்டு இருவரும் மூர்ச்சைபோட்டு விழுந்தனர். அப்பொழுது துச்சாஸனன் பிள்ளை முதலில் எழுந்திருக்க அவன் தனது கதையால் தலையைத்தூக்கிய அபி மன்யுவை ஓங்கியடிக்க அந்த அடியால் அபிமன்யு இறந்தான்.

வின 20.—இவ்வாறு அபிமன்யு இறந்ததும் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் படைவீட்டில் அப்பொழுது என்ன நடந்தது?

விடை—பத்மவ்யூகத்தின் வெளியே யிருந்துகொண்டு அடிக்கடி அன்று முழுதும் உள்ளே புகுவதற்குப் பிரயத்தனப்பட்டுக் கொண்டும், ஜயத்ரதனால் அவ்வாறு செய்யவொட்டாது அடிக் கடி தடுக்கப்பட்டு வருந்திக்கொண்டும் இருந்த பாண்டவர்கள் இவ்வாறு அபிமன்யுவை அநேகர் சேர்ந்து கொன்று சாய்த்த தைக் கண்டதும் மிகுந்த துக்கத்தை அடைந்து அப்பொழுது ஸூர்யாஸ்தமனத்திற்கு வெகு நாழிகை இருந்தபோதிலும் தமது ஸேனைகளைத் திருப்பிக்கொண்டு தமது படைவீடு செல் லத் துரியோதனாதியரும் தமது படைவீடு சென்றனர். தரும புத்திரர் அப்பொழுது அபிமன்யு தமது ஏற்பாட்டாலேயே இறந்தபடியால் தாமே அவனது மரணத்திற்குக் காரணம் என்று எண்ணிப் பரிதவித்தார். அந்தத் தருணத்தில் வியா ஸர் அவரிடம் வந்து முன் காலத்தில் அகம்பனன் என்ற அர சன் அவரைப்போலப் புத்திரசோகத்தால் வருந்துகையில் நார தர் அவனுக்கு மரணத்தின் உற்பத்தியை எடுத்துச்சொல்லி, ஸ்வைத்யன், ஸுஹோத்ரன், பௌரவன், சிபி, இராமர், பகீ ரதர், திலீபர், மாந்தாதா, யயாதி, அம்பரீஷர், சசபிந்து, கயா மேதசத்தாசன், ரந்திதேவர், பரதர், பிருது, பரசுராமர் முதலிய 16 இராஜாக்களும் மிகுந்த சிறந்தவர்களாக வாழ்ந்தபோதி லும் முடிவில் மரணத்திற்கு ஆளாகிவிட்டார் என்பதைப்பற்றி விஸ்தரித்து அவரது சோகத்தை மாற்றிய திவ்ய உபாக்கியா னங்களை எடுத்துரைத்துத் தருமபுத்திரரைத் தேற்றினர். பின்பு வியாஸர் தமது ஆச்ரமம் சேர்ந்தார்.

வி௵ 21:—இவ்வாறு தர்மபுத்திரர் ஒருவாறு தேறி இருக்கையில் அங்கு யார் வந்தது? அப்பொழுது என்ன கோரச்செய்கை கள் நடந்தன?

விடை:—தருமபுத்திரர் ஒருவாறு தேறி அர்ஜுனனுக்கு எப்படி இந்த விஷயத்தைத் தெரிவிப்பது என்று தத்தளித்துக்கொண் டிருக்கையில், ஸம்ஸப்தர்கள் எல்லோரையும் வென்று ஜயம் பெற்றபோதிலும் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு மனச் சஞ்சலம் உடையவனாக அர்ஜுனன் அங்கு வந்தான். வரும் பொழுதே அவன் மனச்சஞ்சலம் அதிகமாகப் பகவானிடம் அதைப்பற்றி அவன் சொல்லிக்கொண்டே தனது படைவீட் டுள் புகுந்தான். அங்கு, தினம் தன்னை நோக்கிவரும் அபி மன்யுவைக் காணாததும் அவனுக்கு அவன் அன்று இறந்துபோ யிருக்க வேண்டும் என்றே தோன்றியது. இதற்குள் தர்ம புத்திரர் இருக்கும இடத்திற்கு அவன் வந்ததும் அவர்கள் இருந்த நிலையாலேயே அவன் எண்ணம் திடப்பட்டது. அப் பொழுது எல்லோரும் கொஞ்சகாலம் பிரலாபித்த பின்பு, அர் ஜுனனுக்கு ஜயத்ரதனால் அன்று பாண்டவர்கள் தடுக்கப்பட்ட மையால் தான் அபிமன்யு இவ்வாறு ஸஹாயமின்றி இறக்க வேண்டி வந்தது என்று தெரியவந்தது. உடனே அர்ஜுனன் 'நாளைக்கு ஸூர்யாஸ்தமனத்திற்குள் ஜயத்ரதனை நான் கொன்று தள்ளாவிடில் எனக்குக் கொடிய நரகம் வரட்டும்' என்று இதுபோன்ற பலவிதமாகச் சொல்லிக் கொடிய சபதத் தைச் செய்துகொண்டான். கொஞ்ச நாழிகையானதும் அர் ஜுனனும் கிருஷ்ணனும் தமது இருப்பிடம் சென்றனர்.

வி௵ 22:—இவ்வாறு அர்ஜுனன் கொடிய பிரதிஞ்ஞையைச் செய்ததும் துரியோதனாதியர் படைவீட்டில் என்னென்ன ஏற் பாடுகள் இவ்விஷயமாய் நடந்தன?

விடை:—இவ்வாறு அர்ஜுனன் கொடிய பிரதிஞ்ஞை செய்திருப்ப தாக ஜெயத்ரதனுக்கு அப்பொழுதே தூதர் மூலமாகத் தெரிய வந்தது. உடனே அவன் துரியோதனாதியரிடம் சென்று அர் ஜுனன் செய்த பிரதிஞ்ஞையை எடுத்துரைத்து, 'நீங்கள் நாளை என்னைக்காப்பாற்றுவதாக வாக்களிக்கவேண்டும். இல்லா விடில் நான் இதோ எனது தேசம் போய்விடுகிறேன்' என்று தனது தீர்மானத்தை வெளியிட்டான். அப்பொழுது துரியோ தனாதியர் எல்லோரும் அவனை அன்று ஸூர்யாஸ்தமனம்

வரையில் அர்ஜுனன் கையில் அகப்பட வொட்டாமல் செய்துவிடுவதாக வாக்களித்தார்கள். அப்பொழுது ஜயத்ரதன் துரோணரிடம் சென்று தனக்கும் அர்ஜுனனுக்குமுள்ள வித்தியாஸம் என்ன என்று கேட்டுத் தனது தீர்மானத்தையும் அவரிடம் வெளியிட்டான். அதற்கு அவர், 'நீங்கள் இருவரும் என்னை விட்டுப்போகையில் ஸமம்தான். ஆனால் அர்ஜுனன் ஆரண்யத்தில் பட்ட கஷ்டங்களால் உன்னை மிஞ்சிவிட்டான். ஆகிலும் நீ பயப்படாதே. நானே நாங்கள் உன்னை நன்றாய்ப் பாதுகாக்கிறோம்,' என்று வாக்களித்தார். உடனே ஜயத்ரதன் தனது ஊருக்குப் போகவேண்டும் என்ற எண்ணத்தைவிட்டுத் தைரியமாய் இருந்தான்.

வினா 23 :—கிருஷ்ணார்ஜுனர்கள் தமது கூடாரம் சென்றதும் என்ன செய்தார்கள் ?

விடை :—கிருஷ்ணார்ஜுனர் தமது கூடாரம்சென்று பேசிக்கொண்டிருக்கையில் வேவுகாரர் மூலமாகத் துரோணர் ஜயத்ரதனுக்கு அபயம் கொடுத்த ஸங்கதி அவர்களுக்குத் தெரியவந்தது. உடனே தன் பிரதிஞ்ஞையை எவ்வாறு நிறைவேற்றுவது என்ற கவலையும் புத்திரசோகத்தோடு சேர்ந்து அர்ஜுனனை வருத்தத் தொடங்கிற்று. அப்பொழுது அர்ஜுனன் ஸுபத்ரையைத் தேற்றும்படி பகவானை அனுப்பிவிட அவர் அவளை மதுரவாசகங்களால் ஒருவாறு தேற்றி ஜயத்ரதன் விஷயமாக அர்ஜுனன் செய்திருக்கும் பிரதிஞ்ஞையைத் தெரிவித்து அவளை நன்றாக ஸமாதானப்படுத்தினார். அதன் பின்பு பகவான் தமது கூடாரம் சென்று அங்குத் தாருகனை (ஸாரதி) நோக்கி 'நாளை அர்ஜுனனால் ஜயத்ரதனைப் பிரதிஞ்ஞைப்படி கொல்லமுடியாதென்று எனக்குத் தோன்றினால் நானே அவனைக் கொன்றுவிடுகிறேன்' என்று தமது ஆவலை வெளியிட்டார். பின்பு பகவான் தமது படுக்கை அறை சென்று கண் வளரத் தொடங்கினார். அர்ஜுனனுக்கோ அன்று நல்ல தூக்கம் பிடிக்கவில்லை. துரோணர் முதலிய சிறந்த வீரர்களால் காப்பாற்றப்படும் ஜயத்ரதனைத் தன் பிரதிஞ்ஞைப்படி எவ்வாறு கொல்வது என்ற எண்ணம் அவனைக் குறைத்தூக்கத்திலும் பாதிக்கத் தொடங்கியது.

வினா 24 :— இவ்வாறு அர்ஜுனன் மனம் நொந்து உறங்குங்கால்

என்ன விசித்திரத்தைக் கண்டான்? பின்பு அவன் என்ன செய்தான்?

விடை:—அர்ஜுனன் அப்பொழுது ஒரு ஸ்வப்னத்தைக் கண்டான். அதில் கிருஷ்ணபகவான் அவன் அண்டை வர அவன் அவருக்குத் தகுந்த மரியாதைகள் செய்தான். அவர் அவனுக்கு அபயம் கொடுத்தார். உடனே அர்ஜுனன் தனது மனக்கவலையை அவருக்குத் தெரிவித்தான். அப்பொழுது பகவான் அர்ஜுனனுக்குப் பாசுபதம் என்ற அஸ்திரத்தை ஞாபகப்படுத்தி அவனைச் சிவனைத் தியானம் செய்யும்படி ஏவினார். அவ்வாறே அவன்செய்ய பகவான் அவனது வலது கையைப் பிடித்துக் கொண்டிருந்தார். இருவரும் வாயுவேக மனோவேகமாகக் கைலாஸம் போனதாக அவனுக்குத் தோன்றியது. அங்குப் பார்வதீஸமேதராய் இருந்த பரமசிவனைக் கண்டு தரிசித்து அர்ஜுனனும் பகவானும் துதித்தார்கள். பின்பு அவரிடம் தனது குறையை அர்ஜுனன் சொல்லிக்கொண்டு பாசுபதம் தனக்கு வேண்டுமென்று கேட்டான். அப்பொழுது அவர் அருகிலிருந்த குளத்தில் ஸர்ப்பரூபமாக இருக்கும் அம்பையும் வில்லையும் அவர்களைக் கொண்டுவரச் சொன்னார். அவர்கள் அவ்வாறே செய்யப் பரமசிவனது ரூபத்திலிருந்து ஒரு பிரம்மசாரி வெளிவந்து அர்ஜுனனுக்கு வில்பிடிக்குமாதிரி, அப்பொழுது நிற்கவேண்டியமாதிரி, மந்திரத்தை உச்சரிக்கவேண்டியமாதிரி முதலியவைகளைக் காட்ட அவன் நன்றாய் அவைகளைக் கிரஹித்துக் கொண்டான். பின்பு பாசுபதத்தைப் பரமசிவனிடமிருந்து பெற்றுக்கொண்டு, அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்துவிட்டு இருவரும் தமது இருப்பிடம் வந்து சேர்ந்தனர். இதற்குள் இரவு முடிய அர்ஜுனன் ஸ்வப்னம் காணுவதை விட்டு எழுந்து அதற்குள் யுத்தத்திற்குத் தயாராய் இருந்த தருமபுத்திரர் பகவான் முதலியவரிடம் வந்து, தனது ஸ்வப்னத்தை அர்ஜுனன் சொல்லிக் கொண்டான். அப்பொழுது பகவான் அர்ஜுனனைப் புகழ்ந்து அன்று அவன் எடுத்த காரியம் கைகூடுமென்று ஆசீர்வதித்தார். உடனே அர்ஜுனன் ஸாத்யகியைத் தர்மபுத்திரருக்கு அன்று காவலாக வைத்துவிட்டு மிகுந்த உத்ஸாகத்துடன் போருக்குப் புறப்பட்டான்.

வினு 25:—இவ்வாறு அர்ஜுனன் யுத்தத்திற்கு வருவதற்குள்

துரோணர் ஜயத்ரதனைக் காபபாற்றுவதற்காக என்ன ஏற்பாடுகள் செய்திருந்தார்?

விடை:—ஜயத்ரதனைக்கிருபர் முதலிய சில வீரர்களால் சூழப்பட்ட ஓர் இடத்தில் நிறுத்தி வைத்து அதிலிருந்து 12 மைல் தூரம் வரை தமது ஸேனைகளை அவர் அணிவகுத்து நிறுத்தினார். இதில் முன் புறத்தில் சகட வ்யூஹத்தையும், அதன் பின்பு சக்ரவ்யூஹத்தையும் அதன் பின்பு ஸூசீமுக வ்யூஹத்தையும் ஏற்படுத்தி இப்பன்னிரண்டு மைல் தூரத்தையும் தமது ஸேனைகளால் நிரப்பிவிட்டார். அர்ஜுனன் போய் ஜயத்ரதனிடம் சேர வேண்டுமாகில் மிகுந்த கஷ்டத்தோடு இவ்வியூஹங்கள் எல்லாவற்றையும் சிதற அடித்துக்கொண்டுதான் போகவேண்டும். இவைகளைக் கண்டதும், ஜயத்ரதனுக்குத் தைரியம் உண்டாயிற்று. துரியோதனுக்கு மிகுந்த ஸந்தோஷம் உண்டாயிற்று.

வின 26:—இவ்வாறு எல்லாம் தயாரான உடன் அர்ஜுனன் என்ன செய்தான்? எவ்வாறு முதலில் அவன் சண்டை செய்தான்?

விடை:—இருதிறத்தாரும் சண்டைக்குத் தயாரானதும் அர்ஜுனன் முன்வந்து தனது சங்கத்தை ஊதினான். அக்காலத்தில் துரியோதனாதிகளுக்கு விரோதமாக அநேக அபசகுனங்கள் உண்டாயின. அப்பொழுது அர்ஜுனன் சகடவ்யூகத்தின் வாயில் வந்து நின்றுகொண்டு கொடிய யுத்தம் செய்யத்தொடங்கி, எல்லாப் பக்கங்களிலும் வெகு சீக்ரமாகப் பாணவருஷங்களைச் செய்ய ஆரம்பித்தான். இவன் இவ்வாறு சுழன்றுகொண்டு சண்டையிட்டு வருகையில் எங்குப் பார்த்தாலும் அர்ஜுனன் இருப்பதாகக் கௌரவர்களுக்குத் தோன்ற மிகுந்த குழப்பம் உண்டாயிற்று. பின்பு கொடிய யுத்தம் செய்து முன்பாகத்தை அவன் தோல்வி அடையும்படி செய்தான். உடனே துச்சாஸனன் ஸமயத்தில் தனது ஸேனைகளோடு ஓடிவந்து அர்ஜுனனை அந்த வ்யூஹத்துள் போகவொட்டாமல் தடுக்க, அம்பெடுப்பதும் தொடுப்பதும் தெரியாமல் பாணவருஷங்களை ஸதா பொழிந்து கொண்டிருக்கும்படி அர்ஜுனன் போர் செய்து அவனது ஸேனைகளைப் பராஜயப்படுத்தினான். இதன் பின்பு அர்ஜுனன் துரோணரது படைகளின் மேலேவிழுந்து கலக்கத் தொடங்கினான். அப்பொழுது அவனுக்கும் துரோணருக்கும் கொடிய போர் நடந்தது. சண்டை பலப்பதைக் கண்ட பகவான், அன்று மேல் அவசியம் செய்யவேண்டிய காரி

யங்கள் இருக்கின்றன என்று அவனுக்கு நினைப்பூட்ட, அர்ஜுனன் துரோணரை நோக்கி 'நீர் எனது குரு, மேலும் உம்மை ஒருவராலும் ஜயிக்க முடியாது' என்று சொல்லிக்கொண்டே, அந்த வ்யூஹத்தைச் சிதற அடித்துக்கொண்டு உள்ளே புகுந்து விட்டான்.

வின. 27:—அர்ஜுனன் புகுந்ததும் அவன் என்ன கொடிய வேலைகள் செய்யவேண்டி இருந்தது? அவன் எவ்வாறு அப்பொழுது சண்டை செய்தான்?

விடை:—தம்மை யுத்தமத்தியில் விட்டு விட்டு உள்ளே சென்ற அர்ஜுனனைத் துரோணர் பின்தொடர்ந்து பாணங்களை வருஷித்துக்கொண்டு சென்றார். ஆகையால் அர்ஜுனன் முன்னும் பின்னும் பாணங்களை விட்டுக்கொண்டு சண்டையிட வேண்டிவர, அவன் அவ்வாறே வெகு லாவகமாகச் சண்டை செய்துகொண்டு அந்த வ்யூகத்துள் வெகு வேகமாகப் போகத் தொடங்கினான். அங்குத் தன்னை எதிர்த்த கிருதவர்மாவைக் கஷ்டத்தின்பேரில் தத்தளிக்கும்படி செய்ய, அதைக்கண்ட சுருதாயுஷன் என்பவன் மிகுந்த கோபத்தோடு சண்டைக்கு வந்தான். இவன் வருணனுடைய பிள்ளை, இவனுக்கு வருணன் ஒரு திவ்விய அஸ்திரத்தைக்கொடுத்து, அதைச் சண்டை செய்பவர் மேலேயே எறியவேண்டும் என்றும், அவ்வாறு இல்லாதவர்கள் மேல் எறிந்தால் அது அவன்பேரிலே வந்து விழுந்து அவனைக் கொன்றுவிடும் என்றும் எச்சரிக்கை செய்திருந்தான். இதைக் கவனியாமல் அவன் சண்டை மும்மரத்தில் அர்ஜுனனை அடித்துக்கொண்டு வருகையில் பகவானை அந்தத் திவ்ய அஸ்திரத்தால் அடித்தான். உடனே அந்த அஸ்திரம் சுருதாயுஷன் மேலேயே திரும்பி வந்து விழுந்து அவனைக்கொன்றது. இதன் பின்பு அர்ஜுனன் ஸுதக்ஷணன் என்பவனைக் கொடிய போரில் கொன்று, பின்பு அபமஷ்ட தேசாதிபதியையும் வெட்டிச் சாய்த்தான். இதன் பின்பு வெகு வேகமாக அர்ஜுனன் ஜயத்ரதனிருக்கும் இடத்தை நோக்கிப் போகத் தலைப்பட்டான்.

வின 28:—அர்ஜுனன் தன் காரியமே கண்ணாகப் போய்க்கொண்டிருக்கையில் துரியோதனன் என்ன செய்தான்? பின்பு என்ன நடந்தது?

விடை:—இவ்வாறு ஜயலக்ஷ்மியோடு அர்ஜுனன் போகையில் மிகு

ந்த துக்கத்தோடு துரியோதனன் துரோணரிடம் வந்து, 'உம்மையும் லக்ஷ்யம் செய்யாது உமது ஸேனைகளைச் சின்ன பின்னப் படுத்திக்கொண்டு அர்ஜுனன் உள்ளே வந்துவிட்டானே! இனிமேல் என் ஸேனைகளுக்கு என்ன கதி? நீர் இவ்வாறு பாண்டவர்களிடம் பக்ஷபாதியாக அர்ஜுனனை உள்ளே விட்டுவிட்டீரே! உம்மை நம்பி அல்லவோ, ஊருக்குப் போய் விடுகிறேன் என்று பயந்து நடுங்கிக்கொண்டிருந்த என் மைத்துனனையும் நான் தடுத்து நிறுத்திவிட்டேன்! ஏன் நீர் அர்ஜுனனை உள்ளே விட்டுவிட்டு இப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்?' என்று கடிந்து பேசினன். அதற்கு த்ரோணர், 'நானே கிழவன். என்னுல் அர்ஜுனனைத் தொடர்ந்துபோக முடியவில்லை. மேலும் அர்ஜுனன் தன் கிட்டே ஒருவரும வராமலிருக்கும்படி இருபக்கங்களிலும் பாணங்களை வருஷித்துக்கொண்டு போகிறுன். இதுவுமன்றித் தனியாக இருக்கும் தருமபுத்திரரைப் பிடித்துக் கட்டுவதற்கு இது தான் தருணம். நான் இந்த வேலையைப் பார்க்கிறேன். நீங்கள் எல்லோரும் சேர்ந்து அர்ஜுனனைச் சென்று தடுத்து விடுங்கள்' என்று கூற, துரியோதனன் 'உம்மால் முடியாத காரியம் எம்மால் எப்படி முடியும்?' என்றுன். இதைக் கேட்டதும் துரோணர் துரியோதனன்மேல் ஒரு திவ்ய கவசத்தைத் தெய்வமந்திர பூர்வமாகப் போட்டு அது எவ்வளவு அம்பு வந்து விழுந்தாலும் சிதறுதிருக்கும்படி செய்தார். அதன் பின்பு முன்காலத்தில் இந்திரனுக்கு விருத்திராஸுரவத ஸமயத்தில் கவசங்கொடுக்குங்கால் பரமசிவத்தால் அந்த மந்திரம் உபதேசிக்கப்பட்டு அது குருபரம்பரை மூலமாகத் தம்மிடம் வந்திருக்கிறதென்றும் சொல்லி அதன் மேன்மையையு எடுத்துக் காட்டினர். இவ்வாறு திவ்ய கவசத்தை அடைந்து துரியோதனன் மிகுந்த உத்ஸாஹத்தோடு அர்ஜுனனைத் தடுப்பதற்காக அவனை எதிர்த்துச் சென்றுன்.

வின 29:—இவ்வாறு துரியோதனன் சென்றதும் துரோணர் என்ன செய்தார்?

விடை:—துரோணர் துரியோதனனை, அர்ஜுனனைநோக்கிப் போய்ச் சண்டையிடும்படி அனுப்பிவிட்டு, பாண்டவர்கள், பாஞ்சாலர்கள், ஸோமகர்கள் முதலியோர் வ்யூஹவாயிலில் சண்டை செய்துகொண்டிருக்கும் இடம் வந்து கொடிய போரைச் செய்

யத் தொடங்கினார். முதலில் திருஷ்டத்யும்னன் அவரை எதிர்த்தான். அவனோடு போர் செய்துகொண்டிருக்கையில் துரியோதனாதியரில் சிலர் பீமனையும், சல்லியன் தருமபுத்திரரையும், துச்சாஸனன் ஸாத்யகியையும், விந்தானுவிந்தாள் விராடராஜனையும், பாஹ்லீகராஜா சிகண்டியையும், இதுபோல மற்றை கௌரவ வீரர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு பாண்டவ வீரரையும் எதிர்த்து யுத்தங்கள் செய்துகொண்டிருந்தனர். துரோணர் செய்த சண்டையில் திருஷ்டத்யும்னன் கையில் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு அவரை நோக்கிச் சென்று அவர் குதிரை முதுகில் ஏறி அவரை வெட்டப் பிரயத்தனம் செய்தான். அப்பொழுது அவர் சிறந்த பாணங்களால் அவனை அடித்து ஒன்றும் செய்ய முடியாதபடிசெய்து, அவனைக் கொல்ல இரண்டு பாணங்களைத் தமது வில்லில் வைத்தார். இந்த நிலையைக் கண்ட ஸாத்யகி தனது பாணங்களால் துரோணர் எடுத்த பாணங்களை அம்பிலேயே வெட்டிவிட்டான். அப்பொழுது திருஷ்டத்யும்னன் உயிரிழக்காது தப்பித்துக்கொண்டான். உடனே துரோணருக்கும் ஸாத்யகிக்கும் கொடிய போர் உண்டாயிற்று.

வினா 30:—இவ்வாறு துரோணர் கொடிய போர் செய்துகொண்டிருக்கையில், ஜயத்ரதனை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அர்ஜுனன் என்ன விசித்திர காரியத்தைச் செய்தான்?

விடை:—அன்று மத்தியான ஸமயத்தில் அர்ஜுனன் வெகு கோர யுத்தத்தைச் செய்துகொண்டு ஜயத்ரதனை நோக்கிப் போகையில் விந்தானுவிந்தாள் எதிர்த்து வர அவர்களை எதிர்த்துக் கொன்றான். அப்பொழுது ஸூர்யவெப்பத்தாலும், யுத்தத்தில் பட்டிருந்த பாணங்களாலும், வழி நடந்ததாலும் மிகவும் களைத்துப்போயிருந்த குதிரைகளின் நிலையைப் பகவான் அர்ஜுனனுக்குச் சொல்ல, அவன் தான் அங்கேயே சரக்கூடு போட்டு ஸேனைகளை ஒதுக்கிவிட்டு அவர்களை உள்ளே வரவொட்டாது தடுத்துக்கொண்டிருப்பதாகவும் அப்பொழுது பகவான் ஒருகவலையும் இன்றிக் குதிரைகளைத் தேரிலிருந்து அவிழ்த்துவிட்டு அவைகளின் களைப்பை ஆற்றிக்கொண்டிருக்கலாம் என்பதாகவும் சொல்ல, பகவானும் அதை அங்கீகரித்தார். அர்ஜுனன் தான் சொன்னபடி சரக்கூடு போட்டான். சுற்றிலும் இருந்த கௌரவஸேனைகளைக் கிட்டே அணுகவொட்

டாது தனது பாணவேகத்தால் தடுத்தான். பின்பு குதிரைகளுக்கு வெயில் உறைக்காத இடமும் தண்ணீர் குடிக்க இடமும் வேண்டும் என்று பகவான் அர்ஜுனனுக்குச் சொல்ல அவன் உடனே அந்தக் கூட்டின் ஒரு ஓரத்தில் தனது பாணங்களால் ஒரு சிறிய பாணப்பந்தல் உண்டாக்கி, அதன் முன்பாகத் தனது பாணத்தால் ஒரு அழகிய தடாகத்தையும் ஏற்படுத்தினான். பகவான் உடனே குதிரைகளுக்குச் செய்யவேண்டிய காரியாதிகளைச் செய்து அவனைப் பாணப்பந்தலில் களைப்பாறும்படி விட்டுத் தாமும் ஓர்புறம் உட்கார்ந்தார். கௌரவஸேனை அர்ஜுனனது ஸாமர்த்தியத்தைக் கண்டு முதலில் வியந்து அசைவற்று நின்று பின்பு அவனை எதிர்த்தது. அவன் தரையில் நின்றபடியே தனது பாணவேகத்தால் அவர்களைக் கொஞ்சகாலம் தடுத்துக்கொண்டிருந்தான். அதற்குள் பகவான் குதிரைகள் களைப்பு நீங்கியதைக்கண்டு தேரைத் தயார் செய்ய அதில் ஏறிக்கொண்டு அர்ஜுனன் ஜயத்ரதனிருக்கும் இடத்தைநோக்கிப் புறப்பட்டான்.

வின 31:—இவ்வாறு அர்ஜுனன் புறப்பட்டுப் போகையில் என்ன நடந்தது?

விடை:—இவ்வாறு அர்ஜுனன் புறப்பட்டுப்போகையில் துரியோதனன் துரோணரால் போடப்பட்ட கவசத்துடன் மிகுந்த கர்வத்தோடு ஓடிவந்து சேர்ந்தான் அதற்குள் அர்ஜுனன் ஜயத்ரதன் இருக்கும் இடத்தருகில் வந்துவிட்டான். அப்பொழுது துரியோதனன் மிகுந்த கோபத்துடன் அர்ஜுனனைப் போருக்கு அழைக்க இருவருக்கும் கொடிய போர் உண்டாயிற்று. அதில் அர்ஜுனன் பாணங்கள் ஒன்றாவது துரியோதனன் மேல் தைத்துக் காயமுண்டாக்கவில்லை. இதன் காரணமும் அர்ஜுனனுக்குத் தெரியவந்தது. அப்பொழுது ஒரு திவ்ய மந்திரத்தை உச்சரித்து ஒரு அஸ்திரத்தைத் துரியோதனன்மீது விடவேண்டும் என்று அர்ஜுனன் அம்பை வில்லில் வைத்துவிட்டான். உடனே அதை அசுவத்தாமன் வெகு லகுவாய் வெட்டி விட்டான். அதை மறுபடியும் உபயோகிக்கக் கூடாதென்று அறிந்த அர்ஜுனன் அதைக் கீழே எறிந்துவிட்டான். அர்ஜுனன் அநேக பாணங்களால் துரியோதனனது ஸாரதி குதிரை முதலியவைகளைச் சின்னபின்னப்படுத்தி வெட்டிச் சாய்த்து அவனையும் மிகுந்த கஷ்டஸ்திதிக்குக் கொண்டுவந்து

விட்டான். அப்பொழுது அங்குத் துரோணரால் வைக்கப்பட்ட கௌரவசிரேஷ்டர்கள் அர்ஜுனனை வளைந்துகொண்டு பாணக் கூட்டங்களால் அவனை மறைத்தார்கள். அப்பொழுது பகவானுக்கு யாராவது ஒருவன் அர்ஜுனனுக்கு ஸஹாயமாக வர வேண்டுமென்று தோன்ற அவர் அர்ஜுனனை மிகுந்த ஜாக்ரதையாய் யுத்தம்செய்ய வேண்டும் என்று எச்சரிக்கை செய்துவிட்டுத் தமது பாஞ்சஜன்யத்தை எடுத்து உரக்க ஊதினார். உடனே அர்ஜுனனும் தனது சங்கத்தை ஊத, அங்கு இருந்தவர்களுக்குப் பிரமைஉண்டாயிற்று. உடனே பகவான் ஜயத்ரதனைக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் யுத்தவீரர்களருகில்தமது ரதத்தைக் கொண்டு போய்விட்டார். அங்குக் கொடியபோர் நடக்கத் தலைப்பட்டது.

வினா 32:—இவ்வாறு பகவானும், அர்ஜுனனும் ஊதிய சங்கின் சப்தம் கேட்குமுன் வெளியே பாண்டவர்கள் சண்டை எவ்வாறு நடந்து வந்தது? இது கேட்டதும் அங்கு இந்த விஷயமாய் என்ன ஏற்பாடு நடந்தது?

விடை:—ஜயத்ரதன் அருகில் சண்டை நடந்து வருகையில் வெளியில் துரோணர் தருமபுத்திரரை எதிர்த்து அவரை நிராயுதபாணியாக்கித் தேர்த்தட்டிலிருக்கும்படி செய்து அவரையும் சிறை பிடிக்கலாம் என்ற எண்ணத்துடன் அவரை நோக்கி ஓடிவந்தார். உடனே அவர் அருகிலிருந்த ஸஹதேவன் தேரில் ஏறக் குதிரைகள் பிச்சுக்கொண்டு ஓடித் தருமபுத்திரரைத் தகுந்த ஸமயத்தில் காப்பாற்றின. ஸாத்யகிக்கும் துரோணருக்கும் ஒரு பாகத்தில் அப்பொழுது யுத்தம் நடந்துகொண்டிருந்தது. அதே ஸமயத்தில் வேறொரு பாகத்தில் ரிசியசிங்கன் பிள்ளையாயும், இராவானைக் கொன்றவனுயும் உள்ள அலம்புஷன் முதலில் பீமனால் தோல்வியடைந்து பின்பு கடோத்கசனால் இறந்து விழுந்தான். இதற்குள் ஸாத்யகிக்கு அபாயநிலைவரத் திருஷ்டத்யும்னனை அவனுக்கு ஸஹாயமாகப் போகும்படி தருமபுத்திரர் அனுப்பினார். அப்பொழுது ஸாத்யகி துரோணரை விட்டுப் பிரிந்து வருகையில் தான், தருமபுத்திரர் காதில் பகவானது பாஞ்சஜன்யகோஷம விழுந்தது. உடனே அர்ஜுனனுக்கு ஏதோ அபாயம் வந்திருக்கவேண்டும் என்று தோன்ற அவர் அவன் ஸ்நேகிதனுயும் சிஷ்யனுயும் இருந்த ஸாத்யகியை, அந்த வ்யூஹத்தைப் பேதித்துக்கொண்டு அர்ஜுனனுக்கு ஸஹாய

மாகப் போகும்படி ஏவினர். அப்பொழுது அவன், 'பகவானது கிருபைக்கு ஆளாகிய அர்ஜுனனுக்கு ஒரு ஆபத்தும் வந்திராது. மேலும் உம்மைக் காப்பாற்றும்படி எனக்கு அவன் உத்தரவு கொடுத்திருக்கிறான். நான் எப்படி அவனது உத்தரவிற்கு விரோதமாய் உம்மைவிட்டுப்போவது' என்று சொல்ல 'எப்படியாவது போயே தீரவேண்டும்' என்று தருமபுத்திரர் அவனைக் கட்டாயப்படுத்தினர். இனிமேல் தான் போகாதிருந்தால் பயத்தால் போகாதிருந்தவன் என்ற கெட்டபெயர் தனக்கு வரும் என்று எண்ணி, ஸாத்யகி தருமபுத்திரரைப் பீமனது வசம் ஒப்புவித்துவிட்டு வ்யூகத்தைச் சிதற அடித்து அர்ஜுனன் இருக்குமிடம் போவது என்ற எண்ணத்துடன் புறப்பட்டான்.

வினு 33 :—ஸாத்யகி போகும்வழியில் எவ்வாறு யுத்தம் செய்து கொண்டு போனன்?

விடை :—வ்யூகத்தைச் சிதற அடித்துக்கொண்டு உள்ளே புகுந்ததும் துரோணர் ஸாத்யகியை எதிர்த்துவர, அவரை எவ்வாறு அன்று காலே அர்ஜுனன் ஒதுக்கிவிட்டுப் போனனே அவ்வாறே ஸாத்யகியும் ஒதுக்கிவிட்டுப்போனன். அதன்பின்பு கிருதவர்மாவைத் தோற்கடித்து ஜலாசந்தனைக் கொன்று மறுபடியும் தன்னை எதிர்த்துவந்த கிருதவர்மாவை ஸாத்யகி வென்றான். உடனே துரோணர் அவனைப் பின்னே இருந்து துரத்திவர அவரோடு வெகுகாலம் அவன் ஸமயுத்தம் செய்தான். அப்பொழுது தனது ஸாரதிக்கு மூர்ச்சை வர ஸாத்யகி ஸாரதி வேலையையும், வீரனது வேலையையும் வெகுலாஹவமாகக் கொஞ்சநாழிகை தானே பார்த்து வந்தான். அப்பொழுது அவன் துரோணரது ஸாரதியைக் கொன்றுவிட அவரது குதிரைகள் அடக்குவார் இன்றி அவரை இழுத்துக்கொண்டு ஓடிப் போயின. இதற்குப் பிற்பாடு ஸாத்யகி உள்ளே போய்க்கொண்டிருக்கையில் அவனை எதிர்த்துவந்த ஸுதர்சனன் என்பவனது தலையை வெட்டி எறிந்தான். போகும்வழியில் ஸாத்யகி கொடிய போர்செய்துகொண்டிருந்த யவ்வன ஸேனைகளைச் சின்னபின்னப் படுத்த அவனைத் துரியோதனனும் துச்சாஸனனும் மற்றையக் கௌரவர்களும் எதிர்த்துவந்தார்கள். ஸாத்யகி அவர்கள் அவ்வளவு பேர்களையும் தான் ஒருவனுகவே தடுத்தான். அவர்களது ஸேனையை ஸாத்யகி சின்னபின்னப்

படுத்தியதும், துரியோதனன் அவனது யுத்தவெறியைத் தாங்க முடியாது யுத்தகளம் விட்டுப் போகும்படி நேரிட்டது. உடனே அவனை எதிர்த்து வந்த மலைப்பிரதேச ராஜாக்களின் கதியும் அவ்வாறே யாயிற்று மறுபடி துச்சாஸனன் எதிர்த்து வர, ஸாத்யகி அவனது வில்லை ஒடித்துவிட்டுத் தன் காரியத்தில் கண்ணாகப் புறப்பட்டான்.

வினா 34:—இவ்வாறு ஸாத்யகி வெகு உத்ஸாகத்தோடு அர்ஜுனனை நோக்கிப் போகையில் வ்யூஹத்துவாரத்தில் என்ன நடந்தது? அவன் போனவிடத்தில் என்ன நடந்தது?

விடை:—துச்சாஸனன் ஸாத்யகிபால் தோல்வியடைந்து யுத்தகளம் விட்டு ஓடிவருகையில் வ்யூஹத்துவாரத்தில் கொடிய போர் செய்துகொண்டிருந்த துரோணரிடம் வந்தான். அவன் முன் பாண்டவர்கள் விஷயத்தில் செய்த காரியங்களுக்காகத் துரோணர் வாயில் வந்தபடி அவனை வைது, 'நீ இவ்வாறு ஓடுவது நிச்சயமாகில் தருமபுத்திரருக்கு இராஜ்யத்தைக்கொடுத்து ஸமாதானம் செய்துகொள்; இல்லாவிடில் நீ சண்டைக்குப் போகவேண்டும். நீ ஓடத்தலைப்பட்டால் ஸேனை சிதறி ஓடத் தொடங்கும். பின்பு என்பேரில் குற்றம் கூறுவதிற் பிரயோஜனமில்லை,' என்று சொல்லி அவனைச் சண்டை செய்ய அனுப்பிவிட்டார். இதன்பின் துரோணர் பாண்டவ ஸேனையைத் தடுத்துச் சின்னபின்னமாக்கத் தொடங்கினர். அப்பொழுது தம்மை எதிர்த்துவந்த திருஷ்டத்யும்னனை மிகுந்த கஷ்டத்தின் பேரில் தோல்வி அடையும்படி செய்து, அவனிடமிருந்து அவர் அன்று தப்பிவித்துக்கொண்டு உயிரோடு வெளிவந்தார். இதற்குள் துச்சாஸனன் ஸாத்யகியை மறுபடியும் வந்து எதிர்த்து மறுபடியும் தோல்வி அடைந்தான்.

வினா 35:—மிகுந்த உத்ஸாகத்தோடு துரோணர் பாண்டவ ஸேனையை மாய்த்து வருகையில் தருமபுத்திரர் மனோநிலை எவ்வாறிருந்தது? அவர் அப்பொழுது என்ன செய்தார்?

விடை:— துரோணரால் பாண்டவர்கள் சின்னபின்னப்பட்டு வருங்கால் மிகுந்த துக்கத்தை அடைந்து சுற்றுமுற்றும் பார்க்கையில் தமது கண்ணுக்கு எட்டியவரையில் அர்ஜுனனையாவது, பகவானையாவது, ஸாத்யகியையாவது அவர் காணவில்லை. யுத்தம் அன்று எப்படி முடியுமோ என்ற கவலை அவர் மனதைக் கவர்ந்துகொள்ள, பீமனை அழைத்து அவர் வ்யூகத்தினுள்

புகுந்து உள்ளே சென்றவரது நிலைகளைத் தமக்குக் கூடிய சீக்கிரத்தில் தெரிவிக்கும்படி உத்தரவு செய்தார். அப்பொழுது பீமன் திருஷ்டத்யும்னனைத் தருமபுத்திரருக்குக் காவலாக இருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு வ்யூகத்தை நோக்கிப் புறப்பட்டான்.

வினா 36:—வ்யூகத்துள் பீமன் எவ்வாறு சென்று தருமபுத்திரருக்கு ஸங்கதியைத் தெரிவித்து அவரைத் திருப்திப்படுத்தினான்?

விடை:—பீமனை, துரியோதனன் துரோணர் முதலியோர் தம்மாலியன்றமட்டும் வ்யூகத்துவாரத்தில் தடுத்தபோதிலும் அவன் தருமபுத்திரரால் அடிக்கடித் தூண்டப்பட்டு யுத்த ஆவேசம் கொண்டு அநேக அரசர்களை வெட்டிச் சாய்த்துக்கொண்டு உள்ளே புகுந்து விட்டான். தருமபுத்திரரது வார்த்தையை மனதில் ஸதா எண்ணிக்கொண்ட பீமன் உள்ளேபோய்க்கொண்டிருக்கையில் அர்ஜுனன், பகவான், ஸாத்யகி ஆகிய இவர்களை அவன் வெகுதூரத்தில் கண்டான். உடனே அவர்கள் காதில் நன்றாய்ப் படும்படி இவன் அட்டஹாஸம் செய்ய அவர்களும் மிகுந்த உத்ஸாஹத்தோடு அட்டஹாஸம் செய்தனர். இந்தச் சப்தங்கள் எல்லாம் வ்யூஹத்தின் வெளியிலிருந்த தருமபுத்திரர் காதில் பட அவர் பீமனது புத்திசாதுரியத்தை மெச்சி அர்ஜுனன் முதலியோர் விஷயத்திலிருந்த கவலைகள் எல்லாம் நீங்கி ஸுகமாக இருந்தார்.

வினா 37:—இதன் பின்பு பீமன் யாரோடு அடிக்கடிச் சண்டைசெய்து எவ்வெந்நிலையை அடைந்தான்?

விடை:—இவ்வாறு பீமன் செய்த அட்டஹாஸத்தைக் கர்ணன் கேட்டு அவனோடு சண்டைக்கு வந்தான். அப்பொழுது நடந்த சண்டையில் பீமன் கர்ணனது தேர் குதிரைகள் முதலியவைகளைக்கொன்று அவனைச் செயலற்றிருக்கும்படி செய்து அட்டஹாஸம் செய்தான். இதைக் கேட்டுத் தருமபுத்திரர் கர்ணன் தோல்வி அடைந்தானென்று அறிந்து மகிழ்ந்தார். அப்பொழுது அர்ஜுனன் இருக்கும் இடம் போய்ச் சேரவேண்டுமென்று பீமன்மிகுந்த ஆவலோடு போய்க்கொண்டிருக்கையில் கர்ணன் மறுபடியும் வந்து அவனை வலியச் சண்டைக்கு அழைத்தான். பீமன் உடனே மிகுந்த கோபத்தோடு கர்ணனுடன் சண்டையிடத் தொடங்கிவிட்டான். இந்தச் சண்டையில் பீமனுக்குக்

கொடிய அடிகள் பட்டபோதிலும் அவன் அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் கர்ணனைத் தனது பாணங்களால் வெலுவெலுக்க அடிக்க அவன் அடி பொறுக்கமாட்டாமல் யுத்தகளத்தில் வேறு ஒரு பாகத்திற்குச் சண்டைசெய்ய ஓடிப்போனான். இவ்வாறு போன கர்ணன் போனபடியே போய்விடாமல் வேறோர் இரதத்தில் ஏறிக்கொண்டு பீமனை மறுபடியும் எதிர்த்துச் சண்டைக்கு வந்தான். இருவருக்கும் வெகுகாலம் கோரயுத்தம் நடந்தது. கர்ணனுக்கு இந்த யுத்தத்தில் எவ்வளவு தாழ்ந்த ஸ்திதி வந்தபோதிலும், பீமனை அவன் விடவே யில்லை. கர்ணன் படுங்கஷ்டத்தை நோக்கித் துரியோதனன் தனது தம்பிகளுள் ஒருவனை அவனுக்கு ஸஹாயமாக அனுப்பினான். அவனை எளிதில் பீமன் கொன்று சாய்த்துவிட்டு, கர்ணனை யுத்தகளத்தைவிட்டு ஓடிப்போகும்படி செய்துவிட்டான்.

வினா 38:—இவ்வாறு அடிக்கடிக் கர்ணன் வ்யூஹத்துள் தோல்வியடைந்து கொண்டிருக்கையில் வ்யூஹத்துவாரத்தில் என்ன நடந்தது?

விடை:—பீமனை இவ்வாறு உள்ளே விட்டு விட்டதற்காகத் துரோணரைத் துரியோதனன் கடிந்துகொண்டு வ்யூஹத்துவாரத்தில் மிகுந்த வருத்தத்தை அடைந்தான். அப்பொழுது துரியோதனன் அவரை மேல் என்ன செய்யவேண்டியது என்று கேட்க அவர், 'நமது வ்யூஹத்துள் மூன்று முதன்மையான பாண்டவ வீரர்கள் புகுந்து விட்டார்கள். இப்பொழுது ஜயத்ரதனை நாம் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டியது. ஆகையால் நீ அவன் இருக்கும் இடம் போய்ச் சண்டை செய், நான் வ்யூஹத்துவாரத்தில் பாண்டவ ஸ்ருஞ்ஜயர்களைத் தடுத்து யுத்தம் செய்து கொண்டிருக்கிறேன்' என்றார். உடனே துரியோதனன் அர்ஜுனன் முதலியோர் இருக்கும் இடம் சென்று கோரயுத்தம் செய்யத் தொடங்கினான்.

வினா 39.—இவ்வாறு துரியோதனன் சென்றதும் பீமனோடு யார் யார் சண்டைக்கு வந்தனர்? அந்தச் சண்டைகள் யாவும் எவ்வாறு முடிவுபெற்றன?

விடை:—கர்ணன் தோல்வியடைந்து ஓடிப்போனதும் துரியோதனனது தம்பிமார் ஐந்துபேர் அவனை எதிர்க்க அவன் அவர்களை, கொல்ல யத்தனித்தான். அப்பொழுது கர்ணன் மறுபடியும் அவனோடு சண்டைக்கு வந்தான். கர்ணனைத் தடுத்துக்கொண்டு

துரியோதனன் தம்பிகள் ஐந்துபேர்களையும் வெகு லகுவாய் பீமன் வெட்டிச் சாய்த்தான். இந்தக் காரணத்தால் கர்ணனுக்கும் பீமனுக்கும் கொடிய போர் உண்டாயிற்று. இதில் கர்ணன் களைத்துத் திரும்ப யத்தனிக்கையில் துரியோதனன் உத்தரவின்படி அவன் தம்பிகளுள் வேறு எட்டுப்பெயர்கள் கர்ணனுக்கு ஸஹாயமாக வந்தனர். அவர்கள் வந்து சேருவதற்கு முன்னமே அவர்களைப் பீமன் ஒரே பாணத்தால் கொன்றுவிட்டான். பீமன் துரியோதனன் தம்பிகளைக் கொல்லக் கொல்லக் கர்ணனுக்கு யுத்த ஆவேசம் அதிகரித்தது. அவன் வெறிபிடித்தவன்போல் சண்டையிடத் தொடங்கினன். என்ன செய்தும் அவன் பீமனாலேயே தோல்வியடையும்படி நேரிட்டது. அப்பொழுது இருபக்கத்தாரும் பீமனது பராக்கிரமத்தைப் புகழ்ந்து பேசி அட்டஹாஸம் செய்தனர். இதைக் கேட்ட துரியோதனன் தனது தம்பிகளுள் விகர்ணன் உள்பட ஏழு பேர்களைக் கர்ணனுக்கு ஸஹாயமாக அனுப்ப அவர்களையும் பீமன் கொன்றுவிட்டான்.

வின 10;—இவ்வேழுபேரைக் கொன்றதும் பீமன் நிலை என்னமாக இருந்தது? ஏன்? பின்பு அவன் செய்த யுத்தத்தின் விவரம் என்ன?

விடை:—விகர்ணன் மாண்டு விழுந்ததும் பீமனுக்கு அவன் இறந்த விஷயத்தில் மிகுந்த துக்கமுண்டாயிற்று. விகர்ணன் ஸதா நியாயப்படியே நடப்பவன். 100 ஸஹோதரருள் அவன் தர்மாத்மா. அவன் எப்பொழுதும் தர்மபுத்திரருக்கு நன்மையையே கருதுபவன். அவன் மாண்டு விழுந்ததும், 'நான் உங்கள் நூறு பேர்களையும் கொன்றுவிடுகிறேன் என்று செய்த பழும் பிரதிக்ஞை நிறைவேற்றுவதற்காகவே இவ்வாறு தர்மாத்மாவான உன்னைக் கொல்லவேண்டி வந்தது! என்ன செய்வேன்!' என்று வெகுவாகப் பீமன் துக்கித்துவிட்டுத் தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு கர்ணனேடு மறுபடியும் சண்டை செய்யத்தொடங்கினன். இருவரும் வெகுகாலம் ஸமயுத்தம் செய்தனர். முடிவில் பீமனுக்கு யுத்தத்தில் அடி அதிகமாகப்பட அவன் கோபத்தால் கர்ணனைக் கொல்ல எண்ணினன். உடனே அர்ஜுனன் கர்ணனைக் கொல்லுவதாகச் செய்த பிரதிஞ்ஞை ஞாபகம் வர அவ்வாறு அவனல் செய்ய முடியவில்லை. இவ்வாறு தத்தளித்துக்கொண்டிருந்த பீமனை மர்மஸ்தானங்களில் கர்ணன் மேல்

மேலும் அடிக்க அவனுக்குக் களைப்புவந்தது. இந்தத் தருணம் பார்த்துக்கொண்டிருந்த கர்ணன் தனது வில் நுனியால் அவனைக் குத்திப் பரிஹாஸம் மாத்திரம் செய்து விட்டானே ஒழிய அவனைக் கொல்லவில்லை, ஏனெனில் அர்ஜுனனைத்தவிர மற்றையப் பாண்டவர்களைக் கொல்லுவதில்லை என்று கர்ணன் முன்னமேயே குந்திக்கு வாக்குக் கொடுத்திருந்தான். (உத்தியோகபர்வம், பக்கம் 217, வி௵ 65-ஐ பார்க்க) பீமனும் கர்ணனை அப்பொழுது நன்றாக அடித்துப் பரிஹாஸம் செய்தான். இவ்வாறு இருவரும் யுத்தகளத்தில் சொற்சண்டை யிட்டுக் கொண்டிருக்கையில் அர்ஜுனன் ஓடிவந்து கர்ணனை ஓட்ட யத்தனித்தான். அப்பொழுது அசுவத்தாமன் கர்ணனுக்கு ஸஹாயமாக அங்குவர கொடியபோர் அங்கு உண்டாயிற்று.

வி௵ 41:—இதற்குள் பீமனுக்கு முன்பு புறப்பட்ட ஸாத்யகி கதி எவ்வாறாயிற்று? அப்பொழுது அர்ஜுனன் மனோநிலை எவ்வாறிருந்தது?

விடை:—ஸாத்யகி வெகு கோரமாக யுத்தம் செய்துகொண்டு மெதுவாக மிகுந்த கஷ்டத்தின்பேரில் அர்ஜுனனை நோக்கி வந்து கொண்டிருந்தான். அப்பொழுது அவன், அவன் ஸாரதி குதிரைகள் முதலியன எல்லாம் சோர்ந்த நிலையை அடைந்திருப்பதைக் கண்ட கிருஷ்ணார்ஜுனனுக்கு மிகுந்த மனஸ்தாபம் வந்து விட்டது. 'ஸாத்யகி இவ்வளவு தூரம் வந்து விட்டானே! இனிமேல் அவனால் வரமுடியுமோ இல்லையோ? நான் அவனை அவசியம் காப்பாற்ற வேண்டியது. ஸூர்யனோ அஸ்தமிக்கக் கொஞ்ச காலம்தான் இருக்கிறது. இதற்குள் நான் ஜயத்ரதனையும் கொல்லவேண்டுமே! மேலும் ஸாத்யகி யுதிஷ்டிரரைத் தனிமையாய் விட்டு வந்து விட்டேனே! துரோணர் தருமபுத்திரரை என்னென்ன செய்துவிட்டாரோ? இவ்விதமான குழப்பங்கள் அப்பொழுது அர்ஜுனன் மனதில் உண்டாயின.

வி௵ 42:—அப்பொழுது ஸாத்யகிக்கு என்ன ஆபத்து வந்தது? அது யாரால் எவ்வாறு நீங்கியது? பின்பு ஸாத்யகி என்ன செய்தான்?

விடை:—இவ்வாறிருக்கையில் ஸாத்யகியை எதிர்த்துச் சண்டையிடவேண்டும் என்ற எண்ணத்துடன் சோமதத்தனது பிள்ளையாகிய பூரிச்ரவஸ் என்பவன் வந்தான். இவ்விருவருக்குப் கொடிய யுத்தம் நடந்துகொண்டு வருகையில் ஸாத்யகியின்

ரதம குதிரை முதலியவைகள் சின்னாபின்னமாக அவன் தரை யில் நிற்கவேண்டி வந்தது. அப்பொழுது வெகு நாழிகைவரை யில் யுத்தஞ்செய்துகொண்டிருந்ததால் களைப்பு மேலிட ஸாத் யகிதயங்கி நின்றான். பூரிச்ரவஸ் அவனைத் தன்கத்தியால் அடித் துத தள்ளி யுத்தகளத்தில் கொஞ்சதூரம் இழுத்துச்சென்றான். இவ்வாறு ஸாதயகி படும் துயரைக் கண்ட அர்ஜுனன் சில கூரிய பாணங்களை விட்டுப் பூரிச்ரவஸின் கையை அறுத்துத் தள்ள, அவனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. வாலி இரா மரைப் பழித்தது போல அவன் அர்ஜுனனை அதர்ம யுத்தம் செய்ததாகப் பழித்தான். அர்ஜுனன் தான செய்தது கௌர வர்கள் அபிமன்யுவைக் கொன்றதுபோன்ற அநியாயமன்று என்றும், பலர் கூடி யுத்தம் செய்கையில் இவ்வாறுதான் அடிக் கடி நடக்கும என்றும் சொல்லித் தன் நடததையை ஒருவாறு நியாயம் என்று ஸ்தாபிதது விட்டான். அப்பொழுது பூரிச்ர வஸ் ஒருவாறு திருப்தியடைந்து தன்மனதை அடக்கிக் கொண்டு பரமபதம் அடைய விரும்பி நிஷ்டையில் அநத யுத்த களத்தின மத்தியில் உட்கார்நதான். விடுபட்ட ஸாத்யகி கோபா வேசத்தால் தன் கத்தியை உருவி பகவான், அர்ஜுனன் முத லியோர் தடுத்ததையும் கவனியாது சண்டையிடாது நிராயுத பாணியாக இருநத பூரிச்ரவஸின் கழுத்தைவெட்டி எறிந்து நியாயவிரோதமாக அவனைக் கொன்றான்.

வின 43 :—இவ்வாறு பூரிச்ரவஸ் இறந்தபின்னர் யுத்தம் எவ்வாறு நடந்துவந்தது ?

விடை :--இதன்பின்பு தன் ரதத்தைக் கூடியசீக்கிரத்தில், ஜயத்ரதன் இருக்கும் இடத்திற்குக் கொண்டுபோகும்படி அர்ஜுனன் பக வானைக் கேட்டுக்கொண்டான். உடனே அர்ஜுனன், ஜயத் ரதன் இருக்குமிடம் சென்று அவனைக் கொன்றுவிடவேண்டும் என்ற ஆவலோடு அவனை ஏர இறங்கபபார்த்து அவனோடும் அவனைச் சுற்றி இருந்தவர்களோடும் சண்டையிட தொடங்கி னான். இந்த தருணத்தில் துரியோதனன் கர்ணனை அர்ஜுன னோடு யுத்தம் செய்ய அனுப்ப, இருவருக்கும் பெரும்போர் உண்டாயிற்று. அசுவத்தாமனும், கிருபரும் சல்லியனும் அப் பொழுது அர்ஜுனனை எதிர்த்தார்கள். பீமஸேனனும் ஸாத் யகியும் அர்ஜுனனுக்கு ஸஹாயமாக வந்து போர் செய்யத் தொடங்கினர். அப்பொழுது நடந்த யுத்தத்தில் அர்ஜுனனுக்

கும், பகவானுக்கும் அடி அதிகமாக விழுந்தது, கர்ணனுக்கும் களைப்பு உண்டாயிற்று. மற்றைய வீரர்களுக்கும் தேகம் தளர்ந்து விட்டது. இனிமேல் ஜயத்ரதனை அர்ஜுனன் கொன்று விடுவான் என்று எல்லாருக்கும் தோன்றியது. இவ்வாறு யுத்தம் நடந்துவருகையில் ஸூர்யன் ஒரு நாழிகைக்குள் அஸ்தமிக்கும் தருணமாக இருந்தான்.

வி 44 :—இந்தத்தருணத்தில் பகவான் அர்ஜுனனது காரியத்தை முடித்துவைப்பதற்கு என்ன ஏற்பாடு செய்தார்? அதனுல் மேல் என்ன நடந்தது?

விடை :—அப்பொழுது அந்த ஸாயங்கால ஸமயத்தில் பகவான் அர்ஜுனனிடம் தாம் செய்யப்போகிற தந்திரத்தைச்சொல்லி விட்டு தமது யோகமாயையால் ஸூர்யனை மறைத்து விட்டார். உடனே யுத்தகளத்திலிருந்தவர்கள் எல்லாருக்கும் ஸூர்யன் அஸ்தமித்ததாகத் தோன்ற ஜயத்ரதனுக்கு தைரியம் உண்டாயிற்று. அப்பொழுது அவனைக் காப்பாற்றி நின்றவர்களுக்கும் கொஞ்சம் தைரியமுண்டாக அவர்கள் அசிரத்தையாய் இருந்தனர். அவர்களுள் அதனுல் குழப்பமுண்டாயிற்று. இந்தத்தருணத்தில் பகவான் ஜயத்ரதனை அடிக்கும்படி அர்ஜுனனுக்கு ஜாடைகாட்ட, அவரது தந்திரத்தை அறிந்த அர்ஜுனன் யுத்தத்தை தொடங்கி அசுவத்தாமன் முதலியோரைச் சிதறிஓடும்படிசெய்து முடிவில் ஜயத்ரதன் முன்பு வந்து நின்று, அவன் தலையை வெட்டி விடவேண்டும் என்ற எண்ணத்துடன் தன் கையில் ஒரு திவ்ய அஸ்திரத்தை எடுத்தான்.

வி 45 :—இந்த ஸமயத்தில் பகவான் அர்ஜுனனுக்கு என்ன உபாயம் சொல்லிக் கொடுத்தார்? மேல் என்ன நடந்தது?

விடை :—அப்பொழுது பகவான் அர்ஜுனனை நோக்கி, ‘நீ முதல் பாணத்தின்மேல் தொடர்ச்சியாய் பாணங்களைவிட்டு ஜயத்ரதன் தலை கீழே விழாதபடி அதை குருக்ஷேத்திர எல்லைக்கு வெளியில் கொண்டுபோய் அங்கு இப்பொழுது ஸந்த்யாவந்தன ஜபம் செய்துகொண்டிருக்கிற விருத்தக்ஷத்ரன் என்ற ஜயத்ரதன் தகப்பன் மடியில் போட்டுவிடு’ என்று எச்சரிக்கை செய்தார். அதன்படியே அர்ஜுனன் மிகுந்த லாஹவமாக ஜயத்ரதன்தலையை கொய்துகொண்டுபோய் அவன் தகப்பன் மடியில் போட்டு விட்டான். அப்பொழுது யுத்தகளத்தில் இருந்தவர்கள் யாவரும் அர்ஜுனன் அதர்மயுத்தம் செய்துவிட்டான்

என்று கூக்குரலிட பகவான் தமது மாயையை எடுத்துவிட்டார். உடனே யாவரும் ஸூர்யன் அஸ்தமனமாகும் ஸமயத்தில் இருந்ததைக் கண்டு வியந்தனர்.

வின 46 :—ஏன் பகவான் அர்ஜுனனை இவ்வாறு செய்யச் சொன்னார்? பின்பு விருத்தக்ஷத்ரர் கதி என்னமாயிற்று?

விடை:—ஜயத்ரதன் விருத்தக்ஷத்ரனுக்கு வெகுநாள் கழித்துப் பிறந்த அருமையான பிள்ளை. அவன் பிறந்ததும் ஒரு அசரீர வாக்கு, 'உன்பிள்ளை நல்ல பலவானவான். ஆனால் யுத்தகளத்தில் ஒரு பிரஸித்தியான புருஷனால் கோபவேளையில் தலையறுபட்டு இறக்கப்போகிறான்' என்று கூறியது. அப்பொழுது விருத்தக்ஷத்ரன் பெரியோரைக்கூட்டி அவர் மத்தியில், 'என் பிள்ளை தலையை யார் கீழே தள்ளுகிறார்களோ அவர்கள் தலை ஆயிரம் சுக்கலாக வெடித்துப்போகட்டும்,' என்று தன் பிள்ளைக்கு ஆசீர்வாதம் செய்து, இராஜ்யத்தை அவனிடம் ஒப்பிவித்துவிட்டு அவன் காடுசென்றான். ஆகையால்தான் அர்ஜுனனைக் காப்பதற்காக பகவான் அவனுக்கு முற்கூறிய உபாயம் சொல்லிக்கொடுக்க, அவன் மரணத்தின் வாயிலிருந்து தப்பினான். தலைவந்தது அறியாது விருத்தக்ஷத்ரன் ஜபம் முடிந்த உடன் எழுந்து விட்டான். உடனே தலை அவன் மடியிலிருந்து பூமியில் விழ, அவன் ஆசீர்வாதத்தின் முடிவு அவனுக்கே வந்துவிட்டது. அதன் தலை ஆயிரம் துண்டாக வெடிக்க அவன் இறந்தான். இவ்வாறு பகவான் கேட்டவன் கோடுத்த சாபத்தை அவன் மேலேயே திருப்பிவிட்டார்.

வின 47 :—இவ்வாறு ஜயத்ரதன் இறந்த பின்பு யுத்தகளத்தில் என்ன நடந்தது?

விடை:—ஜயத்ரதன் இறந்ததும் துரோணரும் கிருபரும் அர்ஜுனனை எதிர்த்துவர அவர்களோடு சண்டையிட மனம் வாரதவனாய் எவ்வளவோ அர்ஜுனன் ஒதுங்கிப்பார்த்தான். அப்பொழுது அவர்கள் அவனோடு வலுவில் சண்டைக்குவந்து பெரிய சண்டையை உண்டாக்கினர். அதில் அர்ஜுனன் கிருபருக்கு மூர்ச்சை வரும்படி செய்துவிட்டான். உடனே அவனுக்குதான் செய்தது மஹாபாபம் என்ற எண்ணம் உண்டாக அவன் மனம் தவிக்கத் தொடங்கியது. இதற்குள் கர்ணன் ஸாத்யகியை எதிர்த்து வருவதை அவன் காண அவனுக்கு யுத்தாவேசம் வந்து கர்ணனை கொல்லவேண்டும் என்ற வீர்யம் உண்டாயிற்று.

பகவான் கர்ணனிடத்தில் இந்திர சக்தி ஆயுதம் இருக்கிறது என்றும், அதனால் அவனை எதிர்ப்பதற்கு தக்க ஸமயம் அதுவல்ல என்றும் சொல்லி அர்ஜுனனைத்தடுத்து விட்டார். அப்பொழுது ஸாத்யகிக்கும் கர்ணனுக்கும் கொடிய போர் உண்டாக அதில் ஸாத்யகிக்கு ஜயம்வந்தது. இதற்குள் அர்ஜுனனிடம் பீமன் தான் கர்ணனால் அன்று அடைந்த அவமானத்தை எடுத்துரைத்து, தன்னாலும் கர்ணனுக்கு ஏதாவது அவமானம் வருவதற்கு இடங்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். உடனே எல்லோரும் திரும்பி தருமபுத்திரரை நோக்கிப் புறப்பட்டுவரும் வழியில், அர்ஜுனன் கர்ணனைக் கண்டு அவன் பீமனை வைததற்காக அவனைக்கூடிய சீக்கிரத்தில் கொல்லுவதாகச் சபதம் கூறிவிட்டுப் போகையில் ஸூர்யன் அஸ்தமனமானான். போகும்வழியில் பகவான் அர்ஜுனனை தைரியப்படுத்திக்கொண்டும் மெச்சிக்கொண்டும், அன்று அவனால் மாண்டு சின்னாபின்னமாக கிடக்கும் யுத்தகளத்தைக் காட்டிக்கொண்டும் வந்து தருமபுத்திரரிடம் ஜயத்ரதவத ஸமாசாரத்தைச் சொன்னார். அப்பொழுது யுதிஷ்டிரர் பகவானைப் பலவாராகத்துதித்துத் தமது ஸந்தோஷத்தை வெளியிட்டார்.

வினா 48 :—இவ்வாறு பாண்டவர்கள் மிகுந்த கோலாஹலமாக இருக்கையில் துரியோதனாதியர்கள் பக்கத்தின் நிலைமை எவ்வாறிருந்தது ? இதனால் என்ன பிரமாதம் விளைந்தது ?

விடை :—இவ்வாறு ஜயத்ரதன் இறந்த பின்பு அர்ஜுனன் முதலியோர் தமது படைவீட்டை நோக்கிப் புறப்பட யத்தனிக்கையில் துரியோதனன் துரோணரிடம் தனது நிலைமை எண்ணி எண்ணிப் பரிதவிக்கலாயினன். 'ஓ ஆசாரியரே நான் உம்மை நம்பியே இவ்வரசர்களை என்பக்கத்தில் இருந்து போர்செய்யும்படி ஏவினேன். இப்பொழுது உம்மால் அவர்களைக் கொன்ற மஹாபாபம் எனக்கு வந்துவிட்டதே! நான் நம்பியிருந்த பீஷ்மரும் தாமாகவே மரணத்தை வருவித்துக் கொண்டார் என்றே நான் எண்ணுகிறேன். நீரும் மிகுந்த அச்ரத்தையாக யுத்தஞ்செய்து வருகிறீரே! இவ்வாறு இருந்தால் நான் பிழைப்பது எப்படி ? எனக்காக உம்மை நம்பி இருந்த ஜயத்ரதனை இவ்வாறு இரைகொடுத்துவிட்டீரே! இவ்வாறு எனக்கு வேண்டியவர்களைப் பலிகொடுத்த பின்பு, எனக்கு இவ்வுலகில் இருக்கப் பிரியம் இல்லை. ஆகையால் நான்

தற்கொலை செய்து கொள்ளுகிறேன். எனக்கு அனுமதிகொடும் பாண்டவகுருவே!' என்று துரியோதனன் முறையிட்டு அலறினான். இதைக்கண்டு துரியோதனன் ஸேனை முழுவதும் தவிக்கத் தொடங்கியது. இதைக்கண்டு துரோணர், 'நான் முன்னமேயே சொல்லவில்லையா? நீசிரித்துக்கொண்டே முன்பு சூதாடிப் பாண்டவர்களை மானபங்கப் படுத்தினாய்! அவைகளின் பலன்களை நீ இப்பொழுது அழுது கொண்டேதான் அனுபவிக்கவேண்டும்! அர்ஜுனனை வெல்லுவது அஸாத்யம் என்று நாங்களும் உனக்கு எவ்வளவோ தரம் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோலச் சொல்லி இருக்கிறோம். நீயும் முன்னமேயே அர்ஜுனனது பலத்தை அறிந்திருக்கிறாய். ஆகையால் இன்று நாம் தோல்வி யடைந்தது என்சிரத்தைக் குறைவாலல்ல அர்ஜுனனது பலவிசேஷத்தால்தான். இன்று நமது மத்தியிலிருந்து அர்ஜுனன் ஜயத்ரதனைக் கொன்ற பராக்கிரமத்தைப்பார்த்தால் நான் கிருபர் முதலியோர் பிழைத்ததே புனர் ஜன்மம் என்று எனக்குத் தோற்றுகிறது! நீ வீணாக எங்கள்மேல் குற்றங் கூறுவது நியாயம் அன்று. உனது மனக்குறையை நீக்குவதற்காகவே இன்று இரவிலும் என்னால் கூடியமட்டும் நான் யுத்தத்தை நடத்துகிறேன். என் சிரத்தையை நீயே பார்த்துத் தெரிந்துகொள்' என்று சொல்லி யுத்தத்தை மறுபடியும் தொடங்கும்படி உத்தரவு செய்தார். அப்பொழுது துரியோதனன் கர்ணனிடம் துரோணரைப்பற்றி முறையிட கர்ணன் அவர் மனதாரச் சண்டையிட்டார் என்ற விஷயம் அவன் மனதில் பதியும்படி செய்தான். கௌரவ ஸேனையெல்லாம் படைவீட்டிற்கு புறப்படும் தருணமாயிருந்த பாண்டவஸேனை முன் வந்து நிற்க பதினான்காம் நாள் இரவில் யுத்தம் வெகு கோரமாகத்தொடங்கியது.

வினா 19:—அன்றிரவில் யுத்தம் முதலில் எவ்வாறு நடந்து வந்தது?

விடை:—அன்று ஸூர்யன் அஸ்தமனமாகி இருள் மூடிக்கொண்டு வருகையில் துரியோதனன் மிகுந்த ஆவேசத்தோடு பாண்டவ ஸேனையைத்தாக்க அவனை அப்பொழுது ஒருவராலும் தடுக்க முடியவில்லை. அப்பொழுது தருமபுத்திரர் அவன்வில்லையொடித்து அவனுக்கு மயக்கம் வரும்படி செய்தார். இதற்குள் அர்ஜுனனும் ஸாத்யகியும் சேர்ந்து துரோணரை எதிர்த்தனர். அப்பொழுது அவர் பேய் பிடித்தவர்போல சண்டையிட்டு பாண்

டவஸேனையை சின்னாபின்ன மாக்கினர். அப்பொழுது பீம னுக்கும் கர்ணனுக்கும் கொடியபோர் உண்டாக இருவரும் கொஞ்சநாழிகை ஸமயுத்தம் செய்துவிட்டு யுத்தகளத்தில் வெவ்வேறு இடத்தை நோக்கிப்போயினர். அப்பொழுது துரி யோதனனுடைய தம்பிமார் இருவர் பீமனை எதிர்த்து அவனால் கூடிய சீக்கிரத்தில் கர்ணன் முதலிய கௌரவவீரர்கள் முன்னிலை யிலே கதியறறு மாண்டனர். இதன்பின் பூரிச்ரவஸின் தகப்ப னாகிய ஸோமதத்தனுக்கும் ஸாத்யகிக்கும் போர் உண்டாக அதில் சாத்யகி அவனை மூர்ச்சை அடையும்படி செய்தான். இவ்வாறு அநேகவிதமாக யுத்தம் நடந்து வருகையில் கடோத் கசன் அசுவத்தாமனிடம் வந்து தனது மாயைகள் மூலமாகக் கொடிய யுத்தஞ்செய்யத் தொடங்கினான். அம்மாயைகளை அசுவத்தாமன் சிதற அடிக்க இருவருக்கும் வெகுகாலம் சண் டை நடந்தது. இவைகளைக்கண்டு கர்ணன் முதலியோர் கிட்டே வர முடியாது பயந்தோடினர். கடோத்கசன் தனக்குத் தெரி ந்த மாயா விதனைகளை எல்லாம் அன்று காட்டி கௌரவ ஸேனையைச் சிதற அடித்தான். இவைகளைக்கண்ட துரியோ தனன் அசுவத்தாமனிடஞ் சென்று முறையிட்டுக்கொள்ள அவர்கள் இருவருக்கும் பெரும்போர் உண்டாயிற்று இந்த யுத்தததில் இருபக்கத்திலும் அநேகர் மாண்டு விழுந்தனர். இதன் முடிவில் அசுவத்தாமனது பாணத்தால் கடோத்கசன் மூர்ச்சை அடைந்துவிழ திருஷ்டத்யும்னன் அவனை வேறோர் ரதத்தில் வைத்துக்கொண்டு வெளியே கொண்டுவந்து விட் டான். இவ்வாறிருக்கையில் யுதிஷ்டிரருக்கும், துரோணருக் கும் கொஞ்சகாலம் யுத்தகளத்தின் வேறோர் பாகத்தில் பெரிய சண்டை நடந்து கொண்டிருந்தது. துரோணரால் முடிவுவரை யில் தருமபுத்திரரை அசைக்கவே முடியாமற் போயிற்று.

வினா 50:—இவ்வாறு சண்டை நடந்துவருகையில் துரியோதனாதியர் பக்கததில் என்ன குழப்பம், ஏன் உண்டாயிற்று ?

விடை:—இவ்வாறு பாண்டவர்கள் கையேறிக்கொண்டுவருகையில் துரி யோதனன் கர்ணனை நோக்கி 'இதுதான் தருணம், உனது பல விசேஷத்தைக்காட்டி எங்களைக் காப்பாற்று' என்று வேண் டிக் கொண்டான். அதற்கு அவன் அர்ஜுனனை பிரம்மதேவரே காப்பாற்றிக் கொண்டிருந்த போதிலும் தான் எப்படியாவது அவனைக் கொன்றுவிடுவதாகச் சபதங் கூறினான். கிருபர்

உடனே அவன் சொல்லுவது அஸாத்தியமான காரியம் என்று எல்லார் மனதிலும் பதியும்படி தகுந்த முகாந்திரங்கள் மூலமாக எடுத்துக்காட்டினார். அப்பொழுது கர்ணன், எவ்விஷயத்திலும் மன உறுதிமாத்திரம் ஒருவனுக்கு இருக்கும் ஆயின் அவன் எந்த அஸாத்யமான காரியத்தையும் ஸாதிப்பான்' என்று சொல்ல, கிருபர் எதிரிகளது பலத்தையும், அவர்கள் பக்கம் இருக்கும் நியாயத்தையும் எடுத்துக் காட்டி கர்ணன் சொல்லுவது பைத்தியக்காரனது புலப்பமே ஒழிய வேறில்லை என்று எடுத்துக் காட்டினார். அதற்குக் கர்ணன் தன்னிடத்தில் இந்திரன் கொடுத்த சக்தி இருக்கிறதாகவும் அதைக் கொண்டு தான் முதலில் அர்ஜுனனைக்கொன்று பின்பு அதன் மூலமாக எல்லாப் பாண்டவர்களையும் இறக்கும்படி செய்யப் போகிறதாகவும் பெருமைபேசி, கிருபர் பிராம்மணராய் இல்லாவிடில் அவ்வாறு பாண்டவர்களைப் புகழ்ந்துபேசி ஸேனையில் குழப்பத்தை உண்டாக்கியதற்கு அவரது நாக்கை தான் அறுத்திருக்கலாம் என்று அவரை இகழ்ந்து பேசினான். இவைகளைக் கேட்டிருந்த அசுவததாமனுக்கு மிகுந்த கோபம் வர 'பார் உன் தலையை வெட்டிவிடுகிறேன்!' என் அத்திம்பெயரை என் முன் இவ்வாறு இகழ்ந்து பேசுகிறாயா? குதிரைக்காரப்பயலே! என்றுஉறக்கக்கூவிக்கொண்டு கர்ணனது தலையை வெட்டுவதற்காகக் கத்தியை உறுவிக்கொண்டு அவன் அருகில் சென்றான். கர்ணனும் அவனோடு யுத்தத்திற்கு தயாரானான். உடனே அசுவத்தாமனுக்கு கோபம் தணிய 'அடே ஸாரதிபிள்ளாய்! உனது கர்வத்தை அர்ஜுனன் கூடிய சீக்கிரத்தில் அடக்குவான். பொருத்துக்கொள். நாங்கள் உன்னை மன்னித்திருக்கிறோம்' என்று சொன்னான். துரியோதனன் அப்பொழுது கர்ணன், கிருபர், அசுவத்தாமன் ஆகிய இவர்களை ஸமாதானப்படுத்த கிருபரும் கர்ணனை மன்னித்து விட்டார்.

வினு 51:—இவ்வாறு குழப்பம் அடங்கியதும் சண்டை எவ்வாறு நடந்தது?

விடை:—துரியோதனுதியர் ஸேனையில்உண்டானகுழப்பம் ஒருவாறு ஒடுங்கி வருகையில் பாண்டவர்கள் யாவரும்கர்ணனை எதிர்த்து சண்டைக்கு வந்தார்கள். அவர்களோடு கர்ணன் ஒருவனுகவே சண்டைசெய்து வருகையில் துரியோதனனதுவேண்டுகோளின்படி அசுவத்தாமன் அவனுக்கு ஸஹாயமாக வந்தான்.

அப்பொழுது கர்ணனைக் கொல்லவேண்டும் என்று ஆவலோடு வரும் அர்ஜுனனை துரோணர், கிருபர் சல்லியன் முதலியோர் வந்து தடுக்க முயன்றனர். இவர்கள் தடுப்பதற்குமுன் கர்ணன் மூர்க்கத்தனமாக அர்ஜுனன்மேல் பாய இருவருக்கும் போர் உண்டாயிற்று. இதன் முடிவில் கர்ணன் அர்ஜுனனால் நல்ல அடிபட்டு, அவனது ஸாரதி குதிரைகள் முதலியவைகளை இழந்து கிருபரது ரதத்தில் ஓடிவந்து ஏறிக்கொண்டான். இதை கண்ட கௌரவஸேனை சிதறி ஓட ஆரம்பிக்க துரியோதனன் அவைகளைச்சேர்த்துக்கொண்டு மூர்க்கத்தனமாக அர்ஜுனனை எதிர்த்து வந்தான். அப்பொழுது கிருபர் அசுவத்தாமனை துரியோதனனுக்கு ஸஹாயமாக அனுப்பினார். வந்த அசுவத்தாமனை நோக்கி 'என் விஷயத்தில் எனது ஆப்தர்கள்கூட அசிரத்தையாய் சண்டையிடுகிறார்கள். இது எனது தூர்பாக்கியம். நீயாவது என்னை இத்தருணத்தில் நன்றாய்ச் சண்டைசெய்து காப்பாற்று என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அதற்கு அசுவத்தாமன் 'பாண்டவர்கள் உயிரோடிருக்கிறவரையில் எங்களால் பாண்டவஸேனையை ஜயிக்கமுடியாது. நீயோ அநியாயச்சண்டை யிடுகிறாய். ஆகையால் உனக்கு பலக்குறைவுதான். இருந்த போதிலும் இதோ உன்னை ஸந்தோஷப் படுத்தும் பொருட்டு என்னாலானமட்டும் சண்டைசெய்கிறேன் பார்' என்று சொல்லிவிட்டு திருஷ்டத்யும்னனோடு கொடியபோர் செய்யத்தொடங்கினான். வெகுநாழிகை ஸமயுத்தம் நடந்த பிறகு முடிவில் திருஷ்டதயுப்னன் தோல்வி அடைந்தான். அப்பொழுது பாண்டவர்களுக்கு மிகுந்த பயம் உண்டாயிற்று. துரோணரும் அப்பொழுது பாண்டவஸேனையைச் சின்னா பின்னப் படுத்திவந்தார். இவவாறிருக்கையில்ஸாத்யகிக்கும் ஸோமதத்தனுக்கும் உண்டான சண்டையில் ஒரு பெரிய பாணத்தால் ஸோமதத்தன் இறந்தான்.

வினா 52:—இவ்வாறு யுத்தம் வெகு பயங்கரமாக நடந்து வருகையில் இருதிறத்தாரது நிலையும எவ்வாறிருநதது? அப்பொழுது அவர்கள் என்ன செய்தார்கள்? பின்பு என்ன நடந்தது?

விடை:—அர்ஜுனன் முதலிய பாண்டவ வீரர்களால் கௌரவஸேனையும், துரோணர் முதலியவர்களால் பாண்டவ ஸேனையும் மொத்துண்டு களைப்படைந்தன. மேலும் இரவு மூடிக்கொண்டு இருட்டாயிருந்தமையால் யுத்தவீரர்களுக்குக் களைப்பால் தூக்க

முண்டாயிற்று. இதைத் தடுப்பதற்காக இருதிறத்தாரும் பந்தங்கள், விளக்குகள் முதலியவைகளை ஏற்பாடுசெய்து ஒவ்வொரு வீரர்களிடம் கொடுக்க எல்லோரும் அந்த வெளிச்சத்தில் கொடியபோர்செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது துரோணருக்குக் காவலாக துரியோதனன் தனது தம்பிமார்களை அனுப்பினான். அர்ஜுனனை எதிர்க்கும்படி கர்ணனுக்கு ஏற்பாடு செய்தான். அதற்குள் பாண்டவர்கள் முதலியோர் தகுந்த ஏற்பாடுகள் செய்துகொண்டு துரோணரைக் கொல்லுவதற்காக அவர்கள்மேல் பாய்ந்தார்கள். அப்பொழுது கௌரவவீரர்களுள் கிருதவர்மா தருமபுத்திரரையும், அசுவத்தாமா கடோத்கசனையும், கர்ணன் ஸஹதேவனையும், சல்லியன் விராடனையும், இது போல ஒவ்வொரு கௌரவவீரன் ஒவ்வொரு பாண்டவவீரனைத் தனித்தனியாகத் தடுத்தான். இந்தச்சண்டையில் கிருதவர்மா தருமபுத்திரரை ஓடும்படி செய்தான், துரியோதனன் பீமஸேனனால் மொத்துண்டு ஓடிப்போனான். ஸஹதேவன்கர்ணனால் தோல்வி அடைந்துநிற்க அவனைக்கொல்லாது தனது வில்லின் நுனியால் குத்தி 'உனக்கு ஸமானமானவர்களோடு சண்டை செய். மேலானவர்களோடு சண்டைக்குப் போகாதே. அதோ அர்ஜுனன் சண்டை செய்துகொண்டிருக்கிறான். அங்கேயாவது போய் பிழைத்துக்கொள், இல்லாவிடில் வீட்டிற்காவது போ' என்று சொல்லி அவமானப் படுத்திவிட்டான். மத்திர தேசாதிபதி விராடனை எதிர்த்துச் சண்டைசெய்து அவனைத் தோல்வி அடையும்படி செய்யும் தருணத்தில், அவனுக்கு ஸஹாயமாக அவன் தம்பியாகிய சதானீகன் வர, அவனை எளிதில் சல்லியன் கொன்றுவிட்டான். அதன் பின்பு ஜடாஸுரன் பிள்ளையாகிய அலம்புஷன் என்ற அஸுரராஜன் ஒருவன் அர்ஜுனனை எதிர்த்துவந்து தோல்வி அடைந்தான். நகுலன் பிள்ளை சதானீகனுக்கும் துரியோதனன் தம்பி சித்திரஸேனனுக்கும் கொடியபோர் உண்டாக அதில் அவன் சதானீகனால் தோல்வி அடைந்து கிருதவர்மாவினது தேரில்வந்து ஏறிக் கொண்டான். இவ்வாறு அன்றிரவு நகுலனுக்கும், சகுனிக்கும், சிகண்டிக்கும், கிருபருக்கும், திருஷ்டத்யும்னனுக்கும், துரோணர், கர்ணன் முதலியோருக்கும்; ஸாத்யகிக்கும், கர்ணனுக்கும்; கொடிய போர் உண்டாக யுத்தகளத்தில் மிகுந்த குழப்பம் உண்டாயிற்று. அப்பொழுது கர்ணனது

பராக்கிரமம்வரவா அதிகரிக்க அவன் கொலைத்தொழிலை வெகு ஆவேசத்தோடு செய்யத்தொடங்கினன். துரோணரைக்கொல்ல வந்த திருஷ்டத்யும்னனை கர்ணன் தேர், குதிரைகள் முதலியவைகளை இழக்கும்படி செய்து, தயங்கிநிற்கும்படி செய்துவிட்டான். இதைக்கண்டதும் தருமபுத்திரர் முதலிய பாண்டவர்களுக்கு மிகுந்த பயம் உண்டாய்விட்டது.

வின 54:—இந்தத் தருணத்தில் யார் கர்ணனை எதிர்த்துப் போக முயன்றது? யார் அப்பொழுது என்ன ஏற்பாடு செய்தது?

விடை:—இந்த நிலையைக்கண்டதும் அர்ஜுனனுக்கு யுத்தவெறி உண்டாகத் தான் கர்ணனைக்கொன்றுவிடுவதாகச் சபதம்செய்துகொண்டு பகவானைத் தனது ரதத்தைக் கர்ணனிடம் கொண்டு நிறுத்தும்படி வேண்டிக்கொண்டான். அப்பொழுது பகவான் 'அர்ஜுனா! உன்னையும் கடோத்கசனையும் தவிர கர்ணனை எதிர்க்கவல்லார் ஒருவரும் இல்லை. இப்பொழுது இந்திரன் கொடுத்த சக்தி ஆயுதம் கர்ணனிடத்திலிருப்பதால், நீ கர்ணனை எதிர்க்கத்தக்க ஸமயம் இதன்று. மேலும் அவன் அதை உன் மேல் விடவேண்டும் என்றே வைத்திருக்கிறான். ஆகையால் கடோத்கசனை அவனிடம் சண்டைக்குப்போகச் சொல்லுகிறேன். அவன் உன் விஷயத்தில் மிகுந்த சிரத்தை உடையவன். மேலும் அவன் ராக்ஷஸனாகையால் இந்த அர்த்தராத்திரி ஸமயத்தில் அவனுக்கு பலம் அதிகம், ஆகையால் அவன் கர்ணனை நன்றாக எதிர்த்துப்போர் செய்வான். நீ கவலைப்படவேண்டாம்' என்று சொல்லி கடோத்கசனை அழைத்து அவனுக்கு ஆசீர்வாதம் முதலியவைகளைச்செய்து நன்றாகக் கர்ணனோடு சண்டைசெய்து திரும்பும்படி ஏவினர். பகவான் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டவனாய் கடோத்கசன் கர்ணனைநோக்கி மிகுந்த கர்ச்சனை செய்துகொண்டு சண்டைக்குப் போனான்.

வின 55:—கடோத்கசன் எவ்வாறு யார் யாரோடு சண்டைசெய்தான்? அவைகள் எவ்வாறு நடந்து முடிவு பெற்றன?

விடை:—முன்னமேயே அர்ஜுனனை எதிர்த்து தோல்வி அடைந்திருந்த ஜடாஸுரன் பிள்ளையாகிய அலம்புஷனுக்கும் கடோத்கசனுக்கும் முதலில் சண்டையுண்டாக கொஞ்சகாலம் கொடிய போர்செய்து கடோத்கசன் அலம்புஷனைக் கொன்றான். அதன் பின்பு கர்ணனுக்கும் அவனுக்கும் சண்டையுண்டாயிற்று. கர்ணன் தனக்குத்தெரிந்த தெய்வீக அஸ்திரங்களைஎல்லாம் அந்தச்

சண்டையில் விட்டுப்பார்த்தான். கடோத்கசனும் தனக்குத் தெரிந்த மாயைகளை எல்லாம் காட்டிவிட்டான். இந்தச்சண்டையில் கர்ணன் மிகுந்த கஷ்டத்தை அடைந்தான். கடோத்கசனும் தனது மாயைகள் எல்லாம் பங்கமாய் மிகுந்த கஷ்டத்தை அடைந்தான். இந்தஸமயத்தில் அலாயுதன் என்ற அஸுரன் யுத்தகளத்தில் வந்து, துரியோதனனால் கோபம் மூட்டப்பட்டு பாண்டவர்களை எதிர்த்துச் சண்டைக்கு வந்தான். அப்பொழுது பீமன் கடோத்கசனுக்கு ஸஹாயமாய் வர அவனுக்கும் அலாயுதனுக்கும் கொடியபோர் உண்டாயிற்று. அதில் பீமன் பலமெல்லாம் வீணாய்ப்போவதைக் கண்ட பகவான் கடோத்கசனை பீமனுக்கு ஸஹாயமாய்போகும்படி ஏவ, கடோத்கசனுக்கும் அலாயுதனுக்கும் போர் உண்டாயிற்று. இருவரும் தமக்குத் தெரிந்தமாயைகளைப் பிரயோகித்து வெகு காலம் சண்டை செய்தனர். முடிவில் கடோத்கசன் ஓடிவந்து அலாயுதனை அடித்துத்தள்ளி அவன் தலையை வெட்டிவிட்டான். இதனால் துரியோதனன்பக்கம் தாழ பாண்டவர்களுக்கு உத்ஸாஹம் அதிகரித்தது. கடோத்கசனுக்குப் பலவிருத்தியாக அவன் கௌரவசேனையைச் சின்னபின்னமாக்கத் தொடங்கினான். எவ்வளவுதான் சண்டைசெய்தபோதிலும் கடோத்கசனால் கர்ணனை ஒன்றும் செய்யமுடியவில்லை. அப்பொழுது அவன் ஒரு கொடிய அஸ்திரத்தை விட்டு கர்ணனது குதிரைகள் முதலியவைகளைக் கொன்று அவனை தரையில் நிற்கும்படி செய்துவிட்டான். அப்பொழுது கடோத்கசன் செய்த சண்டையைப் பொறுக்கமுடியாமல் கௌரவவீரர்கள் எல்லோரும் கர்ணனை நோக்கி அவனிடம் இருந்த இந்திரசக்தியை கடோத்கசன் மேல்விட்டு அவனைக் கொல்லும்படி உறக்கக்கூவினார்கள். அந்த ஸமயத்தில் கர்ணனும் கடோத்கசனால் மிகுந்த கஷ்டஸ்திதியில் இருந்தபடியால் அவனுக்கும் அவன்பேரில் சக்தியை விட்டால் நலமாய் இருக்குமென்று தோன்ற அர்ஜுனனைக் கொல்லுவதற்காக இவ்வளவுகாலம் வைத்திருந்த சக்தியை அடிபொறுக்க மாட்டாமல் கடோத்கசன்மேல் கர்ணன்விட்டான். கடோத்கசன் உடனே உயிர் இழந்து கீழே விழுந்தான்.

வினா 56:—கடோத்கசன் இறந்து விழுந்ததும் யுத்தகளத்தில்என்ன நடந்தது?

விடை:—கடோத்கசன் இறந்தான் என்ற ஸங்கதி தருமபுத்திருக்

குத் தெரிந்ததும் அவர் தமக்கு அவன் முன்புசெய்த உபகாரங்களை எல்லாம் எண்ணி எண்ணி துக்கிக்கலானார். அப்பொழுது கிருஷ்ணபகவான் தருமபுத்திரரிடம் வந்து, 'கர்ணன் கையில் இந்திரசக்தி இருந்தது. அது எவனாகிலும் ஒருவனைக் கொல்லும் திறமையுடையது. அது ஒன்றுதான் அவனுக்கு முக்கிய பலமாக இருந்தது. கவசாதிகளை அவனிடமிருந்து இந்திரன் முன்னமேயே வாங்கிப் போயிருந்தான். அந்த சக்தியை அவன் அர்ஜுனன் மேல்விட்டிருப்பானால் அவன் அவசியம் இறக்கவேண்டியதுதான். அப்பொழுது கடோத்கசன் இறந்ததைவிட உமக்கு துக்கம் அதிகமாய் விடும். ஆகையால் கடோத்கசன் இறந்தது நலமே. அவன் இராக்ஷஸனாகையால் அவனை நான் எப்படியாவது முடிவில் கொல்லவேண்டியதுதான். அதைக் கர்ணன் செய்து எனக்கு ஒத்தாசை செய்தான். ஆகையால் எல்லாம் உமக்கு நன்மையாகவே முடியும். இனிமேல் அர்ஜுனன் வெகு எளிதில் கர்ணனைக் கொன்று ஜயம் அடைவான்' என்று தேற்றினார். எவ்வளவு சொல்லியும் தருமபுத்திரர் தேறுதல் அடையாது, ஆவேசம் பிடித்தவர்போல் 'இதோ கர்ணனைக் கொன்றுவிடுகிறேன்' என்று கூவிக்கொண்டு கர்ணனைநோக்கி ஓடினார். அப்பொழுது வியாஸர் அவருக்குத் தோன்றி, பகவான் சொல்லியவைகளை எல்லாம் மறுபடியும் சொல்லி, 'தருமபுத்திரா, கவலைபடாதேயும், இன்றைக்கு ஐந்தாம்நாள் உமக்கு ராஜ்யம் கிடைக்கும்; நீர் ஸுகமாக நீதியான நிலையில் இருந்து ஆனந்தத்தை அனுபவியும்' என்று தேற்றி மறைந்தார். உடனே தருமபுத்திரர் கர்ணனைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்தைவிட்டு பழைய நிலைமை அடைந்தார்.

வினா 57 :—அர்ஜுனனுக்காக வைத்திருந்த சக்தியை ஏன் இவ்வளவு நாள் விடாது கர்ணன் வைத்திருந்தான்?

விடை :—முதல் பத்துநாள் பீஷ்மர் சண்டை செய்துகொண்டு வந்தமையால் கர்ணன் செய்த சபதப்படி அவன் யுத்தம் செய்ய முடியாமல் போயிற்று. அதன்பிறகு நான்குநாள்தான் கர்ணன் யுத்தம் செய்தான். அப்பொழுது ஒவ்வொருநாள் இரவிலும் கௌரவ வீரர்கள் எல்லோரும் அர்ஜுனன்மேல் இந்திர சக்தியைப்போட்டு அவனைக்கொன்று யுத்தத்தை சீக்கிரத்தில் முடிக்கும்படி கர்ணனை வேண்டிக்கொண்டார்கள். ஆனால்

ஒவ்வொருநாளும் யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டால் இந்த விஷயம் கர்ணனுக்கும், மற்றைய கௌரவவீரர்களுக்கும் முழுவதும் மறந்தே போய்க்கொண்டுவந்தது. மறுபடியும் ஸாயங்காலம் அவர்களுக்கு இது ஞாபகம் வந்தது. மறுநாள் அவசியம் சக்தியை விட்டுவிடவேண்டும் என்று எல்லாரும் தீர்மானம் செய்வார்கள். விதிவசத்தால் மறப்பே இவர்களைக் கெடுத்துவந்தது. பகவான் கர்ணனிடம் இருந்து அந்த சக்தியை ஒழிப்பதற்காக கடோத்கசனை நடுநிசியில் கர்ணனிடம் சண்டைக்கு விட அவன் செய்த கொடிய போரால் எல்லோருக்கும் இந்திரசக்தி ஞாபகம் வந்தது. உடனே கர்ணன் அதை விட்டு கடோத்கசனைக் கொன்றான். இதை உற்றுநோக்கினால் விதியை வெல்லுவது அஸாத்யம் என்பது விளங்கும்.

வின 58:—வியாஸரால் தருமபுத்திரர் தேறுதல் அடைந்ததும் யுத்தம் எவ்வாறு நடந்துவந்தது ?

விடை:—இவ்வாறு தேறுதல் அடைந்ததும், தருமபுத்திரர் எல்லோரையும் துரோணரை எதிர்த்து மிகுந்த உத்ஸாஹத்தோடு சண்டைசெய்து அவரைக் கொல்ல முயலும்படி ஏவினார். அப்பொழுது பெரும்போர் உண்டாயிற்று. யுத்தத்தினாலும், களைப்பினாலும், தூக்கத்தினாலும் ஸேனைகள் ஒன்றும் செய்ய முடியாமல் தத்தளிக்க, அந்த பாதி இராத்திரியில் அர்ஜுனன் பாண்டவவீரர்களை நோக்கி ‘ இப்பொழுது நடுநிசி; எல்லோருக்கும் களைப்புமேலிட்டிருப்பதால் கொஞ்சநாழிகை எல்லோரும் யுத்தகளத்திலேயே கண்ணயருங்கள்,’ என்று உறக்கக் கட்டளையிட்டான். இதைக்கேட்ட கௌரவவீரர்கள் கர்ணதுரியோதனாதிகளைக் கூவி ‘ பாண்டவர்கள் யுத்தம் நிறுத்திவிட்டார்கள், எங்களையும் நிறுத்தும்படி உத்தரவுசெய்தால் நலமாயிருக்கும்,’ என்று விண்ணப்பம் செய்துகொள்ள அவ்வாறே உத்தரவும் பிறந்தது. அப்பொழுது கௌரவவீரர்கள் எல்லோரும் அர்ஜுனனது பெருந்தன்மையைப் புகழ்ந்து அவனுக்கே ஜயம் வரவேண்டும் என்று வாழ்த்திக்கொண்டு உறங்கத் தொடங்கினர். ஒரு ஜாமத்திற்கெல்லாம் சந்திரோதயமாக எல்லோரும்எழுந்து சண்டையைத் தொடங்கினர். அப்பொழுது பாண்டவர்களிடம் பக்ஷபாதமாயிருந்து நன்றாக சண்டைசெய்யாமலிருப்பதாகத் துரியோதனன் துரோணரைப் பழிக்க, அவர் அர்ஜுனனது சிறப்பை முதலில் வர்ணித்துத் தாம்கிழவயதில் எவ்வளவு கஷ்

டப்பட்டுச் சண்டை செய்தபோதிலும் தம்மால் அவனை ஜயிக்க முடியாது என்பதாகவும், அப்படி இருந்தபோதிலும், தம்மால் இயன்றமட்டும் சண்டை இடுவதாகவும் சொன்னார். அப்பொழுது துரியோதனனுக்குக் கோபம்வரத் தான் தனது பந்து மித்திரர்களோடு அர்ஜுனனைக் கொல்லுவதாக வீண் பெருமை பேசி கௌரவஸேனையின் ஒருபாகத்தைப் பிரித்துக் கொண்டு பாண்டவர்களைக் கொல்ல அவன் புறப்பட்டான். துரோணர் சிரித்துவிட்டு மற்றையப் பாகத்தைக்கொண்டு பாண்டவஸேனையைத் தாக்கத் தொடங்கினார்.

வினு 59:—சந்திரோதயத்தின்பின்பு சண்டை எவ்வாறு நடந்து கொண்டிருந்தது?

விடை:—இவ்வாறு துரோணர் முதலியோர் சண்டைக்குப் புறப்பட்டதும், பீமன் அர்ஜுனனை சண்டைக்குப் புறப்படும்படி ஏவினான். இதைக்கேட்ட பாண்டவவீரர்கள் எல்லோரும் மிகுந்த உத்ஸாஹத்தோடு எழுந்தனர். அப்பொழுது கொடிய யுத்தம் உண்டாக துருபதராஜனும், விராடராஜனும் துரோணரை எதிர்த்து வெகுகாலம் ஸமயுத்தம் செய்துவந்தனர். துரோணர் வில் முதலியவைகளை இழந்து முதலில் கொஞ்சம் தத்தளித்தார். ஆனால் முடிவில் அவர் விராடராஜனையும் துருபதராஜனையும் கொன்று தள்ளிவிட்டார். இதைக் கேள்வியுற்ற திருஷ்டத்யும்னனுக்கு மிகுந்த ஆவேசம்வர துரோணரைக் கூடிய சீக்கிரத்தில் கொன்றுவிடுவதாகச் சபதம் செய்துகொண்டு அவரைநோக்கிப் புறப்பட்டான். பீமஸேனனும் இதுபோன்ற சபதத்தைச் செய்துகொண்டு துரோணரது ஸேனையுட் புகுந்து கொடியபோர் செய்யத்தொடங்கினான். இவர்கள் சண்டை செய்து கொன்று சாய்த்துக்கொண்டு வருகையில் 15-ம் நாள் காலை ஸூர்யன் உதயமானான். எல்லோரும் கொஞ்சநாழிகை சண்டையை நிறுத்தி ஸூர்யனைத் துதித்துவிட்டு மறுபடி சண்டைக்கு ஆரம்பித்தனர். அன்று துரோணர் செய்த சண்டைக்கு நிகர் வேறொரு சண்டையும் இல்லை என்றேசொல்லாம். துரியோதனனுக்கும் நகுலனுக்கும் போர் உண்டாக அதில் நகுலன் தோல்வி அடைந்தான். துச்சாஸனனுக்கும் ஸஹாதேவனுக்கும்உண்டான சண்டையில் துச்சாஸனன் தோல்வி அடையும் தருணத்தில் இருக்க, அப்பொழுது கர்ணன் அவனுக்கு ஸஹாயம் செய்யவந்தான். இதைக்கண்டு பீமன் ஸஹாதேவ

னுக்காகவர, அவனுக்கும் கர்ணனுக்கும் போர் தொடங்கியது.
இதில் கர்ணன் பீமனது ரதத்தை உடைத்து அவனை நகுலன்
இரதத்திற்குப் போகும்படி செய்துவிட்டான். அப்பொழுது
துரோணருக்கும் அர்ஜுனனுக்கும் உண்டான சண்டையில்
இருவரும் திவ்ய அஸ்திரங்களைப் பிரயோகித்து விசித்ர யுத்தம்
செய்தனர். ஆகாயத்தில் வந்திருந்த ஸித்தர்களே இதைக்
கண்டு வியந்தனர். வேறுபாகத்தில் துச்சாஸனன் திருஷ்டத்
யும்னனை துரோணரிடம் போகவொட்டமல் தடுத்துப் போர்
செய்துகொண்டிருந்தான். நகுல ஸஹதேவாள் அவனைக் காப்
பாற்றிவந்தனர். திருஷ்டத்யும்னன் வெகு தந்திரமாக துச்சா
ஸனனை ஏமாற்றிவிட்டு துரோணர்மேல் பாணங்களைப்போடத்
தொடங்கினன். அப்பொழுது துரியோதனன் முதலியோர்
துரோணரைக் காப்பாற்றவருவதைக் கண்டு ஸாத்யகி துரியோ
தனனை வந்து தடுத்தான்.

வினா 60:—அப்பொழுது ஸாத்யகிக்கும் துரியோதனனுக்கும்
என்ன நடந்தது? மேல் என்ன நடந்தது?

விடை:—இவ்விருவரும் சண்டைக்குத் தயாராய்வந்து நின்ற உடன்,
துரியோதனனுக்கு ஸாத்யகியோடிருந்த பழையநட்புஞாபகம்
வர தான் அவன்பேரில் பாணம் போடவேண்டி வந்துவிட்டதே
என்று துக்கித்தான். அதற்கு ஸாத்யகி குருவாகினும் யுத்த
களத்தில் நேருக்குநேர்வந்துவிட்டால் அம்பெய்து கொல்லவே
ண்டியது க்ஷத்திரியரது தர்மம்ஆகையால் துக்கிப்பதில் பிரயோ
சனமில்லை', என்று சொல்ல இருவருக்கும்போர்உண்டாயிற்று.
அதில் ஸாத்யகி கை உயருவதையும் துரியோதனன் கை தணி
வதையும் கண்ட கர்ணன் துரியோதனனுக்கு ஸஹாயமாக வர
அவனை அவ்வாறு வரவொட்டாமல் பீமன் வழியிலேயே
தடுத்துவிட்டான். அப்பொழுது பீமனுக்கும் கர்ணனுக்கும்
உண்டான சண்டை நடந்து வருகையில் ஆவேசத்தோடு கௌர
வர்களைத் தாக்கும்படி தருமபுத்திரரிடம் இருந்து பொது உத்
தரவு பிறக்க, யுத்தகளம் எங்கும் சண்டை பலக்கத்தொடங்கி
யது. அதில் துரோணர் செய்த கொலைத்தொழிலைக் கண்ட
பாண்டவ ஸேனைக்கு அதைரியம் உண்டாக அவர்கள் கை
தணியத் தொடங்கியது.

வினா 61:—இந்தத் தருணத்தில் யார் துரோணரைக் கொல்லுவத
ற்கு என்ன உபாயம் கூறியது? பாண்டவர்கள் இவ்விஷயத்தில்

என்ன அபிப்பிராயப்பட்டார்கள்? அப்பொழுது என்ன நடந்தது?

விடை:—இந்தத்தருணத்தில் பகவான் அர்ஜுனனை நோக்கி 'துரோணர் கையில் ஆயுதம் எடுத்துப் போர் புரியும் வரையில் அவரை ஒருவராலும் ஜயிக்கமுடியாது. அசுவத்தாமனை யாராவது கொன்றுவிட்டு அந்த ஸங்கதியை அவருக்குத் தெரிவித்துவிட்டால் அவர் தமது ஆயுதங்களை எறிந்து விடுவார். அப்பொழுது அவரை எவரும் எளிதில் கொல்லலாம்' என்றார். அர்ஜுனனுக்கு இது நியாயமாகப் படவில்லை. இதைக்கேட்டிருந்த பீமஸேனன், மாளவதேசாதிபதியாகிய இந்திரவர்மனது அசுவத்தாமா என்ற யானையை உடனே கொன்று தள்ளி விட்டு துரோணரிடம் சென்று 'அசுவத்தாமா இறந்தான்' என்ற ஸங்கதியைத் தெரிவித்தான். துரோணருக்கு இந்த ஸங்கதி முதலில் துக்கத்தை உண்டாக்கியபோதிலும், இதைப் பொய் என்று எண்ணி யுத்தம் செய்யத்தொடங்கினார். இவர் யுத்தம் செய்துவருகையில் ஸப்த ரிஷிகள் துரோணரிடம் வந்து 'நீரோ அநியாயப் பக்கத்தில் சண்டையிட்டுவருகிறீர். மேலும் உமக்குக் காலம் ஆய்விட்டது; சண்டையை நிறுத்தி போகும்வழிக்கு வேண்டிய ஏற்பாடுகளைசெய்யும்' என்றுதெரிவித்துவிட்டார்கள். இதனாலேயும், தம் முன்னே திருஷ்டத்யும்னன் நின்றுகொண்டிருந்ததினாலேயும் துரோணருக்கு மனத்தளர்ச்சி உண்டாக அசுவத்தாமனைப்பற்றி பீமன் சொல்லிய ஸங்கதியும் அவருக்கு அப்பொழுது ஞாபகம் வந்தது தருமபுத்திரர் எப்பொழுதும் உண்மை சொல்லுகிறவர் ஆகையால் அவரைக்கேட்டால் உண்மை வெளிவரும் என்று தோன்ற அவர் தருமபுத்திரரைத் தேடலாயினர்.

வினா 62:—இந்த ஸமயத்தில் பகவான் விஷயங்களை எவ்வாறு நடத்தி வைத்தார்?

விடை:—இதற்குள் பகவான் இனிப்பாதிநாள் துரோணர் யுத்தம் செய்தால் பாண்டவப் பூண்டே உலகில் இல்லாமல் அடித்துவிடுவார் என்று அறிந்தவராய் தருமபுத்திரரிடம் வந்து, அவரது ஸேனையிருக்கும் அபாயநிலையை நன்றாக எடுத்துச்சொல்லி 'துரோணர் உம்மைக்கேட்டால் அசுவத்தாமன் இறந்தான் என்றே சொல்லி எங்களை எல்லாம் அவரது பராக்கிரமத்திலிருந்து காப்பாற்றும். அநேக உயிர்களைக்காக்க ஒரு பொய்

சொல்வது பாபம் அன்று' என்று நியாயம் கூறினர். இதைக் கேட்டிருந்த பீமன் தருமபுத்திரரை நோக்கி 'நீர் பகவான் சொல்லச் சொல்லுகிறபடி சொல்லிவிட்டபோதிலும், அது பொய் ஆகமாட்டாது. ஏனெனில் பகவான் துரோணரைக் கொல்லும் உபாயத்தை வெளியிட்ட உடன் என் புஜபலத்தால் அசுவத்தாமன் என்ற யானையைக்கொன்றேன். பின்பு நானும் துரோணரிடம் அசுவத்தாமன் இறந்தான் என்று சொல்லிப் பார்த்தேன் அவர் நம்பவில்லை. நீர் சொன்னால் நம்புவார். அப்படிச்செய்தால் எங்களை எல்லாம் காத்தபுண்யம் உங்களுக்கு வரும்' என்று நயமாய்ச்சொன்னன். இவ்வாறு பகவானும் பீமனும் சொல்லியவிஷயங்களைக்கேட்டு, அவர் மனம் இளகியது. துரோணர் அவரைக்கண்டு கேட்க அவர் 'இறந்தான் அசுவத்தாமன் என்றயானை அரசு' என்று நன்றாகச்சொல்லி இறுதிப்பாகத்தை மெதுவாக உச்சரித்தார். இது துரோணர் காதில் விழாதபடி பக்கத்திலிருந்தவர் வாத்யாதி கோஷங்களால் தடுத்துவிட்டனர்.

வின 63:—தருமபுத்திரர் சொல்லியது பொய்யா இல்லையா? அவர் அவ்வாறு செய்தது நியாயமா? இதனால் நாம் என்ன தெரிந்து கொள்ளவேண்டியது.

விடை:—தருமபுத்திரர் சொல்லியது பொய்ஆயினும் அதைப் பகவான் முதலியோரது கட்டாயத்தின் பேரில் அநேகரது நன்மைக்காக அவர் சொல்லியதாலும், பின்பு 'ஒரு யானையரசு,' என்று சொல்லியதாலும், அவருக்கு பொய்சொல்லிய பாபம் இல்லை என்று சிலர் சொல்லலாம். அவர் தமது மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமாக உண்மையல்லாத விஷயத்தைச் சொல்லியதும் அல்லாமல், அவரது வாக்கால் துரோணருக்கு அபாயமும் உண்டாக்கினர். எவருடையகட்டாயத்தின்பேரிலாகிலும் ஒருவன் பொய்சொன்னால் அதுபொய்தான். அந்தப்பாவம் அவனையேசூழும், விடாது. இதற்கனுகூலமாக கதையில், தருமபுத்திரரது ரதம் அதுவரையில் பூமிக்குமேல் நான்கு விரல் உயரத்தில் போய்க்கொண்டிருந்ததாகவும், அந்தப் பொய் சொன்னதும் அது பூமியைத் தொட்டுவிட்டதாகவும் அந்தப்பொய் சொன்ன பாபத்திற்காக மேல் இவருக்கு நரகத்தைப் பார்க்க வேண்டிவந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அர்ஜுனன் பின்னர் தருமபுத்திரரது நடத்தையைப்பற்றித் துக்கிக்குங்கால்,

இராமருக்கு வாலிவதம் என்ற மாறுக்குற்றம் எவ்வாறு ஏற்பட்டதோ (இராமாயணவினுவிடை, கிஷ்கிந்தாகாண்டம் 17 முதல் 21 வினுக்கள் வரையில் பார்க்க) அதுபோல என் அருமைத் தமையனுருக்கும் இந்தக்குற்றம் ஏற்பட்டுவிட்டதே' என்று பரிதவித்ததாகச் சொல்லி யிருக்கிறது. இவைகளை வைத்துக் கொண்டு நோக்கினுல் தருமபுத்திரர் செய்தது அநியாயம் என்பதற்குச் சந்தேகம் இல்லை. இதனுல் நாம் மரியாதை வைத்திருக்கும் குரு முதலியோர் அநியாயத்தை செய்யச் சொல்லுங்கால் அவர்கள் சொல்லுகிருர்களே என்று நாம் அதை செய்து விட்டால் அந்தப் பாபம் நம்மை விடாது ஆகையால் நாம் எப்பொழுதும் எந்த நிலையிலும் அநியாய விஷயங்களைச் செய்யலாகாது என்பதை தெரிந்துகொள்ளவேண்டியது.

வினு 64 :—தருமபுத்திரர் இவ்வாறு சொல்லிவிட்டபின்பு யுத்தம் எவ்வாறு நடந்து முடிவுபெற்றது?

விடை :—தருமபுத்திரர் சொல்லியதைக் கேட்டதும், துரோணருக்கு உத்ஸாகம் குறைய பலமும் குறைந்துவிட்டது. அந்த ஸமயத்தில் அவரை திருஷ்டத்யும்னன் வந்து எதிர்த்தான். இந்த நிலையில் இருந்தபோதிலும், துரோணர் திருஷ்டத்யும்னனை கொஞ்சகாலம் செயலற்றிருக்கும்படி செய்து விட்டார். துரோணர் செய்த விசித்திர யுத்தத்தால் அப்பொழுது திருஷ்டத்யும்னனது பலமெல்லாம் வீணுய்ப்போயிற்று. எவ்வளவோ தாம் துரோணரை வெட்டி விடவேண்டும் என்ற எண்ணத்துடன் அவன் முயன்று பார்த்தான். அவனுல் ஒன்றும் முடியவில்லை. அந்தச் சண்டையில் திருஷ்டத்யும்னன் தேர் முதலியவைகளை இழந்து துரோணர் கையில் அகப்பட்டு இறக்கும் தருணத்தை அடைய, அவனை ஸாத்யகி நல்ல ஸமயத்தில் காப்பாற்றினுன். இவ்வாறு கோரயுத்தம் செய்துவருகையில் தமது வாழ்க்கை முடியும் காலம் வந்து விட்டதாக சிற்சில அடையாளங்களால் தெரிந்துகொண்டு துரோணர் தமது ஆயுதங்களை எறிந்து அசுவத்தாமனைப்பற்றி கொஞ்ச நாழிகை துக்கித்து விட்டு, பின்பு எல்லாம் துறந்தவராக யோகாப்பியாஸம் செய்து கொண்டு தமது தேர்த் தட்டில் உட்கார்ந்து விட்டார் கொஞ்ச நாழிகைக் கெல்லாம் துரோணரது ஆத்மா ஒரு ஸூர்யனைப்போல பிரகாசித்துக்கொண்டு அவரது தேகத்தைவிட்டு ஆகாயத்தில் கிளம்பிப் போவதை தருமபுத்திரர், பகவான், அர்ஜுனன்,

அசுவத்தாமன் ஸஞ்ஜயன் ஆகிய இவர்கள் மாத்திரம் தான் கண்டார்கள். இதற்குள் திருஷ்டத்யும்னன் தனது கத்தியை உருவிக்கொண்டு துரோணர் தலையை வெட்டுவதற்காக அவரைநோக்கி ஓடிப்போனான். அப்பொழுது எல்லோரும் 'அடே பாபி அவரை வெட்டாதே' என்றும் அர்ஜுனன் 'என் குருவைக் கொல்லாதே உயிரோடு பிடித்துவா' என்றும் எவ்வளவோ சொல்லியபோதிலும் தன் தகப்பன் முதலியோர் இறந்ததை எண்ணி ஆவேசத்துடன் அவன் துரோணர் தலை மயிரைப் பிடித்துக் கொண்டு அவரது தலையை வெட்டிவிட்டான். கௌரவர்களும் பாண்டவர்களும் இந்தக் காட்சியை காணக் கண் கூசினவர்களாக ஓடத்தலைப்பட்டார்கள். அப்பொழுது பாண்டவர்களுக்கு ஒருவாறு ஸந்தோஷமும் கௌரவர்களுக்கு மிகுந்ததுக்கமும் உண்டாகக் கௌரவர்கள் பயந்து சிதறி ஓடத்தொடங்கினார்கள்.

வின 65:—இவ்வாறு துரோணவதம் ஆனதும் பாண்டவர்கள் பக்கத்தில் யாது காரணம்பற்றி என்ன குழப்பம் உண்டாய் எவ்வாறு முடிவுபெற்றது?

விடை:—இவ்வாறு துரோணர் இறந்ததும் அர்ஜுனன் தன் குரு அநியாயமாக திருஷ்டத்யும்னனால் வெட்டுண்டு இறந்தது, தன் தமயன் பொய்யனாகப்போனது, தன் மைத்துனன் அதர்மயுத்தம் செய்தது ஆகிய இவைகளை எண்ணி வாய்விட்டு அலறி பரிதவிக்கத் தொடங்கினான். இதைக்கேட்ட பாண்டவவீரர்களில் ஒருவராவது தமது வாயை திறக்கவில்லை. அப்பொழுது பீமன்மாத்திரம் பழையஸங்கதிகள் கஷ்டங்கள்முதலியவைகளை எடுத்துச்சொல்லி திருஷ்டத்யும்னன் தருமபுத்திரர் முதலியோரது செயல்கள் நியாயம் என்றும் அர்ஜுனன் சொல்லுவது அநியாயம் என்றும் வெகுகாலம் வாதாடினான். அப்பொழுது திருஷ்டத்யும்னன் துரோணர் தன் தகப்பனைக் கொன்ற பாபி என்றும், ஜாதி தர்மத்தை விட்டு விலகி க்ஷத்திரியதர்மத்தை அனுஷ்டிக்கும்பாபி என்றும், தான் அவரைக்கொல்லவே அக்னியிற் பிறந்தவன் என்றும், க்ஷத்திரியன் அவசியம் தனது விரோதியைக் கொல்லவேண்டும் என்றும், தனது நடத்தையின் நியாயத்தை எடுத்துச் சொல்லி அர்ஜுனன் தன்னை அவ்வாறு பழித்தது நியாயமன்று என்று நயமாக எடுத்துரைத்தான். இதைக்கேட்டிருந்த ஸாத்யகிக்கு கோபம் வர, திருஷ்டத்யும்னனை வெகுவாகப்பழித்து துரோணர் முதலிய பெரியோரைப்

பழித்த அவன் நாவை இழுத்து வைத்து அருக்கவேண்டும் என்று கடிந்து பேசினன். இதனால் திருஷ்டத்யும்னனுக்கு கோபம்வர அவன் முந்திய நாள் அர்ஜுனனால் கையருபட்டுச் செயலற்றுநின்ற பூரிச்ரவஸ்ஸை ஸாத்யகி வெட்டிச் சாய்த்த விஷயத்தை எடுத்துரைத்து அவன் செய்ததை விடத் தான் செய்தது அநியாயமல்லவென்றும், பீஷ்மர், அபிமன்யு முதலியோரும் அநியாயமாகவே உயிர் விட்டார்கள் ஆகையால், தான் செய்தது நியாயம் தான் என்றும் ஸ்தாபித்து, மேலும் 'ஸாத்யகி வாய்த்துடுக்காய்ப்பேசினல் அவனை யமலோகம் அனுப்புவேன்' என்றும் சொன்னன். இதைக் கேட்டவுடன் ஸாத்யகிக்கு தேகம் பதறத் தனது கதையை எடுத்துக்கொண்டு திருஷ்டத்யும்னனைக் கொல்லுவதாக வந்துவிட்டான். உடனே பீமன் ஸாத்யகியைப் பிடித்துக்கொண்டு அவனை ஸமாதானம் செய்யப் பின்பு இதுகாரும் சும்மாவேடிக்கை பார்த்திருந்த பகவான் முதலியோர் சண்டையைவிலக்கி ஸமாதானம் உண்டாக்கி அவர்களோடு அப்பொழுது மிகுந்த ஆவேசத்துடன் சண்டை செய்யவந்த அசுவத்தாமனை எதிர்க்க அவர்களைத் தயார் செய்தார்கள்.

வினு 66:—பாண்டவர்கள் பக்கத்தில் இவ்வாறு நடந்துவருகையில் கௌரவர்கள் பக்கத்தில் என்னென்ன நடந்து என்ன தீர்மானம் பிறந்தது?

விடை:—துரோணர் பரமபதம் அடைந்ததுகண்டு கௌரவஸேனை வெருண்டு ஓடுங்கால் எங்கேயோ சண்டைசெய்துகொண்டிருந்த அசுவத்தாமன் ஓடோடியும் வந்து கிருபர் முதலியோர்களிடமிருந்து நடந்த ஸங்கதிகளை தெரிந்துகொண்டான். உடனே அவனுக்குக் கோபம் அதிகமாய் விட்டது. திருஷ்டத்யும்னன் முதலியோரை ஒரே அஸ்திரத்தால் அழித்து விடவேண்டும் என்ற ஆக்கிரஹம் அவனுக்கு அப்பொழுதுவர தனக்கும் தன் தகப்பனருக்கும் மாத்திரம் தெரிந்திருந்த திவ்ய அஸ்திரமாகிய நாராயணாஸ்திரம் அவனுக்கு ஞாபகம் வந்தது. அதைப் பாண்டவர்கள்மேல் விடுவதாகத் தீர்மானம் செய்துகொண்டு கௌரவஸேனையை ஒருங்கு சேர்த்து அவன் நடத்தி வந்தான்.

வினு 67:—அசுவத்தாமன் அப்பொழுது எவ்வாறு யுத்தம் நடத்தினன்? பாண்டவர்கள் எவ்வாறு அவனிடமிருந்து தப்புவித்தார்கள்?

விடை:—மிகுந்த ஆவேசத்தோடு பாண்டவஸேனையைக் கொஞ்ச நாழிகை கலக்கி, எதிர்த்து யுத்தம் செய்பவர் எல்லோரையும் விடாதுகொல்லும் திறமை வாய்ந்த நாராயணாஸ்திரத்தைப் பாண்டவர்களை உத்தேசித்து அவன் விட்டான். இந்த அஸ்திரம் எங்கும் அக்னி மயமாகச் செய்துகொண்டு வருவதைக் கண்டதும் பகவான் பாண்டவர்கள் காதில் படும்படியாக 'எல்லோரும் ஆயுதத்தை எறிந்து யுத்த எண்ணத்தை விட்டு இந்த அஸ்திரத்திற்கு நமஸ்காரம் செய்துவிடுங்கள். அது ஒன்றும் செய்யாமல் போய்விடும். எதிர்த்து யுத்தம் செய்வீர்களாகில் நீங்கள் எல்லோரும் இறக்கவேண்டியதுதான்' என்று எச்சரிக்கை செய்தார். இதன்படி எல்லாரும் செய்ய அந்த அஸ்திரம் அவர்களை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் பீமன் மாத்திரம் பகவான் வாக்கைக் கவனியாது அந்த அஸ்திரத்தைத் தன் கதையால் அடித்துத் தள்ளி யுத்தம் செய்ய அது அவனைச் சூழ்ந்துகொண்டது. அப்பொழுது பீமன் அதனால் உண்டாக்கப்பட்ட அக்னியில் இருந்த விடம் தெரியாது மூழ்கிப் போனான். பகவான் என்ன சொல்லியும் பீமன் கேட்காததுகண்டு அர்ஜுனனும் பகவானும் அந்த தேஜஸில் மூழ்கி பீமன் கையிலிருந்த ஆயுதங்களைப்பிடுங்கி எறிந்து அவனைக் கீழே தள்ள நாராயணாஸ்திரத்தின் கொடுமை அடங்கி அது சாந்தமடைந்தது. உடனே பாண்டவர்கள் யுத்தத்திற்குத் தயாராயினர். அதைக்கண்ட துரியோதனன் மறுபடியும் அசுவத்தாமனை நாராயணாஸ்திரப்பிரயோகம் செய்யும்படி கேட்டுக்கொண்டான். அதற்கு அவன், 'அந்த அஸ்திரத்தை ஒருதரம்தான் விடலாம். மறுபடி அதை அழைத்தால், அது அழைத்தவனைக்கொன்றுவிடும். ஆயுதத்தை எறிந்துவிட்டவர்கள் தோல்வி அடைந்தவர்களுக்கு ஸமானம் என்று சொல்லிவிட்டு திருஷ்டத்யும்னன், பீமன் ஸாத்யகி முதலியோரைக் கொடும் போர் செய்து தோல்வியடையும்படிசெய்தான். இதன் பின்பு ஆக்னேயாஸ்திரத்தை பிரயோகம் செய்து பாண்டவஸேனையையே எரித்துவிடட்டும் என்றுவிட, அதன் வேகத்தை எளிதில் அர்ஜுனன் பிரம்மாஸ்திரத்தால் அடக்கிவிட்டான்.

வின 68:—இவ்வாறு தனது அஸ்திரங்கள் வீணானதைக்கண்டு அசுவத்தாமன் என்னசெய்தான்? மேல் என்னநடந்தது?

விடை:—இந்த ஸமயத்தில் தனுர்வேதமே பொய் என்ற வெறு

ப்பு அவனுக்கு வாத் தனது ஆயுதம் முதலியவைகளை எல்லாம் எறிந்துவிட்டு யுத்தகளத்தை விட்டு ஓடிப்போனான். போகையில் வியாஸர் அவன் முன் தோன்றினார். அவரை நோக்கி, 'நான் எவ்வளவு விசேஷ அஸ்திரங்களை விட்டும் அவைகள் எல்லாம் பாண்டவர்களை ஒன்றும் செய்ய முடியாமல் விணுகக்காரணம் என்ன," என்று அசுவத்தாமன் கேட்டான். அதற்கு அவர், நாராயணர் என்றவர் முன்னொரு காலத்தில் ஹிமாசலத்தின் சாரலில் பரமசிவத்தை உத்தேசித்து தபஸிருக்க அவருக்கு பரமசிவன் பிரத்யக்ஷமானார். அப்பொழுது நாராயணர் அவரைத் துதிக்க உனக்கு எந்த அஸ்திராதிகளாலும், தேவதைகளாலும், இன்னும் எந்த விதத்தாலும் ஒரு விதக்கேடும் வாராதிருக்கட்டும் என்று வரமளித்தார். அந்த நாராயணரே கிருஷ்ணனாக இப்பொழுது இருக்கிறார். அந்த நாராயணரது தபஸிலிருந்து நரன் என்ற ஒரு ஆள் உண்டானான். அவனே இப்பொழுது அர்ஜுனனாக இருக்கிறான். இவ்வளவு சிறந்த கிருஷ்ணார்ஜுனர்கள் அங்கு இருப்பதால்தான் பாண்டவஸேனையை உனது அஸ்திரங்களுக்கு அழிக்கும் திறன் இல்லாமல் போகின்றது' என்று சொல்லி சிவத்யானத்தின் மஹிமையைவெகு விஸ்தாரமாக அவர் அசுவத்தாமனுக்கு எடுத்துரைத்தார். இதைக்கேட்டதும் அசுவத்தாமனுக்கு பகவானிடமிருந்த பக்தி உண்டாக, கௌரவஸேனை இருக்குமிடம் வந்து அன்று சண்டையை நிறுத்திவிட்டான். பாண்டவர்களும் தமது படைவீடு சென்றனர்.

வினு 69:—பாண்டவர் படைவீட்டில் அன்றிரவு என்ன நடந்தது?

விடை:—பாண்டவர்கள் படைவீடு சென்றதும் அவர்களைப்பார்க்க வியாஸர் வந்தார். அவரை நோக்கி அர்ஜுனன், 'நான் சண்டை செய்து வரும்பொழுது என் முன்னே ஒரு தேஜோவானான புருஷன் ஒரு சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு போவதைப் பார்த்தேன். அவரது சூலத்திலிருந்து அநேக பாணங்கள் புறப்பட்டு ஸேனைகளைக் கொல்வதைக்கண்டேன். அதன் பேரில்தான் நான் பாணம் விட அவர்கள் இறந்தார்கள். எல்லோரும் கௌரவ ஸேனையை நான் வெட்டிச்சாய்ப்பதாக எண்ணி என்னைப்புகழுகிறார்கள். அது வீண்பேச்சு. இவ்வாறு எனக்கு தினம் ஸஹாயம் செய்துவரும் புருஷன் யார்? என்றுகேட்டான். அதற்கு வியாஸர் 'அவர்தான்

அப்பரம்பொருளாகிய பரமசிவன்; அவரது ஸஹாயம் யாருக்கு யுத்தத்திலிருக்கிறதோ அவனுக்கு நிச்சயம் ஜயம் வரும். ‘தாம் ஏதோ ஜயிப்பதாக ஒருவரும் கர்வப்பட நியாயமே இல்லை. எல்லாம் அவரது செயலாலேயே முடிவுபெறுகின்றன’ என்று சொல்லி பரமசிவத்தின் மேன்மையை எடுத்துரைத்து வியாஸர் வேதத்தில் சிவஸ்தோத்திரமாகச் சொல்லப்பட்டிருக்கும் சதருத்ரீயம் என்ற பாகத்தின் விசேஷத்தையும் எடுத்துரைத்தார்.

வினா 70:—இப்பர்வகதையில் பரமபதம் அடைந்த துரோணரது சரிதத்தில் முக்கிய விஷயங்கள் என்ன?

விடை:—1. பாரத்வாஜருக்குப் பிள்ளையாகப் பிறந்து பரசுராமர் அக்னிவேச்யர் முதலியோரிடம் வில்வித்தை பயின்றது.

2. அப்பொழுது தம்மோடு தோழனாகயிருந்த துருபதனிடம் பிற்காலத்தில் மனஸ்தாபம் உண்டாகப் பாண்டவர்களுக்கு ஆசாரியராகிய துருபதனை அவர்கள் மூலமாகச் சிறை பிடித்தது.

3. அதனால் விளைந்த ஆபத்துக்கள்.

4. துரோணர் திருதிராஷ்டிரன் முதலியோருக்கு தகுந்த ஸமயங்களில் புத்திமதி கூறி சண்டைவராமல் தடுத்துப் பாண்டவர்களைக் காப்பாற்ற எண்ணியது.

5. சண்டை வந்தகாலத்தில் அவரது மனோநிலை, அதற்கு நியாயங்கள்.

6. அவர் சண்டையிட்ட சிறப்பு அவரது மனஸ் ஸமாதானம்.

7. அவர் தமது மரணத்தை வெளியிட்டு அதை வருவித்துக்கொண்டு மரணம் அடைந்த சிறப்பு.

8. அவரது மனோநிலையின் சிறப்பு.

# 8. கர்ணபர்வம்

---

மாதுலனாகிய மேதுலனாகியும் வஞ்சன்கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழிபாலொடு போதரவுண்ட புயல்வண்ணா
மாதவயாதவ வாசவகேசவ மாயாவாயா மதுஸூதா
வாதியுமந்தமு மாகியநின்புக ழல்லாதுரையே னடியேனே.

வினா 1 :—இவ்வாறு துரோணர் இறந்ததைக் கேட்டதும் திருதிராஷ்டிரன் நிலை என்னமாக இருந்தது?

விடை :—திருதிராஷ்டிரனுக்கு பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர் முதலியோர் துரியோதனன் விஷயமாகச் சொன்ன புத்திமதிகள் யாவும் ஞாபகம்வர, வெகுவாக பழைய ஸங்கதிகளை எண்ணி எண்ணி அவன் துக்கிக்கத் தொடங்கினான். பின்பு எல்லாம் விதிவசமே என்று தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டான்.

வினா 2 :—பதினாறும்நாள் காலையில் யுத்தவிஷயமாக என்ன ஏற்பாடுகள் நடந்தன?

விடை :—துரோணர் இறந்தவிஷயமாக முதலில் துக்கித்துவிட்டு கௌரவர்கள் எல்லோரையும் ஒருவாறு தேற்றி, துரியோதனன் மேல்நடக்கவேண்டிய யுத்தவிஷயமாக சில வார்த்தை கூறலாயினன். 'ஓ ராஜாக்களே! நான் இப்பொழுது பேசும் விஷயத்தை தயவுசெய்து ஒருவரும் தடுத்துப் பேசாமலிருக்க வேண்டும். நான் என்ன பிரயத்தனம் செய்தபோதிலும் எல்லாம் விதிவசம் என்பதற்கு ஐயமில்லை. அதற்காக நாம் பயந்து முயற்சியை விட்டுவிடாது, எப்பொழுதும் தொழில் செய்ய வேண்டியதுதான். மனுஷ்ய யத்தனத்தில் எவ்வளவு நாம் செய்யவேண்டுமோ அவ்வளவையும் நாம் செய்து பார்க்கவேண்டும். அதற்காக இப்பொழுது நான் கர்ணனை, பீஷ்மதுரோணருக்கு அடுத்தபடியில் சிறந்தவன் என்ற எண்ணம் கொண்டு, நமது ஸேனாதிபதியாக நேமித்திருக்கிறேன்' என்று பொதுவாகச் சொல்லிவிட்டு துரியோதனன் கர்ணனை நோக்கி, உயிர்த்

தோழா! இதற்கு முன்னிருந்த ஸேனாதிபதிகள் சிறந்த வீரர்களாய் இருந்தபோதிலும், அவர்களுக்குப் பாண்டவர்களிடம் இருந்த பக்ஷபாதத்தால் இதுவரையில் அப்பாண்டவர்கள் பிழைத்திருந்தார்கள். இப்பொழுது நீ ஸேனாபதியாய் விட்டபடியால் இன்றோடு பாண்டவர்கள் காலம் முடிந்தது என்று நான் எண்ணுகிறேன். நீ என்னை அவசியம் திருப்திசெய்து வைக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். இதைக் கேட்டதும் கர்ணன் முன்பின் யோசிக்காமல் அவ்வாறே தடையின்றிச் செய்வதாக வாக்களித்தான். உடனே கர்ணனுக்கு ஸேனாபதிப்பட்டாபிஷேகமாக, கௌரவவீரர்களுக்கு எல்லாம் மிகுந்த உத்ஸாஹம் உண்டாய்விட்டது. அப்பொழுது கர்ணன் தனது ஸேனையை மகரவ்யூஹமாகக் கட்டிக்கொண்டு யுத்தத்திற்குத் தயாரானான். இதைக்கண்ட தருமபுத்திரர் அர்ஜுனனை நோக்கி 'கௌரவஸேனையில் சிறந்த வீரர்கள் எல்லோரும் இறந்துவிட்டார்கள். இருப்பவர்கள் எல்லோரும் ஸாதாரண ஜனங்களே. ஆனால் கர்ணன் ஒருவன் மாத்திரம் இன்னும் இருக்கிறான். அவனையும் கூடிய சீக்கிரத்தில் நீ கொன்றுவிடு' என்று உத்தரவு செய்ய, அவன் தனது ஸேனையை அர்த்தசந்திரவ்யூஹமாக ஒழுங்குபடுத்தி சண்டைக்குத் தயாரானான்.

வினா 3:—அன்று யுத்தம் எவ்வாறு தொடங்கி நடந்துவந்தது?

விடை:—அன்று தொடங்கிய யுத்தத்தில் பீமனுக்கும் க்ஷேமதூர்த்திக்கும் யுத்தமுண்டாக அவனோடு வந்த யானைக்கூட்டங்களை பீமன் எளிதில்கொன்று முடிவில் ஒரு வாஹனமும் இன்றி தரையில் நின்று சண்டை செய்துகொண்டிருந்த அவனைக் கதையால் அடித்துக்கொன்றான். பின்பு ஸாத்யகிக்கும் கேகயராஜ்யாதிபதிகளுக்கும் போர் உண்டாக, அதில் அவன் அவர்களை முறியடித்தான். அதன்பின்பு பீமனுக்கும் அசுவத்தாமனுக்கும் வெகுகாலம் ஸமயுத்தம் நடக்க, முடிவில் அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு இருவரும் மூர்ச்சை அடைந்தார்கள். இதைக்கண்ட ஆகாயத்திலிருந்த ஸித்தர்கள் இருவர்களையும் புகழ்ந்து கொண்டாடினர். அர்ஜுனன் அந்த ஸமயத்தில் ஸம்ஸப்தகர்களுள் பாக்கி இருந்த ஸேனைகளோடு வெகு ஆவேசத்தோடு யுத்தஞ்செய்து அவர்களை யமபட்டணத்திற்கு வரிசையாய் அனுப்புவித்துக்கொண்டிருந்தான்.

வினு 4:—இவ்வாறு கொடிய யுத்தம் செய்துகொண்டிருந்த அர்ஜுனனை யார் யார் சண்டைக்கு அழைத்தது? பின்பு அவன் என்ன செய்தான்?

விடை:—இவ்வாறு அர்ஜுனன் கோரயுத்தம் செய்துகொண்டிருக்கையில் அர்ஜுனனை மூர்ச்சைதெளிந்து எழுந்த அசுவத்தாமன் கொடுஞ்சொற்களைச் சொல்லி சண்டைக்கு அழைத்தான். அப்பொழுது பகவானது வருமதியின்பேரில் யுத்தம் தொடங்கியது. அசுவத்தாமனது சண்டையின் வேகத்தால் அர்ஜுனன் முதலில் பிரமை பிடித்தவன்போலாக அசுவத்தாமன் ஜயகோஷஞ்செய்தான். இதைக்கேட்டதும் அர்ஜுனனுக்குப்பிரமை தெளிந்துவிட்டது. பின்பு அசுவத்தாமன் அர்ஜுனனைத்தோற்கடிக்க எவ்வளவு முயன்றபோதிலும் அவைகள் எல்லாம் வீணுபின. அப்படி இருந்தும் அசுவத்தாமனும் விடாதுகொஞ்சகாலம் யுத்தஞ்செய்து, அர்ஜுனனைக் கஷ்டப்படுத்தினுன். முடிவில் அசுவத்தாமன் ஸாரதி அர்ஜுனனால் இறக்க அவன் குதிரைகள் அவனை யுத்தகளத்திற்கு வெளியில் இழுத்துக்கொண்டு போயின. அப்பொழுது அவன் அவைகளைத் தடுத்து திருப்பி அர்ஜுனர் இருக்கும் இடம் வாராது கர்ணன் இருக்கும் இடம் சென்றுன். அதற்குள் யுத்தகளத்தில் தண்டதாரன் தண்டன் என்பவர்கள் கொடிய போர்செய்து பாண்ட வஸேனையைக் கலக்குவதைக்கண்டு பகவான் தேரை அவர்கள் இருக்குமிடம்கொண்டுபோய் அர்ஜுனனை அவர்களோடு சண்டை செய்யும்படி ஏவினுர். அவர்சொல்லியபடி தண்டதாரனோடு வெகுகாலம் ஸமயுத்தம்செய்து முடிவில் அவனது கைகளையும் தலையையும் அறுத்துத்தள்ள, அவன் இறந்ததைக்கண்ட அவன் ஸஹோதரனுகிய தண்டன் அர்ஜுனனை வந்து எதிர்த்தான். சீக்கிரத்தில் அவனும் தலையறுபட்டு இறந்தான். இதைக்கண்ட வீரர்கள் எல்லோரும் அர்ஜுனனைப் புகழ்ந்து பேசினர். இவ்வாறுனதும் அர்ஜுனன் ஸம்ஸப்தகர்களை நோக்கிச்சென்று, அவர்களை துரிதமாகச் சிதர அடித்துக் கொன்று தள்ளினுன்.

வினு 5:—அர்ஜுனன் இவ்வாறு யுத்தம் செய்துவருகையில் மற்றைப்பாகங்களில் யுத்தம் எவ்வாறு நடந்துவந்தது?

விடை:—அர்ஜுனனுக்கு மாமனுரான பாண்டிய ராஜன் கொடிய போர் செய்துவருகையில் அவனை அசுவத்தாமன் எதிர்த்தான். இந்தச் சண்டையில் அசுவத்தாமன் எவ்வளவோ தரம், தோற்

கும் நிலைமை அடைந்தபோதிலும் முடிவில் அவன் பாண்டிய ராஜனது தலையை அறுத்துக்கொன்றான். கர்ணன் கொடிய போர் செய்துகொண்டு பாண்டவவீரர்களை நிலைக்கவொட்டாமல் அடித்துக்கொண்டே வந்தான். அன்று அவன் தனது சக்தி முழுவதையும் காட்டி தன்னால் கூடிய வரையில் கொலைத் தொழிலை தங்குதடையின்றிச் செய்தான். அப்பொழுது ஸஹாதேவனுக்கும் துச்சாஸனனுக்கும் பெரிய சண்டையுண்டாக துச்சாஸனனது பல பராக்கிரமங்கள் யாவும் ஸஹாதேவனை அசைக்கமுடியாமல் வீணாய்ப்போயின. முடிவில் துச்சாஸனன் ஸஹாதேவனால் மூர்ச்சை அடைந்து விழ, அவன்ஸாரதி அவனை ஒதுக்கிக்கொண்டுபோய் விட்டான். கர்ணனுக்கும் நகுலனுக்கும் சண்டையுண்டாகி வெகுகாலம் ஸமயுத்தம் நடந்துவருகையில் நகுலனைக் கர்ணன் நிராயுதபாணியாக நிறுத்திவிட்டான். நகுலன் ஆயுதம் எடுக்க முயலுகையில் அவன் கழுத்தில் தனது வில்லைமாட்டி இழுத்து கர்ணன் அவனைத் தனது அம்பால் குத்தி, 'உனக்கு மேல்பட்டவர்களோடு போர்செய்ய வாராதே; வீட்டிற்குப்போய் கிருஷ்ணார்ச்சுனாள் இருக்குமிடத்தில் இரு' என்றுசொல்லி பீமஸஹாதேவாளை முன்னர் துறத்தியதுபோல் நகுலனையும் அவமானஞ் செய்து குந்திக்குக் கொடுத்திருந்த வாக்கிற்கு இசைய கொல்லாது விட்டுவிட்டான் பின்பு அவன் வேறோரிடத்தில் யுத்தம் செய்யப்போய்ப் பாஞ்சாலர்களை ஹதம் செய்து கொண்டிருந்தான்.

வின 6:—இவ்வாறு நகுலன் அவமானப்பட்டுப் போனதும் ஜயப் யார்பக்ஷம் வரும்போ லிருந்தது? ஏன்? யார் இதை எவ்வாறு மாற்றியது?

விடை:—இவ்வாறு நகுலன் அவமானமடைந்து யுத்தகளம் விட்டுத் திரும்பிப்போனதும் திருதிராஷ்டிரனது வைசிய புத்திரனை யுயுத்ஸுவுக்கும் சகுனி பிள்ளையாகிய உலூகனுக்கும் கொடிய போர் உண்டாக அதில் உலூகன் யுயுத்ஸுவை அவமானப் படுத்தி ஓடும்படி செய்தான். அதேஸமயத்தில் சகுனிக்கும் ஸுதஸோமனுக்கும் உண்டான போர் இருவருக்கும் ஸம யுத்தமாகவே முடிந்தது. இதற்குள் கர்ணன் பாஞ்சாலர்களை தலை எடுக்கவொட்டாது அடிக்க பாண்டவஸேனையில் மிகுந்த குழப்பம் உண்டாயிற்று. கிருபருக்கும் திருஷ்டத்யும்னனுக்கும் உண்டான சண்டையில் திருஷ்டத்யும்னன் கி

பரது பாணங்களால் மூர்ச்சை அடைய அவனது ஸாரதி யுத்தகளம்விட்டுத் தேரைக் கொண்டுபோய்விட்டான். அப்பொழுது அவன் அர்ஜுனனாவது பீமஸேனனாவது இருந்த விடத்தை நோக்கித் தன் தேரைக் கொண்டுபோகும்படி உத்தரவு செய்தான். பீமஸேனனைக் கண்டவுடன் திருஷ்டத்யும்னனுக்கும் உயிர் வந்தது. இவன் கதி இவ்வாறாக, கிருதவர்மாவை சிகண்டி வந்து எதிர்த்தான். முதலில் கிருதவர்மா தோல்வி அடையும் தருணத்தை அடைந்தபோதிலும் முடிவில் சிகண்டி எதிரியினது பாணங்களால் மூர்ச்சை அடைந்தான். இவைகளால் ஜயம் ஒருவேளை கௌரவர்கள் பக்கம் போகும் போல் இருந்தது. இந்த ஸமயத்தில் அர்ஜுனன் அநேக கௌரவவீரர்களை ஜயித்துக்கொண்டுவரப் பாண்டவர்களுக்குக் கொஞ்சம் தைரியமுண்டாயிற்று. இவ்வாறு சண்டை நடந்து வருகையில் ஸத்யஸேனன் என்ற கௌரவவீரன் ஒருவன் பெரிய ஈட்டியால் பகவானது இடதுகையை அடிக்க அவர் கையிலிருந்த கடிவாளங்களும், சவுக்கும நழுவிக் கீழே விழுந்துவிட்டன. உடனே அர்ஜுனனுக்கு மிகுந்த ஆவேசம் வர அவன் ஸத்யஸேனனது தலையை வெட்டி பனங்காயை உருட்டுவதுபோல் எளிதில் உருட்டிவிட்டான். அதன் பின்பு அவன் ஸம்ஸப்தகர்களையும் திரிகர்த்தர்களையும் எதிர்த்து அவர்களை எளிதில் வென்றான்.

வினு 7:—அர்ஜுனனால் பாண்டவர்கள் பக்கம் ஜயம் திரும்பியதும் அன்று யுத்தம் எப்படி நடந்து முடிவுபெற்றது?

விடை:—ஜயம் பாண்டவர்கள் பக்கம் திரும்பியதும் தருமபுத்திரருக்கும் துரியோதனனுக்கும் கொடியபோர் உண்டாக அதில் தருமபுத்திரர் மிகுந்த ஆவேசத்தோடு துரியோதனனது குதிரை முதலியவைகளைக் கொன்று அவனைத் தரையில தத்தளிக்கும்படி நிறுத்திவிட்டார். இந்நிலைமையைக் கண்டு கர்ணன் அசுவத்தாமன் முதலியோர் துரியோதனனுக்கு ஸஹாயம் செய்ய ஓடிவர, பாண்டவர்கள் எல்லோரும் தருமபுத்திரருக்கு ஸஹாயமாக ஓடிவந்தனர். அப்பொழுது நடந்த கொடிய யுத்தத்தில் கர்ணனால் பாண்டவஸேனையும், அர்ஜுனனால் கௌரவ சேனையும் கணக்கின்றி மாளத்தொடங்கின. அந்தச் சண்டையில் மறுபடியும் தருமபுத்திரருக்கும், துரியோதனனுக்கும் மிகுந்த போர் உண்டாக, அதில் அவர் வெகுநாழிகை அவ

னேறி ஸமயுத்தம் செய்துவிட்டு முடிவில் அவனை மூர்ச்சை அடையும்படி செய்தார். இதைக்கண்ட பீமஸேனன் துரி யோதனனைக் கொல்லாதிருக்கும்படித் தனது தமயனை தடுத்து நிறுத்திவிட்டான். அன்று துரியோதனன் பிழைத்தது புனர் ஜன்மமாகவே இருந்தது. இதன் பின்பு ஸாத்யகி, அர்ஜுனன் முதலியோர் கௌரவசேனையைக் கலக்கி கர்ணனைச் சூழ்ந்து கொள்ள அவன் ஒருவனாகவே இவ்வளவு பேரையும் தடுத்து வந்தான். இவ்வாறு யுத்தம் பலமாக நடந்துவருகையில் ஸூர்யன் அஸ்தமனமாக கௌரவஸேனை சிதைவு அடை ந்து தத்தளித்தது. இந்த ஸமயத்தில் 16-ம் நாள் யுத்தம் முடிய இருதிறத்தாரது ஸேனைகளும் தத்தம் இருப்பிடம் சென்றன.

வினா 8:—மறுநாட் காலையில் யுத்தவிஷயமாக கர்ணனுக்கு என்ன விருப்பம் உண்டாயிற்று? ஏன்? அது யாரால் எவ்வாறு திரு ப்தி செய்யப்பட்டது?

விடை:—முன் நடந்த யுத்தத்தின் முடிவை எண்ணி துரியோதனன் துக்கிக்கக் கர்ணனுக்கு மிகுந்த துக்கமுண்டாயிற்று. அப் பொழுது அன்று அர்ஜுனனையாவது கொல்லுவது அல்லது தானாவது இறப்பது என்று கர்ணன் பிரதிஜ்ஞை செய்து கொண்டான். இதன் பின்பு தானும் அர்ஜுனனும் எல்லா விஷயங்களிலும் ஸமமாக இருப்பதாகவும் ஆனால் அர் ஜுனனுக்கு பகவான் ஸாரதியாக அமைந்ததுபோலத் தனக்கு ஒருஸாரதி அமைந்துவிட்டால், தான் அர்ஜுனனை எளிதில் கொன்றுவிடலாம் என்பதாகவும், தனக்கு ஸாரதிதொழில் நடத்தவல்லவன் சல்லியன் ஒருவனே என்பதாகவும் கர்ணன் கொஞ்சகாலம் எண்ணமிட்டுவிட்டு தனது மனத்தின் எண் ணத்தை துரியோதனனிடம் அவன் வெளியிட்டான். இதைக் கேட்ட துரியோதனன் சல்லியனை கர்ணன் அபிப்பிராயப்படி நடந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்ள தன்னை ஏதோ அவ மரியாதை பண்ணிவிட்டதாக எண்ணி சல்லியன் வெகு கோபத்தை அடைந்தான். உடனே தனது ராஜ்யத்திற்குப் போய்வர தனக்கு விடை கொடுக்கும்படியும் அவன் துரியோ தனனைக் கேட்டுவிட்டான். அந்த ஸமயத்தில் துரியோதனன் மிகுந்த தந்திரமாக 'நீ குதிரை விஷயத்தில் பகவானுக்கு ஸமானம்' என்று சல்லியனைத் துதித்து, கர்ணனது பராக்கிர

மத்தை எடுத்துரைத்து அவனுக்கு ஸாரத்யம் செய்வதால் சல்லியனுக்குக் குறைவொன்றும் இல்லை என்பதையும் நன்றாய் அவனுக்கு விளக்கினான். இந்தக் கேட்டதும் சல்லியன் மனம் ஸமாதானமாக தான் முன்னமே இவ்விஷயத்தில் தருமபுத்திரருக்கு அளித்தவாக்கு அவனுக்கு ஞாபகம்வந்தது. உடனே, 'நான் என்மனதில் உண்டாகும் பிரியாப்பிரியமாகிய எண்ணங்கள் எல்லாவற்றையும் தடையின்றி வெளியிடுவேன்; அதற்குகர்ணன் கோபிக்கக்கூடாது, இப்படி வாக்கு அவன் அளிப்பானாகில் நான் அவனுக்கு ஸாரத்யம் செய்ய ஒப்புக்கொள்ளுகிறேன்' என்று ஸாரத்யத்தை ஒப்புக்கொண்டான். கர்ணனும் இதற்கு இசைந்தான்.

வினா 9:—சல்லியன் மனதை மேலும் ஸமாதானப்படுத்த துரியோதனன் என்ன செய்தான்?

விடை:—பகவான் திரிபுரத்தை அழித்தகாலத்தில் பிரம்மா ஸாரத்யம் ஒப்புக்கொண்டதையும், கர்ணன் பரமசிவானுக்கிரஹம் பெற்று பரசுராமரிடம் வில்வித்தைபயின்று மேன்மைவாய்ந்தவனென்பதையும் எடுத்துரைத்து சல்லியன் மனதைத் திருப்திப்படுத்த, இதன் பின்னும் தன் பிடிவாதத்தை விடாதவனாய், தனது கோரிக்கைப்படி கர்ணன் நடந்துகொண்டால் மாத்திரம் தான் அவனுக்கு ஸாரத்யம் செய்வதாக அவன் ஒப்புக்கொண்டான்.

வினா 10:—திரிபுரங்களின் விருத்தாந்தம் என்ன?

விடை:—முன்காலத்தில் தாராக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்ற மூன்று தைத்யர்கள் இருந்தார்கள். அவர்கள் தமது தேகத்தைத் துரும்பாக எண்ணி பிரம்மதேவரை உத்தேசித்து கொடுந்தவம் புரிந்தனர். கொஞ்சகாலத்தில் பிரம்மதேவர் அவர்களது கண்முன்தோன்ற அவரைநோக்கி, 'எங்களுக்கு எவ்விதத்திலும் மரணமே அணுகக்கூடாது' என்ற வரத்தைக் கேட்டார்கள். அதற்கு பிரம்மதேவர், 'அப்பா உலகில் அழியாத வஸ்து ஒன்றும் இல்லை. மேலும் எனக்கு அந்த வரத்தைக் கொடுக்கவேமுடியாது, ஆகையால் வேறு ஏதாவது வரத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள்' என்றார். உடனே அவர்கள் 'நாங்கள் மூன்று திவ்யபட்டணங்களில் வாஸம் செய்துகொண்டு உலகெங்கும் எங்கள் இஷ்டப்படி உலாவவேண்டும். ஆயிரம் வருஷத்திற்கொருதரம் எங்கள் பட்டணங்கள்

மூன்றும் ஒன்றாகச் சேரவேண்டும், பின்பு பழையபடி மூன்றாகப்பிரியவேண்டும். மூன்றும் ஒன்றாய்ச்சேர்ந்திருக்குங்காலம் நோக்கி ஒரே பாணத்தால் மூன்று பட்டணங்களையும் யார் அடிக்கிறார்களோ அவரால்லேயே எங்களுக்கு அழிவு உண்டாகட்டும்,' என்று பிரம்மதேவரிடம் கேட்டுக்கொள்ள, அவர் அவ்வாறே ஆகுக என்று அனுக்கிரகித்துத் தமது இருப்பிடஞ் சென்றனர். இதன்பின்பு இம்மூவரும் அஸுரதச்சனாகிய மயனதுஸஹாயத்தால் பொன், வெள்ளி, இரும்பு ஆகியமூன்று உலோகங்களால் விஸ்தாரமாகிய மூன்று பட்டணங்களை உண்டாக்கிக்கொண்டு வரிசைக்கிரமமாக பட்டணம் ஒவ்வொன்றில் ஒவ்வொருவராக வஸிக்கத் தொடங்கினர். பின்பு இவர்கள் தமது இஷ்டப்படி பட்டணங்களோடு ஆகாயமார்க்கமாகப் போய் ஊர்கள்மேல் உட்கார்ந்து அவ்வூர் முழுவதையும் அழித்து ஆனந்தித்து வந்தனர். தேவதைகள் எல்லோரையும் இவர் இடைவிடாது வருத்தி வந்தனர். கஷ்டம் பொறுக்கமாட்டாது தேவதைகள பிரம்மாவிடம் செல்ல அவர் அவர்களை பரமசிவனிடம் கூட்டிக்கொண்டுபோய், அவரை எல்லோரும் சேர்ந்து ஸ்துதிக்கத் தொடங்கினர்.

வின 11.—பரமசிவன் திரிபுரத்தை அழித்தவிவரம் என்ன?

விடை:—தேவதைகளது ஸ்தோத்திரத்தைக் கேட்ட பரமசிவன் தமது சக்தியில் பாதி கொடுப்பதாகவும், அதன் ஸஹாயத்தால் அந்தத் தானவர்களைக் கொல்லும்படி தேவதைகளை ஏவ அவர்கள் அதுகூடத் தம்மால் முடியாது என்று மறுத்துவிட்டனர். அப்பொழுது ஸகலதேவதைகளையும் தம்மாலியன்ற ஸஹாயத்தைச் செய்யும்படி பரமசிவன் கேட்க, பூமியே ரதமாகவும் ஸூரிய சந்திரர்களை சக்கிரங்களாகவும், நான்கு வேதங்களை தேர்க் குதிரைகளாகவும், மேருவேவில்லாகவும், ஆதிசேஷனை நாண் கயிறாகவும், விஷ்ணுவே அம்பாகவும், எல்லாம் தயாராக தகுந்த ஸாரதிமாத்திரம் அகப்படவில்லை. அப்பொழுது பிரம்மாவே அந்தவேலையை ஸந்தோஷமாக ஒப்புக்கொண்டார். இந்த வைபவத்தைத் தேவதைகள் ரிஷிகள், யாவரும் கண்டு களித்துப் பரவசமடைந்தனர். பரமசிவனைக் கண்டதும் திரிபுரவாஸிகள் எல்லோருக்கும் மிகுந்தபயம் உண்டாயிற்று. அவர்கள் பரமசிவனை வந்து எதிர்த்தார்கள். உடனே அவருக்குக் கோபம் அதிகரிக்க ரதம் புதையத் தொடங்கியது.

அப்பொழுது விஷ்ணு தேர்ச்சக்கிரத்தை விருஷபஉருக்கொண்டு தமது கொம்பால் தூக்கினார். அந்த ஸமயத்தில் பகவான் ரதத்தைவிட்டு எழுந்து ஒருகாலைக் குதிரைகளின் மீதும், மற்றொருகாலை விருஷபத்தின்மீதும்வைத்துக்கொண்டு திரிபுரத்தை நோக்கினார். அந்த ஸமயத்தில் மூன்று பட்டணங்களும் ஒன்றாய்ச்சேர பரமசிவன் ஒரு பாணத்தை அவைகளின் மேல் விட்டார்; அந்த மூன்று பட்டணங்களும் இருந்தவிடம் தெரியாது எரிந்துபோயின.

வினா 12.—திரிபுர தகனத்தில் அடங்கிய உட்பொருள் என்ன?

விடை:—திரிபுரமென்பது ஸ்தூல ஸூக்ஷ்மகாரணதேகங்களை உணர்த்துகின்றது. பரமசிவன் ஆத்மாவையும், மூன்று பட்டணங்கள் ஒன்றாய்ச் சேரும்ஸமயம் விசாரணைஸமயத்தையும் சிவனது பாணம் நிஷ்டையையும் உணர்த்துகின்றது. திரிபுரத்தை எரித்தலாவது விக்ஷேப (தோற்ற) நிவர்த்தியாகி ஸமாதி கைகூடல். அந்த ஸமயத்தில் சிவன் தனது குதிரைகளின்மேலும், விருஷபத்தின் மீதும் அடிவைத்துக்கொண்டு நிற்கிறதாகச் சொல்லப்பட்டது; ஸமாதிஸமயத்தில் வேதங்களுக்கும் தர்மங்களுக்கும் ஆத்மா அப்பாற்பட்டவனாகிறான் என்பதை விளக்கும். இதுவே இக்கதையில் அடங்கி இருக்கும் உட்பொருள். இந்த ஸந்தர்ப்பத்தை எல்லோர் மனத்திலும் பதியும்படிசெய்து அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்காகப் பெரியோர் சிவன் கோயில்களில் இந்த திருபுரதகனத்தை ரதோத்ஸவமாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் தேர் குதிரைகள் ஸாரதி முதலியன இக்கதையிற் சொல்லியவாறு இருத்தலையும் காண்க. ஒவ்வொரு உத்ஸவத்திலும் கர்மகாண்ட பாராயணம் செய்யும் அந்தணர் ரதோத்ஸவத்தன்று அதன் மேன்மையைப் புகட்டுவதற்காக ஞானகாண்டமாகிய உபநிஷத் பாராயணம் பண்ணுவதையும் காண்க. இவ்வளவு சிறந்த பொருளை அடக்கியுள்ளது இத்திரிபுர தகனம்.

வினா 13:—கர்ணனது மேன்மையைப்பற்றி துரியோதனன் அப்பொழுது என்ன சொன்னான்? பின்பு என்ன நடந்தது?

விடை:—'முன்காலத்தில் பரசுராமர் பரமசிவனைக் குறித்து தபஸிருக்க அவர் பரசுராமர் முன் தோன்றி தம்மிடத்திலிருந்த திவ்ய அஸ்திராதிகளை அவருக்குக் கொடுத்தார். பின்பு பரமசிவன் பரசுராமரது மஹிமையை பார்வதிக்கு விஸ்தாரமாக

எடுத்துரைத்தார். இவ்வாறு "ஸகல அஸ்திரங்களையும் அடைந்தபின்னர் பரசுராமர் தாம் செய்யவேண்டிய லோகோபகாரங்களை அவைகள் மூலமாகச் செய்துவிட்டு ஸுகமாக இருந்தார். அந்த பரசுராமர் தமக்குத் தெரிந்தவைகள் எல்லாவற்றையும் கர்ணனுக்குப் புகட்டி இருக்கிறார். ஆகையால் கர்ணன் மிகச் சிறந்தவன்' என்று துரியோதனன்சொன்னான். மேலும் பீமன், நகுலன், ஸஹாதேவன் முதலியோரை யுத்தகளத்தில் கர்ணன், அவமானப்படுத்திவிட்டதையும் எடுத்துரைத்து, அவனது சண்டையால் தான் தனக்கு ஜயம் வரவேண்டும் என்று எவ்வளவோ அவன் சொல்லிப்பார்த்தான். அதற்குள் கர்ணன் 'நீ பகவானுக்கு ஸமானம்' என்று சல்லியனைத் துதிக்க அவன் தேரைத் தயார்செய்து கர்ணன்முன்பு கொண்டுவந்து நிறுத்தினான். உடனே கர்ணன் யுத்தத்திற்குப் புறப்பட்டான்.

வின 14:—சல்லியன் கர்ணஸாரத்ய விஷயமாகத் தருமபுத்திரருக்குக் கொடுத்தவாக்கை எவ்வாறு நடத்தினான்? அப்பொழுது இருவருக்கும் நடந்த தர்க்கம் என்ன?

விடை:—கர்ணன் ரதத்தில் போகும்பொழுதே சல்லியனிடம் தான் பராக்கிரமத்தைக்காட்டிப் பாண்டவர்களை சிதற அடித்து அன்று துரியோதனனுக்கு ஜயம் வரும்படி செய்யப்போகிறதாகப் பெருமை பேசிக்கொண்டான். அதற்குச் சல்லியன் கர்ணனை நோக்கி 'ஏனடா வீண்பெருமை பேசுகிறாய்! நீ அர்ஜுனனது காண்டீவத்வனி மற்றையப் பாண்டவர்களது பாணவருஷங்கள் முதலியவைகளை அனுபவிக்குங்கால் இந்தவாயுளரல் அடங்கிப் போய்விடாதா? என்று பரிஹாஸம் செய்யத் தொடங்கினான். கர்ணன் இதைக் கவனியாது கொஞ்சநாழிகை மௌனமாக இருந்துவிட்டுப் பின்பு 'ஒருவராலும்கொல்லமுடியாத பராக்கிரமம் வாய்ந்த பீஷ்மத்துரோணாதிகளைப் பாண்டவர்கள் கொன்றுவிட்டார்கள். அப்படி இருந்தும் எனக்கு அவர்களிடம் பயமே உண்டாகவில்லை. வீணாக துரோணர் ஏன் பாண்டவர்களைக் கொல்லாமல் பிழைத்துப்போகும்படி விட்டாரோ தெரியவில்லை' என்று பேசத்தொடங்கினான். இதைக்கேட்ட சல்லியன், 'ஸகல மேன்மையும் வாய்ந்த துரோணரது கதியே இப்படிப்போக, உன்கதி இன்று எப்படியாகுமோ யான் அறியேன்' என்று குறிப்பாகக் கூறினான். உடனே கர்ணனுக்கு துரியோதனன் விஷ

யத்தில் மிகுந்த உபகாரம் செய்யவேண்டும் என்ற ஆவல் உண்டாக, 'யான் எவ்விதத்திலாவது பாண்டவர்களை அபஜயப்படுத்துவேன். அவர்களுக்கு யார் ஸஹாயமாக வந்தாலும் ஸரி, நான் இன்று பாண்டவர்களையாவது கொல்வது அல்லது நானாவது இறப்பது திண்ணம், சீக்கிரம் பாண்டவஸேனையை நோக்கித் தேரை நடத்து, நான் பாண்டவஸேனைகளுள் புகுந்து கலக்க மிகுந்த ஆவல்கொண்டிருக்கிறேன்' என்று தனது எண்ணத்தை வெளியிட்டான். உடனே சல்லியன் கர்ணனுக்கு ஸுபத்ராவிவாஹம், காண்டவதகனம், பரமசிவனோடு சண்டைசெய்த ஸமயம், நிவாதகவசயுத்தம் முதலியவைகளில் வெளிவந்த அர்ஜுனனது பராக்கிரமத்தையும், கோஷயாத்திரை, மாடுபிடி சண்டை, சென்ற ஐந்து நாள்யுத்தம் முதலியவைகளில் அர்ஜுனனால் அவன் பட்ட பாட்டையும் எடுத்து மிக அழகாகக்கூறி அவனது கர்வத்தை அடக்கினான். பின்பு மௌனமாய் வெகுதூரம் போவதற்கு முன் கர்ணன் தன்னைசுற்றிலும் இருந்த பாண்டவவீரரை நோக்கி 'அர்ஜுனன் இருக்கும் இடத்தை எனக்கு காட்டுகிறவன் எவனோ அவனுக்கு நான் என்னிடத்திலிருக்கும் ஸொத்து எல்லாவற்றையும் கொடுத்துவிடுவேன்,' என்று பலவாறாக மிகுந்த ஆவேசத்துடன் சொன்னான். உடனே சல்லியன் 'எதற்கு வீணாக உன் பணம் முதலியவைகளைக் கொடுக்கிறேன் என்கிறாய். அவைகளை வைத்துக்கொண்டு நீ யாகம் ஏதாவது செய்தாலும் செய்யலாமே. அவைகளைக்கொடுத்து அர்ஜுனனைக் கண்டபோதிலும் உன்னால் அந்த அஸஹாயசூரனை ஒன்றும் செய்யமுடியாதே! ஆகையால் உன் ஸேனையால் நான்குபுறங்களிலும் காக்கப்பட்டு அர்ஜுனனோடு போர்செய்,' என்று தடுத்துக் கூறினான். இதைக்கேட்டதும் கர்ணன், 'நீ என்னதான் சொன்னபோதிலும் என்னுறுதி ஒருநாளும் மாறவேமாட்டாது. நான் ஒருவனாகவே அர்ஜுனனை எதிர்க்கப் போகிறேன். நீ என்ன, பார்வைக்கு ஸ்நேஹிதன்போலவும உண்மையில் விரோதியாகவும் காணப்படுகிறாயே! இதென்ன விபரீதம்!' என்று ஆச்சரியப்பட்டான்.

வினா 15:—இவ்வாறு கர்ணன் உறுதியாக இருப்பதைக்கண்டு சல்லியன் மேல் என்னசெய்தான்? இதனால் கர்ணன் நிலை எவ்வாறு மாறியது?

விடை :—கர்ணன் உறுதியைக் கண்டதும் சல்லியன் தான் ஓயும் வரையில் அர்ஜுனனை எதிர்க்க எண்ணுதல் பாம்பு கருடனையும், நாய் புலியையும், எலி பூனையையும் எதிர்க்க எண்ணுதல் போல இருக்கிறதென்று சொல்லி அவனுக்குக் கோபம் உண்டாக்கி அவன் மனம் தளரும்படி செய்தான். அப்பொழுது கர்ணன், அர்ஜுனன், பகவான் ஆகிய இவர்கள் சிறந்த வீரர்களாயினும் தனக்கு அவரிடமிருந்த ஒரு பயமும் இல்லை என்றும், தன்னிடம் இருக்கும் அநேக திவ்ய அஸ்திரங்கள் மூலமாக அவர்களை தான் தடுக்கவல்லவன் என்றும் தன் பலத்தை சல்லியனுக்குத் தெரிவித்தான். இதன்பின்பு கர்ணன் மத்திர தேசத்தோர் நம்பிக்கைத் துரோகிகள் என்றும் மிகுந்தகெட்டவர்கள் என்றும், அந்தவூர் பெண்பிள்ளைகள் ராக்ஷஸிகள் என்றும், குடியர்கள் என்றும், விபசாரிகள் என்றும், பலவாறாக சல்லியனையும் அவன் தேசத்தோரையும் வாயில் நரம்பின்றி திட்டிவிட்டு, 'நீ இனிமேல் என்னிடம் இவ்வாறு எதிரியை ஏற்றிப் பேசுவாயாகில் உன்னை இந்த கதையால் சூர்ணமாக்கிவிடுவேன்' என்று மிகுந்த கோபத்தோடு சொன்னான். அதற்கு சல்லியன் தான் யுத்தகளத்தில் பின்னடையாத சிறந்த அரசர்குலத்தைச்சேர்ந்தவன் என்று சொன்னான். அதன் பின்பு காகம் அன்னத்திடம் பெருமைபாராட்டி பட்டபாட்டை அவன் எடுத்துரைத்து கர்ணனை அதைரியப்படுத்தினான். உடனே கர்ணன் மனம் கொஞ்சம் கலைய தனக்கு விரோதமாகிய பழைய கதைகள் அப்பொழுது அவனுக்கு ஞாபகம் வந்து அவன் மனதை மேலும் கலக்கத் தொடங்கியது.

வினா 16 :—காக்கை அன்னத்திடம் பெருமைபாராட்டி பட்டபாட்டின் விவரம் என்ன? இதன்மூலமாகச் சல்லியன் கர்ணனுக்கு என்ன கருத்தைத் தெரிவித்தான்?

விடை :—ஸமுத்திரத்தின் அக்கரையில் உள்ள ஒரு ஊரில் ஒருகாகம் ஒரு பணக்கார வைசியன் வீட்டு எச்சிலை உண்டு கொழுத்து வளர்ந்துகொண்டிருந்தது. அதை மற்றையக் காகங்கள் யாவும் மேன்மைபடுத்த அதற்கு மிகுந்த கர்வம் உண்டாகி தான் காகம் என்ற எண்ணமே அதன் மனத்தைவிட்டுப் போய்விட்டது. தான் ஏதோ ஒரு பெரிய பலமுள்ள பக்ஷி என்ற எண்ணம் அதன்மனதில் குடிகொண்டுவிட்டது. இவ்வாறு இருக்கையில்

அவ்வூருக்கு மானஸ ஸரஸிலிருந்து கடலைக்கடந்து சில அன்ன பக்ஷிகள் வந்தன. கொழுத்தகாகம் அவைகளைக் கண்டதும் அங்குசென்று, 'பக்ஷிகளா! உங்களுக்கு என்னோடு பறக்கும் திறமையுண்டா? எனக்கு அநேகவிதமாகப் பறக்கும் சக்தி யுண்டு. நான் எவ்வளவு தூரம் வேண்டுமாகிலும் போகவல் லேன்' என்று பெருமைபேசிற்று. அன்னபக்ஷிகள் மிகுந்த அடக்கத்துடன் 'எங்களுக்கு நேராக ஒரேவிதமாகத்தான் பறக்கத்தெரியும். உனக்குத் தெரிந்த விசித்திரங்கள் எங் களுக்குத் தெரியாது' என்றன. இதைக்கேட்டதும் காகம் அன்னங்களை தன்னோடு பறந்துவரும்படி அடிக்கடி தூண்ட அவைகள் இசைந்து புறப்பட்டன. முதலில் அவைகள் நிலத் தின்மேல் பறக்க காகம் தனது ஸாமர்த்யம் முழுவதையும் காட்டிற்று. மற்றையக் காகங்களுக்கு கொழுத்த காகம்தான் சிறந்தது என்ற எண்ணமுண்டாக அதற்கு கர்வம் மேலும் அதிகரித்தது. அப்பொழுது அன்னப்பக்ஷிகள் ஸமுத்திரத்தை நோக்கிப் பறந்து வெகுதூரம் போக, காக்கையும் தன் வலியறி யாது கர்வத்தால் வெகுதூரம் அநேக விதமாகவும் பறந்து கொண்டு போயிற்று. சீக்கிரத்தில் அதன் சிறகு ஓய்ந்துபோக தங்குவதற்கு மரமில்லாது காகம் தத்தளித்து ஸமுத்திரத்தில் விழுந்து தண்ணீர் குடிக்கத் தொடங்கியது. அப்பொழுது ஒரு அன்னபக்ஷி அதன் அருகில் வந்து, 'இதுவும் உனக்குப் பறக்கத்தெரிந்த விதத்தில் ஒன்றோ? இந்த விதம் மிகவும் நேர்த்தியாக இருக்கிறது ஸபாசு' என்று பரிஹாஸஞ் செய்ய காக்கையின் கர்வம் அடங்கிற்று. தான் கேவலம் காக்கை என்றும் தன்னால் தெய்வீகமான அன்னபக்ஷிகளோடு பறக் கவே முடியாதென்றும் அதற்கு நன்றாய்ப்பட்டது. உடனே அது அன்னப்பக்ஷியின் காலில் விழுந்து சரணமடைய அதை அன்னபக்ஷி தன் முதுகில் எடுத்துக்கொண்டு கரைசேர்த்தது. ஒருவனுக்கு கர்வமிருந்தால் அதனால் மிகுந்த கேடுகள் அவ னுக்கு விளையும் என்ற கருத்தை உள்ளடக்கிய இக்கதையால் கர்ணனை துரியோதனன் இட்ட சோற்றின்று கொழுத்தவன் என்றும், அர்ஜுனனை அன்னமென்றும், யுத்தத்தை ஸமுத்தி ரம் என்றும் குறிப்பாகக்காட்டி சல்லியன் கர்ணன் நல்ல ஸம யத்தில் கிருஷ்ணார்ஜுனரிடம் சரணம் புகுந்தால் மாத்திரந் தான் பிழைக்கலாம் என்று எடுத்துரைத்தான்.

**வினா 17:**—இவ்வாறு சல்லியன் சொல்ல கர்ணனுக்கு ஞாபகம்வந்த பழைய விஷயங்களின் விவரம் என்ன?

**விடை:**—பீஷ்மரோடு அம்பா விஷயமாகச் சண்டையாடித் தோற்றுப்போனபின்பு பரசுராமர் 'க்ஷத்திரியர்கள் இன்னும் பிராம்மணரல்லாத மற்றையவர்கள் ஆகிய இவர்களுக்கு வில்வித்தையைச் சொல்லிவைப்பதில்லை' என்று சபதஞ் செய்துகொண்டு தமது இருப்பிடம்சென்றார். அதன்பின்பு வெகுகாலத்திற்கு மேல் கர்ணன் பிராம்மண வேஷத்தோடு பரசுராமரை மோசஞ் செய்து ஸகலவில்வித்தைகளையும் அவரிடமிருந்து கிரஹித்தான். அவன் சிஷ்யனாயிருக்கும் ஒருநாள் பரசுராமர் அவன் மடியில் தலையை வைத்துறங்கும்படி நேரிட்டது. கர்ணனுக்கு தீங்குசெய்ய ஸமயம் பார்த்திருந்த இந்திரன் அப்பொழுது ஒரு பிள்ளைப்பூச்சி உருவமாகவந்து அவனது தொடையைத் துளைக்க இரத்தம் ஆறாகப்பெருகியது. எங்கே தொடையை அசைத்தால் குருவின் தூக்கத்திற்கு பங்கம் வருமோ என்று பயந்தவனாய் கர்ணன் அசையாது வலியைப் பொறுத்துக்கொண்டிருந்துவிட்டான். அவன் ரத்தம் கழுத்திற்பட குரு திடுக்கிட்டெழுந்து நடந்த ஸங்கதியை அறிந்து கர்ணனை நோக்கி 'அடே உண்மையைச்சொல். நீ பிராமணனா அல்லது வேறு ஜாதியானா சொல்' என்று கோபித்துக்கொண்டு கேட்க கர்ணன் தான் ஸூதஜாதி என்று தனக்குத் தெரிந்த உண்மையை உரைத்தான். தன்னை மோசம் செய்து வித்தையை எல்லாம் கவர்ந்துகொண்ட கர்ணனிடம் பரசுராமருக்கு மிகுந்தபயம் 'நல்ல யுத்தஸமயத்தில் உனக்கு என்னிட மிருந்து கிரஹித்த அஸ்திரங்கள் யாவும் மறந்துபோகட்டும்' என்று சபித்தார். இந்த சாபம் கர்ணனுக்கு ஞாபகம் வந்தது. மேலும் அவன் ஒருகாலத்தில் வேட்டையாடிக் கொண்டு ஒரு காட்டின் வழியாகப் போகையில் ஒரு பிராம்மணனது ஹோமக்கன்றை அறியாது கொன்றுவிட்டான். அந்தப் பிராமணன் மிகுந்த கோபத்தோடு, 'உன் தேர் உன் ஆயுள் முடியுங்கால் பூமியுள் கொஞ்சம் புதையும், அதனால் மிகுந்த பயம் உனக்கு உண்டாகட்டும்' என்று சபித்தான். பின்பு கர்ணன் என்ன தானங்கொடுத்தும் அந்த பிராம்மணனால் தன் சாபத்தை மாற்றமுடியாமல் போயிற்று. இந்த சாபமும் அவனுக்கு ஞாபகம்வர இவ்விரண்டையும் சல்லியனிடம் சொல்லி தன்

னைத்தானே நொந்துகொண்டு, தன் உயிர்போனாலும் ஸரி அர்ஜுனனை எதிர்ப்பதே திண்ணம் எனக் கர்ணன் முரட்டுத்தனமாக யுத்தத்திற்குப் புறப்பட்டான்.

வினா 18 :—இவைகளைக் கர்ணன் சல்லியனுக்குச் சொல்ல இருவரது ஸம்பாஷணையும் எவ்வாறு நடந்து முடிவுபெற்றது ?

விடை :—இந்த முரட்டுத்தனமான தீர்மானத்தைச் சல்லியன் கேட்டதும், 'நீ சொல்லியவைகள் யாவும் பைத்தியம் பிடித்தவன் புலம்புவதுபோலக் காணப்படுகின்றனவே ஒழிய வேறில்லை. ஏன் வீணாய் உளறுகிறாய்' என்று கர்ணனைப் பழித்துக்கூறினான். இதைக்கேட்டவுடன் கர்ணன் மிகுந்த கோபத்தோடு மத்திர தேசத்தோரையும் சல்லியனையும் அவர்கள் குற்றங்களை விஸ்தாரமாக எடுத்துக் கூறி வாயாரப் பழித்தான். சல்லியனும் மிகுந்த கோபத்தை அடைந்து, 'கெட்டவர்களும நல்லவர்களும் எல்லாவிடத்திலும் இருப்பார்கள். அப்படியிருக்க நீ என் ஊரிலுள்ள கெட்டவர்களையும் கெட்டவழக்கங்களையும் மாத்திரம் எடுத்துரைத்து என்னைப் பழித்தமையால், நானும் உன்னை விடுவதில்லை' என்று சொல்லி கர்ணனது அங்கதேசத்தவரது குற்றங்களை எடுத்துரைத்து அவனைப் பழிக்கத் தொடங்கினான். இவ்வாறு ஒருவருக் கொருவர் வாக்யுத்தம் செய்துகொள்ள சண்டை தொடங்காமல் தடைபட்டு நின்றது. இதைக்கண்ட துரியோதனன் ஓடோடியும் வந்து இந்த வாக்கு சண்டையை விலக்கி இருவரையும ஸமாதானம் செய்ய யுத்தம் தொடங்கியது.

வினா 19 :—பதினேழாம் நாள் தொடங்கிய யுத்தம் முதலில் எவ்வாறு நடை பெற்றது ?

விடை :—யுத்தாரம்பத்தில் தருமபுத்திரர் எப்படியாவது அன்று கர்ணனைக்கொல்லவேண்டியது என்று அர்ஜுனனை ஏவ அவன் பாண்டவர்களை யுத்தத்திற்கு தயாராய் இருக்கும்படி ஏற்பாடு செய்து யுத்தத்தைத் தொடங்கினான். கர்ணன் யுத்தத்தைத் தொடங்க யத்தனிக்கையில் அர்ஜுனன் ஸம்ஸப்தகர்களால் தாக்குண்டு சண்டைசெய்வதைக் கண்டு தான் அவனை எளிதில் கொன்றுவிட முடியும் என்று பெருமை பேசச் சல்லியன் 'இதெல்லாம் வீண்பேச்சு. உன் திறத்தைக் காட்டு பார்ப்போம். என் மனதில் உன்னால் ஒன்றும் முடியாதென்றே தோன்றுகிறது' என்று மறுபடியும அவனைப் பழித்தான். இதற்குள்

அர்ஜுனன் மிகுதியாய் இருந்த ஸம்ஸப்தகர்களிடம் கொடிய போர்செய்து அவர்களை வெட்டிச் சாய்த்துவந்தான். பீமனுக்கும் கர்ணனது பிள்ளையாகிய ஸுஷேணனுக்கும் பெரும்போர் விளைய முடிவில் அவனை பீமன் தோற்கடித்தான். ஸாத்யகி கர்ணனது மற்றைப் பிள்ளைகளோடு யுத்தம் செய்து அவர்களை வென்றான். இதற்குள் பாண்டவர்கள் எல்லோரும் சேர்ந்து கர்ணனை எதிர்க்க யுதிஷ்டிரருக்கும் கர்ணனுக்கும் முதலில் போர் விளைந்தது. அதில் கர்ணனை அவர் பழித்துப்பேச இருவருக்கும் யுத்தம் பலமாக உண்டாயிற்று. தருமபுத்திரர் வெகு நாழிகை கர்ணன் பிள்ளைகள் கர்ணன் ஆகிய இவர்களை மிகுந்த கஷ்டப்படுத்திவந்தார். கர்ணன் இரத்தத்தைப் பெருகவிட்டுக்கொண்டு யுத்தகளத்தில் நின்றான். இவ்வளவு செய்தும் முடிவில் கர்ணனது பராக்கிரம வேகத்தால் அவன்முன் நிற்கமுடியாமல் ஓடும்படியான நிலை யுதிஷ்டிரருக்கு வர அவர் அவ்வாறே செய்தார். அப்பொழுது கர்ணன் அவரைப் பின்தொடர்ந்து சென்று குந்திக்குத் தான் முன் கொடுத்த வாக்கின்படி, அவரைக் கொல்லாது முன்பு பீம நகுல ஸஹாதேவர்களை எவ்வாறு அவமதித்துவிட்டானோ அவ்வாறே அப்பொழுது அவன் தருமபுத்திரரையும் அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான். இவர் இவ்வாறு ஓடிப்போனதும் பீமனும்ஸாத்யகியும்,கௌரவஸேனையைக் கலக்கத் தொடங்கினார்கள். இதைக் கண்டதும் பீமன் இருக்கும் இடத்தை நோக்கித் தேரை ஓட்டும்படி கர்ணன் சொல்ல சல்லியனும் அவ்வாறே செய்தான். கர்ணன் தன்னை எதிர்த்து வருவதைக்கண்ட பீமனுக்கு அடங்காக்கோப முண்டாக அவன் காலாக்னி ருத்ரனைப்போலப் பிரகாசித்தான். இதைக்கண்டவுடன் சல்லியன் பீமனது பராக்கிரமத்தை கர்ணனிடம் புகழ்ந்துபேசி அவனை பயமுறுத்தத் தொடங்க, கர்ணனும் பீமனது பலத்தைப் புகழ்ந்துகொண்டான். பின்பு பீமனோடு கர்ணன் வெகு நாழிகை மன்றாடிப் பார்த்தும் முடிவில் பீமனது பாணத்தால் நன்றாக அடிபட்டு அவன் பிரஞ்ஞைதவறித் தேர்த்தட்டில் சாய்ந்தான்.

**வின 20:**—இவ்வாறு கர்ணன் பீமனால் தோல்வி அடைந்ததும் யுத்தம் எவ்வாறு நடந்தது ?

**விடை :**—பீமஸேனனால் கர்ணன் மூர்ச்சை அடைந்து விழுந்ததைக் கண்டு துரியோதனன் தனது தம்பிமார்களில் ஐவ

யையும் மற்றைய கௌரவ வீரர்களையும் அவனுக்கு ஸஹாயமாக அனுப்ப பீமன் துரியோதனன் தம்பிமார் ஐவரையும் எளிதில் கொன்று தள்ளிவிட்டான். இதற்குள் மூர்ச்சை தெளிந்து எழுந்தகர்ணன் பீமனை எதிர்த்தான். இருவருக்கும் கொடிய போர் மறுபடியும் உண்டாயிற்று. இதில் கர்ணனுக்கு அடிக்கடி தோல்வி அடையும் தருணம் வந்தது. முடிவில் இருவரும் விலகி எதிரிஸேனைகளைத் தாக்கத்தொடங்கினர். பீமன் யானைப்படையைக் கலக்கினான். கர்ணன் அடிக்கடி தருமபுத்திரரோடு யுத்தம் செய்தான். அவர் ஓட இவன் துறத்தி சண்டை வெகுகாலம் நடக்க, பீமன் தமயனைக் காக்கக் கர்ணனை எதிர்த்தான். அவனுக்கு ஸஹாயமாக ஸாத்யகியும் வந்து சேர்ந்தான். உடனே அங்கு நடந்த பெரும்போரில் யாவரும் தமது உயிர்களை பதறாக எண்ணி தைரியமாக வெகுகாலம் சண்டைசெய்து வந்தனர். இங்கு இவ்வாறிருக்க அர்ஜுனன் ஸம்ஸப்தகரோடு வெகுகாலம் கொடியபோர் செய்து கொண்டுவந்து முடிவில் அவர்களை நாகாஸ்திரத்தால் பிணித்தான். அவர்கள் அதை கருடாஸ்திரத்தால் சிதற அடித்து அர்ஜுனனை மிகுந்த கஷ்டநிலைக்குக் கொண்டு வந்து விட்டனர். அந்த ஸமயத்தில் அவன் ஐந்திராஸ்திரப பிரயோகம் செய்து ஸம்ஸப்தகர்களை சிதற அடிக்க, மறுபடியும் அங்கு பெரும்போர் உண்டாயிற்று. அப்பொழுது சிகண்டிக்கும் கிருபருக்கும் உண்டான சண்டையில் அவன் கிருபரால் ஸாரதி முதலியவைகளை இழந்து, கையில் கத்தியை எடுத்துக்கொண்டு அவரைக் கொல்ல ஓடிப்போனான். கிருபர் தமது பாணத்தால் அவனைச் செயலற்று நிற்கும்படி செய்துவிட்டார். இதைக்கண்டு திருஷ்டத்யும்னன் அவனுக்கு ஸஹாயமாக வர அவனை கிருதவர்மா ஓடிவந்து தடுத்தான் அவனோடு கொடியபோர் செய்து முடிவில் அவன் ஸாரதியைக் கொன்று, அவனைத் தோற்க அடித்து, திருஷ்டத்யும்னன் கௌரவ ஸேனையைக் கலக்கத் தொடங்கினான். இதற்குள் அசுவத்தாமன் ஸாத்யகியால் காக்கப்பட்ட தருமபுத்திரரோடு, கொடிய சண்டை செய்தான். அதில் பாணவேகம் அதிகமாக யுதிஷ்டிரர், தருமம்தவறிய சண்டாளா,' என்று கோபாவேசத்தால் அவனைத் திட்டினார். அசுவத்தாமன் முன்னிலும் அதிகமாகப் போர்செய்யத் தொடங்க தருமபுத்திரர் மறுபடியும் ஓடவேண்டி நேரிட்டது.

வின 21:—தருமபுத்திரர் ஓடிப்போனதும் யுத்தகளத்தில் நடந்த விஷயம் என்ன? இதனால் அர்ஜுனனுக்கு என்ன கஷ்டம் உண்டாகி யாரால் எவ்வாறு தேற்றப்பட்டான்?

விடை:—கர்ணன் பீமனுக்கு எதிரிலேயே அப்பொழுது ஸ்ருஞ்ஜயர் முதலியோரை வெகு ஆவேசத்தோடு கொல்ல பீமன் வேறோர் பக்கம் சென்று கௌரவர்களை சின்னாபின்னபபடுத்தத் தொடங்கினான். அர்ஜுனன் முன்போல ஸம்ஸப்தகர்களைக் கொல்லத் தொடங்கினான். இவ்வாறிருக்கையில் துரியோதனனுக்கும் நகுலனுக்கும போர் உண்டாக அதில் ஸஹாதேவன் நகுலனுக்கு ஸஹாயம் செய்தான். முடிவில் இவர்கள் துரியோதனனது பாணவேகத்தால் மிகுந்த கஷ்டப்படுவதைக் கண்ட திருஷ்டத்யும்னன் துரியோதனனை எதிர்த்து ஓடிவந்து அவனை வெருங்கையனாக யுத்தகளத்தில் நிறுத்திவிட்டான். உடனே அவனை ஒரு கௌரவவீரன் யுத்தகளத்தைவிட்டுத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். இதற்குள் கர்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் கொடிய போர் உண்டாகக் கர்ணன் பாண்டவர்களை மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக்கிக்கொண்டு வந்தான். இதைக்கண்டு அர்ஜுனன் பாண்டவர்களுக்கு ஸஹாயமாக வர துரியோதனன் ஸம்ஸப்தகர்களை ஏவி அவனைத் தடுக்கும்படி செய்தான். அர்ஜுனன் அவர்களை கூடிய சீக்கிரத்தில் கொன்றுதள்ள, அசுவத்தாமனுக்கும் அவனுக்கும் போர் உண்டாயிற்று. அந்த யுத்தத்தில் அர்ஜுனனுக்கு கொஞ்சம் சிரமம்தட்ட ஸமயம்பார்த்து பகவான் அவனைப் பரிஹாஸமான வார்த்தைகளால் தைரியப்படுத்தினார். உடனே ஒரு திவ்ய பாணத்தால் அசுவத்தாமனை அசைவற்றிருக்கும்படி செய்ய, அவனது ஸாரதி அவனை யுத்தகளம் விட்டுக் கொண்டுபோய்விட்டான். அந்த ஸமயத்தில் துரியோதனன் 'திருஷ்டத்யும்னனைக் கொல்லாது நான் யுத்தத்தை நிறுத்துவதில்லை' என்று வீண்சபதம் செய்ய கௌரவர் முன்னிலும் பதின்மடங்கு உத்ஸாஹத்தோடு போர்செய்யத் தொடங்கினர். இதற்குள் தருமபுத்திரருக்கு யுத்தத்தில் பாண அடிகள் அதிகமாகப்பட அவர் ஒதுங்கி நின்றுகொண்டு யுத்தத்தை கவனமாகப் பார்த்து வந்தார். தருமபுத்திரர் ஒதுங்கியதும் பாண்டவஸேனைக்கு மிகுந்த அதைரியம் வர, அது சிதறி ஓடத் தொடங்கியது. இதைக்கண்டு அர்ஜுனனுக்கு மிகுந்த

துக்கம் உண்டாயிற்று. 'இன்னும் கர்ணன் இறக்கவில்லையே, எனது ஸேனையும் சிதறி ஓடுகின்றதே. ஸாயங்கால ஸமயமும் வந்துவிட்டதே' என்று வெகுவாகத் துக்கிக்கத் தொடங்கினான். அர்ஜுனனைப் பகவான் தேற்றி தேரைத் தருமபுத்திரர் இருந்த இடத்தை நோக்கி ஓட்டினார்.

வினா 22 :—அர்ஜுனன் வந்து சேர்வதற்குமுன் யுத்தகளத்தில் யுத்தம் எவ்வாறு நடந்துகொண்டிருந்தது? அர்ஜுனன் யார் புத்திமதியின்பேரில் அப்பொழுது என்ன செய்தான்?

விடை :—அர்ஜுனன் வந்துகொண்டிருக்கையில் கர்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் போர் நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது திருஷ்டத்யும்னன் கர்ணனை வந்து எதிர்த்து சண்டையைத் தொடங்க ஸாத்யகியும் அங்கு வந்து சண்டையிடத் தொடங்கினான். இவர்கள் சண்டைசெய்து வருகையில் அசுவத்தாமன் ஓடிவந்து திருஷ்டத்யும்னனை வாயில் வந்தபடி எல்லாம் திட்ட இருவருக்கும் போர் உண்டாயிற்று. இதன் முடிவில் அசுவத்தாமன் பாணங்களால் அவனைக்கொல்ல முயன்றும் முடியாதது கண்டு கீழே இறங்கி ஓடிவந்து அவன் தலைமயிரைப் பற்றி இழுக்கத்தொடங்கினான். இதைக்கண்டு பகவான் அர்ஜுனனுக்குத் தெரிவிக்க அவன் கொடிய பாணங்களால் அசுவத்தாமாவை அடித்து திருஷ்டத்யும்னனை விடும்படி செய்தான். இந்த ஸமயத்தில் ஸஹாதேவன் வந்து திருஷ்டத்யும்னனை தனது தேரில் ஏற்றிக்கொண்டு போய்விட்டான். தன்னை விலக்கிய அர்ஜுனனை அசுவத்தாமா எதிர்த்து முடிவில் அவன் பாணத்தால் மூர்ச்சை அடைந்தான். இவ்வாறு திருஷ்டத்யும்னன் தப்பியதும் அர்ஜுனன் வந்த காரியத்தை மறந்து ஸம்ஸப்தகர்களிடம் சண்டைக்குப்போய் கொஞ்ச நாழிகைக்கெல்லாம் தருமபுத்திரர் படும்பாட்டையும் மற்றையவர்கள் நன்றாய்ப் போர் செய்வதையும் பகவான் காட்ட அவனுக்கு தருமபுத்திரரைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் மறுபடியும் உண்டாயிற்று. இதற்குள் தருமபுத்திரர் கர்ணனால் மொத்துண்டு ஒன்றும் தோன்றாது தத்தளிக்க சல்லியன் கர்ணனை நோக்கி, 'தர்மாத்மாவாகிய இவரோடு சண்டையிட்டு ஜயிப்பதால் உனக்கு என்ன மேன்மை. வீரனாகிய அர்ஜுனனிடம் அல்லவோ உன் திறமையைக் காட்டவேண்டும்' என்று சொன்னான். இதைக்கேட்டதும் அவ்வாறே செய்வது நலம் என்று

கர்ணனுக்குத் தோன்றிற்று.' அந்த ஸமயத்தில் ஸஹாதேவன் ஸஹாயத்தோடுகூடிய பீமனால் துரியோதனன் தோல்வியடையும் தருணத்தில் இருப்பதையும் கண்டு கர்ணன் தருமபுத்திரரை 'பிழைத்துப்போ' என்று விட்டுவிட்டு துரியோதனனைக் காப்பாற்றச் சென்றான். யுதிஷ்டிரருக்கு தேகபாதையும் வெட்கமும் சேர, கஷ்டம் அதிகரித்தது. உடனே அவர் தமது படைவீடுசென்று படுத்துக்கொண்டார். இந்த ஸமயத்தில் அவரைப் பார்க்கவேண்டும் என்று அர்ஜுனன் யுத்தகளத்தில் அவர் இருந்த இடம் வந்து அவரைக்காணாமல் பரிதவித்தான். அங்கு கொஞ்சகாலம் அசுவத்தாமனோடும், கர்ணனோடும் சண்டை செய்தும் அவன் மனம் ஸமாதானப்படாமல்போக பகவான் அப்பொழுது கூறிய புத்திமதிப்படி பீமனிடம் இருந்து தருமபுத்திரர் நிலை இருப்பிடம் முதலியவைகளை அறிந்துகொண்டு, அவனிடம் யுத்தவிஷயங்களை ஒப்புவித்துவிட்டு அர்ஜுனன் தருமபுத்திரர் படைவீடு சென்றான்.

வினா 23:—தருமபுத்திரர் படை வீடுசென்றதும் என்ன விபரீதம் உண்டாயிற்று? ஏன்?

விடை:—தம்மைப் பார்க்கவந்த அர்ஜுனன் கர்ணனைக் கொன்றுவிட்டுத்தான் தம்மைத் தேற்றவந்திருக்கிறான் என்ற எண்ணத்துடன் அவனைக் கண்டதுமுதல் தருமபுத்திரர் அவனைத் துதிக்கத் தொடங்கினார். அவனை வெகுவாக வாயாரத் துதித்து அவன் எவ்வாறு மஹா பராக்கிரமசாலியாகிய கர்ணனைக் கொன்றான் என்பதை அறியத் தமக்கிருந்த ஆவலையும் அவனிடம் அவர் வெளியிட்டார். அப்பொழுது அர்ஜுனன் தான் கர்ணனைக் கொல்லவில்லையென்பதாகவும் கொல்ல யத்தனிக்கையில் அவரை யுத்தகளத்தில் காணாது தன்மனம் மிகப் பதைத்ததென்பதாகவும், பின்பு பகவான் புத்திமதியின்பேரில் அவரைப்பார்த்துவிட்டு கர்ணனைக் கொல்லலாம் என்று தான் எண்ணிவந்ததாகவும் தான் மறுபடி யுத்தகளம் போம்வரையில் பீமன் யுத்தவிஷயங்களைப் பார்த்திருப்பான் என்பதாகவும், தனது ஸங்கதிகளை வெளியிட்டான். இவ்வாறு தாம் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்த காரியம் முடியாததுகண்டு தருமபுத்திரருக்கு கர்ணனிடம் பட்ட அடிகளும் அவமானங்களும் ஞாபகம் வர அவருக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. உடனே வாயில் வந்தபடி எல்லாம் பேடி, திறமையற்றவன், என்று

அவனைத் திட்டத்தொடங்கி முடிவில், 'உன் காண்டீவத்தை வேறு எவனிடத்தில் கொடுத்தாலும் அவன் கர்ணனை இதற்குள் மாய்த்திருப்பானே! அடே நம்பிக்கைத்துரோஹி! உன் பலத்தை சுடவேண்டும்! உன் காண்டீவத்தை சுடு! உன் ரதம் முதலியவைகளால் என்ன பயன்? என்று வாய் விட்டுப் புலம்பத் தொடங்கினர். இதைக்கேட்டதும் அர்ஜுனனுக்கும் அடங்காக் கோபம்வர 'என் காண்டீவத்தை யார் பழிக்கிருரே அவனை நான் வெட்டிக் கொல்லுவேன்' என்று தான் ரகஸியமாகச் செய்துகொண்டிருந்த சபதமும் அவனுக்கும் ஞாபகம் வந்தது. உடனே தன் பிரதிஞ்ஞையை ஸத்தியமாக்க வேண்டும் என்ற ஆவலும் அவனுக்கு வர தருமபுத்திரரைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் அர்ஜுனன் தன் பட்டாக்கத்தியை உருவிவிட்டான்.

வினு 24:—இந்த விபரீதத்தை யார் எவ்வாறு தடுத்தது?

விடை:— இதைக்கண்டதும் பகவான் அர்ஜுனனை நோக்கி 'தருமபுத்திரர் ஸௌக்கியமாக இருப்பதைக்கண்டு நீ ஸந்தோஷிக்க வேண்டியிருக்க ஏன் வாளை உருவுகிறுய். இங்கு நீ கொல்லத் தகுந்தவர்கள் ஒருவரும் இல்லையே' என்று சொல்லி ஸமாதானம் பண்ணத் தொடங்கினர். உடனே அர்ஜுனன் தன் சபதத்தை பகவானிடம் சொல்லி அதை ஸத்தியமாக்குவதற்காக தருமபுத்திரரைக் கொன்றபின்புதான் மறுகாரியம் பார்ப்பது என்று சொன்னன். அதற்கு பகவான் 'என்ன! ஸகல தர்மங்களையும் அறிந்தவன்போல வெகு துணிவாய்த் தமயனைக் கொல்லுவதாகிய பாதகத்தைச் செய்து, பிரதிஞ்ஞையை ஸத்தியமாக்கி அடையக்கூடிய புண்யம் ஸம்பாதிக்கத் தொடங்கிவிட்டாய்! பெரிய மஹான்களும் இம்மாதிரியான ஸமயங்களில் இன்னது செய்வது என்று தோன்றாது தத்தளிப்பார்களே! உனக்கு எப்படியடா இம்மாதிரியான துணிவு பிறந்தது? மஹான்கள் இந்த ஸந்தர்ப்பத்தில் பிரதிஞ்ஞையைப் பூர்த்தி செய்தல் என்ற சிறிய தர்மத்தைக் கைவிட்டாவது, பெரியோரை மரியாதை செய்யவேண்டும் என்ற தர்மப்படி நடப்பார்களே! சிறந்த தர்மங்கள்கூட காலத்திற்குத் தக்கபடி அதர்மத்தின் பலனையும், அதர்மங்கள்கூட தர்மத்தின் பலனையும் கொடுக்கும் என்பதை நீ அறியாயோ? இதற்கு முறையே கௌசிகன் என்ற பிரம்மசாரி ஸத்தியமுரைத்து நரகம்

அடைந்ததும் பலாஹகன் என்ற வேடன் குருட்டு மிருகத்தை வதைத்து ஸ்வர்க்கம் அடைந்ததுமே திருஷ்டாந்தம். தர்மத்தின் ஸூக்ஷ்மகதியை அறியாது நீ இவ்வாறு தமயனைக் கொன்று பிரதிஞ்ஞையை ஸத்தியமாக்குவதாகிய தர்மத்தின் படி நடப்பது என்று எண்ணித் தொழில்செய்தால், இந்த தர்ம பரிபாலனம் உனக்கு அதர்மத்தின் பயனையே கொடுக்கும், உனக்கு கௌசிகப் பிரம்மசாரியின் கதியேவரும்' என்று தர்மரகஸியத்தை வெகு ஸ்பஷ்டமாக எடுத்துரைத்து அர்ஜுனனைப் பாபத்திற்கு ஆளாகாமற் தடுத்துவிட்டார்.

**வினு 25.**—இந்த விஷயம் எவ்வாறு பின்பு முடிவுபெற்றது?

**விடை:**—இவ்வளவு சொல்லியும் அர்ஜுனனுக்கு மனஸு ஸமாதானம் வாராததுகண்டு, பகவான், சிறந்த மானஸ்தர்களை ஏகவசனத்தில் அழைத்து அவமதிப்பாய்ப் பேசுவது, கொல்வதற்கு மேல் என்று சாஸ்திரங்கள் கூறும். ஆகையால், உன்மனம் ஸமாதானமாகாவிடில் தருமபுத்திரரை ஏகவசனத்தில் அழைத்து அவமானம் செய்துவிடு' என்று அனுமதிகொடுக்க அர்ஜுனன் அவ்வாறு தன் மனம் ஸமாதானம் ஆகும் வரையில் செய்தான். இது முடிந்ததும் அர்ஜுனனுக்கு, தன் தமயனை அவ்வாறு அவமானபபடுத்தும்படி நேரிட்டதே என்ற துக்கம் வந்துவிட்டது. உடனே பகவான் அர்ஜுனனை நோக்கிஉன்தமயனுரை நீ 'இவ்வளவு அவமதித்ததே உனக்கு பொறுக்க முடியவில்லை! நீ அவரைக் கொன்றிருந்தாயானல் இப்பொழுது என்ன பாடு படமாட்டாய்?' என்று சொல்லிக்காட்டிவிட்டு 'போனது போகட்டும், இப்பொழுது தருமபுத்திரர் காலில்விழுந்துஅவரை மன்னிப்புக் கேட்டுக்கொள்' என்று உத்தரவு செய்தார். உடனே அர்ஜுனன் அவ்வாறே செய்ய தாம் நடந்துகொண்ட மாதிரியை எண்ணி தருமபுத்திரர் வெட்கமடைந்து, கோபத்தை அடக்கிக்கொண்டு அர்ஜுனனை வாரி எடுத்து அணைத்துக்கொண்டு, 'சீக்கிரத்தில் கர்ணனைக் கொன்றுவிட்டு எங்களைத் திருப்திப்படுத்தக் கடவாய்' என்று ஆசீர்வதித்தார். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு அர்ஜுனன் யுத்தகளம் நோக்கிப் புறப்பட்டான்.

**வினு 26:**—பகவான் கூறிய பலாஹகன் என்ற வேடனது சரித்திரத்தின் விவரம் என்ன? இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய நீதி என்ன?

விடை:—பலாஹகன் என்ற ஒரு வேடனிருந்தான். அவன் தன் ஜாதித்தொழிலின்படி தன் குடும்பத்தை ரக்ஷிக்கும் நிமித்தம் வேட்டையாடி அவசியமான மிருகங்களைக் கொல்லுவானே ஒழிய எப்பொழுதும் கொலைத்தொழிலைச்செய்துகொண்டிருந்த கொடியவனல்ல. அந்த தர்மாத்மாவான வேடன் ஒருநாள் குடும்ப உபயோகத்திற்காக காடெங்கும் தேடியும் ஒரு மிருகங்கூட அவனுக்கு அகப்படாமல் போக, முடிவில் ஒரு குருட்டுமிருகம் தண்ணீர் குடித்துக்கொண்டிருப்பதை அவன் கண்டான். அது குருடாயிருந்தபோதிலும் அதற்கு சக்தி அதிகமாகஉண்டு. உடனே அதை அவன் கொன்றுவிட்டான். மேலும் அந்த மிருகம் தபோபலத்தால் மற்றைய மிருகங்களைக் கொல்லும் சக்தி உடையதாயிருந்தது. அதைக் கொன்றதனால் வேடனுக்கு குடும்பஸம்ரக்ஷணம் செய்த புண்ணியமும், காட்டிலிருந்த மற்றைய மிருகங்களைக் காப்பாற்றிய புண்ணியமும் வர, அவன் ஸ்வர்க்கத்தை அடைந்தான். அஹிம்ஸாபரமோதர்ம: என்ற விதிக்கு விரோதமாக குருட்டுமிருகத்தை வேடன் கொன்ற போதிலும் அவனுக்கு ஸந்தர்ப்பத்திற்கேற்ப, ஸ்வர்க்கமே கிடைத்தது. இதனால் அதர்மம்கூட ஸமயத்திற்குத் தக்கபடி தர்மத்தின் பலனைக் கொடுக்கும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது.

வி**ஞ 27**:—பகவான் கூறிய கௌசிகப்பிராமணன் கதை என்ன? இதனால் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்ன?

விடை:—இரண்டு நதிகள் சேரும் இடத்திலிருந்த ஒரு கிராமத்தருகில் வேதசாஸ்திரங்களின் ஸாரத்தை அறிந்த கௌசிகன் என்ற ஒரு பிராம்மணன் இருந்தான். அவன் 'ஸத்யம் வத' என்ற வாக்கியத்திற்கேற்ப எப்பொழுதும் உண்மையையே உரைக்கவேண்டும் என்ற விரதம்கொண்டிருந்தான். இதுஊரெங்கும் பரவியது. வழிபறிக்கும் திருடர்களுக்குக்கூட கௌசிகன் ஸத்தியஸந்தன் என்று தெரியும். இப்படி இருக்கையில் திருடர்களால் துறத்தப்பட்டு அநேகர் ஓடிவந்து கௌசிக பிராம்மணன் இருந்தவிடத்திற் கருகாமையிலிருந்த காட்டில் புகுந்து ஒளித்துக்கொண்டனர். இதைக் கௌசிகப்பிராம்மணன் பார்த்துக்கொண்டிருந்தான். கொஞ்ச நாழிகையானபின்பு துறத்திவந்த திருடர்கள் அங்கு ஓடிவர, கௌசிக பிராம்மணனைக் கண்டு 'ஐயா ஸத்யவாதியே, எங்களுக்குப்

பயந்து ஓடிவந்த ஜனங்கள் எங்கேபோயினர்? நீர் உண்மை உரைப்பவராச்சுதே. இந்த விஷயத்தில் உண்மையை எங்களுக்குக் கூறும் என்று கேட்க, தர்மத்தின் ஸூக்ஷ்மத்தை அறியாத கௌசிகன் ஜனங்கள் ஒளித்திருந்த காட்டைக்காட்டி விட்டான். திருடர்கள் சென்று ஜனங்களை எல்லாம் இறக்கமின்றி வெட்டிச் சாய்த்தனர். இந்த ஸமயத்தில் உண்மையுரைத்ததற்காக கௌசிகன் நரகத்தில் விழுந்து வெகுகாலம் கஷ்டப்பட்டான். இங்கு ஸத்யமுரைத்தலாகிய தர்மம் ஸமயத்திற்கேற்ப அஸத்யமுரைத்தலாகிய அதர்மத்தின் பலனைக் கொடுத்தது. இதனால் தர்மம்கூட ஸமயத்திற்குத் தக்கபடி தர்மத்தின் பலனைக்கோடுக்கும் என்பதை நாம் தெரிந்து கோள்ளவேண்டியது.

வினா 28 :—இக்கதையில் அடங்கி இருக்கும் ஸூக்ஷ்மமான தர்மத்தின் விவரம் என்ன?

விடை :—இந்தமாதிரியான ஸந்தர்ப்பங்களில் 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்ற அஸத்தியத்தை உரைப்பதேமேல் என்று சிலர் எண்ணலாம். பிறரைக் காப்பாற்றுவதோடுகூட தன்னையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணமுடையவர்களுக்கு மாத்திரம்தான் இது மேலான வழி. 'எப்பொழுதும் உண்மையையே உரைக்கவேண்டும், நமக்கு என்ன கஷ்டம் வந்தாலும் வரட்டும்' என்று எண்ணும் மஹான்கள் இந்த ஸமயத்தில்கூட பொய்சொல்லாமல் தர்மமாகவே நடப்பார்கள். திருடர் இக்கதையில் காட்டியவாறு, அவர்களைக் கேட்பார்களேயானால் 'எனக்கு அவர்கள் போனவிடம் தெரியும். உங்களிடத்தில் சொல்லுவதால் பொதுவாக மிகுந்த கேடு விளையுமாதலால் எனக்கு அதைச்சொல்ல மனமில்லை நான் சொல்ல மாட்டேன்' என்றுசொல்லி திருடர்கள் படுத்தும் கஷ்டங்களைத் தமது பிராரத்த கருமபலன் என்று எண்ணி மிகுந்த ஸமாதானத்தோடு அனுபவிப்பார்கள். இதுவே இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு மனிதன் நடந்துகொள்ள வேண்டிய சிறந்தமுறை. இங்கு காட்டியவாறு இக்கலியுகத்தில்கூட நமது நாட்டில் கேவலம் தேசநன்மைக்காகவே மாத்திரம் இவ்வாறு நடந்து கொண்ட மஹான்கள் இருக்கிறார்கள். மோக்ஷமார்க்கத்தில் இவ்வாறு நடப்பவர்கள் அநேகர் இவர்களைவிடச் சிறந்தவராக இருக்கவே இருப்பார்கள். இவர்கள் இருப்பது எல்லோருக்

கும் வெளிப்படையாகத் தெரியாது. இவர்களே முன்பு எடுத்துக்காட்டப்பட்ட ஸூக்ஷ்மமான தர்மத்தின் வழி நடப்பதற்கு உதாரணம். தெய்வபக்தி மிகுந்த நமது நாடு க்ஷீண தசையை அடைந்த இக்காலத்தில்கூட வைதிகதர்மப்படி அதி ஸூக்ஷ்மமாக நடப்பவர்களும் நமது நாட்டில் இருக்கிறார்கள். இவர்களிருக்கும்வரையில் நமது நாட்டில் தெய்வபக்தி முதலியன குறையா. இவர்களைப்போல நடக்கத் திறனில்லாதவர்களுக்கே இம்மாதிரியான ஸந்தர்ப்பங்களில் பொய்யுரைத்தல் தர்மமாகும்.

வினா 29 :—தர்மபுத்திரருக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த ரஸாபாஸத்தால் நாம் தெரிந்துகொள்ளவேண்டியவை என்ன ?

விடை :—தர்மபுத்திரருக்குக் கோபம் வந்ததும் அதனால் அவர் அர்ஜுனன் மூலமாக அவமானம் அடைந்தார். எந்த விஷயத்தையும் மிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கலாகாது, அப்படி செய்தால் அந்த விஷயம் தவறுங்கால் நமது மனதில் அடங்காக் கோபமுண்டாகும் ; அதனால் நம்மிடம் மரியாதை வைத்திருக்கும் மனிதர்கள்கூட நம்மை அவமதிப்பார்கள் ; நமக்கு மிகுந்த கஷ்டங்கள் நேரிடும் என்பதை நாம் இதிலிருந்து அறிந்துகொள்ள வேண்டியது. அர்ஜுனன் அவஸரமாக தருமபுத்திரரைக் கொல்லத்தொடங்கி முடிவில் ஏகவசன மூலமாக அவரை அவமதித்துப் பின்பு மிகுந்த துக்கத்தை அடைந்தான். இதனால் தர்மரகஸியத்தை அறியாது அவசரமாக காரியம் செய்துவிட்டுப் பின்பு துக்கிப்பதில் பிரயோசனமில்லை ; ஆகையால் நாம் முன் ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும் என்று அறிந்துகொள்ள வேண்டியது.

வினா 30 :—தருமபுத்திரரிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு அர்ஜுனன் வருங்கால் அங்கு என்ன நடந்தது ? யுத்தகளத்தில் என்ன நடந்துகொண்டிருந்தது ?

விடை :—யுத்தகளத்திற்குப் போகும் வழியில் பகவான் கர்ணன் பலத்தையும் அர்ஜுனன் பலத்தையும் எடுத்துரைத்து, அவர்கள் எல்லாவிஷயத்திலும் ஸமமாக இருந்தபோதிலும் கர்ணனிடம் அதர்மமும் அர்ஜுனனிடம் தர்மமும் இருக்கின்றதால் அர்ஜுனன் அவனை எளிதில் கொல்லலாம் என்றும் சொல்லி அர்ஜுனனைத் தேற்றினார். அதன் பின்பு அவனது பராக்கிரமச் செயல்களை யெல்லாம் எடுத்துரைத்து அர்ஜுனனை

உத்ஸாஹப்படுத்த அவன் நூக்கங்கள் யாவும் மாறி யுத்தாவேசம் அவனுக்குண்டாயிற்று.' அப்பொழுதுதான் கர்ணனை அன்றைக்குள் கொல்லுவதாக அவன் சபதம் செய்தான். இதோடு அர்ஜுனன் யுத்தகளம் நோக்கி வந்து கொண்டிருக்கையில் அங்கு குருபாண்டவர்களுக்குக் கொடிய யுத்தம் நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது பீமனுக்கு சண்டை செய்யும் உத்ஸாஹம் குறைந்தது. அவன் ஸாரதியை நோக்கி, 'அர்ஜுனன் போய் வெகு காலமாயிற்றே. இன்னும் அவன் வரவில்லையே நான் என்ன செய்வேன்? தருமபுத்திரர் கதி என்னவாயிற்றோ. இன்னும் கர்ணனும் உயிரோடிருக்கிறானே. இவைகளால் எனக்கு யுத்தம் செய்ய உத்ஸாஹம் வரவில்லை நான் என்ன செய்வேன்' என்று சொல்லிக்கொண்டான். அதற்குள் அர்ஜுனனது தனுஷ்டங்கார ஓசை ஸாரதி காதில் பட அதை அவன் பீமனுக்குத் தெரிவித்தான். உடனே பீமனுக்கு உத்ஸாஹ முண்டாய்விட்டது. சீக்கிரத்தில் அர்ஜுனனும் யுத்தகளம் வந்து சேர்ந்துவிட்டான்.

**வி 31**:—அர்ஜுனன் யுத்தகளம் வந்ததும் யுத்தம் எவ்வாறு நடக்கத் தொடங்கியது? அப்பொழுது அர்ஜுனனும் கர்ணனும் எவ்வாறு சந்திக்க என்ன நடந்தது?

**விடை**:—அர்ஜுனனைக் கண்டதும் பீமனுக்குத் தைரியம் உண்டாயிற்று. இருவரும் கௌரவஸேனையை அழிக்கத் தொடங்கினர். பீமன் செய்த போரைப் பொறுக்கமுடியாமல் கௌரவஸேனை சிதறி ஓட துரியோதனனே அவனை எதிர்த்துப் போருக்கு வந்தான். அவனாலும் பீமனோடு போர்செய்ய முடியாமற்போக அவன் சகுனியை ஏவினான். அவன் வெகுநாழிகை பீமனோடு சண்டைசெய்தும் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. முடிவில் பீமனது பாணங்களால் சகுனி இறந்தவன்போலக் கீழே விழுந்தான். இதைக் கண்டதும் துரியோதனன் ஓடிவந்து சகுனியைத் தன் ரதத்தில் ஏற்றிக்கொண்டு யுத்தகளம் விட்டு ஓடிப்போனான். உடனே கௌரவஸேனையும் சிதறி ஓடத் தொடங்கியது. அப்பொழுது கர்ணன், அநேக பாண்டவ வீரர்களை ஒருவனாகவே எதிர்த்து வெகு ஸாமர்த்தியமாக யுத்தம் செய்து ஜயமடைய, ஓடிய கௌரவ ஸேனைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்தன. அர்ஜுனன் சண்டை செய்து கொண்டு வருகையில், கர்ணனது ரதத்தையும் சல்லியனது

ஸாரத்யத்தையும் கண்டு 'கர்ணனை இன்று கொல்லாவிடில் நமக்கு ஜயமே வராது' என்று சொன்னான். இதற்குள் சல்லியன் அர்ஜுனனது ரதத்தை கர்ணனுக்குக் காட்டி, நீதான் அர்ஜுனனோடு போர்செய்ய வல்லவன் மற்றை யாவரும் அவனைக்கண்டால் ஓடிவிடுவார்கள். உன் திறத்தைக் காட்டும் காலம் வந்துவிட்டது' என்று தைரியப்படுத்தி எச்சரிக்கை செய்தான். சல்லியனது நல்ல குணத்தை கர்ணன் மெச்சிக் கொண்டு அவன் அன்று அர்ஜுனனைக் கொல்லுவதாகச் சபதம் செய்தான்.

வி 32:— இவ்வாறு இருவரும் சபதம் செய்துகொண்டது முதல் இருவரும் சண்டைசெய்ய ஸந்திக்கும் வரையில் யுத்தம் எவ்வாறு நடந்துவந்தது ?

விடை:—இவ்வாறு சபதமானதும் சண்டை வரவர பலக்கத்தொடங்கியது. இதில் பீமஸேனன் கௌரவவீரர்களால் தாக்குண்டு மிக வருந்துவதை அர்ஜுனன்கண்டு அவனுக்கு ஸஹாயமாக வந்து அநேக கௌரவவீரர்களைக்கொன்றான். இதற்குள் 90 கௌரவவீரர்கள் அவனை வந்து எதிர்க்க அவர்களையும் வெகு லேசாய் அவன் கொன்றுவிட்டான். பீமனும் தனது கதையால் கௌரவஸேனையை மிகுந்த பரபரப்போடு சிதற அடித்தான். இவ்வாறுசிதறிஓடும் கௌரவஸேனையை கர்ணன் தனது பராக்கிரமவிசேஷத்தால் தடுத்து தைரியப்படுத்தி நிறுத்தினான். உடனே அர்ஜுனன் கர்ணனை எதிர்த்துப்போய் நிற்க அவனுக்கு ஸஹாயமாக அவனை துச்சாஸனன் எதிர்த்துவர இருவருக்கும் சண்டையுண்டாயிற்று ; அதில் பீமன் துச்சாஸனனை தாமதமின்றி தன் கனத்த கதையால் அடித்துத்தள்ள அவன் மூர்ச்சைபோட்டு விழுந்தான். உடனே பீமன் சீக்கிரம் அவன் அருகில் சென்று அவன் மார்பைப்பிளந்து அவன் இரத்தத்தைக் குடிப்பவன்போல அதை வாரி வாரி வாயின் மேல்பாகத்தில் தடவிக்கொண்டு, தான்பழிக்குப்பழி வாங்கிவிட்டதாக பழைய கஷ்டங்களை எல்லாரும கேட்கும்படி யுத்தகளத்தில் எடுத்துரைத்து கர்ச்சித்தான். அன்று பீமனது கோரரூபத்தைக்கண்டு அநேகர் இறந்தவர்போலக் கீழே விழுந்தனர். பீமன் இதுபோல துரியோதனனையும் கூடிய சீக்கிரத்தில் கொல்லுவதாகச் சொல்லிக் கர்ச்சித்தான். துச்சாஸனன் இறந்ததும் கௌரவஸேனை பழையபடி சிதறி ஓட, கர்ணனுக்கு ஒருவாறு

துக்கம் வந்தது. சல்லியன் அவனைத் தேற்றிக்கொண்டிருக்கையில் அவன் பிள்ளை பாண்டவர்களை நோக்கிச் சண்டைக்குப் புறப்பட்டான். அவனுக்கும் நகுலனுக்கும் பெரும்போர் உண்டாக நகுலன் அடிக்கடி கஷ்டஸ்திதியை அடைந்து முடிவில்தேர் முதலியவைகளை இழந்து பீமன் ரதத்தில் வந்து ஏறினான். இந்த நிலைமையைக்கண்ட அர்ஜுனன் ஓடிவந்து கர்ணனது பிள்ளையை எளிதில் கொன்றுவிட்டான். இதன் பின்பு குரு பாண்டவர்களுக்கு மிகுந்த கொடியயுத்தம் நடக்க இருதிறத்தாரும் மிகுந்த கஷ்டத்தை அடைந்தனர். இவ்வாறு இருக்கையில் பகவான் கர்ணனைக் கொல்லும்படி அர்ஜுனனை ஏவ, அவன் கர்ணன்முன் போய் யுத்தத்திற்காக நின்றான்.

வினா 33:—இருவருக்கும் யுத்தம் தொடங்கும் முன் யுத்தகளத்தில் என்னென்ன நடந்தது?

விடை:—இருவரும் சண்டைக்குத் தயாராய் நிற்கையில் பிரபஞ்சம் முழுவதும் இரண்டு கக்ஷியாகப் பிரிந்ததாம். நல்லவைகள் யாவும் அர்ஜுனனுக்கும், கெட்டவைகள் யாவும் கர்ணனுக்கும் அனுகூலமாக நின்றனவாம். இருவருக்கும் நடக்கப்போகிற போரைப் பார்க்க ஆகாயத்தில் தேவதைகளும், ரிஷிகளும், தேவமாதர்களும் வந்து கூடினர்; அப்பொழுது பிரம்மாவும் சிவனும் அர்ஜுனனுக்கு ஜயம் வரட்டும் என்று வாழ்த்தினர். (இராமாயணத்தில் இந்திரபுத்திரனாகிய வாலிக்கு அபஜயமும் ஸூர்யபுத்திரனாகிய ஸுக்ரீவனுக்கு ஜயமும்வந்ததற்குமாறாக இங்கு இந்திரபுத்திரனாகிய அர்ஜுனனுக்கு ஜயமும், ஸூர்யபுத்திரனாகிய கர்ணனுக்கு பராஜயமும் வந்ததாகக் கூறுவர் சிலர்). அந்த ஸமயத்தில் கர்ணன் மனதில் தன்பிள்ளை இறந்த துக்கம் அதிகமாய் இருக்க அவன்முகம் வாடியிருந்தது. அப்பொழுது கர்ணன் சல்லியனை நோக்கி 'நான் இறக்கும்படி நேரிட்டால் நீ என்ன செய்வாய்' என்றுகேட்க அவன் 'நானே சண்டைசெய்து கிருஷ்ணார்ஜுனனை யமபுரம் அனுப்புவேன்' என்று மிகுந்த பரபரப்புடன் மறுமொழி கூறினான். இதே கேள்வியை அர்ஜுனன் பகவானிடம் கேட்க, அவர் 'ஸூர்யன் மேற்கே உதித்தாலும் உதிக்கலாம், இது போன்ற மற்றைய அஸாத்திய காரியங்கள் நடந்தாலும் நடக்கலாம், ஆனால் கர்ணனால் உன்னை ஒரு போதும் கொல்லமுடியாது. அப்படி நடந்துவிட்டால் உல

கத்திற்கே ஏதோ கேடுகாலம்தான் வரும்' என்று மறுமொழி கூறினர். இதன்பின்பு இருவருக்கும் சண்டை தொடங்கிற்று. அர்ஜுனனைப் புகழ்ந்து தேவவாத்தியங்களை முழக்கி தேவர்கள் அர்ஜுனன்மேல் பூமாரி பொழிந்தனர். இதைக்கண்ட அசுவத்தாமன் துரியோதனனிடம் சென்று, 'பெரியோர்கள் எல்லோரும் இந்த யுத்தத்தில் இறந்து போய்விட்டனர். என்னையும் கிருபரையும் ஒருவராலும் கொல்லமுடியாது. ஆகையால் நீ யுதிஷ்டிரரோடு ஸமாதானம் செய்துகொண்டு ஸுகமாக உயிரோடு இரு,' என்று புத்திமதி கூறினன். அதற்கு துரியோதனன், 'இவ்வளவு விரோதம் எங்களுக்கு உண்டாய்விட்டபிறகு ஸமாதானம் இனிமேல் எவ்வாறு வர இடமுண்டு. மேலும் அர்ஜுனன் இன்று முழுவதும் போர்செய்து களைத்துப்போயிருக்கிறன். ஆகையால் அவனைக் கர்ணன் எளிதில் கொல்லுவான். சண்டை ஒழுங்காக நடக்கட்டும்' என்று அசுவத்தாமன் புத்திமதியை அங்கீகரியாது மறுமொழி கூறினன்.

வினு 34:—கர்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் அன்று ஸாயங்காலம் யுத்தம் எவ்வாறு நடந்து வந்தது?

விடை:—இருவரும் வெகுகாலம் ஸமயுத்தம் செய்துவருகையில் அர்ஜுனன் விடும் தெய்வீக அஸ்திரங்கள் யாவும் கர்ணன்விஷயத்தில் ஒன்றும் செய்யமுடியாமல் வீணாயின. இதைக்கண்ட தேவதைகள் முதலியோர் இருவரையும் புகழ்ந்து பேசினர். இந்த யுத்தத்தில் பகவானுக்கும் பலமான அடி விழுந்தது. இதைக்கண்ட அர்ஜுனன் கோரயுத்தம் செய்ய அவன் பராக்கிரமத்தைப் பொறுக்கமாட்டாது கௌரவவீரர்கள் எல்லோரும் கர்ணனை யுத்தகளத்தில் தனிமையாய் விட்டு ஓடிப்போயினர். கர்ணனுக்கு இதனால் ஒருவிதமான தளர்ச்சியும் உண்டாகவில்லை. ஓடிப்போன கௌரவஸேனை அணுகிவர பயந்து தூரத்திலிருந்தபடியே யுத்தத்தை மிகுந்த ஆவலோடு பார்த்துக்கொண்டு நின்றுவிட்டது. இந்த ஸமயத்தில் காண்டவதகனத்தில் தாய் இறக்க, தப்பிப்போன அசுவஸேனனென்ற பாம்புக்குட்டியானது பாதாளத்திலிருந்து வந்து அர்ஜுனன் உயிர் குடிப்பதற்காக கர்ணன் அம்பராத்தூணியில் முக்கியமாகிய பாணத்துள் வந்து புகுந்துகொண்டது. கர்ணன் அதில் நாகன் புகுந்திருப்பதை அறியாது எடுத்து அதைத்

தன் வில்லில்வைத்து அர்ஜுனன் கழுத்தைநோக்கிக் குறி வைத்துவிட யத்தனித்தான். அப்பொழுது சல்லியன் 'இது அர்ஜுனன் கழுத்தில் படாமல்போனால் என்ன பண்ணுவது? ஆகையால் குறியைத் தனித்துவைத்து யோசித்து விடு' என்று தன் மனதில்பட்டபடி கர்ணனை எச்சரிக்கை செய்தும், கர்ணன் இதைக் கவனியாது தான் முன் தொடங்கியபடியே அந்த பாணத்தை விட்டுவிட்டான். அது புறப்பட்டதும் தன் நாகரூபத்தோடு வெகு வேகமாக வருவதைக் கண்ட தேவதைகள் பரிதவித்தனர். இதைக்கண்ட பகவான் தமது கால் விரலால் அர்ஜுனன் ரதத்தை பூமியில் ஒருமுழம் பதியும்படி அமுக்கக் குதிரைகள் காலை மடித்து கீழே படுத்துவிட்டன. வந்த நாகாஸ்திரம் 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது' என்ற வசனத்திற்கு எற்ப அர்ஜுனன் கிரீடத்தை வந்து தாக்க, எவ்வளவு வேகமாக வரும் எந்த ஆயுதத்தாலும் தள்ளமுடியாத கிரீடம் சிதறிக் கீழே விழுந்தது. இவ்வாறு நாகாஸ்திரம் வீணானதும் அது மறுபடி கர்ணனிடம் போய் தனது வரலாறு முதலியவைகளை எடுத்துச் சொல்லி தன்னை மறுபடியும் அர்ஜுனனை உத்தேசித்து விட வேண்டும் என்று கேட்டது. அதற்கு கர்ணன் பிறர் ஸஹாயத்தால் தனக்கு வரும் ஜயம் வேண்டுவதில்லை என்றும், விட்ட அஸ்திரத்தை தான் மறுபடியும் விடுவதில்லை என்றும் மறுமொழி கூறினான். உடனே அந்த நாகமே அர்ஜுனனைக் கொல்ல ஆகாயத்தில் கிளம்பிவர, பகவானது உத்தரவின் பேரில் அதை அர்ஜுனன் வெட்டித்தள்ளினான்.

வின 35:—இவ்வாறு நாகாஸ்திரத்திற்குத் தப்பிய அர்ஜுனன் எவ்வாறு கர்ணனைக் கொன்றான்?

விடை:—இவ்வாறு நாகன் இறந்ததும் பகவான் ரதத்தைவிட்டுகீழே இறங்கி பூமியில் புதைந்த ரதத்தை தூக்கிவிட்டார். இதற்குள் கர்ணன் அர்ஜுனனை பலமாக அடிக்க இருவருக்கும் கொடிய போர் கொஞ்சகாலம் நடந்தது. அந்த ஸமயத்தில் கர்ணன்முன்பாக காலன் தோன்றி, 'உன் தேர் பூமியுள் புதைகிறது. உன் மரணகாலம்வந்துவிட்டது' என்று எச்சரிக்கைசெய்ய உடனே அவன் தேர், பிராம்மண சாபப்படி பூமியுட்புதைந்தது. அந்த ஸமயத்தில் பரசுராமர் சாபப்படி, அவனுக்கு நல்ல அஸ்திரங்கள் யாவும் மறந்து போய்விட்டன. இந்த ஸமயத்தில் பக

வான் அர்ஜுனனை பாண வருஷம் செய்யும்படி ஏவினர் கர்ணனுக்கு மனம் குழப்பமடைய, தேரைவிட்டுக் கீழே இறங்கி அதைத் தூக்க யத்தனிக்கையில் அவன் அர்ஜுனனை நோக்கி ' நான் இதை தூக்கி நிறுத்தும்வரையில் உன் பாணங் களை நிறுத்து. அதர்ம யுத்தம் செய்யாதே ' என்றான். இதைக்கேட்ட பகவான், ' அடே பாபி! இதற்குமுன்பு நீயும் துராத்மாவான துரியோதனனும் பாண்டவர்களை வருத் துங்கால் இந்த தர்மசிந்தை எங்கேயடா போயிருந்தது ? இப் பொழுது மாத்திரந்தான் உனக்கு தர்மசிந்தை வந்ததோ ' என்று கர்ணனைப் பரிஹாஸம் செய்து அர்ஜுனனை பாணம் விடும்படி ஏவினர். அர்ஜுனனுக்கு பழையகஷ்டங்கள் ஞாபகம் வர மிகுந்தகோபத்தோடு அவன் கர்ணனைத்தாக்கினன். அவன் ரதத்திலேறி ஒரு கொடிய அம்பை அர்ஜுனன்மேல்விட்டு அவ னுக்கு மூர்ச்சை வரும்படி செய்துவிட்டு தேரை விட்டுக் கீழே குதித்துதன்தேரை உயர்த்த மறுபடியும் முயன்றான். எவ்வளவு முயன்றும் அவனால் ஒன்றும் முடியவில்லை. இதற்குள் அர்ஜு னன் மூர்ச்சை தெளிந்தெழுந்து வெகுநாழிகை கொடிய போர் செய்து முடிவில் ஒரு திவ்யஅஸ்திரத்தை சிறந்தசபத பூர்வமாக விட்டான். அந்த அஸ்திரம் கர்ணன் தேரைத் தூக்கிக்கொண் டிருக்கையில், அவன் தலையை வெட்டி எறிந்துவிட்டது. இவ் வாறு 17-ம் நாள் மாலை கர்ணன் அர்ஜுனனால் இறந்தான்.

வினு 36.—கர்ணன் இறந்தபின்பு அன்று யுத்தம் எவ்வாறு முடிவு பெற்றது ?

விடை:—கர்ணன் இறந்ததும், சல்லியனுக்குக் கோபாவேசம் வர கௌரவஸேனையைச் சேர்த்துக்கொண்டு பாண்டவர்களோடு சண்டைசெய்தான். அர்ஜுனன் பீமன் முதலியோரால் தாக் கப்பட்டு கௌரவஸேனை சிதறிஓடத் தொடங்கியது. துரி யோதனன் கர்ணனை எண்ணி துக்கிக்கலாயினன். கௌரவ ஸேனை ஓடுவதைக்கண்டு அவன், ' யுத்தகளத்தில் இறப்பதே நல்லது. முதுகுகாட்டி, ஓடாதேயுங்கள் ' என்று தைரியப் படுத்த ஸேனை நின்றுவிட்டது. இதைக்கேட்ட சல்லியன் ' நமது ஸேனை பாண்டவர்களால் மொத்துண்டு வருத்தப்பட்டிருக் கிறது. ஆகையால் நாம் ஸேனையைத் திருப்பிவிடுவோம் ' என்று சொன்னான். இதற்குள் அர்ஜுனன், பீமன் முதலி யோரிடம் யுத்தத்தை ஒப்புவித்துவிட்டு பகவானோடு தர்ம

புத்திரரிடம் சென்று கர்ணவதத்தை விஸ்தாரமாகச் சொன்னான். கௌரவஸேனை சீக்கிரத்தில் தனது படைவீடு செல்ல பாண்டவர்களும் அன்று ஸாயங்காலம் படைவீடு வந்து சேர்ந்தனர். இந்த ஸங்கதிகளைக் கேட்டதும் திருதராஷ்டிரன் மூர்ச்சை அடைந்து விழுந்து பரிதவித்தான்.

வினா 37:—இப்பருவத்தில் இறந்த கர்ணனது சரித்திரத்தின் சுருக்கம் என்ன?

விடை:—1. கர்ணனது பிறப்பு-கவசகுண்டலங்கள் குந்தியால் பெட்டியுள் வைத்து கங்கையில் விடப்படுதல்.

2. வளர்ப்பு-திருதராஷ்டிரன் ஸாரதி அதிரதனதுவீட்டில்.

3. வித்தை பயிலல்—முதலில் துரோணரிடம்—பிராம்மணவேஷங்கொண்டு பரசுராமரிடம் இந்திரன் பிள்ளைப்பூச்சியாக வந்து கர்ணன் ஜாதியைச் சொல்லும்படி செய்தல்—பரசுராமர் சாபம்—தேர் யுத்த காலத்தில் பூமியில் புதைந்து போகவேண்டும் என்ற பிராம்மண சாபம்-அஸ்திரபரீக்ஷை—அங்கதேசாதிபத்யம்-அதிரதனுக்கு மரியாதை செய்தல்

4. கெட்டகுணம் துரியோதனனது சேர்க்கை - பாண்டவர்களை அநேக காலங்களில் அவமதித்தல்—துரியோதனனுக்கு துற்போதனை யுரைத்தல்-தற்புகழ்ச்சி பீஷ்மரோடு உண்டான விரோதமும் அதன் முடிவும்-சல்லியனால் தற்புகழ்ச்சி அடக்கப்படுதல்.

5. நல்ல குணம், ஈகை-கவசகுண்டலங்களை இந்திரனுக்குக் கூசாது கொடுத்தல்-குந்தியைத் தாய் என்று அறிந்து அவள் கேட்டவைகளைக் கொடுத்தல்-பாண்டவர்கள் தன் தம்பிகள் என்றறிந்ததும் துரியோதனனுக்கு துரோகம்செய்து அவர்களோடு சேராதிருத்தல்.

6. சண்டையிட்ட சிறப்பு - அர்ஜுனனோடு சண்டையிட்ட விதம்-மரணம்.

7. தருமபுத்திரர் இவனது உறவை அறிந்து துக்கித்தல். (சாந்திபர்வ ஆரம்பத்தைப் பார்க்க.)

# 9. சல்லிய பர்வம்

***மீ**னுமை கோலநெடு நரசிங்க மாகிநிலம் விறகா லளந்தகுரளாய்*
*ஆனாத சீறுமழு வில்லுங்கொள் வெல்லுமுனை யலமுற்ற செங்கையவராய்*
*வானோர் சென்றுதொழ மண்ணு டரைவரையும் வாழ்விக்க வந்தவடிவாய்*
*நானு விதங்கொள்பரி, யாளாகி நின்றருளும் நாராய ணய நமவே.*

வினு 1:—பதினேழாம் நாள் மாலை துரியோதனுதியர் பக்கத்தில் யுத்தவிஷயமாக என்னென்ன நடந்தேறின?

விடை:—பதினேழாம்நாள் மாலை யுத்தம் முடிவதற்கு முன்னமேயே கிருபாசாரியர் துரியோதனனை அடுத்து, 'பாண்டவர்களோடு இதன்மேலாவது ஸமாதானம் செய்துகொண்டால் நலமாக இருக்கும். இந்த விஷயத்தை திருதராஷ்டிரனும் ஒப்புக் கொள்ளுவான். உடனே தருமபுத்திரரும் ஒப்புக்கொள்ளு வார். மற்றைப் பாண்டவர்கள் அவருக்கு அடங்கியே இருப் பார்கள். இப்படி மாத்திரம் நீ செய்துவிட்டால் இதுவரை யிலும் இறந்தவர்போக மற்றைய க்ஷத்திரியர்களாவது பிழைத் துப்போவர். நீயும் ஸுகமாக அரசாண்டுவரலாம்' என்று தம்மாலியன்றமட்டும் சொல்லிப்பார்த்தார். துரியோதனன் மன தில் இது பதியவேயில்லை. அவன் கிருபரைநோக்கி, 'இதற்கு முன்பு நான் பாண்டவர்களை எவ்வளவோ கஷ்டப்படுத்தி இருக்கிறேன். அவர்கள் எப்படி என்னேடு ஸமாதானமாக இருப்பார்கள். நான் இவ்வளவுநாள் ஏக சக்கிராதிபதியாக என் இராஜ்யத்தை இதுவரையிலும் ஆண்டுவந்து, நான் தர்மாதி களை என் மனம்போனபடி எல்லாம் செய்து வந்திருக்கிறேன். இப்படி இருக்க நான் எப்படி பாண்டவர்களுக்கு அடங்கி இப் பொழுது அரசாளமுடியும். எனக்கு முக்கிய ஸ்நேகிதர்கள் முதலியோர்கள் எல்லோரும் இந்த யுத்தத்தில் இறந்துபோய் விட்டனர். அவர்கள் போனவழியே எனக்குப் பிரியமே ஒழிய, நான் எவ்வாறு அவர்களைவிட்டு ராஜ்யஸுகத்தை யனுபவிக் கத் துணிவேன். யுத்தம் இவ்வளவுதூரம் தைரியமாகச் செய் தாய்விட்டது. நான் இப்பொழுது ஸமாதானத்திற்குப்போனல் நான் பாண்டவர்களுக்குப் பயந்துபோனதாக எண்ணி என்னை எல்லோரும் பழிப்பார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த அபவாதத்திற்கு நான் ஆளாகமாட்டேன். மேலும் யுத்தத்

தில் ஸமாதானத்தைச் செய்வதைவிட புறங்காட்டாது சண்டை செய்து மாண்டுபோவதே மேல்; ஏனெனில் இதனால் வீரஸ்வர்க்கமாவது அவசியம் கிடைக்கும். ஆகையால் நான் இந்தப் போரை நிறுத்துவது எனக்கு நியாயமாகத் தோன்றவில்லை. நீர் என்விஷயத்தில் என்ன செய்யவேண்டுமோ அதை மனதாரச் செய்தாய்விட்டது. எனக்குப் புத்திமதி கூறவேண்டியது உமது கடமை. அதையும் நீர் நன்றாகச் செய்து முடித்துவிட்டீர். எனக்கு அந்த விஷயத்தில் தோன்றியதை நானும் சொல்லியாய்விட்டது' என்று பல முகாந்திரங்கள் மூலமாக யுத்தத்தை நிறுத்தமுடியாது என்று சொல்லிவிட்டான். இதன் பின்பு துரியோதனன் அசுவத்தாமனிடம்போய் மறுநாள் யாரை ஸேனாதிபதி யாக்குவது என்ற விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கலாயினன். அசுவத்தாமன் சல்லியனையே ஸேனாதிபதியாக்குவது நலம் என, துரியோதனன் சல்லியனிடம் சென்று அவனை ஸேனாதிபதியாக இருக்கும்படி மிகுந்த விநயத்துடன் பிரார்த்திக்க, அவன் அதை ஒப்புக்கொண்டு தன்னால் இயன்றமட்டும் மனப்பூர்வமாகப் பாண்டவர்களோடு துரியோதனனுக்காக சண்டை செய்வதாக வாக்களித்தான். துரியோதனனது ஸேனை கர்ணன் இறந்ததை எண்ணித் துக்கித்துக் கொண்டு அன்றிரவைக் கழித்தது.

வின 2:—பதினெட்டாம் நாள் காலையில் யுத்தம் எவ்வாறு தொடங்கியது?

விடை:—சல்லியன், அசுவத்தாமன் முதலியோர் ஒன்றாய்ச்சேர்ந்து துரியோதனனை மறுநாட் காலையில் ஸந்தித்து எல்லோரும் ஒன்றுசேர்ந்து பாண்டவர்களைத் தாக்கவேண்டுமே ஒழிய வெவ்வேறாகப் பிரிந்து தாக்கவே கூடாது என்று ஏற்பாடு செய்துகொண்டனர். இதற்குள் பாண்டவர்களும் தமது ஸேனைகளை ஒழுங்காக்கி யுத்தத்திற்குத் தயாராயினர். அன்று கௌரவர்களுக்கும் ஸ்ருஞ்ஜயர்களுக்கும் முதலில் கொடியயுத்தம்தொடங்கியது. அப்பொழுது பீமனும் அர்ஜுனனும்தம்மை எதிர்த்தவர்கள் எல்லோரையும் அசையவொட்டாது தடுத்துவிட்டார்கள். திருஷ்டத்யும்னன் சிகண்டி ஆகிய இவர்களால் காக்கப்பட்டு தருமபுத்திரர் சல்லியனை எதிர்த்து போர் செய்யத்தொடங்கினார். பாண்டவர்கள் அப்பொழுது செய்த யுத்தத்தால் கௌரவஸேனை சிதறி ஓடத்துடங்கியது. இதைக்

கண்ட சல்லியன் கௌரவஸேனையை ஒன்றுசேர்த்து நிறுத்திக் கொண்டு யுதிஷ்டிரரை எதிர்க்க ஓடிவந்தான். இதற்குள் நகுலனுக்கும் கர்ணன் பிள்ளை சித்திரஸேனனுக்கும் சண்டையுண்டாக, அதில் நகுலன் அவனது வில் முதலியவைகளை ஒடித்து எறிந்துவிட்டு அவன் ரதத்தின்மீது அவன்விட்டபாணங்களைத் தாங்கி வந்து ஏறி அவனது தலையைவெட்டி எறிந்துவிட்டான். இவ்வாறு சித்திரஸேனன் நகுலனால் இறந்ததைக்கண்ட அவன் ஸஹோதரர்களாகிய ஸத்யஸேனன் ஸுஷேணன் என்பவர் நகுலனை வந்து எதிர்த்தனர். முதலில் நகுலன் தனது ரதம் முதலியவைகளை இழந்து கஷ்டஸ்திதியை அடைந்து அருகில் இருந்த திரௌபதி புத்திரர்களுள் ஒருவனது ரதத்தில் வந்து ஏறிக்கொண்டான். அங்கிருந்தபடியே விசித்திரயுத்தம் செய்து நகுலன் கர்ணன் பிள்ளைகள் இருவரது தலைகளை வெட்டி அவர்களைக் கொன்றுவிட்டான்.

வினா 3:—தருமபுத்திரரைநோக்கி ஓடிவந்த சல்லியனது சண்டை எவ்வாறு நடந்தது?

விடை:—சல்லியன் ஓடிவருவதைக்கண்டு ஸாத்யகி பீமன் நகுல ஸஹாதேவர்கள் தருமபுத்திரருக்குக் காவலாக வந்து நின்றனர். யுத்தத்தில் சளைக்காத சல்லியன் இவர்கள்மேல் பாண வருஷம் செய்யத்தொடங்கினான். இதைக்கண்டு ஸாத்யகி முதலியோர் பாணவருஷம் செய்து சல்லியனை அசையவொட்டாமல் தடுத்தனர். இதைக்கண்டு கிருபரும், கிருதவர்மாவும் சல்லியனுக்கு ஸஹாயமாக வந்து நின்றனர். முன் ஏற்பாட்டின்படி உடனே எல்லாக் கௌரவர்களும் அங்குவந்து கூடிவிட்டனர். திருஷ்டத்யும்னாதி பாண்டவவீரர்களும் அங்குவர, அப்பொழுது கொடியசண்டை உண்டாயிற்று. கிருதவர்மா பீமனது தேர்க்குதிரைகளை வெட்டிச்சாய்த்தான். சல்லியன் ஸஹாதேவனையும் இவ்வாறு செய்ய, அவன் சல்லியனது பிள்ளையைக் கொன்றுவிட்டான். இதைக்கண்டு சல்லியன் பாண்டவஸேனாமகர்களில் அநேகரைக் கொல்ல, பீமன் தன் கதையைக் கையில் எடுத்துக்கொண்டு சல்லியனோடு சண்டைசெய்ய வந்தான். வந்து கொஞ்சநாழிகைக்கெல்லாம் சல்லியனது ஸாரதியை அவன் ஒரே அடியில் கொன்றுவிட்டான். அப்பொழுது இருவருக்கும் கதாயுத்தம் உண்டாயிற்று. இதில் பீமனும் சல்லியனும் வெகு நாழிகை ஸமயுத்தம் செய்துவிட்டு

முடிவில் ஒருவரை ஒருவர் பலமாக அடித்துக்கொண்டு இருவரும் மூர்ச்சைபோட்டுக் கீழே விழுந்தனர். உடனே கிருபர் ஓடிவந்து சல்லியனைத் தமது ரதத்தில் எடுத்துவைத்துக் கொண்டு யுத்தகளம்விட்டு ஓடிப்போயினர். பீமன் கொஞ்ச நாழிகையானதும் எழுந்து சல்லியனைச் சண்டைக்கழைத் தான். உடனே அருகிலிருந்தவர்கள் அவனை எதிர்க்க மறுபடியும் அவன் போர்செய்யத் தொடங்கிவிட்டான். இவ்வாறு சண்டை நடந்துகொண்டிருக்கும்பொழுதே துரியோதனன் சேகிதானனைக் கொன்று சாய்த்தான். மூர்ச்சை தெளிந்ததும் சல்லியன் தருமபுத்திரரை வந்து எதிர்க்க முன்போல ஸாத்யகி முதலியோரும் வந்து நின்றுவிட்டனர். அப்பொழுது சல்லியன் தன் கொடி முதலியவைகளை இழந்தபோதிலும் மிகுந்த ஆவேசத்தோடு சண்டைசெய்தான். அதனால் அவனிடம் பாண்டவஸேனை அணுக முடியவே இல்லை.

வின 4:—இவ்வாறு சல்லியன் சண்டைசெய்துவருகையில் அர்ஜுனன் முதலிய பாண்டவவீரர்கள் எவ்வாறு சண்டைசெய்து வந்தனர் ?

விடை:—சல்லியன் இவ்வளவு பராக்கிரமத்தோடு சண்டைசெய்து வருகையில் அர்ஜுனனுக்கும் அசுவத்தாமனுக்கும் கொடிய போர் உண்டாயிற்று. இருவரும் வெகுநாழிகை ஸமயுத்தம் செய்தனர். அப்பொழுது அர்ஜுனனையும், பகவானையும் அவன் வெறு வெறுக்க அடிக்க, அர்ஜுனன் எளிதில் அவனது குதிரை, ஸாரதி, ரதம் முதலியவைகளை சின்னபின்னப் படுத்தினான். குதிரையில்லா ரதத்தில் இருந்துகொண்டு அசுவத்தாமன் கொஞ்சநாழிகை சண்டைசெய்து பார்த்தான். அவனால் ஒன்றும் முடியாமற்போக, அவன் அருகிலிருந்த ஸுரதனோடு சண்டைசெய்து அவனைக் கொன்றுவிட்டான். அதன்பின்பு அவன் ஸம்ஸப்தகரோடு சேர்ந்துகொண்டு அர்ஜுனனை எதிர்க்க அவன் ஒருவனாகவே அவர்கள் எல்லோரையும் எதிர்த்துப் போர்செய்யத் தொடங்கினான். துரியோதனனுக்கும் திருஷ்டத்யும்னனுக்கும் உண்டான போரில் துரியோதனன் பட்டபாட்டைக் கண்டு அவனுக்கு அவன் தம்பிமார் ஸஹாயம் செய்ய வந்து சேர்ந்தனர். திருஷ்டத்யும்னன் ஒருவனே இவர்களோடு வெகுகாலம் தனிமையாய்ச் சண்டைசெய்தான். அர்ஜுனனுக்கும்கிருபகிருதவர்மாவுக்கும்;

ஸஹதேவனுக்கும், சகுனிக்கும்; பீமனுக்கும் துரியோதனனுக்கும் போர் நடந்தது. அதில் பீமன் துரியோதனனை மூர்ச்சை போகும்படி செய்து அவனது ஸாரதியைக் கொல்ல அவன் குதிரைகள் அவனை யுத்தகளம்விட்டு இழுத்துக் கொண்டு போயின.

வினா 5:—இவ்வாறு பாண்டவவீரர்கள் தனித்தனியாகத் தமது திறமையைக் காட்டிக்கொண் டிருக்கையில், இவர்கள் எல்லோரும் சேரும்படியான என்ன தருணம் எவ்வாறு வந்தது? இவர்கள் சேர்ந்ததால் பாண்டவர்களுக்கு என்ன நன்மை உண்டாயிற்று?

விடை:—இவர்கள் இவ்வாறு சண்டையிட்டு வருகையில் சல்லியன் யுதிஷ்டிரரை எதிர்த்து வெகு கோரமான யுத்தம் செய்தான். அப்பொழுது தருமபுத்திரர் மிகுந்த கோபங்கொண்டு சல்லியனது தேர், குதிரை, ஸாரதி முதலியவைகளைச் சிதற அடிக்க, அவனுக்கு ஸஹாயமாக அசுவத்தாமா ஓடிவந்து சல்லியனைத் தனது ரதத்தில் ஏற்றிக்கொண்டு ஓடிப்போனான். உடனே யுதிஷ்டிரர் தமது தம்பிமார் ஸாத்யகி முதலியோரை அழைத்து தம்மைச்சுற்றி ஒழுங்காக நின்று தத்தமக்கு வந்து சேரும் யுத்தத்தைச் செய்துகொண்டு தம்மை கார்க்கவேண்டுமென்பதாகவும், அப்பொழுது தாம் எளிதில் சல்லியனைக் கொன்றுவிடுவதாகவும் ஏற்பாடு செய்தார். இதனால் தனித்தனியாகப் போர் செய்துவந்த பாண்டவவீரர்கள் ஒன்றாய்ச் சேரவேண்டி நேரிட்டது. இந்த ஏற்பாட்டின்படி இவர்கள் ஒழுங்காக வந்து சல்லியனை எதிர்த்துக் கொடியபோர் செய்தனர். இதைக் கண்ட துரியோதனன் தனது ஸேனையை சல்லியனுக்கு ஸஹாயமாகச் சண்டைசெய்யும்படி அனுப்பினான். எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து சண்டைசெய்ததில் சிலர் சல்லியனது குதிரைகளையும், சிலர் கொடியையும், சிலர் ஸாரதியையும், சிலர் அவனது வில்லையும், நாசம் செய்தனர். ஆதலால் சல்லியன் கூடிய சீக்கிரத்தில் தனக்கு ஸஹாயமானவைகள் யாவையும் இழந்துவிட்டான். கொஞ்சகாலம் யுதிஷ்டிரர் சல்லியனோடு சண்டை செய்தபின்பு, தருமபுத்திரர் ஒரு திவ்ய அஸ்திரத்தை எடுத்து ஸகல மந்திரங்களை அதில் ஏற்றி 'அடே பாபி! நீ இன்றோடு மாண்டாய் பார்த்துக்கொள்!' என்று கூக்குரலிட்டுக்கொண்டு அதை சல்லியன்மேல் விட்டார். அதை

சல்லியன் எவ்வளவோ தடுக்கமுயன்றும் அவனால் முடிட வில்லை. அது நேராகவந்து சல்லியன் உயிர்நிலைகளைக் கிறிக் கொண்டு ஊடுருவிச்சென்றது. உடனே அவன் இறந்து பூமியில் விழுந்தான். கௌரவஸேனையில் ஒரு குழப்பம் உண்டாயிற்று. சல்லியனது தம்பி பாண்டவர்களை எதிர்த்துக் கூடியசீக்கிரத்தில் தருமபுத்திரரால் இறந்தான்.

வினா 6 :—மத்திர தேசாதிபதியாகிய சல்லியன் தருமபுத்திரரால் அடிபட்டு விழுந்ததும் யுத்தம் எவ்வாறு நடந்தது ?

விடை :—சல்லியன் யுத்தத்தில் அடிபட்டு விழுந்ததும் கௌரவ ஸேனையில் ஒருகுழப்பம் உண்டாக அது சிதறி ஓடத்தலைப்பட்டது. அந்த ஸமயத்தில் சல்லியன் கூடவந்த அவனது ஸேனை மாத்திரம் தருமபுத்திரரைக்கொல்ல முயற்சிசெய்தது. இதைக் கண்ட சகுனி முதலியோர் மிகுந்த உத்ஸாஹத்தோடு ஓடும் ஸேனையை ஒன்றாகச்சேர்த்துக்கொண்டு தருமபுத்திரரை வந்து சூழ்ந்துகொள்ள அங்கு கொடியபோர் தொடங்கியது. பாண்டவர்கள் வெகு லாஹவமாக சல்லியனது பரிவாரங்களைக் கொன்று தள்ளிவிட கௌரவஸேனை சிதறி ஓடத் தொடங்கியது. அப்பொழுது பாண்டவஸேனையுள் மிகுந்த ஸந்தோஷம் உண்டாக அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி தருமபுத்திரர் முதலிய பாண்டவர்கள் யுத்தம் செய்த பராக்கிரம விசேஷத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசத் தொடங்கினர். இவ்வாறு கௌரவஸேனை சிதறி ஓடுவதைக் கண்ட துரியோதனன், அவர்கள் முன்புறம் சென்று அவர்களை நிறுத்தித் திருப்பிக்கொண்டு பாண்டவர்களை எதிர்த்து வந்தான். இவர்களைப் பீமனும், திருஷ்டத்யும்மனனும் எதிர்த்தார்கள். துரியோதனன் தன் ஸேனையை நோக்கி, 'நீங்கள் ஓடிப் போவதால் உங்களுக்கு ஒரு பிரயோசனமும் இல்லை. நீங்கள் எங்கு சென்றாலும் பாண்டவர்கள் உங்களை துறத்திவந்து கொல்வார்கள். இப்பொழுது பாண்டவர்களது ஸேனை குறுகிப்போய் இருக்கிறது. கிருஷ்ணார்ஜுனன் மிகுந்த சிரமத்தை அடைந்திருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் நின்று யுத்தம் செய்வீர்களாகில் பாண்டவர்களை நாம் ஜயித்துவிடலாம். அவ்வாறின்றி நாம் இந்த யுத்தத்தில் இறப்போமாகில் நமக்கு வீரஸ்வர்க்கம் கிடைக்கும். ஆகையால் ஓடாது நின்று நீங்கள் சண்டைசெய்ய வேண்டும்' என்று தைரியப்படுத்தி

ஞன். உடனே கௌரவஸேனை பாண்டவஸேனையைத் தாக்கியது. அப்பொழுது மிலேச்ச தேசாதிபதியாகிய சல்லியன் என்பவன் ஒரு பெரிய யானையின்பேரில் ஏறிக்கொண்டு பாண்டவர்களை எதிர்த்தான். இவன் செய்தபோரால் பாண்டவஸேனை சிதறத் தொடங்க, இவனை மிகுந்த தைரியத்துடன் திருஷ்டத்யும்னன் வந்து எதிர்த்தான். முதலில் அவன் யானையைக் கொடியபாணங்களால் அடிக்க அது திரும்பி ஓடத்தொடங்கியது. ஆனால் சல்லியனால் தூண்டப்பட்டு அந்த யானை மறுபடியும் எதிரியை நோக்கிவர, அவன் கதை ஒன்றை கையிலெடுத்துக்கொண்டு தரையில் குதித்தான். உடனே யானை அவன் ரதத்தை பொடிப் பொடியாக நொருக்கி விட்டது. இதைப் பார்த்திருந்த பீமன் சிகண்டி, ஸாத்யகி ஆகிய மூவரும் ஓடிவந்து யானையைத் தடுத்தனர். என்ன தடுத்தும் விசித்திரயுத்தம் செய்துவந்த சல்லியனிடம் திருஷ்டத்யும்னன் சென்று அவனது யானையை வெகுபலமாக கதையால் அடிக்க அது கீழே உயிர் அற்று விழுந்துவிட்டது. அப்பொழுது கீழே விழுந்த சல்லியனது தலையை ஸாத்யகி வெட்டிவிட்டான்.

வினா 7 :—இவ்வாறு மிலேச்ச ராஜாவாகிய சல்லியன் இறந்ததும் இருபக்கத்திலும் யார் யார் எவ்வாறு விசித்திர யுத்தம் செய்தனர்?

விடை :—இதன் பின்பு ஸாத்யகிக்கும், கிருதவர்மாவுக்கும், உண்டானபோரில் கிருதவர்மா, தேர் குதிரை முதலியவைகளை எல்லாம் இழுத்து தரையில் நிறுத்திவிட்டான். ஸாத்யகியின் ஸாமர்த்தியத்தைக் கண்டதும் கிருபர் ஓடிவந்து கிருதவர்மாவை தப்புவிக்க எண்ணி அவனைத் தமது ரதத்தில் ஏற்றிக் கொண்டு யுத்தகளம் விட்டுபோனார். இதைப்பார்த்ததும் கௌரவ ஸேனை ஓடத்தொடங்க, துரியோதனன் பாண்டவர்களோடு கொடிய யுத்தம் செய்துகாட்டினான். கூடிய சீக்கிரத்தில் கிருதவர்மா அவனுக்கு ஸஹாயமாக வேறொரு ரதத்தில் ஏறிக்கொண்டு வந்துவிட்டான். அப்பொழுது துரியோதனனது பாணங்களால் அடிபடாதவனே யுத்தகளத்தில் கிடையாது. இவ்வாறு சண்டை செய்துகொண்டிருந்த துரியோதனனைக் கண்டு சிதறி ஓடிப்போன ஸேனை திரும்பவும் வந்து யுத்தகளத்தில் ஒன்றாகச் சேர்ந்து பாண்டவஸேனையைத்

தாக்கத் தொடங்கியது. அப்பொழுது அசுவத்தாமன் பீமஸேனனை எதிர்க்க வெகுகாலம் ஸமயுத்தம் நடந்தது. சகுனி தருமபுத்திரரை எதிர்த்து அவரது தேர்க்குதிரைகளைக் கொன்றுவிட, அவரை ஸஹாதேவன் தன் ரதத்தில் ஏற்றிக்கொண்டு போய் வேறோர் ரதத்தில் ஏற்றி அவரை மறுபடியும் யுத்தகளம் அனுப்பினான். சகுனி பிள்ளையாகிய உலூகன் நகுலனையும், கிருதவர்மா ஸாத்யகியையும், துரியோதனன் திருஷ்டத்யும்னனையும், கிருபர் திரௌபதி புத்திரர்களையும், எதிர்த்து மிகுந்த ஆரவாரத்தோடு கொடிய போர் செய்தனர். இதில் துரியோதனன் அங்குமிங்கும் ஸேனைகளை தனது வீரர்களுக்கு ஸஹாயமாக அனுப்பிக்கொண்டே இருந்தான். அப்பொழுது சகுனியை தருமபுத்திரர் உத்தரவின்பேரில் ஸஹாதேவன் எதிர்த்தான். யுத்தகளம் எல்லாம் அம்புக்கூட்டங்களால் இருளாகிவிட்டது. கொஞ்சநாழிகையில் சகுனி தாங்கமுடியாது தன் ஸேனையோடு ஓடிப்போய்விட்டான். கொஞ்ச நாழிகைக்குப் பின்பு அவன் தனது ஸேனைகளைத் தயார்செய்துகொண்டு மறுபடியும் யுத்தத்திற்குவந்து, எல்லோரையும் தைரியப்படுத்திவிட்டு யுத்தம் செய்யத் தொடங்கினான்.

வினா 8:—இவ்வாறு யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் அர்ஜுனன் மனோநிலை எவ்வாறிருந்தது? அப்பொழுது என்ன காரியத்தை நடத்தினான்?

விடை:—அர்ஜுனன் பகவானைநோக்கி 'கிருஷ்ணா! இந்த யுத்தம் நடப்பதைப் பார். இன்றைக்கு 18-ம் நாள் யுத்தம். இதற்குமுன் ஜனங்கள் அதிகமாக இருந்த கௌரவஸேனை இப்பொழுது மிகவும்மெலிந்திருக்கிறது. பீஷ்மர்இறந்தபின்பு துரியோதனன் ஸமாதானம் செய்துகொண்டிருப்பானாகில் இந்த கஷ்டங்கள் ஒருநாளும் வந்திரா. பீஷ்மர் அன்று எவ்வளவோ இவ்விஷயத்தை எடுத்துக்கூறியும் அவை இந்த துராத்மா மனதில் ஏறாமல் போய்விட்டதே! துரோணர் இறந்தபின்பாவது இந்தபாபி பீஷ்மர் சொல்லியபடி கேட்டிருக்கக்கூடாதா? பின்புகர்ணனும், சல்லியனும் உயிரற்றுவிழுந்தார்களே, அப்பொழுதாவது இந்தக் கொடியவனுக்கு புத்தி வந்திருக்கக்கூடாதா? இன்னும், விளக்கில் விழுந்து இறக்கவரும்விட்டிலைப்போல் ஏன் இவன் யுத்தத்திற்கு வந்து உயிர் இழக்கவேண்டும். இவனால்தானே இவ்வளவு அரசர்கள் உயிர் இழந்தார்கள்!' என்று சொல்லி மிகுந்த

தூக்கப்பட்டுவிட்டுப் பின்பு "ஏ மஹாநுபாவா ! இவ்வளவுபேர் மாண்டும் இவன் மாத்திரம் ஏன் இன்னும் இறவாமலிருக்கிறான் ? இவன் விதுரர் முன்சொல்லியபடி க்ஷத்திரியர் எல்லோரையும் ஒழிக்கப் பிறந்தவன்போல் இருக்கிறது. இவன் இறந்தால்தான் சண்டை முடிந்ததாகும்' என்று வீரியத்தோடு சொல்லிவிட்டு, அன்றுடு கௌரவஸேனையையும் துரியோதனனையும் அழித்துவிடுவதாகச் சொல்லிக்கொண்டு யுத்தத்திற்கு கிளம்பினான். அப்பொழுது அர்ஜுனன் செய்த விசித்திர யுத்தத்தால் கௌரவஸேனையில் குழப்பம் உண்டாக வீரர்கள் எல்லோரும் சிதறி ஓடத்தொடங்கினர். பீமனே துரியோதனனையும் அவன் தம்பிமாரையும் கொல்வதாகச் சபதம்செய்து அவன் தம்பிமாரில் சிலரைக் கொன்றிருப்பதால் அர்ஜுனன் அப்பொழுது துரியோதனனைக் கொல்லாதுவிட்டான்.

வினா 9:—இவ்வாறு அர்ஜுனன் சண்டைசெய்து வருகையில், கௌரவஸேனையில் யார் யார் எவ்வாறு யார் யாரால் கொல்லப்பட யுத்தம் முடியத்தொடங்கியது ?

விடை:—திருஷ்டத்யும்னனுக்கும் துரியோதனனுக்கும் போர் உண்டாக, அதில் துரியோதனன் யுத்தவேகத்தை தாங்கமுடியாது ஓடி ஒளித்துக் கொண்டான். கிருப கிருதவர்மாக்கள் துரியோதனனை யுத்தகளம் எங்கும் தேடிக்காணாது முடிவில் சகுனியோடு அவன் இருப்பதைக்கண்டு சேர்ந்தார்கள். பீமன் அப்பொழுது யானைக்கூட்டத்தைக் கொன்று சாய்த்தான். அந்த ஸமயத்தில் துரியோதனுதியர் எல்லோரும் வந்து பீமனை எதிர்க்க பீமன் எளிதில் எல்லோரையும் கொன்றுவிட்டான். துரியோதனுதியரில் துரியோதனனும் ஸுதர்சனனும்தான் அப்பொழுது இறவாமலிருந்தவர்கள். இதற்குள் திருஷ்டத்யும்னன் முதலியோர் கௌரவஸேனையில் தம்மால் கூடியவரையில் எல்லோரையும் கொன்றுவிட்டார்கள். கிருப கிருதவர்மா அசுவத்தாமா, ஆகிய இவர்கள் சிரமம் மேலிட்டதால் அப்பொழுது யுத்தகளத்தைவிட்டு ஒதுங்கி நின்றனர். சகுனியும் துரியோதனனும் மாத்திரம் வெகுஉத்ஸாகத்தோடு அப்பொழுது யுத்தம் செய்துவந்தனர். பீமன் அப்பொழுது எளிதில் ஸுதர்சனனையும் அர்ஜுனன் ஸுசர்மா முதலிய ஸம்ஸப்தகர்களையும் கொன்றுவிட்டார்கள். ஸஹாதேவனுக்கும் சகுனிக்கும் போர் உண்டாயிற்று. அதில் வெகுகாலம் இருவரும் ஸமயுத்தம்செய்தனர்.

சகுனி மிகுந்த கோபத்தோடு, ஸஹாதேவனைத் தாக்க அவன் மூர்க்சைபோய் தேர்த்தட்டில் விழுந்தான். அப்பொழுது பீமன் ஓடிவந்து சகுனிமுதலியோரைத் தாக்க, ஸஹாதேவன் கொஞ்சநாழிகையில் மூர்ச்சை தெளிந்தெழுந்தான். அப்பொழுது சகுனிக்கு ஸஹாயமாக வந்த அவன் பிள்ளை உலூகனை ஸஹாதேவன் கொன்று சாய்த்தான். இவ்வாறு ஸஹாதேவன் செய்ததும் சகுனி பயந்து ஓடத்தொடங்கினான். அப்பொழுது தான் சகுனியைக் கொன்றுவிடுவதாகச் செய்த பிரதிஞ்ஞை ஞாபகம்வர, ஸஹாதேவன் அவனைத் துறத்திச்சென்று அவன் தலையை வெட்டிவிட்டான். இவ்வாறு சகுனி யுத்தகளம் எங்கும் தேடியும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. கிருபர் முதலியோர் யுத்தகளம் விட்டு வெளியில் சென்று சிரம பரிஹாரம் செய்யப்போயினர்.

வினா 10:—இவ்வாறு யுத்தம் அன்று ஸாயங்காலம் ஒருவாறு முடிந்ததும் பாண்டவர்கள் என்ன செய்தனர்? அங்கு என்னஎன்ன நடந்தன?

விடை:—பாண்டவர்களுக்கு ஜயம் வந்தும் இன்னும் துரியோதனன் இறக்கவில்லையே என்ற துக்கம் மேலிட்டது. இப்படி இருக்கையில் ஸாத்யகி ஸஞ்ஜயனைச் சிறைபிடித்துக் கொண்டு வந்து அவனை என்ன செய்வது என்று பாண்டவர்களோடு யோசித்தான். அந்தத் தருணத்தில் வியாஸர் அங்கு தோன்றி ஸஞ்சயனை விட்டுவிடும்படி கட்டளையிட, பாண்டவர்கள் அவர் உத்திரவுப்படி அவனை விட்டுவிட்டார்கள். அப்பொழுது மிகுந்த பயத்தோடு இராஜ்யம்நோக்கி ஓடும் ஜனங்கள் ஸ்திரீகள் முதலியோரோடு ஸஞ்ஜயனும் இராஜ்யத்துட் சென்றான். அப்பொழுது யுயுத்ஸு (திருதராஷ்டிரனது வைசியபத்னியின் பிள்ளை) தருமபுத்திரரிடம் விடை பெற்று திருதராஷ்டிரனைத் தேற்றச்சென்றான். பாண்டவர்கள் யுத்தகளம் எங்கும் துரியோதனனை அன்று ஸாயங்காலம் தேடிக்கொண்டிருந்தனர். பாண்டவர்கள் பக்கத்தில் பகவான், பாண்டவர்கள், திரௌபதி புத்திரர்கள், திருஷ்டத்யும்னன், சிகண்டிமுதலியோர் அப்பொழுது பிழைத்திருந்தனர்.

வினா 11:—இவ்வாறு எல்லோரும் இறந்ததும் துரியோதனன்பாண்டவர்கள் கண்ணில்படாது எங்கு சென்றிருந்தான்? ஏன்? அவனிருந்தது யார் யாருக்கு எவ்வாறு தெரியும்?

விடை:—சகுனி இறந்ததும் பாண்டவர்களுக்கு மிகுந்த ஸந்தோஷம் உண்டாக அவர்கள் மெய்ம்மறந்து கூக்குறலிட்டு குதிக்கத் தொடங்கினர். அப்பொழுது யுத்தகளத்தில் தனிமையாக பாணக்காயங்கள் பொறுக்கமுடியாது நின்ற துரியோதனன் தன் கையில் ஒருகதையை எடுத்துக்கொண்டு மிகுந்த யோசனையின்பேரில் சப்தம்காட்டாது த்வைபாயனஸரஸ் என்ற ஒரு பெரிய குளத்தை நோக்கிச் சென்றான். அதன் கரையில்நின்று கொண்டிருக்கையில் அவனை பயந்தோடும் ஸஞ்ஜயன் கண்டு மிகுந்த துக்கத்தை அடைந்து புலம்பிவிட்டு அவன் மேல்செய்யப்போகிற காரியத்தை அறிந்துகொண்டு ஹஸ்தினாபுரம் சென்றான். துரியோதனன் அநதக் குளத்துள் இறங்கி அதன் ஜலத்தை ஸ்தம்பனம் செய்துகொண்டு உள்ளே இருந்து சிரமபரிஹாரம் செய்துவிட்டு மறுநாள் அசுவத்தாமா முதலியோரோடு பாண்டவர்களை எதிர்ப்பதாக எண்ணங்கொண்டிருந்தான். யுத்தகளம்விட்டு வெளியே போயிருந்த அசுவத்தாமா முதலியோர் தமது குதிரைகளுக்குத் தண்ணீர்காட்ட அந்தக்குளத்தருகில் வந்துகொண் டிருந்தனர். அவர்கள் குளத்துள் போகும் துரியோதனனைக் கண்டு ஓடோடியும் வந்து தண்ணீருள் இருந்த துரியோதனனைநோக்கி ஸம்பாஷிக்கத் தொடங்கினர்.

வினா 12:—இவர்கள் என்ன ஸம்பாஷணை செய்தனர். இதனால் என்ன விபரீதம் விளைந்தது?

விடை:—கிருபர்முதலியோர் துவைபாயனஸரஸின் கரையில் வந்து துரியோதனனைநோக்கி 'சீக்கிரம் தண்ணீரைவிட்டு எழுந்திரு. பாண்டவர்களை எதிர்ப்போம். அவர்கள் இப்பொழுது களைத்திருக்கிறார்கள். எங்கள் மூவரது ஸஹாயத்துடன் நீ அவர்களை இப்பொழுதே வெல்லலாம்' என்று சொன்னார்கள். அதற்கு துரியோதனன் 'நீங்கள் மூன்றுபேரும் இந்தக் கொடிய யுத்தத்தில் பிழைத்துவந்தது உங்கள் அதிர்ஷ்டமே! எனக்கும் களைப்பு அதிகமாக இருக்கிறது. காயமோ பலமாகப் பட்டிருக்கிறது. உங்களுக்கும் அவ்வாறே. தான் இருக்கும் என்று எண்ணுகிறேன். நாம் எல்லோரும் கொஞ்சம் இன்றிரவு ஒன்றும் செய்யாது களைப்பாறி நாளை பாண்டவர்களை எதிர்ப்போம்' என்று மறுமொழி கூறினான். அதற்கு அவர்கள் 'சீக்கிரம் எழுந்திரு. சூட்டோடு சூடாக நாம் வேலை

செய்யவேண்டும். நாம் பாண்டவர்களுக்கு கனப்பார இடங் கொடுத்தால் அவர்களுக்கும் பலவிருத்தியாகும். இது தான் அவர்களைக் கொல்லத்தக்க தருணம்' என்று பலவாறாகச் சொல்ல துரியோதனன் தன்னால் அப்பொழுது ஒன்றும் முடியாது என்று மறுத்துவிட்டான். இவர்கள் வெகுகாலம் அங்கேயேபேசிக்கொண்டிருந்தனர். இவர்கள் ஸம்பாஷணைதொடங்கிய காலத்தில், பீமனுக்கு மாம்ஸம் கொண்டுகொடுக்கும் சில வேடர்கள் அங்குவந்தனர். அவர்கள் துரியோதனன் ஒளிந்திருப்பதை அறிந்து, பீமனிடம் இதைச் சொன்னால் தமக்கு வெகுமதி கிடைக்கும் என்று எண்ணி பீமனிடம் வந்து ஸங்கதியைத் தெரிவித்தனர். பீமன் தருமபுத்திராதிகளிடம் இதைச் சொல்லி வேடர்களுக்கு மிகுந்த வெகுமதி கொடுத்தான். இவ்வாறு தமது வேவுகாரரால் கண்டு பிடிக்கப்படாத துரியோதனன் இருந்த இடத்தை வேடர்களால் அறிந்து பாண்டவவீரர்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு துவைபாயனஸரஸின் கரையே நோக்கிப் புறப்பட்டனர்.

வினா 13:—பாண்டவர்கள் துவைபாயனஸரஸின் கரை வந்ததும் முதலில் என்ன நடந்தது?

விடை:—பாண்டவர்கள் மிகுந்த ஆரவாரத்தோடு வருவதைக்கண்ட கிருபர் முதலியோர் மறைந்து வனத்துள் புகுந்துகொண்டனர். பாண்டவர்கள் குளக்கரை வந்ததும் பகவான், தருமபுத்திரரை நோக்கித் 'துரியோதனன் தனது மாயாசக்தியால் இந்தத் தண்ணீரைக் கடினமாக்கிக்கொண்டு அதனுள் ஒளிந்திருக்கிறான். முன்காலத்தில் துஷ்டநிக்கிரகம் செய்த பெரியோர்கள் எவ்வாறு எதிரிகளது மாயையைக் கெடுத்து அவர்களைக் கொன்றார்களோ அவ்வாறு நீரும் இக்கொடியவனது மாயையைக் கெடுத்து இவனை ஸம்ஹாரம் செய்யும்' என்றுதூண்டினார். உடனே தருமபுத்திரர் தண்ணீரிலிருந்த துரியோதனனை நோக்கி; 'ஏ துரியோதனா! ஏன் க்ஷத்திரிய தர்மத்திற்குவிரோதமாக ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறாய், உனது ஆண்மை எங்கே. கர்ணன் சகுனி முதலியோரை நம்பி யுத்தம் தொடங்கினாயே! அவர்களால் என்ன செய்யமுடிந்தது, வெட்கம் கெட்டவனே தண்ணீரை விட்டு வெளியில் இப்பொழுது வந்து உனது பராக்கிரமத்தைப் பலர் அறியக்காட்டு' என்று புண்படச் சொன்னார். இதைத்தாங்கமுடியாது துரியோதனன் தண்ணீரிலிருந்தபடியே

'உயிருள்ள ஜந்துக்களுக்கு பயம் ஸஹஜம்தானே. ஏன் அதை, இவ்வளவு பழித்துக் கூறவேண்டும். ஆனால் நான் பயந்து யுத்தகளம்விட்டு ஓடிவரவில்லை; எனக்கு ஸஹாயம் ஒருவரும் இல்லாமற்போனதாலும், களைப்பு வந்துவிட்டபடியாலும், அதைத்தீர்த்துக்கொள்ள இங்குவந்தேன். என் களைப்புத் தீர்ந்ததும் உங்களோடு தடையின்றி யுத்தம் செய்கிறேன். நீங்களும் கொஞ்சம் இளைப்பாறுங்கள்' என்று மறுமொழி கூறினான். அதற்கு தருமபுத்திரர், 'எங்கள் களைப்புத் தீர்ந்துவிட்டது. உனக்கு பராக்கிரமம் உண்டானால் எங்களைக் கொன்று இராஜ்யத்தையாவது, அல்லது எங்களால் மாண்டு வீரஸ்வர்க்கத்தையாவது நீ அடை' என்று அவனைத் தூண்டினார். அப்பொழுது துரியோதனன், 'எனக்கு இப்பொழுது இராஜ்யம் வேண்டும் என்ற இச்சை இல்லை. எவர்களுக்காக நான் இராஜ்யத்தை இச்சிக்கவேண்டுமோ அவர்கள் எல்லோரும் யுத்தத்தில் உயிர் விட்டனர். இப்பொழுது காலியாக இருக்கும் பூமியை நீயே தடையின்றி ஆளலாம். என்னைப்போன்ற கொடியநிலைமை அடைந்தவர்களுக்கு இராஜ்யமாள எவ்வாறு மனம்வரும்? நான் மான்தோல் போர்த்து காட்டிற்குப் போய்விடுவேன், நீயே உன் இஷ்டப்படி இந்த இராஜ்யத்தை ஆளலாம்' என்று மறுமொழி கூறினான். அப்பொழுது தருமபுத்திரர், 'அடே பித்தா! ஏன் இவ்வாறு இப்பொழுது உளறுகிறாய்? உன்னிடத்தில் எனக்குக் கொஞ்சமேனும் கருணையுண்டாகாது. எனக்கு இப்பொழுது இராஜ்யத்தைக் கொடுத்துவிடலாம் என்று உனக்குத் தோன்றுகிறதோ? நீ கொடுத்து நான் இனிமேல் வாங்கவேமாட்டேன். வாங்குவது க்ஷத்திரிய தர்மம் அல்லவே! உன்னைத் தோற்கடித்தே நான் இராஜ்யத்தை ஆளப் போகிறேன். மேலும் தோல்வி அடைந்து பயந்து ஓடிவந்திருக்கும் உனக்கு இராஜ்யத்தைக் கொடுக்க என்ன பாத்யதை? பகவான், திருதராஷ்டிரன், காந்தாரி, விதுரர், பீஷ்மர், துரோணர் முதலிய தர்மாத்மாக்கள் இராஜ்யபாகத்தைஎங்களுக்குக் கொடுத்துவிடும்படி நயந்து சொன்னகாலத்தில் உனக்குக் கொடுக்கும் பாத்யமிருந்தது. நீ அப்பொழுது இவ்வாறு செய்திருந்தால் இவ்வளவு கஷ்டம் வந்திராது. இப்பொழுது இராஜ்யம் யுத்தத்தால் எங்களதாய்விட்டது. நீ என்னடா எங்களுக்கு அதைக் கொடுப்பது? ஏனடா தேைத்தேங்காயை

எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்க எண்ணுகிறாய்? உன் உயிர் என் கையில் இருக்கிறது. நீ எவ்வளவு விதத்திலோ எங்களது உயிரை மாய்க்கப பார்த்தாய். எங்களை எவ்வளவோ அவமானம் செய்திருக்கிறாய். அதற்காக இப்பொழுது உனது உயிரை நாங்கள் வாங்கவேண்டும். சீக்கிரத்தில் எழுந்துவா' என்று பலவாறாகத் துரியோதனனைப் பழித்துச் சண்டைக்கு இழுத்தார்.

வினா 14:—துரியோதனன் அப்பொழுது என்ன செய்தான்? மேல் என்ன நடந்தது?

விடை:—அப்பொழுது இந்த வாக்பாணங்களைத் தாங்கமுடியாது துரியோதனன் தண்ணீருள் துடித்தான். இதன்பின்பு துரியோதனன் தருமபுத்திரரை நோக்கி, 'நீங்களோ அநேகர். நானோ ஒருவன், மிகவும் களைத்திருக்கிறேன். என்னோடு நீங்கள் ஒவ்வொருவராய்ச் சண்டைக்கு வாருங்கள். நான் எல்லோரையும் எதிர்க்கிறேன்; உங்களையும் நிச்சயமாகக் கொல்லுவேன்' என்றான். இதைக் கேட்டதும் தருமபுத்திரருக்கு இரக்கம் வர எல்லோரும் ஒவ்வொருவராக உன்னை எதிர்க்கிறோம். எங்களுள் யாரையாவது நீ கொன்றுவிட்டால் இராஜ்யம் உன்னது' என்று வாக்களித்தார். அப்பொழுது துரியோதனன், 'நான் இந்த கதையை வைத்துக்கொண்டு யுத்தம் செய்கிறேன். உங்களுள் யாராவது தகுந்தவன் ஒருவன் என்னுடன் யுத்தத்திற்கு வரட்டும்,' என்றுசொல்ல தருமபுத்திரர் அதற்கு ஒப்புக்கொண்டார். உடனே துரியோதனன் குளத்தைவிட்டு தன் தேகக்காயத்தோடு எழுந்துவந்தான். வந்ததும் தன்னோடு ஒவ்வொருவனாகவே யுத்தம் செய்யவேண்டும் என்று மறுபடியும் சொல்ல, தருமபுத்திரர் 'அபிமன்யுவைக் கொல்லுங்கால் உங்களுக்கு இது ஞாபகம் வரவில்லைபோலும்' என்று குத்திக்காட்டிவிட்டு, அவனது வேண்டுகோளின்படி அவரே அந்த யுத்தத்திற்கு ஸாக்ஷியாக இருந்துகொண்டார். அப்பொழுது பீமன் அவனைச் சண்டைசெய்து கொல்வதாகச் சபதம் செய்து தன் கதையைத் தூக்கிக்கொண்டு அவன் எதிரே வந்து நின்றான்.

வினா 15:—இந்த ஸமயத்தில் யார் எவ்வாறு ஸாக்ஷியாக அங்கு வந்து சேர்ந்தது?

விடை :—குரு பாண்டவயுத்தம் தொடங்குவதற்குமுன் இருதிறத்தாரோடும் சேர மனமில்லாத பலராமர், தீர்த்தயாத்திரைக்குப் போய்விட்டதாக முன்னமே சொல்லி யிருக்கிறோம். அவர் தீர்த்தயாத்திரை முடியுங்காலம் இந்தத் தருணத்திற்கு ஸரியாக இருந்தது. நாரதரால் பீமனுக்கும் துரியோதனனுக்கும் நடக்கப்போகிற கதாயுத்தத்தைக் கேள்விப்பட்டுத் தமது சிஷ்யர்களாகிய அவர்கள் செய்யும் விசித்திர யுத்தத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பலராமர் துவைபாயனஸரஸின்கரை வந்து சேர்ந்தார். அப்போது எல்லாரும் அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து அவரையே அந்த கதாயுத்தத்திற்கு ஸாக்ஷியாக்கினர். அவரும் அதை ஒப்புக்கொண்டார்.

வினா 16 :—பலராமர் முதலில் எந்த தீர்த்தத்திற்குப் போனார்? அதன் விசேஷம் என்ன?

விடை :—யுத்தகளம்விட்டுப் போனதும் பலராமர் பிரபாஸம் என்ற தீர்த்தம் சென்றார். அந்தத் தீர்த்தத்தில் முன்காலத்தில் க்ஷயரோகத்தால் பாதிக்கப்பட்டசந்திரன் ஸ்நானஞ்செய்துஅதிலிருந்து நீங்கினான். சந்திரனுக்கு தக்ஷப்பிரஜாபதியின் பெண்கள் 27 பெயர்கள் பெண்சாதிகளாக ஏற்படஅவர்களுள் ரோஹிணி தேவியிடமே மிகுந்த காதல்அவனுக்கு இருந்தது. அவளைவிட்டு அவன் இணைபிரியாது மற்றையப் பெண்சாதிகளை அலக்ஷ்யம் செய்துவந்தான். அவர்கள் தமது தகப்பனாராகிய தக்ஷரிடம் சென்று முறையிட அவர் சந்திரனிடம் வந்து ‘அப்பா! எல்லாப் பெண்சாதிகளிடத்தும் ஒரேமாதிரியாக இரு. இவ்வாறிருப்பது தகுதியன்று’ என்று எவ்வளவுதரம் கிளிப்பிள்ளைக்குச் சொல்லுவதுபோல புத்தி சொல்லியும் சந்திரன் அதை லக்ஷ்யஞ் செய்யவில்லை. இதைக் கண்டு அவர், ‘உனக்கு க்ஷயரோகம் வரட்டும்’ என்று சபித்துவிட்டுத் தமது ஆசிரமம் சென்றார். இதனால் சந்திரனது ஒளி வரவரக் குறைந்துகொண்டே வர, உலகத்திலுள்ள ஔஷதாதிகள் எல்லாவற்றிலும் ஸாரமே இல்லாமல்போய் உலகமே கஷ்டப்படத் தொடங்கியது. தேவர்கள் எல்லோரும் சந்திரன் குறைவதால் உண்டாகும் தீங்குகளை தக்ஷரிடம் சொல்ல, அவர் ‘இவன் தன் பெண்சாதிகளை ஸமமாக எண்ணி நடத்திவரட்டும். மேலும் ஸரஸ்வதி ஸங்கமத்திருக்கும் பிரபாஸதீர்த்தத்தில் அவன் ஸ்நானம் செய்யட்டும்; அப்படிச் செய்வனேயானல் அவன் மாதத்தில் 15

நாள் குறைந்து, மீதி 15 நாள் வளருவான்' என்று அனுக்கிரஹித்தார். ஒவ்வொரு அமாவாஸையிலும் சந்திரன் இந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து தான் இழந்த ஒளி அடைகிறுனும். அதனால் இந்த தீர்த்தத்திற்கு பிரபாஸதீர்த்தம் என்று பெயர் வந்தது. இதனால் அநேகம்பேரைக் கட்டியாளும் நிலையில் இருப்பவர்கள், பக்ஷபாதிகளாக இருக்கலாகாது. அப்படி இருப்பார்களேயானால் சந்திரன் பட்டபாடு படுவோர்கள் என்று நாம் தெரிந்துகொள்ளவேண்டியது.

வின 17:—இதன்பின் பலராமர் சென்ற உதபானதீர்த்தத்தின் விசேஷம் என்ன?

விடை.—முன்காலத்தில் ஏகர், துவிதர், திரிதர் என்று மூன்று ரிஷிகள் இருந்தார்கள். இவர்களுள் திருதரே வேதசாஸ்திரங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு அவர்கள் தகப்பனுர் கௌதமருக்கு ஸமமாக இருந்தார். கௌதமரது சிஷ்யர்கள் எல்லோரும் இப்பிள்ளைகளையே தமது குருக்களாக எண்ணி வழிபட்டு வந்தார்கள். இப்படி இருக்கையில் ஏகருக்கும் துவிதருக்கும் ஒரு யாகம்செய்யவேண்டும் என்ற எண்ணம் வர, அதற்குப் பொருள் யாசிக்க திருதரை முன்னிட்டுக்கொண்டு போனுல்தான் முடியும் என்று பட்டது. அவர்கள் அவ்வாறே செய்து சிற்சில இடங்களில் யாகப்பசுக்களைப் பெற்று, ஒரு காட்டுவழியாகப் போகையில் ஏகரும் துவிதரும் 'நமது தம்பி நல்ல யோக்யதை உடையவன். அவனுக்கு இதுபோல எவ்வளவோ பொருள் எளிதில் கிடைக்கும், யாகம் எளிதில் அவன் செய்துகொள்ளலாம். ஆகையால் நாம் அவனை ஏமாற்றி இப்பொருள்களைக் கொண்டு போய் நாமே யாகம்செய்து அதன்பலனை நாமே அடைவோம்' என்று எண்ணமிட்டுக்கொண்டு போயினர். நடுவில் இருட்டுவந்து மூடிக்கொள்ள ஒரு ஓநாய் அவர்கள்முன் தோன்றியது. உடனே ஸரஸ்வதிக்கரையில் இருந்த ஒருபொந்தில் திருதர் ஓடி ஒளிந்துகொள்ள அது மிகவும் ஆழமாக இருந்ததால் அதன் உள்ளே அவர் விழுந்து புலம்பத்தொடங்கினுர். இந்தக் கூக்குரல் தமயனுர்கள் காதில் விழுந்தபோதிலும் கேட்காதவர்கள்போல ஓநாய்க்கு பயந்து பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டனர். அந்தப்பொந்தி விருந்தபடியே திருதர் மானஸயாகம்செய்ய தமது ஞானவலிமையால் தேவலோகத்தைக் கலக்கலாயினர். உடனே தேவர்கள் எல்லோரும் பிர

ஹஸ்பதியை முன்னிட்டுக்கொண்டு த்ருதர் இருக்கும் இடம் வந்து ஹவிர்ப்பாகத்திற்காக நின்றனர். அவர் மானஸீகமாக இவர்களுக்கு வேண்டியவை எல்லாம் கொடுத்து திருப்திப்படுத்தினர். தேவதைகள் த்ருதரது வேண்டுகோளின்படி அந்தப் பொந்திலிருந்துஅவரை எடுத்துவிட்டு, அந்தத்தீர்த்தத்தில்மூழ்குவோருக்கு யாகம்செய்த பலன் வரும்படியாக அனுக்கிரகித்துத் தமது இருப்பிடம் சென்றனர். த்ருதர் தமது தமயன்மார்களுக்குக் கொடியசாபமும் கொடுத்தார். இதுவே உதபன தீர்த்தத்தின் கரையில் நடந்தவிசேஷம். இக்கதையால் மானஸபூஜையின் மேன்மையும், மோசக்கருத்துடையோர் படும்பாடும் நன்ருய் வெளிவருகின்றன.

விஞ 18 :—இதன்பின்பு பலராமர் எந்த எந்த தீர்த்தங்களுக்குப் போனுர்? அவைகளின் விசேஷங்களின் சுருக்கம் என்ன?

விடை :—விஞசனதீர்த்தம் முதல் ஸௌபூமிகாதீர்த்தம் வரையில் உள்ளஐந்துதீர்த்தங்களில் பலராமர் விதிப்படி ஸ்நானம்செய்து, ஸரஸ்வதீநதி, ரிஷிகளுக்கு அனுகூலம்செய்வதற்குகிழக்குநோக்கித் திரும்பி அநேக தீர்த்தங்களை உண்டாக்கியிருந்த இடம் சென்று ஸத்காலக்ஷேபம் செய்தார். இதன்பின் ஸரஸ்வதி ஏழுரிஷிகளை திருப்தி செய்வதற்காக ஏழுரூபமாக இருந்த ஸப்தஸாரஸ்வதீ தீர்த்தம் சென்ருர். இதன் கரையில் முன் காலத்தில் மங்கனகர் என்ற ரிஷி தபஸுசெய்துவந்தார். இவரிடமிருந்துதான் மருத்தேவதைகள் உண்டானது. இவர் தபஸ் இந்ததீர்த்தத்தின் கரையில்தான் பூர்த்தியை அடைந்தது. ஒரு நாள் இவர் கை தர்ப்பைப்புல்லால் அறுபட அதிலிருந்து ஒரு இலைச்சாறு வந்ததே ஒழிய ரக்தமே வரவில்லை. இது தபோமஹிமை என்று எண்ணி கர்வத்தால் இவர் தாண்டவம் ஆடத்தொடங்கினர். தேவதைகளால் தூண்டப்பட்டு மஹாதேவர் வந்து, 'இதென்ன பிரமாதம்' என்று சொல்லித்தமது தேகத்தை விரலால் தட்ட அதிலிருந்து விபூதி உதிர்ந்தது. ரிஷி கர்வபங்கமாகி பரமசிவத்தைத் துதிக்க அவர், 'உனது தபஸ் விருத்தியாகட்டும், இந்தத் தீர்த்தக்கரையில் என்னை யார் துதிக்கிருர்களோ அவர்களுக்கு நல்லகதிவரட்டும்' என்று அனுக்கிரஹித்து மறைந்தார்.

விஞ 19 :—இங்கிருந்து பலராமர் சென்ற தீர்த்தங்களின் பெயரும் மஹிமையும் என்ன?

விடை:—பலராமர் அப்பால் கபால மோசனதீர்த்தம் சென்றார். முன் காலத்தில் இராமர் தண்டகாரண்யவாஸம் செய்யுங்கால் ஜனஸ்தானத்தில் ஒரு ராக்ஷஸனது தலையை அறுத்துத் தள்ள அது அருகாமையிலிருந்து தபஸ் செய்துகொண்டிருந்த மஹோதரர் என்றமுனியின் மடியில் விழுந்து ஒட்டிக்கொண்டது. என்னமுயன்றும் அதை எடுக்கமுடியவில்லை. அது அங்கேயே புண்படுத்தி அவரைமிக வருத்தியது. அதைப்பொறுத்துக்கொண்டு அவர் அநேக தீர்த்தங்களில் சென்று ஸ்நானம் செய்து பார்த்தார். இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ததும் இராக்ஷஸ கபாலம் அவர் தொடையைவிட்டு அகன்றது. அதனாலேதான் இத்தீர்த்தத்திற்கு இப்பெயர்வந்தது? இதன்பின்பு பலராமர் விசுவாமித்திரருக்கு பிராம்மண்யம் ஸித்தித்த தீர்த்தக்கரை வந்துசேர்ந்து அவரது கதையைக்கேட்டு ஆனந்தித்தார். (விசுவாமித்திரரது சரித்திரத்தை இராமாயணவினாவிடை பாலகாண்டத்தில் காண்க.)

வினா 20:—பலராமர் இதன்மேல் போன தீர்த்தங்களின் பெயரும் விசேஷங்களும் என்ன?

விடை:—இதன்மேல் பலராமர் தால்பியபகரது ஆசிரமம் போக அங்கு அந்தரிஷி தாம் கேட்டதைக்கொடுக்காது செத்த ஆடுகளைக் கொடுத்து கொடுஞ்சொற்களால் தம்மை ஸபையில் அவமதித்த திருதிராஷ்டிரனது ராஜ்யம் வலி குறையும்படி அந்த செத்த ஆடுகளை ஹோமம் செய்ய, பின்பு திருதிராஷ்டிரனது வேண்டுகோளின்படி அவனுக்கு வந்த கேட்டை மாற்றினார் என்று கேள்விப்பட்டார். அங்கிருந்து யயாதி யாகம்செய்த தீர்த்தம் சென்றார். அதன்பின்பு அவர் வஸிஷ்டாபஹார தீர்த்தம் சென்றார். அங்கு முன்காலத்தில் விசுவாமித்திரர், வஸிஷ்டர் மேல் பொறாமைகொண்டு அவரைக் கொல்ல எண்ணி அவர் தவம்செய்கையில் அவரை இழுத்துவரும்படி ஸரஸ்வதீ நதிக்கு உத்தரவுசெய்தார். அவள், 'வஸிஷ்டரை இழுத்தால் அவருக்குக் கோபம்வரும், இல்லாவிடில் விசுவாமித்திரர் கோபிப்பாரே இதென்ன தர்மஸங்கடம்' என்று திகைத்து நிற்கையில் வஸிஷ்டர் தம்மை இழுத்துப்போகும்படி உத்தரவு கொடுத்தார். ஸரஸ்வதீ அவ்வாறே செய்து விசுவாமித்திரரிடம் போகையில் வேகமாக வஸிஷ்டரை இழுத்துப்போய் அவர் கையிலிருந்து வஸிஷ்டரைத் தப்புவித்துவிட்டாள். இதைக்கண்டு கோபங்

கொண்டு, 'நீ ரத்தப் பிரவாஹமாக ஓடக்கடவது' என்று சபி த்தார். வெகுநாள் அங்கு அவ்வாறே அந்த நதி இருக்க அதன் பின்பு அநேகம் ரிஷிகள் சேர்ந்து மஹாதேவரைக் குறித்துத் தவம் இருந்து அதைப் பரிசுத்தப்படுத்தினர். நமுசி என்ற அஸுரனை நம்பிக்கைத்துரோஹம் செய்து கொன்ற இந்தி ரனது பாபம் இந்தத் தீர்த்தத்தில்தான் தீர்ந்தது. இந்த மஹி மை வாய்ந்த தீர்த்தம்விட்டுபலராமர்ஸோமதீர்த்தம் சென்றார். சந்திரன் அங்கு அத்ரிமஹரிஷியைப் புரோஹிதராக வைத் துக்கொண்டு ஒரு ராஜஸூயயாகம் செய்தான். இதன்பின்பு அங்கு தான் தாரகாஸுரயுத்தம் நடந்தது. ஸுப்ரஹ்மணியர் தமது பலத்தால் தாரகாஸுரனது வலியை அடக்கினர். (ஆரண்ய பர்வத்தைப் பார்க்க.)

வின 21:—ஸோமதீர்த்தம் விட்டு எந்த முக்கிய தீர்த்தம் பலராமர் சென்றார்? அதன் மேன்மை என்ன?

விடை:—பலராமர் சில தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டு பத்ரபசனதீர்த்தம் வந்தார். அங்கு பாரத்வாஜரது பெண்ணு கிய சுருவாவதி என்பவள் இந்திரனைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று தபஸு செய்துகொண்டிருந்தாள். இந்திரன் தவமுனிவடிவோடு வந்து அவள் தபஸுக்கு மெச்சி ஐந்து இலந்தப்பழத்தை அவளிடம் கொடுத்து அதை சமைக்கச் சொல்லிவிட்டு அவன் போய்விட்டான். இவளுக்கு அகப்படக் கூடிய விரகுகளை எல்லாம்உபயோகித்தும் ஒன்றும் பயன்படா மல் போக விரகும் முடிந்துவிட்டது. அப்பொழுது அவள் தனது காலை நெருப்பில் விரகிற்கு பதிலாகவைத்து எரிக்க, இந் திரன் மகிழ்ந்து அவளை அங்கீகரித்துக்கொண்டான். இவ்வி டத்தில் முற்காலத்தில் அருந்ததி பன்னிரண்டுவருஷகாலம் போவதே அறியாது பரமசிவனுக்காக இலந்தப்பழங்கள் சமை த்து கிருதார்த்தையானாள். அப்பொழுது தபஸுக்கு ஹிமய மலைக்குப் போயிருந்த அவளது கணவனைவிட அதிக மேன் மையான நிலையை அருந்ததி இங்குதான் அடைந்தாள்.

வின 22:—இவ்வாறு தீர்த்தயாத்திரை செய்துவந்த பலராமர் எந்த எந்த தீர்த்தங்களுக்குச் சென்று முடிவில்எந்ததீர்த்தம்வந்தார்?

விடை:—இதன்பின்பு பலராமர் ஆதித்யதீர்த்தம், வந்தார். அங்கு அஸிதிதேவலர் என்ற ரிஷி ஜயகீஷவ்யரை முதலில் ஸாதா ரணமானவர் என்று எண்ணிப் பின்பு அவரது யோகமஹி

மையை அறிந்து அவருக்கு சிஷ்யரானதைக் கேள்விப் பட்டார். அதன்பின்பு ஸாரஸ்வதீர்த்தம் வந்து அங்கு ததீசி முற்காலம் தவம் செய்து பொதுநன்மைக்காகத் தமது முதுகு எலும்பை இந்திரன் வச்சிராயுதம் செய்துகொள்ளும்படிக் கொடுத்த பெருந்தன்மையையும், அவர் பிள்ளை ஸாரஸ்வதர் பஞ்சம் வந்தகாலத்தில் அங்கேயே ஸரஸ்வதியின் ஸஹாயத்தால் இருந்து, அங்கிருந்து பஞ்சத்திற்குப் பயந்து ஓடிப்போய் கஷ்டப்பட்டு வேதங்களை மறந்து திரும்பிவந்த ரிஷிகளுக்கு வேதாத்யயனம் செய்துவைத்ததையும் கேள்விப்பட்டார். பலராமர் ஒரு பிரம்மசாரிணி வயது முதிரும்வரையில் வஸித்த தீர்த்தம் வந்து, அவள் ஸ்வர்க்கம்புக எண்ணுங்கால், நாரதர் ' விவாஹம் செய்துகொள்ளவேண்டும். இல்லாவிடில் உனக்கு கதியே இல்லை' என்று சொல்லி விவாஹத்தின் ஆவசியகத்தை காட்டியதையும், பின்பு அவள் ஒரு ரிஷியைமணந்து ஓர்நாள் அவருடனிருந்து ஸம்ஸாரவலையில் சிக்காது தப்பி ஸ்வர்க்கம் அடைந்த வைபவத்தையும் கேள்விப்பட்டார். இதன்பின்பு பலராமர் முடிவில் ஸமந்தபஞ்சகம் வந்தார்.

வின 23:—இந்த ஸமந்தபஞ்சகத்தின் சிறப்பு என்ன?

விடை:—இந்தவிடத்தை முன்காலத்தில் கௌரவ பாண்டவர்களது மூதாதை குருமஹாராஜன் முன்பு இடைவிடாது உழுதான். இதன் காரணத்தை இந்திரன் எவ்வளவு விசாரித்தும் அவன் ஒன்றும் சொல்லாது உழுதுகொண்டே இருந்தான். இந்திரன் இந்தவேலையை எவ்வளவுதரம் நிறுத்தும்படி நயந்துகேட்டும் குருராஜன் கேட்கவில்லை. முடிவில் இந்திரன் பிரத்யக்ஷமாகி, ' என்னவேண்டும் என்றுகேட்க ' இந்தபூமியில் இறப்பவர்கள் எல்லோரும் ஸ்வர்க்கத்தை அடையும்படி அனுக்கிரஹிக்க வேண்டும்' என்று அரசன் கேட்டான். இந்திரன் தேவதைகளின் அபிப்பிராயப்படி ' இந்த பூமியில் பிராயோபவேசம் செய்து இறப்பவரும், யுத்தத்தில் இறப்பவரும் ஸ்வர்க்கம் அடையட்டும்' என்று அனுக்கிரஹித்துப்போக அரசனும் தனது தொழிலை நிறுத்திவிட்டான். இதனால் இதற்கு குருக்ஷேத்திரம் என்ற பெயரும் வந்தது.

வின 24 :—இந்த பிரதேசங்களில் பலராமர் யார் யாரை ஸந்தித்து என்னென்ன தெரிந்துகொண்டார்? பின்பு அவர் என்ன செய்தார்?

விடை :—இங்கு ஸஞ்சரித்துக்கொண்டிருக்கையில் பலராமர் சிலரிஷிகள் மூலமாக சல்லியன் இறந்ததையும், பதினேழுநாள் யுத்த ஸங்கதியையும் தெரிந்துகொண்டார். அதன்பின்பு அவர் இருக்கும் இடம் நாரதர் வந்து குருக்ஷேத்திரயுத்தம் எல்லாவற்றையும் விடாது சொல்லி ‘ இப்பொழுது உமது சிஷ்யாளாகிய பீம துரியோதனுள் கதாயுத்தம்செய்ய நிற்கிறார்கள். நீர் வேண்டுமானால் போய்ப்பார்க்கலாம் என்ற ஸங்கதியையும் தெரிவித்தார். உடனே பலராமர் தமது தீர்த்தயாத்திரையை திடீரென்று நிறுத்திவிட்டு துவைபாயனஸரஸின் கரைவந்து கதாயுத்தத்திற்கு ஸாக்ஷியாக அமர்ந்தார்.

வின 25 :—பலராமர் ஸாக்ஷியாக ஏற்பட்டதும் அவர் யுத்தம் தொடங்கும் முன், என்ன ஏற்பாடு செய்தார் ?

விடை :—பலராமர் ஸமந்தபஞ்சகத்தின் மஹிமையை அறிந்தவராகையால் அந்தயுத்தம் ஸமந்தபஞ்சகத்தில் நடந்தால் நலமாக இருக்கும் என்று சொல்ல எல்லா வீரர்களும் துவைபாயனஸரஸை விட்டு அந்த விடம்நோக்கி பிரயாணப்பட்டு சீக்கிரத்தில் அங்கு போய்ச் சேர்ந்தனர். அங்கு முதலில் பீமனும்துரியோதனனும் ஒருவரை இகழ்ந்து பேசிக் கொஞ்சநாழிகை சொற்போர் செய்துவிட்டு கதாயுத்தத்தைத் தொடங்கினர்.

வின 26 :- இவர்களது கதாயுத்தம் எவ்வாறு நடந்துவந்தது ?

விடை :—பீமனும் துரியோதனனும் வெகுநாழிகை யுத்தவரிசைகளைக் காட்டிக்கொண்டு விசித்திரயுத்தம் செய்தனர். துரியோதனன் மிகுந்த ஸாமர்த்திய முடையவனுகையால் பீமனை வெலு வெலுக்க அடிக்க அவன் திப்பிரமை பிடித்தவன்போலாகி கொஞ்சநாழிகையில் தெளிந்தெழுந்தான். துரியோதனனை க்ரோபாவேசத்தில் தன் கதையால் பீமன் அடிக்க அவன் பூமியில் மூர்ச்சைபோய் விழுந்தான். பின்பு அவன் தெளிந்து எழுந்து கொடிய யுத்தம் செய்தான். இவ்வாறு வெகுகாலம் இருவரும் யுத்தம் செய்தார்கள்.

வின 27:—இவ்வாறு இவர்கள் யுத்தம் செய்துவருகையில் பகவான் என்னசெய்தார் ? அது என்னமாக முடிந்தது ?

விடை :—இவர்கள் இவ்வாறு ஸமயுத்தம் செய்துவருகையில் அர்ஜுனன் இருவரது பலவித்தியாஸங்கள் எப்படி என்று பகவானைக் கேட்டான். அப்பொழுது பகவான் ‘ இருவரும் ஸமமாக வித்தை பயின்றவர்கள். ஆனால் பீமனைக் கொல்லவேண்டும்

என்றே வெகுகாலம் துரியோதனன் கதாயுத்தம் பழகி இருக்கிறான். ஆகையால் தர்மயுத்தமூலமாக அவனை பீமனால் வெல்ல முடியாது. மேலும் பீமன் அவன் தொடையை கதையால் பிளந்து விடுவதாக சூதாட்டகாலத்தில் சபதம் செய்திருக்கிறான். அவ்வாறு கதாயுத்தத்தில் செய்வது அதர்மமாகிலும் அவ்வாறு செய்யாவிடில் துரியோதனனை தர்மயுத்தத்தில் கொல்ல முடியாது. கொடியவர்களை முன்காலத்தில் தேவதைகள் மோச வழியிலேதான் கொன்றிருக்கிறார்கள். ஆகையால் பீமனுக்கு பிரதிஞ்ஞையை ஞாபகப்படுத்து' என்று கட்டளையிட்டார். அப்பொழுது அர்ஜுனன் பீமன் முன்நிலையிற் சென்று தனது இடதுதொடையைத் தட்டினான். அந்த ரகஸியத்தை பீமன் தெரிந்துக்கொண்டு யுத்தம் செய்யத் தொடங்கினான்.

வின 28 :—கதாயுத்தம் மேல் எவ்வாறு நடந்து முடிவு பெற்றது?

விடை:—ஒருவரை ஒருவர் கொல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் மிகுந்த ஆவேசத்தோடு பீமதுரியோதனர் யுத்தம்செய்தனர். வெகுநாழிகை இருவரும் களைக்கவில்லை. இருவருக்கும் தேகம் முழுவதும் காயம்பட்டிருந்தது. அப்பொழுது துரியோதனன் பீமனை ஓங்கி அறைய அவன்மேல் இருந்து உதிரம் பெருகிற்று; அவன் மூர்ச்சைபோனான். அப்படிப்போயும் அவன் கண்ணை விழித்துக்கொண்டு அசைவற்று நின்றமையால் துரியோதனனுக்கு நடந்த ஸங்கதி தெரியாது. ஆகையால் பீமனை அடிக்க அவன் கொஞ்சம் திகைத்தான். இதற்குள் களைதீர்ந்து துரியோதனன்மேல் அவன் பாய்ந்தான். பீமன் வருவதைக் கண்டு ஒருவரிசை காட்டுவதற்காக துரியோதனன் மேலே துள்ளினான். ஸமயம்பார்த்திருந்த பீமன் துரியோதனன் தொடையை தன் கதையால் அடிக்க அவன் தொடைகள் இரண்டும் முறிந்து நிற்கமாட்டாது கீழே விழுந்துவிட்டான். இதோடு கதாயுத்தம் முடிந்துவிட்டது.

வின 29 :—இந்த அதர்மயுத்தத்தைக் கண்டதும் பலராமர் என்ன செய்தார்? அங்கு என்ன நடந்தது?

விடை:—இதைக்கண்டதும் பலராமருக்கு மிகுந்த கோபம் உண்டாக தமது கலப்பையை உயர்த்திக்கொண்டு தொப்புளுக்குக் கீழ் கதாயுத்தத்தில் அடித்து அதர்மயுத்தம் செய்த பீமனைக் கொல்லவந்தார். அப்பொழுது பகவான் துரியோதனன் பாண்டவர்கள் விஷயத்தில் செய்த அநீதிக்கு இது ஸரி என்றும்,

பீமன் தன் பிரதிஞ்ஞையைப் பூர்த்திசெய்வதற்காக அவ்வாறு செய்தான் என்றும் இவ்வாறு அவன் இறக்கவேண்டும் என்று மைத்ரேயரது சாபம் அவனுக்கு உண்டென்றும் எடுத்துரைத்து அவரை ஸமாதானப்படுத்தமுயன்றார். அவர் ஒன்றையும் கேளாது துரியோதனனைப் புகழ்ந்தும் பாண்டவர்களை இகழ்ந்தும் பேசிவிட்டு, மிகுந்த கோபத்துடன் துவாரகை சென்றார். இதனால் தருமபுத்திரருக்கு தமக்கு அநீதியாக ஜயம்வந்தது என்ற துக்கம் பாதிக்கத் தொடங்கியது.

வி௫ 30:—துரியோதனன் தொடை அறுபட்டு விழுந்ததும், தருமபுத்திரரது துக்கத்தை அதிகப்படுத்தும் விஷயங்கள் என்னென்ன நடந்தன ?

விடை:—துரியோதனன் கீழே விழுந்ததும், அவன் தலையை இரண்டுதரம் தன் காலால் பீமன் உதைத்து மூன்றாம்தரம் உதைக்கத் தன் காலைத் தூக்கினான். அதுவரையில், 'பீமன் தான் துரியோதனனால் பட்டபாட்டை எண்ணி கோபம் தாங்காது உதைக்கிறான். அதனால் நாம் தடுப்பது நியாயமன்று' என்று பார்த்திருந்த தருமபுத்திரருக்கு அரசனாயும் தமது ஸஹோதரனாயும் உள்ள துரியோதனனை மூன்றாம்தரம் உதைக்கக் காலைத் தூக்கும்பொழுது மனம் ஒப்பவில்லை உடனே, பீமனை 'உதைக்காதே! துரியோதனனும் நமது ஸஹோதரந்தானே! அவனும் ஒருபெரிய அரசனாய் இருந்தவன் அல்லவா? நீ அவனை இவ்வாறு அவமதிப்பது நியாயமன்று' என்று தடுத்துவிட்டு துரியோதனனிடம் சென்று அவனை நல்ல வார்த்தைகள் மூலமாகத் தேற்றினார். அப்பொழுது அவர் மனதில் 'நமது உறவினர் எல்லோரும் இறந்துவிட்டாரே. நாம் இனி யாருக்காக ராஜ்யம் ஆள்வது' என்று பாதித்துக்கொண்டிருந்த துக்கம், கோபித்துக்கொண்டு துவாரகைநோக்கி பலராமர் புறப்பட்டதும் அதிகமாய்விட்டது. அதற்குமேல் பகவான் பாண்டவர்களை துரியோதனன் படைவீடு நோக்கிப்போய் அங்கிருக்கும் பொருள்களை கைக்கொள்ளவேண்டியதற்கு தக்க ஏற்பாடு செய்துவிட்டு துரியோதனனிடம் வந்து அவன் முன்செய்த கொடிய வினைகளை அவனுக்கு ஞாபகம்வரும்படி செய்தார். அப்பொழுது துரியோதனன் 'எனக்கு இவ்வுலகில் ஆகவேண்டிய காரியங்கள் எல்லாம் முடிந்துவிட்டன. நான் கிருதார்த்தன், எனக்கு க்ஷத்திரியர்களுக்கு வரவேண்டிய மரணமோ

கிடைத்திருக்கிறது. என்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் பாண்டவர்களால் அதர்மமாகக் கொல்லப்பட்டார்கள். அதனால் எனக்கு ஒரு குறையும் இல்லை. நான் கூடிய சீக்கிரத்தில் அவர்களோடு போய்ச் சேருவேன். எனக்கு நிகர் ஒருவருமில்லை' என்று தனது திருப்தியை வெளியிட தேவர்கள் துரியோதனன்மேல் பூமாரிபொழிந்தனர். தருமபுத்திரர் மனதில் இருந்த துக்கம் இதனால் அதிகரித்தது.

வினா 31:—இந்த துக்கத்தை யார் எவ்வாறு மாற்றியது?

விடை:—பகவான் தருமபுத்திரரை நோக்கி, 'கௌரவவீரர்களை உங்களால் எப்படி தர்மயுத்தத்தில் கொல்லமுடியும்? அவர்கள் எல்லோரும் சிறந்தவீரர்கள். ஆகையால் தருமாத்மாக்களாகிய உங்களுக்கு ஜயம் வருவதற்காக நானே அவர்களது சக்தியைக் குறைத்து அவர்கள் சீக்கிரத்தில் இறக்கும்படி செய்தேன். அதர்மம் எப்படியாவது நசிக்கவேண்டியது, அதற்காக நான் தந்திரமாக துரியோதனன் முதலியோரை அதர்மயுத்தத்தாலும் கூட அழித்தேன். இதை எண்ணி நீர் துக்கிப்பது வீணான காரியம்' என்று தேற்ற தருமபுத்திரர் ஒருவாறு தேறினார்.

வினா 32:— இதன்பின்பு பாண்டவர்கள் எங்கு சென்றார்கள்? அங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை:—பாண்டவர்கள் பகவானை முன்னிட்டுக்கொண்டு கௌரவரது படைவீடு வந்தனர். வந்ததும் பகவான் காண்டீவத்தையும் அக்ஷய அம்பறாத்தூணியையும் எடுத்துக்கொண்டு அர்ஜுனனை தேரைவிட்டு இறங்கும்படி உத்தரவு செய்தார். அவன் அவ்வாறு செய்ய பகவானும் கடிவாளங்களை குதிரைகள்மேல் எறிந்துவிட்டுக் கீழே இறங்கினர். அதற்குமுன் கொடியிலிருந்த ஹனுமார் தமது இருப்பிடம் சென்றார். பகவான் இறங்கியதும் அர்ஜுனனது தேரும் குதிரைகளும் எரிந்து சாம்பலாயின. ஆச்சரியத்தை அடைந்த பாண்டவர்களை நோக்கி பகவான் 'யுத்தத்தில் பீஷ்மத்துரோணாதிகளால் போடப்பட்ட பிரம்மாதி அஸ்திரங்களால் இந்தத்தேர் முன்னமேயே எரிந்ததுதான். ஆனால் நான் இதில் இருந்ததால் இது உடனே எரிந்து விழவில்லை. நான இறங்கியதும் முன்விட்ட அஸ்திரங்களது பலத்தால் இந்தத் தேர் எரிந்துவிட்டது' என்று சொல்லி அவர்களைத் திருப்தி செய்தார்.

**வி 33:**—இது நடந்ததும் பகவான் என்னசெய்தார்? மேல் என்ன நடந்தது?

**விடை:**—இந்த ஸங்கதி நடந்ததும் தருமபுத்திரர் பகவானைநோக்கி 'உங்களால்தான் எங்களுக்கு இந்த மேலான நிலைகிடைத்தது' என்று துதித்து திருதராஷ்டிரன் காந்தாரி முதலியவர்களை ஸமாதானம் செய்யும்படி அவரை அனுப்பினார். பகவானும் முன் ஸங்கதிகளை எடுத்துச்சொல்லி, பாண்டவர்களை அவர்களுக்கு அப்பொழுது புத்திரர்கள் ஆகையால் அவர்களை கோபத்தால் சபிக்கக்கூடாது என்று திருதிராஷ்டிரனிடம் இருந்து பேசிக்கொண்டிருக்கையில், அசுவத்தாமன் அப்பொழுது செய்த மோசக்கருத்து அவரது ஞானதிருஷ்டிக்குப்பட்டது. அதை திருதராஷ்டிரனுக்குத் தெரிவித்தார். அப்பொழுது வியாஸரும் வந்து அவர்களைத் தேற்றினார். பகவானுல் ஸமாதானம் அடைந்த திருதராஷ்டிரனும் காந்தாரியும் சீக்கிரம் போய் அசுவத்தாமனது கொடிய காரியத்திலிருந்து பாண்டவர்களைக் காக்கும்படி பகவானை அனுப்பினார்கள். வியாஸருக்கு வந்தனம் செய்துவிட்டு நடந்த ஸங்கதிகளை பகவான் பாண்டவர்களுக்கு வந்து தெரிவித்தார்.

**வி 34:**—அசுவத்தாமன் பாண்டவர்கள் விஷயத்தில் என்ன கொடிய ஏற்பாடு செய்தான்? ஏன்?

**விடை:**—துரியோதனன் அடிபட்டு யுத்தகளத்தில் விழுந்ததும் அருகிலிருந்த சில தூதர்களிடம் சொல்லி தனக்கு அநியாயமாக வந்த ஆபத்தை அசுவத்தாமா முதலியோருக்குத் தெரிவிக்கும்படி சொன்னான். தூதர்களால் அறிந்து அவர்கள் மூவரும் துரியோதனன் விழுந்துகிடக்கும் இடம் வந்து அவன் நிலையைக் கண்டு பரிதவித்தனர். அப்பொழுது அசுவத்தாமா 'எப்படியாவது இன்று பாண்டவவீரர்கள் எல்லோரையும என் ஆத்திரம் தீர மடித்துவிடுகிறேன' என்று கொடிய சபதம் செய்ய துரியோதனன் தண்ணீர் கொண்டுவரச்சொல்லி அவனுக்கு ஸேனுபதிப் பட்டங்கட்டி அவ்வாறே செய்யும்படி கட்டளையிட்டான். இந்த உத்தரவைப்பெற்றுக்கொண்டு அசுவத்தாமன் பாண்டவர்களை அன்றிரவே கொல்லுவதாகப் புறப்பட்டான். இதுதான் ஹஸ்திணுபுரியில் பகவானுக்குத் தெரியவந்தது.

**வி 35:**—இந்த விஷயத்தில் பகவான் என்ன ஏற்பாடு செய்தார்?

விடை:—இந்த ஸங்கதியை அறிந்ததும் பகவான் பாண்டவர்கள் திரௌபதி, ஸாத்யகி ஆகிய இவர்களை தினம் இரவில் படுக்கும் படைவீட்டில் படுத்துக்கொள்ளக் கூடாதென்று அதைவிட்டு வெகுதூரம்போய் ஓர் இடத்தில் அன்றிரவு தங்கினார்கள். ஆனால் இதன் காரணத்தை மாத்திரம் பகவான் அவர்களிடம் சொல்லவில்லை. இந்த வழியால் பகவான் பாண்டவர்களை மாத்திரம் அசுவத்தாமனது மோசக்கருத்தினுள் அகப்பட்டுக் கொள்ளாது அன்று காத்தார்.

# 10. ஸௌப்திகபர்வம்

*தேடிய அகலிகை சாபம் தீர்த்ததாள்*
*நீடிய உலகெலாம் அளந்து நீண்டதாள்*
*ஓடிய சகடிற உதைத்து பாம்பின்மேல்*
*ஆடியும் சிவந்ததாள் என்னை ஆண்டதாள்.*

வி௫ 1 :—அடிபட்டு விழுந்த துரியோதனன் அசுவத்தாமனுக்கு ஸேனைபதிப் பட்டாபிஷேகம் செய்தவுடன் அவன், கிருபர், கிருதவர்மா ஆகிய மூவரும் என்ன செய்தார்கள்?

விடை —இம்மூவரும் மிகுந்த துக்கத்தோடு ஒரு காட்டை நோக்கிச்சென்று அங்கோர் தடாகத்தில் தமது தாகத்தைத் தீர்த்துக் கொள்ள இறங்கி தமது குதிரைகளை அவிழ்த்துவிட்டனர். அருகில் ஒரு பெரிய ஆலமரமும் ஒரு நீர் நிறைந்த குட்டையும் இருக்கக்கண்டு அகன்கரையில்வந்து சேர்ந்தனர். அப்பொழுது ஸூர்யாஸ்தமன ஸமயமாய் இருந்ததால் எல்லோரும் தமது மாலைக்கடனை விதிப்படி முடித்துக்கொண்டு ஆலமரத்தடிக்கு வந்தனர். அங்குகளைப்பு மேலிட்டதால் கிருபரும் கிருதவர்மாவும் மெய்மறந்து தரையில் படுத்துக்கொண்டு உறங்கத் தொடங்கினர். இரவு வந்து மூடிக்கொண்டபோதிலும் அசுவத்தாமனுக்கு, தேகத்தில் பட்டிருந்த காயங்களினாலும், தன் தகப்பனார், துரியோதனன் முதலிய வீரர்கள் பாண்டவர்களால் தந்திரமாக கொல்லப்பட்டு விழுந்துவிட்டார்களே என்ற துக்கம் மனதில் இருந்ததாலும், தூக்கம் பிடிக்கவே இல்லை.

வி௫ 2 :—இவ்வாறு தூக்கம் பிடிக்காது வருந்தும் அசுவத்தாமனுக்கு மனதில் என்ன என்ன எண்ணங்கள் உண்டாயிற்று? முடிவில் அவன் மனதில் என்ன தீர்மானம் பிறந்தது?

விடை :—இவ்வாறு தூக்கம் பிடிக்காது உட்கார்ந்துகொண்டிருக்கையில் அசுவத்தாமன் மனதில், பதினெட்டுநாள் யுத்தத்திலும் பாண்டவர்கள் செய்த தந்திரம முதலிய அதர்மயுத்தங்கள் அடிக்கடி வந்துகொண்டிருந்தன. அவனுக்கு அப்பொழுது தேகத்தில் வலியும் அதிகமாயிற்று. ஆகையால் வரவர அவனுக்குப் பாண்டவர்கள்மேல் இருந்த கோபம் அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. ஆகவே எப்படியாவது பாண்டவர்களை அவரது ஜயத்தை யனுபவிக்க வொட்டாமல் செய்துவிட

வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. உடனே துரியோதனனிடம் இருந்து தான் அன்று ஸேனாபதிப்பட்டம் வாங்குங்கால் பாண்டவர்களேயும் மீதி இருப்பவர்களேயும் கொன்று சாய்த்துவிடுவதாகச் செய்த சபதமும் அவனுக்கு ஞாபகம் வந்தது. அத்தருணத்தில் அங்கொரு விசேஷம் நடந்தது. அது முடிந்தவுடன் தான் அன்றிரவே படைவீட்டில் உறங்கும் திருஷ்டத்யும்னன் இளம் பஞ்சபாண்டவர்கள் முதலிய பாண்டவவீரர்களை எப்படியாவது கொன்றுவிட்டு வர வேண்டும் என்ற தீர்மானம் அவனுக்கு உண்டாயிற்று.

வின 3:—இந்தத் தீர்மானம் அசுவத்தாமன் மனதில் உண்டாகும்படி செய்த விசேஷம் என்ன?

விடை:—அசுவத்தாமன் அநேகவிதமாக எண்ணிக்கொண்டு தூக்கம் பிடியாது சுற்றுமுற்றும் பார்த்தான். அப்பொழுது தான் இருந்த ஆலமரக்கிளையில் ஆயிரக்கணக்கான காக்கைகள் இரவில் உறங்கிக்கொண்டிருப்பதையும் அவைகள் மத்தியில் ஒரு ஆந்தை விழித்துக்கொண்டிருப்பதையும் கண்டான். அந்த ஆந்தையானது தனது இரக்கை அசையும் சப்தம்கூட வெளிவராத வண்ணம் மெதுவாகப் பறந்து சென்று நிர்பயமாய் உறங்கும் காக்கைகளை ஒவ்வொன்ருய்ப் பிடித்து அவைகளை சப்தம் போடக்கூட இடங்கொடுக்காது ஒரே அடியில் கொன்று தனது கால் நகத்தால் அவைகளை கிழித்து எறிந்துகொண்டே வந்தது. கொஞ்சநாழிகைக்குள் அந்த ஆந்தை எல்லாக் காக்கைகளையும் கொன்று பூமியில் அவைகளின் தேகங்களை சிதறிவிட்டது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த அசுவத்தாமனுக்குத் தானும் அன்றிரவே பாண்டவவீரர்கள் தூங்குகையில் அவர்களை பிடித்துக்கொன்று எறிந்துவிடவேண்டும் என்றஎண்ணம் உண்டாயிற்று. அவ்வாறு அன்றிரவு செய்து முடித்துவிட்டால் மறுநாள்காலையில் பாண்டவர்கள் ஐவரையும் கிருபர், கிருதவர்மாவாகிய இவர்களது ஸஹாயத்தால் எளிதில் கொன்றுவிடலாம் என்றும் அவனுக்குத் தோன்றியது.

வின 4:—இந்தத் தீர்மானம் உண்டானதும் அசுவத்தாமன் என்ன செய்தான்? அப்பொழுது கிருபருக்கும் அசுவத்தாமனுக்கும் என்ன ஸம்பாஷணை நடந்தது?

விடை:—இந்தத் தீர்மானம் வந்த உடன் அசுவத்தாமன் கிருபரை நோக்கி இந்த கஷ்டகால வேளையில் தாம் எவ்வாறு தக்கபடி

நடந்துகொள்வது என்று கேட்டான். உடனே கிருபர், 'அதிர்ஷ்டமும்முயற்சியும் ஒருவனுக்கு இருந்தால்தான் அவன் செய்யும் காரியம் கைகூடும். ஒன்றுமாத்திரம் இருந்தால் ஒருவனுக்கு ஒருநாளும் ஜயம் உண்டாகாது. அதிர்ஷ்டம் எவ்வாறிருக்கிறதோ அது நமக்குத் தெரியாது. ஆகையால் நாம் முயற்சி உடையவராய் இருக்கவேண்டும். ஆனால் துக்கம் முதலிய பிரமாதங்கள் வருங்கால் பெரியோர்களோடு சேர்ந்து அவர்கள் சொல்லும் புத்திமதிக்குத் தகுந்தபடி நாம் முயற்சியைச்செய்யவேண்டும் அந்த ஸந்தர்ப்பங்களில் நமக்குத்தோன்றியவாறு திடீரென்று முயற்சிசெய்யத் தொடங்கக்கூடாது. இப்பொழுதோ நமக்கு ஹிதமாக இருந்தவர்கள் இறந்துவிட்டபடியால் மனம் பதைக்கின்றது. இத்தருணத்தில் நாமாக ஒன்றும் செய்யத் தொடங்காது, திருதிராஷ்டிரன், காந்தாரி விதுரர் முதலியவர்களிடம் நமது துக்கத்தைச் சொல்லிக்கொண்டு அவர் புத்திமதிப்படி நடப்போம்' என்று அசுவத்தாமனது கொடியஎண்ணத்தை அறியாது புத்திமதி கூறினர்.

வினு 5:—இவ்வாறு கூறிய கிருபரைநோக்கி அசுவத்தாமன் என்ன சொன்னன்? கிருபர் அப்பொழுது என்ன மறுமொழி கூறினர்?

விடை:—இவ்வாறு புத்திமதி கூறிய கிருபரிடம் கொஞ்சமேனும் கூச்சம் இன்றி, 'ஒவ்வொருவரது எண்ணமும் வெவ்வேறுமாதிரியாக இருக்கிறது. இப்பொழுது இந்த விஷயத்தில் எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றி இருக்கிறது. அதை உங்களிடம் சொல்லுகிறேன்,' என்று சொல்லி, அவருக்கும் கிருதவர்மாவுக்கும், அன்றிரவே பாண்டவர் படைவீட்டில் தூங்கும் வீரர்கள் எல்லோரையும் கொல்லும்விஷயத்தில் தான் செய்த நிர்மானத்தை வெளியிட்டான். உடனே கிருபர் அசுவத்தாமனை நோக்கி, 'நீ பழிக்குப்பழி வாங்க எண்ணுவதை நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம். இன்று இராத்திரி நீ கஷ்டப்படாது தூங்கிவிடு. மறுநாட்காலையில் இந்த விஷயத்தில் நாங்கள் இருவரும் கூடிய வரையில் ஸஹாயம் செய்கிறோம். மேலும் இரவில் தூங்குபவரைக் கொல்வது தர்மமன்று. ஆகையால் சற்றுப பொறுத்துக்கொள்' என்று புத்திமதி கூறினர்.

வினு 6:—அப்பொழுது அசுவத்தாமன் என்ன செய்தான்? மேல் என்ன நடந்தது?

விடை:—அசுவத்தாமன் கிருபரை நோக்கி, 'நான்செய்ய எண்ணி இருப்பது அதர்மம்தான். இருந்தபோதிலும் எதிரிகள் இப்ப தினெட்டு நாளாகச் செய்த அதர்மத்தை நீர் பார்க்கவில்லை. அவர்களை நான் அதர்மமாகக் கொல்லுவது அதர்மமன்று. மேலும் அவர்கள் செய்த அதர்மத்தைக்கவனியாது நீர் ஏன் என் செயலை மாத்திரம் குற்றங் கூறுகிறீர். பாண்டவ வீரர்கள், பீஷ்மர் என் தகப்பனார், கர்ணன், பூரிச்ரவஸ் துரியோதனன் முதலிய வீரர்களைக்கொன்ற அதர்மவழி உமக்குத் தெரியாதா? நான் செய்த தீர்மானம் எனக்கு நியாயம் என்று தோன்றுகின்றது. ஆகையால் நான் இதோ யுத்தத்திற்கு புறப்படுகிறேன்,' என்று சொல்லிவிட்டு, தனது இரதத்தில் குதிரைகளைக் கட்டிப் பாண்டவர் படை வீட்டை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது கிருபரும் கிருதவர்மாவும் அவனுக்கு ஸஹாயமாக அவன் பின்னே புறப்பட்டனர்.

வி்னா 7:—அசுவத்தாமன் பாண்டவர் படைவீடு சென்றதும், அங்கு என்ன விசித்திரத்தைக் கண்டான்? மேல் என்ன நடந்தது?

விடை:—அசுவத்தாமன் வெகு அவஸரமாகப் பாண்டவர்கள் படைவீட்டுள்போக யத்தனிக்கையில் அதன் வாயிலில் ஒருவிசித்திர உருவைக்கண்டான். அந்த உருவம் ஸூர்யனைப்போல் பிரகாசித்துக்கொண்டும், தன் இடுப்பில் புலித்தோலைக் கட்டிக்கொண்டும், மேலே கருப்பு மான்தோலைப் போர்த்துக்கொண்டும், பாம்பைப் பூணூலாகவும், தோள் வளைகளாகவும் அணிந்துகொண்டும், பெரிய கைகளில் அனேகவித ஆயுதங்களை வைத்துக்கொண்டும், வாயால் நெருப்புகளை கக்கிக்கொண்டும், இருந்தது. அதற்கு ஆயிரங் கண்கள் இருந்ததால் "அது பார்க்க பயங்கரமாய் இருந்தது. அதன் வாயிலிருந்து அனேக தேவதைகள் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். இந்த உருவத்தைக் கண்டதும் அசுவத்தாமன் பயப்படாது தன்து பாணங்களை அதன்மேல் போடத்தொடங்கினான். வரும் பாணங்களை எல்லாம் அது விழுங்கத்தொடங்கியது. சிற்சில முறட்டு ஆயுதங்கள் அதன்மேல் பட்டதும் துண்டுதுண்டாகச் சிதறிப்போயின. அசுவத்தாமனிடம் இருந்த ஆயுதங்கள் யாவும் போய்விட்டன. உடனே அவனுக்கு துக்கமும் பயமும் வந்துவிட்டது. 'இரவில் கிருபர் புத்திமதியையும் கேட்காது இந்த அநியாய காரி

யத்தை ஏன் தொடங்கினேன்' என்று அவனுக்கு அப்பொழுது பட்டது. இந்த எண்ணம் உடனே மாறிவிட்டது.

வினா 8:—இந்த உருவம் யார்? அது பாண்டவர்கள் படைவீட்டு வாயிலில் இருப்பானேன்?

விடை:—பரமசிவனே இந்த உருவாய் கிருஷ்ணபகவான் முன்னமே செய்திருந்த ஆராதனைக்கு மகிழ்ந்து அவரது வேண்டுகோளின்படி பதினெட்டு நாளாக பாண்டவர்கள் பஞ்சாலர்கள் முதலியோரை இரவில் காப்பாற்றி வருகிறார். அவரது மகிமையும் உண்மை உருவையும் அறியாது அசுவத்தாமன் அதை ஒரு பூதம் என்று எண்ணி அநேக அம்புகளை எய்துசண்டைசெய்து பார்த்தான். பரமசிவமாகையால் அவன் பாணங்கள் ஒன்றும் அங்கு பயன்படாமல் போயின.

வினா 9:—தனது பாணங்கள் பயன்படாது தத்தளித்துகொண்டிருந்த அசுவத்தாமன் என்ன செய்தான்? அப்பொழுது என்னென்ன விசித்திரங்கள் நடந்தன? அதற்குமேல் அவன் என்ன செய்தான்?

விடை:—இவ்வாறு தன் பிரயத்தனம் வீணானது கண்டு தன் குலதெய்வமாய் ஆராதித்து வரும் பரமசிவத்தை அப்பொழுது மனதாரத் துதிக்கலுற்றான். தனது மனம் முதலியவைகளை அடக்கி பரமசிவத்தை அவன் சரணமென்று அடைந்த உடன் அவன் தன்னையே அதற்கு ஹோமம் செய்துவிடுவதாகத் தீர்மானித்தான். இந்தத் தருணத்தில் மிகுந்த பிரகாசத்தோடு எரியும் நெருப்பையுடையதான ஒரு பொன் வேதிகை அசுவத்தாமன் முன்பு வந்து நின்றது. அநேகவித பூத பிரேத பிசாசகணங்களும் அங்கு வந்து நின்றன. இவைகளில் சில ஆடவும் சில பாடவும் சில வாத்தியங்கள் வாசிக்கவும் தொடங்கின. அப்பொழுது அந்த அக்னியில் அசுவத்தாமன் தன்னையே ஹோமம்செய்து கொள்ளுவதாகத் தீர்மானித்து அந்த வேதிகையில் ஏறிவிட்டான்.

வினா 10:—அப்பொழுது என்ன அதிசய காரியம் நடந்தது?

விடை:—அந்தத் தருணத்தில் பரமசிவன் அசுவத்தாமன் முன்பு தோன்றி தாமே படைவீட்டில் இருந்த உருவென்றும், தாம் அங்கு இருக்கக் காரணம் இன்னதென்றும் விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார். அதன்மேல், 'கிருஷ்ணனது வாக்கை கௌரவப்படுத்துவதற்காக நான் இத்தனை நாள் இந்த வாயிலில் காவல்

காத்து ஆய்விட்டது. இன்றோடு இப்படை வீட்டில் இருக்கும் சற்றேறக்குறைய எல்லோருக்கும் ஆயுஸ்முடிகிறது. அவர்கள் இனிமேல் இறக்கவேண்டியதுதான். இதோ நான் உனக்கு வழிவிடுகிறேன்' என்று மஹாதேவர் சொல்லி அசுவத்தாமனுக்கு ஒரு நல்ல கத்தியைக் கொடுத்துவிட்டு அவன் தேகத்துள் பிரவேசித்து விட்டார். உடனே அசுவத்தாமனுக்கு பல விருத்தியாக ஒருவரையும் உயிரோடு வெளியே விடாதிருப்பதற்காக கிருபரையும் கிருதவர்மாவையும் வாயிலில் காவல் வைத்துவிட்டு அவன் வெகு உத்ஸாஹத்தோடு கொலைத்தொழில் செய்வதற்காக படைவீட்டுள் புகுந்தான்.

வினா 11:—படைவீட்டுள் புகுந்ததும் அசுவத்தாமா நேரே எங்கே போனான்? அங்கு என்ன நடந்தது?

விடை:—உள்ளே சென்றதும் அசுவத்தாமன் தன் தகப்பனை தகாதபடி கொன்றவனாகிய திருஷ்டத்யும்னன் கூடாரத்தை நோக்கிப் போய் அங்கு அவன் ஒரு பயமுமின்றி உறங்குவதைக் கண்டான். அவனுக்கு அப்பொழுது அதிக கோபம் மூள பலமாய் திருஷ்டத்யும்னனை உதைத்தான். அவன் திடுக்கிட்டு எழுந்தான். உடனே அசுவத்தாமன் அவன் தலைமயிரைப்பிடித்து இழுத்துக் கீழே தள்ளி அவன் மார்பில் உட்கார்ந்து கொண்டு அவன் கழுத்தை அமுக்கிப் பிடித்தான். தூக்கக் கலக்கத்தாலும் பயத்தாலும் திருஷ்டத்யும்னனால் தமது முழுபலத்தை உபயோகிக்க முடியாமற்போக அவன் ஹீனஸ்வரத்தோடு 'என்னை இம்மாதிரி ஆடுமாடைக்கொல்வதுபோலக் கொல்லாதே. க்ஷத்திரியனைக் கொல்லுவதுபோல ஆயுதத்தால் கொல்லு. நான் நற்கதி அடையட்டும்' என்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டான். அதற்கு அசுவத்தாமன், 'என் தகப்பனார் ஆயுதத்தை எறிந்துவிட்ட பின்பு அவர் தலையை ஒரே வீச்சாய் வீசிய கொடிய பாபிக்கு நல்லகதி ஒருநாளும் வரக்கூடாது' என்று சொல்லிக்கொண்டே, அவனது மர்மஸ்தலங்களில் பலமாக அடிக்க உடனே அவன் இறந்தான். இந்த கோரத்தொழிலை திருஷ்டத்யும்னனது ஸ்திரீகள் பார்த்துக் கொண்டிருந்தும் பயமிகுதியால் கூக்குரலிட அவர்களால் முடியவில்லை. இவ்வாறு திருஷ்டத்யும்னனை கொன்று எறிந்து விட்டு அசுவத்தாமன் மற்றைய கூடாரங்களில் இருப்பவர்களைக் கொல்லப் புறப்பட்டான்.

அப்பொழுதுதான் திருஷ்டத்யும்னனது ஸ்திரீகள் கூக்குரலிடத் தொடங்கினர்.

வினா 12:—இவர்கள் கூக்குரலிடத் தொடங்கியதும் படை வீட்டில் என்ன நடந்தது? மேல் அசுவத்தாமன் என்ன செய்தான்?

விடை:—ஸ்திரீகளது அழுகுரலைக் கேட்டு இரண்டொருவர் எழுந்திருக்கத் தொடங்கினர். இதற்குள் அசுவத்தாமன் தூங்கிக் கொண்டிருந்த சில பாண்டவவீரர்களை அடித்துக் கொன்று வர குழப்பமும் சப்தமும் அதிகமாய்விட்டது. இதற்குள் இளம் பஞ்சபாண்டவர்கள், ஸோமகர்கள் முதலியோர் விழித்துக் கொண்டு திருஷ்டத்யும்னன் கதியைக்கேள்வியுற்று சண்டைக்குத் தயாராயினர். அப்பொழுது அசுவத்தாமன் யமனைப்போலப் படை வீட்டில் உலாவிக்கொண்டு அங்குவர பெரும்போர் உண்டாயிற்று. அசுவத்தாமன் மிகுந்த ஆவேசத்தோடு யுத்தம் செய்தபடியால் ஸோமகர்களையும் இளம்பஞ்ச பாண்டவர்களையும் கொஞ்ச நாழிகையில் ஹதம்செய்து விட்டான். இதன் பின்பு துருபதராஜன் விராடராஜன் இவர்களது பரிவாரங்களும் சிகண்டியும் அசுவத்தாமனை எதிர்த்துவந்து அரை நொடியில் மாண்டு விழுந்தனர் அப்பொழுது உண்டான குழப்பத்தில் எழுந்தவர்கள் தூக்கக்கலக்கத்தால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டிறந்தனர்.

வினா 13:—இவ்வாறிரவு இறக்கமின்றி அசுவத்தாமன் பாண்டவவீரர்களைக் கொன்று வருகையில் வாயிலிருந்த கிருபகிருதவர்மாக்கள் என்ன செய்தனர்? இவை எல்லாம் எவ்வாறு முடிந்தன?

விடை:—வாயிலிருந்த கிருபகிருதவர்மாக்கள் அவர்கள் பக்கம் ஓடி வந்த ஒருவனையும் உயிரோடு வெளியில் போகவிடவில்லை. ஜனங்களை வரவர இறக்கமின்றி அவர்கள் வெட்டிச்சாய்த்துக் கொண்டேஇருந்தனர். நாழிகையாக ஆக உள்ளே கூக்குரலும், சண்டையும் பலக்கக் கண்ட அவர்கள் பாண்டவர்கள்படை வீட்டில் நெருப்பைவைத்துவிட்டனர். உடனே நெருப்புகொழுந்து விட்டு எரிய ஆரம்பிக்க அதன் கொடுமையாலும், அசுவத்தாமனது அடியின் கொடுமையாலும், பாண்டவவீரர்கள் எல்லோரும் மாண்டு விழுந்தனர். கொஞ்சநாழிகைக்கு எல்லாம் நெருப்பு அடங்க எங்கும் நிச்சப்தமாகிவிட்டது. கிருதவர்மாவும் கிருபரும் அசுவத்தாமனைக் கண்டதும் அவனது பலத்தைப்

புகழ்ந்து பேசிக்கொண்டாடினர். இவ்வாறு பதினெட்டாம்நாள் இரவு 12-மணிக்குள் பாண்டவர்கள் படைவீடு இருந்த இடத்தில் நாய் நரி பேய் கழுகு எல்லாம் விருந்து உண்ணத் தொடங்கின.

வின 14:—இவ்வாறு செய்துவிட்டு இம்மூவரும் எங்குசென்றனர்? அங்கு என்ன நடந்தது?

விடை:—கொடுங்கொலை செய்தபின்பு இம்மூவரும் துரியோதனன் அடிபட்டு விழுந்து கிடக்கும் இடத்திற்கு அன்று நடு நிசியிலே சென்றனர். அவர்கள் அங்கு போகையில் துரியோதனனுக்கு இன்னும் கொஞ்சம் பிராணன் இருந்தது. அவன் வலிபொறுக்க மாட்டாமல் கஷ்டப்பட்டுக் கொண்டும், அவனது தேகத்தை கிழித்துத் தின்ன நாலு பக்கங்களிலும் ஓடிவரும் நாய்நரி முதலியவைகளை மிகுந்த கஷ்டத்தின் பேரில் விலக்கிக்கொண்டும் இருப்பதை இம்மூவரும் கண்ட உடன், இவர்களுக்கு அடங்கா துக்கம் வந்து விட்டது. அப்பொழுது இவர்கள் வாய் விட்டு அலறத் தொடங்கினர். இதைக்கேட்டதும் துரியோதனனுக்கு கொஞ்சம் ஞாபகம் வர அவனிடம் தாம் அப்பொழுதே செய்து வந்த கொலைத்தொழிலை விஸ்தாரமாக எடுத்துரைத்தனர். உடனே துரியோதனனுக்கு கொஞ்சம் பலமும் முகத்தில் கொஞ்சம் தெளிவும் உண்டாயிற்று. அப்பொழுது அசுவத்தாமன் வெகுவாகப் பிரலாபித்து முடிவில் ஸ்வர்க்கத்தில் பீஷ்மர் துரோணர் முதலியோரைக்கண்டால் அவர்களை தந்திரமாக அதர்மயுத்தத்தில் கொன்ற பாபிகளைக்கொன்று பழிக்குப்பழி வாங்கியாய்விட்டது என்ற ஸங்கதியைச் சொல்லிவிடும்படி சொன்னான். இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் துரியோதனன் பஞ்சப்பிராணன்களும் ஒடுங்கிப்போக இறந்தான். அப்பொழுது அசுவத்தாமன் மிகுந்த துக்கத்தோடு கதறி அழுதான்.

வின 15:—இவ்வாறு துரியோதனன் இறந்ததும் ஸஞ்ஜயர் என்ன செய்தார்? பின்பு அவர் நிலை என்னமாய் இருந்தது?

விடை:—இவ்வாறு அசுவத்தாமன் புலம்புவதைக் கேட்டுவிட்டு ஸஞ்ஜயர் திருதிராஷ்டிரனிடம் ஸங்கதி சொல்லப் போய்விட்டார். துரியோதனனது உயிர் நீங்கியதும், யுத்தத்தில் நடந்த ஸங்கதிகளைப் பார்த்து திருதிராஷ்டிரனுக்கு சொல்லுவதற்காக

ஸஞ்சயருக்கு வியாஸரால் யுத்தாரம்பத்தில் கொடுக்கப்பட்ட ஞானக்கண் போய்விட்டது.

வினு 16:—பாண்டவர்கள் மூன்றின் இரவில் நடந்தவைகளை மறு நாட் காலையில் எவ்வாறு அறிந்து என்ன செய்தார்கள்?

விடை:—அசுவத்தாமன் கொடுங் கொலை புரிந்து வருங்கால் உண்டான குழப்பத்தில் வெளியே ஓடிவந்த ஜனங்களுள் திருஷ்டத்யும்னனது ஸாரதி ஒருவன் கிருபகிருதர்வமாக்கள் கொஞ்சம் அசிரத்தையாய் இருக்கும் தருணம் நோக்கி, தப்பி ஓடிப் போய் மறுநாட்காலையில் பாண்டவர்களிடம் நடந்த ஸங்கதிகளை ஆதியோடந்தமாகச் சொல்லிவிட்டான். தருமபுத்திரருக்கு துக்கம் அதிகரித்துவிட்டது. உடனே நகுலனை அனுப்பி உபப்பிலாவ்யத்திலிருந்து திரௌபதியை அழைத்து வரும்படி சொல்லிவிட்டு பாண்டவர்களும் கிருஷ்ண பகவானும் தமது படை வீட்டருகில் வந்தனர். கொஞ்சநாழிகைக்குள் திரௌபதி ஸங்கதி கேள்விப்பட்டு மிகுந்த துக்கத்தோடு அங்குவந்து பிரலாபித்துவிட்டு 'அசுவத்தாமன் அவன் செய்த கொடுங்கொலையின் பலனை உங்கள் மூலமாய் அனுபவிக்காவிடில் நான் இங்கேயே பிரய விருதத்தில் பட்டினி கிடந்திறப்பேன்' என்று சபதம் செய்துகொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

வினு 17:—இவ்வாறு திரௌபதி சபதம்செய்து கொண்டதும் மேல் என்ன நடந்தது? இந்தவிஷயமாய் யார் அதிகப் பிரயத்தனம் எவ்வாறு செய்தது ?

விடை:—துக்கக்கடலில் ஆழ்ந்திருந்த திரௌபதியை, அவளது பிள்ளைகள் க்ஷத்திரியருக்குத் தகுந்தபடி யுத்தத்தில் இறந்தமையால் துக்கப்பட வேண்டியதில்லை என்றும், அசுவத்தாமன் காட்டிற்குள் எங்கேயோ போய்விட்டான் இனி அவனைப் பிடிப்பது அஸாத்யம் என்றும் எடுத்துரைத்து தருமபுத்திரர் தம்மால் இயன்றமட்டும் தேற்றப்பார்த்தார். அப்பொழுது திரௌபதி, "அசுவத்தாமன் தலையில் சிரோரத்னம் ஒன்று இருக்கிறதாம்; அதை என்னிடம் கொண்டுவரவேண்டியது. அதை நான் உமது சிரஸில் வைத்துப்பார்த்த பின்புதான் நான் உயிர்தரிப்பேன். இதுதான் என் தீர்மானம்' என்று சொல்லிவிட்டு, பீமனை இந்தவிஷயத்தில் பிரயத்தனம் செய்யும்படி அவள் வேண்டிக்கொண்டாள். திரௌபதிக்கு முன்பு வந்த அநேக கஷ்டகாலங்களில் தகுந்தபடி உதவிசெய்த பீமன்,

அப்பொழுதும் இருந்த மனத்துணிவோடு அசுவத்தாமனைக் கொல்லப்புறப்பட்டான்.

வினா 18:—மனத்துணிவோடு புறப்பட்ட பீமனுக்கு ஸஹாயமாக யார் சென்றது? ஏன்?

விடை:—பகவான் தமது ரதத்தைத் தொண்டுவரச் சொல்ல, அதில் பகவான் தருமபுத்திரர், அர்ஜுனன் மூவரும் பீமனுக்கு ஸஹாயமாக மிகுந்த பரபரப்போடு புறப்பட்டனர், அசுவத்தாமன் மிகக் கொடியவன் என்றும், அவனுக்கு மனிதர்கள் மேல் பிரயோகிக்கத்தகாத பிரம்மசிரோஸ்திரம் தெரியும் என்றும், பீமனால் அவன் தாக்கப்படுங்கால் முன்பின் யோசிக்காது அவன் அந்த அஸ்திரத்தைப் போட மிகுந்த அபாயம் வரும் என்றும், அதற்காக அந்த அஸ்திரம் தெரிந்த அர்ஜுனன் அவசியம் பீமனுக்கு ஸஹாயமாகப் போகவேண்டும் என்றும் பகவான் விஸ்தாரமாக புத்திமதிகூற பகவான் முதலிய மூவரும் பீமனைத்தொடர்ந்து புறப்பட்டனர்.

வினா 19:—அசுவத்தாமனது கெட்டகுணம் பகவானுக்குத் தெரியக் காரணம் என்ன?

விடை:—பாண்டவர்கள் வனவாஸம் செய்து கொண்டிருந்த காலத்தில அசுவத்தாமன் துவாரகைவந்து பகவானோடு கொஞ்சகாலம் வஸித்துவந்தான். இப்படி இருக்கையில் ஒருநாள் அவன் பகவானோடு ஏகாந்தத்தில் பேசுங்கால், அவன் தன்னிடமிருந்த பிரம்ம சிரோஸ்திரத்தை வாங்கிக்கொண்டு பகவானது சக்கிராயுதத்தைத் தரும்படி கேட்டான், அதற்கு பகவான் ‘என்னிடத்தில் பஞ்சாயுதங்கள் இருக்கின்றன, அவைகளுள் நீ எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள், நான் தந்துவிடுகிறேன். நீ அதற்கு பதிலாக வேறொரு ஆயுதமும் கொடுக்கவேண்டியதில்லை,’ என்றார். உடனே மிகுந்த இறுமாப்பு உடைய அசுவத்தாமன் வெகு ஸ்வல்பமாய் சக்கரத்தை பகவான் கையிலிருந்து எடுத்துவிடலாம் என்று தனது இடது கையால் அதைத் தூக்க யத்தனம் செய்தான், அதை அவனால் அசைக்கக்கூட முடியவில்லை. பின்பு தன் முழுபலத்தைப் போட்டு அதைத் தூக்கப்பார்த்தும், அவனால் முடியவில்லை. உடனே கர்வபங்கப்பட்டு அவன் தலை குனிந்து நிற்கையில் பகவான் அவனை நோக்கி ‘நீ ஏன் இந்த சக்கரம் வேண்டும் என்று கேட்டாய்’ என்று கேட்க,

அசுவத்தாமன் "அதை வாங்கிக்கொண்டு உம்மோடு யுத்தம் செய்து கீர்த்தியை அடைய விரும்பியே இவ்வாறு செய்தேன், அது மாத்திரம் என்னிடம் வந்திருக்குமானால் என்னை ஒருவராலும் வெல்லமுடியாது. என்னிடம் அந்த ஆயுதம் வந்து சேராததால் நான் போய்வருகிறேன்' என்று மறுமொழி சொல்லிவிட்டு அஸ்தினாபுரம் நோக்கிப்புறப்பட்டான். இதனால் அசுவத்தாமன் கொடிய பிராம்மணன் என்று பகவானுக்குத் தெரியவந்தது.

வினா 20 :—பீமன் அசுவத்தாமனை எங்கு கண்டுபிடித்தான்? அப்பொழுது என்ன நடந்தது?

விடை :—பீமன் அசுவத்தாமனைத் தேடிக்கொண்டு காட்டுமார்க்கமாக வருகையில் கங்கைக்கரையில் வியாஸர் அருகில் அசுவத்தாமன் மனோவிநயத்துடன் ரிஷிகள் மத்தியத்தில் உட்கார்ந்திருப்பதை அவன்கண்டான். உடனே அவனுக்கு கோபம் அதிகரித்ததால் அசுவத்தாமன்மேல் பாணங்களைப்பிரயோகம் செய்யத்தொடங்கினான். இதற்குள் பகவான் முதலிய மூவரும் பீமனுக்கு ஸஹாயமாக அங்குவந்து சேர்ந்தனர். இவர்களைக் கண்டதும் தனக்கு ஒருபெரிய ஆபத்து வந்துவிட்டது என்று பயந்து அசுவத்தாமன் அருகில் இருந்தபுற்களில் ஒருபிடிபுல்லை எடுத்து பிரம்மசிரோஸ்திரத்தை மந்திரித்து 'இது பாண்டவர்களை நாசம் செய்யட்டும்' என்று உறக்கக் கூவிக்கொண்டே பிரயோகம் செய்து விட்டான். இதற்குள் அசுவத்தாமனது கொடிய எண்ணத்தை அறிந்த பகவான் அர்ஜுனனை பிரம்மசிரோஸ்திரப் பிரயோகம் பண்ணும்படி ஏவ, அவனும் பிடி புல்லில் மந்திரத்தை உச்சரித்து 'இது அசுவத்தாமனது அஸ்திரத்தைத்தடுத்து அடக்கட்டும்' என்ற லோக ஹிதமான வார்த்தையைச் சொல்லிவிடுத்தான். இரண்டுஅஸ்திரங்களும் ஒன்றை ஒன்று அடித்துக்கொள்ள பெரும் தீ கிளம்பியது. இதனால் உலகம் முழுவதும் அழிந்துவிடுமோ என்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டாயிற்று.

வினா 21 :—இந்த அஸ்திரங்களின் கொடுமையை எவர்கள் அடக்க முயன்றது? அவர்கள் பிரயத்தனம் எவ்வாறு முடிவுபெற்றது?

விடை :—இந்த அஸ்திரங்கள் ஒன்றை ஒன்று மோதி உலகை அழித்துவிடும் என்றபயத்தால் வியாஸரும் நாரதரும் அந்த அஸ்திரங்களின் இடையில் வந்து நின்றுகொண்டு அவைகளின் கொடு

மையைத் தமது தபோபலத்தால் தாங்கினர். இவ்வாறு ரிஷிகளே வந்து லோகோபகாரார்த்தம் படும் பாட்டைக் கண்ட அர்ஜுனனுக்கு தனது அஸ்திரத்தை திரும்ப இழுத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் வந்தது. அப்பொழுது வியாஸரை நோக்கி, 'நான் நல்ல எண்ணத்தோடுதான் இந்த அபூர்வ அஸ்திரத்தை விட்டேன். இப்பொழுது லோக நன்மைக்காக அதை நான் எடுத்துவிடுகிறேன். எங்களுக்கு நாசம் வாராதிருக்கும்படி அவன்விட்ட அஸ்திரத்தை எடுத்துவிடச் சொல்லுங்கள்,' என்று அர்ஜுனன் விண்ணப்பம் செய்துகொண்டான். அப்பொழுது ரிஷிகள் அசுவத்தாமனிடம் சென்று அவன்விட்ட அஸ்திரத்தை எடுத்துவிடும்படி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். அவன் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. மேலும் அந்த அஸ்திரத்தை அவனுக்கு விடத் தெரியுமே ஒழிய எடுத்துவிடத் தெரியாது. ஆனல் அவனுக்கு அதை ஒருவரைவிட்டு மற்றொருவர்மேல் மாற்றிவிடத்தெரியும்.

வினு 22:—அப்பொழுது வியாஸர் என்ன சொன்னர்? மேல் என்ன நடந்தது?

விடை:—அசுவத்தாமனே அவன் தலையில் இருந்த சிரோரத்னத்தை பாண்டவர்களுக்குக் கொடுக்கும்படி வியாஸர் உத்தரவுசெய்ய அவன் அப்படி செய்தான். அந்த ரத்னம் ஒருவன் தலையில் இருக்கும் வரையில் அவனுக்கு எந்த ஆயுதத்தாலும் பயமில்லை என்று அந்த ரத்னத்தின் மஹிமையை எடுத்துரைத்தான். அதன்பின்பு தன்னல் அந்த பிரம்ம சிரோஸ்திரத்தை எடுக்க முடியாது என்று சொல்லி பாண்டவர்கள்மேல் விட்ட அஸ்திரத்தை 'பாண்டவர் ஸ்திரீகளது கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைகள்மேல் மாற்றுவதாகச் சொல்லி அவ்வாறே செய்தான். அப்பொழுது அர்ஜுனனும் தனக்கு ஆபத்து ஒருவாறு நீங்கினதைக்கண்டு தான் விட்ட பிரம்ம சிரோஸ்திரத்தை எடுத்துவிட்டான்.

வினு 23:—இவ்வாறு பாண்டவ ஸந்ததியே இல்லாதிருக்கும்படி செய்த அசுவத்தாமன் கதி என்னவாயிற்று?

விடை:—அசுவத்தாமன் இவ்வாறு செய்ததைக்கண்ட பகவான் அவனை நோக்கி, 'உன் அஸ்திரவேகத்தால் பாண்டவர்கள் ஸந்ததி அழிந்துவிடும். அதன்பின் நானே உத்தரை வயிற்றிலிருக்கும் கருவை உயிர்ப்பிப்பேன்; அந்தக் குழந்தை உன் கண்

முன்பே 60 வருஷம் மனுநீதி தவறாது ராஜ்யம் ஆளப்போகிறான். நீ இந்தக் கொடிய செயலைச் செய்ததற்காக உன் தலை புழுத்து நெளியட்டும். நீ கஷ்டப்பட்டுக்கொண்டு காட்டில் திரியவேண்டியதுதான் என்று சபிக்க, அசுவத்தாமன் வியாஸரோடு இருந்து தன் காலத்தைக் கழிப்பதாகத் தீர்மானித்துக் கொண்டு அவரோடு பதரிகாசிரமம் சென்றனன்.

வினா 24:—அசுவத்தாமன் இவ்வாறு சென்றதும் பாண்டவர்கள் திரௌபதியிடம் வந்து என்ன செய்தார்கள்? பின்பு என்ன நடந்தது?

விடை:—பாண்டவர்களும் பகவானும் திரௌபதியிடம் வந்து அசுவத்தாமனது சிரோரத்னத்தைக் காட்டி, அசுவத்தாமன் குருபிள்ளையாயும் பிராமணனாயும் இருந்ததால் அவன் தேகத்தை மாத்திரம் விட்டு அவன் உயிராகிய சிரோரத்னத்தை மாத்திரம் கொண்டுவந்ததாகச் சொன்னார்கள். அசுவத்தாமனை உயிரோடுவிட்டுவந்ததே நியாயம் என்று திரௌபதி அங்கீகரித்து, அவனிடம் தமக்கு அவசியம் இருக்கவேண்டிய மரியாதையைக் காட்ட அந்த சிரோரத்னத்தை தருமபுத்திரரை சிரஸில் அணிந்துகொள்ளும்படி திரௌபதி வேண்டிக்கொண்டாள். அவரும் அவ்வாறே செய்தார். பின்பு தருமபுத்திரர் அசுவத்தாமனுக்கு திருஷ்டத்யும்னன் முதலிய மஹா வீரர்களை ஒருவனாகவே இருந்து கொல்லும்படியான சக்தி எவ்வாறு வந்தது என்றுகேட்க, அப்பொழுது மஹாதேவர் அனுக்கிரகத்தால் அந்த சக்தி அவனுக்கு வந்ததென்று சொல்லி, பகவான் மஹாதேவரிடமிருந்து உலகம் தோன்றி நடைபெற்று முடிவில் எவ்வாறு அவரிடமே ஒடுங்குகிறது என்பதை விஸ்தாரமாக எடுத்துரைத்து அவரது மஹிமையைப் பாண்டவர்களுக்கு நன்கு விளக்கினார்.

# II. ஸ்திரீபர்வம்

எந்த எந்த 'ஜீவ' பேத எங்குமெங்கு முள்ளன
அந்த அந்த 'ஜீவ னூடும்' ஆகி ஆன தன்மையை
சிந்தை யின்கண் ஒருக ணத்தின் திகழு மாறு தேவர்கோன்
மைந்த னுய்ந்தி டப்பு கன்ற வள்ளல் தாள் வணங்குவாம்.

வினு 1:—துரியோதனுதிகள் எல்லோரும் இறந்து விழுந்ததும், திருதிராஷ்டிரன் கதி என்னவாயிற்று? யார் அவனை எவ்வாறு தேற்றியது?

விடை:—தன்பிள்ளை இறந்த ஸங்கதியை ஸஞ்ஜயரிடம் இருந்து கேள்விப்பட்டதும் திருதராஷ்டிரனுக்கு துக்கம் அதிகமாக வந்துவிட்டது. வெகுவாக வாய்விட்டுப் பிரலாபிக்கத் தொடங்கினுன். ஸஞ்ஜயர் எவ்வளவோ தம்மாலியன்றமட்டும் முன் பின் நடந்தவைகளின் ஸம்பந்தங்களை எடுத்துச்சொல்லி திருதிராஷ்டிரனைத் தேற்றினுர். பின்பு விதுரர் பலவித தர்மங்களை எடுத்துச்சொல்லி திருதராஷ்டிரனைத் தேற்ற முயன்றுர்.

வினு 2:—விதுரர் தேற்றிய மாதிரி என்ன?

விடை:—திருதிராஷ்டிரனிடம்முதலில் அவர், மரணத்தின் ஸ்வபாவம், தேகநிலையாமை, க்ஷத்திரியதர்மம், வீரஸ்வர்க்கம், துக்கத்தின் ஸ்வரூபம், அதைஅறியாததால் துக்கம் அதிகமாவது, துக்கத்தை அடக்க முயலாதவனுக்கு ஸதா துக்கஹேதுக்கள் இருந்துகொண்டே இருக்கும், ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்ற விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாகப் பேசினுர். பின்பு மனிதன் வர வர அதிகமாக பந்தப்பட்டு உலகவாழ்க்கையாம் அரண்யத்தில் அலையும் விதத்தை விஸ்தரித்தார்.

வினு 3.—உலகவாழ்க்கையாம் அரண்யத்திலிருந்து தப்பும் விதம் என்ன என்று கேட்ட திருதிராஷ்டிரனுக்கு விதுரர் எவ்வாறு பதில் சொன்னுர்?

விடை:—விதுரர் உலகவாழ்க்கையின் ஸ்வரூபத்தை நன்குஉணர்த்த ஒருகதை சொன்னுர். அது பின்வருமாறு, ஒரு பிராமணன் ஓர் ஸமயத்தில் அணுகமுடியாத துஷ்டமிருகங்கள் நிறைந்த ஓர் காட்டுள் வந்து சிக்கிக்கொண்டான். அதில் எங்கும் மிருகங்களின் சப்தம் அதிகமாகக்கேட்டுக்கொண்டே இருந்தது, இதனுல் பிராமணன் மனம் மிகப்பதறியது. அவன் உடனே

அங்குமிங்கும்பயத்தால் ஓடத்தலைப்பட்டான். அந்தக்காட்டைச் சுற்றி வலை போட்டிருந்தமையாலும், வெளியில் கோரமான ஒரு ஸ்திரீ தனது கைகளைப் பரப்பிக்கொண்டிருந்தமையாலும் அந்தப் பிராமணனால் காட்டைவிட்டு வெளி ஏற முடியவில்லை. மேலும் அந்தக்காட்டில் பெரிதாகிய ஐந்துதலை நாகங்கள் உலாவிக்கொண்டிருந்தன. அங்கு ஒருபடுகுழி, பலமான செடிகொடிகளால் மூடப்பட்டிருந்தது. பயத்தால் வெருண்டு ஓடிவந்த பிராமணன் தலைகீழாய் அந்தக்குழியில் விழுந்து, செடிகொடிகளில், பலமாய்ச் சிக்கிக்கொண்டான். அப்பொழுது அவனுக்கு அநேக கஷ்டங்கள் உண்டாயின. அந்தக்குழி அடியில் ஒரு பெரும்பாம்பு இருப்பதையும், அந்தக்குழியின் கரையில் தன்னை நோக்கி ஒரு யானைவருவதையும் அவன் கண்டு மிகுந்த துக்கத்தை அடைந்தான். அந்த யானைக்கு ஆறுமுகமும், பன்னிரண்டு கால்களும் இருந்தன. அவன் தொங்கிக்கொண்டிருக்கும் கொடிகளை வெள்ளை எலிகளும் கருப்பு எலிகளும் அருத்துக்கொண்டே இருந்தன. அந்தச் செடி கொடிகளின் மத்தியில் சில தேனடைகள் இருந்தன. அதிலிருந்து தேனீக்கள் உலாவிவருகையில்அந்தப்பிராமணனைக் கொட்டிக்கொண்டிருந்தன. இந்தக்கஷ்டங்களின் மத்தியில்தேனடைகளிலிருந்துதேன்துளிகள்பிராமணன் கன்னத்தில் விழுந்தன. அதை நாக்கால் மிகுந்தகஷ்டத்தின்பேரில் நக்கிக்கொண்டு அவன் அதன்தித்திப்பைப் பெரிதாக எண்ணி தான் படுங்கஷ்டங்களை மறந்து 'இன்னும் நமக்குத் தேன் கிடைக்காதா' என்றும் அவ்வாறே தான் வாழ்ந்துஸுகமடையவேண்டும் என்றும் எண்ணிக்கொண்டு அவன் அங்கு காலம் கழித்துவந்தான். இந்தக்கதையை விதுரர் சொல்லி உலகவாழ்க்கை அந்தபிராமணன் வாழ்க்கைபோன்றது என்று அறிந்து ஞானிகள் பந்தங்களிலிருந்து விடுபடுகிறார்கள் என்று வற்புறுத்தினார்.

வினா 4:—இக்கதையின் உட்கருத்து என்ன ?

விடை:—பிராமணன் அங்குமிங்கும் ஓடிய காடு ஒருமனிதன் வாழ்க்கையையும், துஷ்டமிருகங்கள் அவனுக்கு வரும் வியாதிகளையும், காட்டின் வெளியிலிருந்த கோரஸ்திரீ கிழத்தனத்தையும், குழி தேகத்தையும், குழி அடியிலிருந்த பாம்பு காலத்தையும், செடிகொடிகள் மனிதனுக்கு உள்ள தேகாபிமானத்தையும்

யானை, ஆறு ருது, பன்னிரண்டு மாதங்களுடைய வருஷத்தை யும், வெள்ளை எலி கருப்பு எலிகள் இராப்பகலையும், தேனீக் கள் ஆசைகளையும், தேன்துளிகள் ஆசையின் பூர்த்தியால்உண் டாகும் இஹலோக ஸுகத்தையும், அவை கொட்டுவது நமது ஆசை பூர்த்தியாகாததால் உண்டாகும் கஷ்டத்தையும், உணர் த்துகின்றன.

வினா 5 :— இதன்பின்பு விதுரர் திருதிராஷ்டிரனை வேறு எவ்வாறு தேற்றினார் ?

விடை :—தேகமே ரதம், அதிலிருக்கும் புத்தியே ஸாரதி, இந்திரி யங்களே குதிரைகள், இந்திரிய வியாபாரங்களே தேர்போகும் மார்க்கங்கள். குதிரைகளை அடக்காமல் அவைகள் போகும் வழி விடுபவன் எவ்வாறு விழுந்து கஷ்டப்படுவானோ அது போல் இந்திரிய நிக்கிரஹமில்லாதவன் பிறப்பு என்ற கஷ்டத் துக்கு அடிக்கடி ஆளாவான். அடக்கும் திறனுடையவனுக்கு அந்த ஆபத்து வராது. ஆகையால் துக்கத்தை அவசியம் ஒரு வன் அடக்கவேண்டியது என்று விதுரர் திருதிராஷ்டிரனுக்கு புத்திமதி கூறினார்.

வினா 6:—இவைகளைக் கேட்டுவந்த திருதிராஷ்டிரன் நிலை என்ன வாயிற்று ? அப்பொழுது வேறு யார் எவ்வாறு அவனைத் தேற் றியது ?

விடை:—விதுரர் சொல்லிமுடியும் வரையில் ஒருவாறு அடங்கியிரு ந்த துக்கமானது, அவர் சொல்லிமுடித்ததும் திருதிராஷ்டி ரனை வந்து மூடிக்கொள்ள அவன் மூர்ச்சைபோட்டுவிழுந்தான். அப்பொழுது வியாஸர் நேரே வந்து, இவ்வாறு உலகத்தரசர் இறக்கவேண்டும் என்பது முன்னமேயே பிரம்மாவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததென்றும், அவ்வாறு அவசியம் நடந்தேற வேண்டியவை நடந்த விஷயத்தில் துக்கப்பட்டுப் பிரயோஜ னம் இல்லை என்றும், இந்த விஷயத்தை ராஜஸூயயாக காலத் தில் நாரதரால் அறிந்த பாண்டவர்கள் இதைத் தடுக்க எவ் வளவோ முயன்றும் பயன்படாமல் போய்விட்ட தென்றும், ஆகையால் அவன் அப்பொழுது துக்கப்பட்டுக் கொண்டே இருந்தால் யுதிஷ்டிரர் தம் உயிரை மாய்த்துக்கொள்வார் அத னால் இன்னும் பெரிதாகிய துன்பம் விளையும் என்றும், பலவா றாக தத்கால ஸங்கதிகளை, பூர்வகால ஸங்கதிகளோடு ஒட்டி நன்றாய் எடுத்துச் சொல்லி திருதிராஷ்டிரனைத்தேற்றினார்.

அப்பொழுது அவன் தான் தனது உயிரை மாய்த்துக்கொள்ள விரும்புவதில்லை என்று வியாஸருக்கு வாக்களிக்க அவர் தமது இருப்பிடம் சென்றார்.

வினு 7:—இவ்வாறு வியாஸர் போனதும் மேல் என்ன நடந்தது ?

விடை:—ஸஞ்ஜயரது ஏற்பாட்டின்படி திருதிராஷ்டிரன் தனது அந்தப்புரஸ்திரீகளாகிய காந்தாரி, குந்தி முதலியவர்களோடு இறந்த வீரர்களுக்கு ஈமக்கடன்களைசெய்வதற்காக யுத்தகளம் நோக்கிப் புறப்பட்டனர். போகும்வழியில் கிருபர், அசுவத்தாமன், கிருதவர்மா முதலியவர்களால் துரியோதனன் இறந்ததை அறிந்து அவர்கள் மிகுந்த துக்கத்தை அடைந்தனர். அதன்பின்பு அசுவத்தாமன் முதலியோர் தாங்கள் முன்னாள் இரவு செய்த கொலைத்தொழிலுக்காக (ஸௌப்திகபர்வம் பார்க்க) பாண்டவர்களிடம் அஞ்சி ஓடுவதாகச் சொல்லிவிட்டு, கிருபர் ஹஸ்தினுபுரத்திற்கும், கிருதவர்மா துவாரகைக்கும், அசுவத்தாமா வியாஸராசிரமத்திற்குப் புறப்பட்டுப்போயினர்.

வினு 8:—கிருபர் முதலியோரிடமிருந்து நடந்த ஸங்கதியைக் கேள்விப்பட்ட பின்பு இவர்கள் எங்கே சென்றனர்? அங்கு என்ன நடந்தது ?

விடை:—திருதிராஷ்டிரன் முதலியோர் கங்கையைநோக்கிச் சென்றனர். இவர்கள் துக்கப்பட்டுக்கொண்டு வருவதைக் கேள்விப்பட்ட தருமபுத்திரர் தமது தம்பிமார் பகவான் முதலியவர்களோடு இவர்களை எதிர்கொண்டு வந்தனர். பாண்டவர்கள் வருவதை அறிந்த திருதிராஷ்டிரனுக்குத் துக்கம் அதிகரிக்க வெகுவாக வாய்விட்டுக் கதறிவிட்டு உண்மையாய் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தருமபுத்திரரை ஆலிங்கனம் செய்துகொண்டு வியாஸர் சொல்லிப்போன புத்திமதியின்படியே அவரைத் தேற்றினான்.

வினு 9:—பீமனை ஆலிங்கனம் செய்துகொள்ள வருகையில் திருதராஷ்டிரன் நிலை என்ன வாயிற்று? இதை யார் அறிந்து எவ்வாறு காரியங்களை நடத்திவைத்தது ?

விடை:—பீமனைக் கட்டிக்கொள்ள வருகையில் தன் பிள்ளைகள் இறந்த துக்கமும், அதற்குக் காரணம் பீமனுதலின் அவன் பேரில் கோபமும் திருதிராஷ்டிரனுக்கு உண்டாயிற்று. இதை அறிந்துகொண்டு பகவான் அருகே இருந்த ஒரு பெரிய எஃகு பிரதிமையை பீமன் என்று திருதிராஷ்டிரன் அருகில் வைத்து

விட்டு பீமனை ஒதுப்புரமாய் நிற்கும்படி செய்துவிட்டார். கோபத்தோடு ஆலிங்கனம் செய்துகொண்ட திருதிராஷ்டிரன், அந்த எஃகு பிரதிமையை பொடிப் பொடியாக ஒடித்துவிட்டான். பீமன் மாத்திரம் அப்பொழுது அவன் கையில் அகப்பட்டிருந்தால் அவனும் உடனே இறந்திருக்கவேண்டியது தான். திருதிராஷ்டிரன் தேகமெல்லாம் எஃகு பொத்துக் கொள்ள அவன் மூர்ச்சைபோட்டு விழுந்தான்.

வினா 10:—அவன் தெளிந்து எழுந்ததும் என்ன நடந்து? பகவான் என்ன செய்தார்? பின்பு என்ன நடந்தது?

விடை:—திருதிராஷ்டிரன் எழுந்ததும் அவனது கோபம் தணிய, தான் அநியாயமாய் பீமனைக் கொன்றுவிட்டதாக எண்ணி துக்கிக்கத் தொடங்கினான். அப்பொழுது பகவான் அவனுக்குத் தாம் அறிந்து செய்த தந்திரத்தை வெளியிட்டு, பாண்டவர்கள் பட்டபாட்டையும், அதற்கு துரியோதனனும், திருதிராஷ்டிரனும் காரணமாய் இருந்ததையும் விஸ்தாரமாகச் சொல்லி அவன் மனதில் மீதி இருந்த கோபாதிகள் தணியும்படி செய்து, பீமன் உயிரோடிருப்பதாகச் சொன்னார். பின்பு தேறுதல் அடைந்து திருதிராஷ்டிரன், பீமன், அர்ஜுனன், நகுல ஸஹதேவாள் ஆகிய இவர்களை நல்ல எண்ணத்தோடு தழுவிக் கொண்டு அவர்களை ஸமாதானப் படுத்தினான்.

வினா 11:—காந்தாரி நிலை எவ்வாறிருந்தது? அதை யார் எவ்வாறு மாற்றியது?

விடை:—இவ்வாறு பாண்டவர்களுக்கும் திருதிராஷ்டிரனுக்கும் ஸம்பாஷணைகள் நடந்துகொண்டிருக்கையில் பிள்ளைகள் பீமனால் இறந்ததை எண்ணி காந்தாரி மனம் பதைத்துக்கொண்டிருந்தது. அப்பொழுது அவளுக்கு யுதிஷ்டிரர்மேல் கோபம் உண்டாக அவள் அவரை சபிக்கவேண்டும் என்று எண்ணினாள். இதை அறிந்த வியாஸர் உடனே அங்கே வந்து நடக்க வேண்டிய காரியம் நடந்ததற்காக யுதிஷ்டிரரை சபிப்பது நியாயமன்று என்று சொல்லி, யுத்தம் பதினெட்டுநாளும், துரியோதனன் அவளிடம் வந்து தன்னை ஆசீர்வதிக்கவேண்டும் என்ற காலத்தில் அவள் ‘நியாயமுள்ள இடத்திலே ஜயமிருக்கும்’ என்று சொன்னதையும் அவளுக்கு அப்பொழுது வியாஸர் ஞாபகம் வரும்படி செய்தார். உடனே அவளுக்குப் பாண்டவர்களைச் சபிக்கவேண்டும் என்ற எண்ணம் மாறியது.

வினா 12:—முதலில் யார் அவளை ஸந்தித்து எவ்வாறு ஸமாதானப்படுத்தியது?

விடை:—இத்தருணம்பார்த்து பகவான் பாண்டவர்களை அவளிடம் அழைத்துவந்தார். பாண்டவர்கள் அவளுக்கு தண்டனிட்டு நிற்க, அவள் பீமனை நோக்கி 'நீ ஏன் நியாய விரோதமாய் என் பிள்ளையை தொப்புளுக்கீழிருக்கும் தொடையில் கதையால் அடித்துக் கொன்றாய்? இதனால்தான் உன்பேரில் எனக்குவந்த கோபம் மாறவில்லை. மேலும் நீ ஏன் உன் தம்பியாகிய துச்சாஸனன் ரத்தத்தைபுத்தகளத்தில் பலர்முன்னிலையில் குடித்தாய்' இந்த அநியாயத்திலும் என்மனம் ஸமாதானப் படவில்லை, என்றாள். இவைகளுக்கு முறையே பின்வருமாறு பீமன் பதில் சொன்னான். 'நான் சண்டையில் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணியும், உன்பிள்ளையை வேறு எவ்விதத்திலும் கொல்லமுடியாதென்று எண்ணியும், அவன் யுதிஷ்டிரரிடம் அநியாயமாய் நடந்துகொண்டான் என்று எண்ணியும், உன் பிள்ளை திரௌபதியிடம் அவள் ஸபையிலிழுக்கப்பட்ட காலத்தில் சொன்ன கொடும் சொற்களை எண்ணியும், அவன் அப்பொழுது அவளுக்கு தனது இடது தொடையைக் காட்டியதை எண்ணியும், அவனால் நாங்கள் காட்டில் பட்டபாடுகளை எண்ணியும், நான் தொப்புளுக்கீழே கதையால் அடித்தல் என்ற அநியாயத்தைச் செய்தேன்; மன்னிக்கவேண்டும். துச்சாஸனன் ரத்தத்தை நான் குடிக்கவில்லை. கௌரவர்களுக்கு பயம் உண்டாக்குவதற்காகவும் நகுலன் முதலியவர்களை தைரியப் படுத்துவதற்காகவும் நான் வாய், உதடு முதலியவற்றில் மாத்திரம் படும்படி ரத்தத்தை தேய்த்துக்கொண்டேன். இது கர்ணனுக்கு நன்றாய்த் தெரியும். மேலும் நான் முன்பு சூதாட்ட காலத்தில் செய்த சபதத்தை நிறைவேற்றவேண்டி இருந்தது. அதனாலும் இந்த மாதிரியாக எல்லாம் செய்தேன்' என்று இவ்வாறு சொல்லி காந்தாரியை ஸமாதானப்படுத்தினான்.

வினா 13:—இதன் பின்பு காந்தாரி என்ன செய்தாள்? மேல் என்ன நடந்தது.

விடை:—பின்பு யுதிஷ்டிரர் மிகுந்த வருத்தத்துடன் தாம் அவளிடமிருந்து சாபம் ஏற்கத்தகுந்தவன் என்று வாய்விட்டு அலறிக் கொண்டு அவள் காலில்வந்து விழுந்தார். காந்தாரிக்குக்

கோபம் அப்பொழுதும் அடங்காததால் தன் தலையை அவள் தூக்கவேஇல்லை. ஆனால் கோபத்தோடு யுதிஷ்டிரரது கால் பெருவிரலை மாத்திரம் பார்த்துவிட்டாள். உடனே அழகிய அந்த விரல்நகம் கோரமாகப் போய்விட்டது. இதைக்கண்ட அர்ஜுனன் முதலியோர் பகவான் பின்னர் சென்று ஒளித்துக் கொண்டனர். இதற்குள் காந்தாரிக்கு கோபமும் துக்கமும் சற்று அடங்க, தனது பிள்ளைகளை மார்புறத் தழுவி அவர்களைத் தேற்றிவிட்டுப் பின்பு தனது ஐந்துபிள்ளைகளையும் மற்றையப்பிள்ளைகளையும் இழந்து பரிதவிக்கும் திரௌபதியையும் பலவாராகத் தன்நிலையைச் சொல்லி அவள் தேற்றினாள். குந்தியும் தனது பிள்ளைகள் முதலியவர்களைக் கண்டு வெகுவாகத்

வினா 14 :—இவ்வாறு ஒருவரை ஒருவர் தேற்றியதும் இவர்கள் எங்கு சென்றனர்? அங்கு என்ன விபரீதம் விளைந்தது?

விடை :—இதன் பின்பு வியாஸரின் உத்தரவின்படி இறந்த வீரர்களுக்கு ஈமக்கடன்களை செய்வதற்காக திருதராஷ்டிரன் முதலியோர் யுத்தகளம் வந்து சேர்ந்தனர். அப்பொழுது வந்த ஸ்திரீகள் யாவரும், தமது பர்த்தாக்கள் முதலியோரது தேகங்களை ஒருவாறு கண்டுபிடித்து பிரலாபித்துப் பரிதவிக்கத் தொடங்கினர். இவர்கள் தவிக்கும் மாதிரிகளை காந்தாரி விஸ்தாரமாகப் பகவானுக்கு காட்டிக்கொண்டே வந்தனள். இவ்வாறு வருகையில் தன்னை அறியாமலே அவளுக்கு கோபம் மூள, முடிவில் பகவானைநோக்கி, ' இவ்வாறு பாண்டவர்களும் கௌரவர்களும் பூர்த்தியாக இறந்துவிட்டனரே! நீர் ஏன் இந்த நாசத்தைத் தடுத்திருக்கக்கூடாது. உமக்கு அவ்வாறு செய்யத்தகுந்த ஸேனை, புத்தி, வாக் சாதுரியம் முதலியவைகள் இருந்தனவே! அப்படி இருந்தும் நீர் கவனியாது ஏன் இருந்தீர்' என்று சொல்லி, 'அவ்வாறிருந்ததற்காக நீரே உமது உறவினராகிய யாதவர்கள் இறப்பதற்கு வேண்டிய காரணமாகக் கடவீர். இன்றைக்கு நேர் 36 - வருஷத்திற்கெல்லாம் உமது உறவினர்களைக் கொன்று விட்டு காட்டில் நீர் உமக்கு தகாதமார்க்கத்தில் இறக்கக் கடவீர்' என்று சபித்தாள். அப்பொழுது பகவான், 'யாதவர்களை ஒருவராலும் கொல்ல முடியாது. பூபாரம் தீர்க்கவந்த எனக்கு அவர்களைக் கொல்லும்வழி தெரியாதிருந்தது. உன் சாபம் எனக்கு

நல்ல உதவி செய்தது. அந்த நான் ஸந்தோஷமாய் அங்கிகரிக்கிறேன்' என்று சொல்லி சாபத்தை வாங்கிக்கொண்டார்.

வினு 15 :—இதன்பின்பு பகவான் காந்தாரியை எவ்வாறு தேற்றினுர் ?

**விடை** :— அப்பொழுது கீழே விழுந்து புரண்டு அழும் காந்தாரியை நோக்கி, 'உன்னுலேதான் இவ்வளவும் விளைந்தது. உன்பிள்ளை மூர்க்கன். அவன் பிழைகளை ஏன் எங்கள் மேல் ஏற்றிச் சொல்லுகிருய் ? போனதைப்பற்றி எண்ணி எண்ணித் துக்கிப்பதால் துக்கம் அதிகரிக்கும். க்ஷத்திரிய ஸ்திரீகள், யுத்த முகத்தில் முன்வைத்தகால் பின்வைக்காது இறப்பதற்கே பிள்ளைகளைப் பெருகிருர்கள். ஆகையால் நீ துக்கப்பட்டு என்ன பிரயோஜனம்' என்று சொல்லித் தேற்றினுர்.

வினு 16 :—காந்தாரி தேறுதல் அடைந்ததும் யுத்தகளத்தில் என்ன நடந்தது ?

விடை :— திருதிராஷ்டிரனது வேண்டுகோளின்பேரில் தருமபுத்திரர் யுத்தகளத்தில் மாண்டவரது எண்ணிக்கையையும் தப்பிப் பிழைத்தவரது எண்ணிக்கையையும் சொல்லி, அனேகவிதமாக யுத்தகளத்தில் இறந்த க்ஷத்திரியர் அடையும் லோகாந்தரங்களையும் விஸ்தரித்தார். இதன்பின்பு இந்த ஞானம் தமக்கு வனவாஸம் செய்யுங்கால், லோமசரால் ஏற்பட்டதென்றும் சொன்னுர்.

வினு 17:—ஈமக்கடன்கள் செய்யும் விஷயத்தில் என்ன ஏற்பாடு நடந்தது ?

விடை:—தருமபுத்திரர் உத்தரவின்பேரில் ஸுதர்மா, தௌம்யர், ஸஞ்ஜயர் முதலியோர் யுத்தகளத்தில் இறந்தவர்களது தேகத்தை விதிப்படி தகனம் செய்தனர். உருப்புரியாது கிடக்கும் தேகங்களை ஆயிரக்கணக்காகக் குவித்து ஒரே அடியாய் அக்கினிப் பிரதானம் செய்தனர். இவ்வாறு தகனக்கிரியை முடிவு பெற்றது.

வினு 18:—இதன்பின்பு திருதிராஷ்டிரன் முதலியோர் என்ன செய்தனர் ? அப்பொழுது என்ன ரகஸ்யம் வெளிவந்தது ? மேல் என்ன நடந்தது ?

**விடை**:—தகனக்கிரியை முடிந்ததும் ஜலதர்ப்பணம் செய்ய எல்லோரும் கங்கைக்குள் இறங்கினர். அப்பொழுது குந்தி மிகுந்த துக்கத்துடன் தருமபுத்திரரிடம் வந்து, கர்ணன் அவருக்குத்

தமயன் என்றும் ஆகையால் அவனுக்கும் அவர் தர்ப்பணம் செய்யவேண்டும் என்றும் சொன்னாள். அப்பொழுது தருமபுத்திரர் தமது தமயனை அறியாது தாமே கொன்றுவிட்டதையும், அவன் செய்த விசித்திர யுத்தத்தையும், அவன் கையில் அகப்பட்டுத் தாம்பட்ட பாட்டையும் எண்ணி எண்ணி துக்கிக்க கர்ணனுக்கும் பாண்டவர்கள் தர்ப்பணம் செய்தனர்.



# அநுபந்தம்

## தமிழ் பாரதத்தில் காணப்படும் புதிய கதைகள்

## 7. துரோணபர்வம்

1. **பகவான் அகாரணமாகச் சங்கு ஊதுதல்:**—அபிமன்யு 13-ம் நாள் ஸாயங்காலம் போர்செய்து வருகையில் தன் கைதளர்ந்து கொண்டு வருவதைக்கண்டு, தன் ஸஹாயமற்ற நிலைமை அர்ஜுனனுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று தன் சங்கத்தை தன் முழுபலத்தோடு ஊதினன். இந்த சப்தத்தை பகவான் முதலில் கேட்டு, அப்பொழுது ஸம்ஸப்தகர்களோடு யுத்தம் செய்துகொண்டிருந்த அர்ஜுனனது காதில் அபிமன்யுவின் சங்கநாதம் விழாதிருக்கும்படி தமது சங்கத்தை ஊதினர். அப்பொழுது அகாரணமாக சங்கு ஊதக் காரணம் என்ன என்று அர்ஜுனன் கேட்க, பகவான், 'நீ யுத்தம் செய்யும் விசித்திரயுக்தத்தைக்கண்டு எனக்கு ஸந்தோஷம் உண்டாய் மெய்ம்மறந்து ஸம்ஸப்தகர்களுக்கு பயம் உண்டாகும் என சங்கத்தை இப்பொழுது ஊதினேன்' என்று உண்மையை மறைத்து மறுமொழிகூறி அர்ஜுனனை ஸமாதானம் செய்துவிட்டார்.

2. **அபிமன்யுவதம்:**—அபிமன்யு பத்மவ்யூகத்துள் சண்டை செய்து 13-ம் நாள் ஸாயங்காலம் சோர்ந்து நிற்கையில் ஜயத்ரன் தனது கதையால் முதலில் அவனை அடிக்க பின்பு செத்தபாம்மை அடிப்பதுபோல அருகிலிருந்த மற்றைய அரசர்கள் எல்லோரும் அபிமன்யுவை அடித்துக்கொன்றனர்.

3. **பகவத்மாயை:**—ஸம்ஸப்தக யுத்தத்திலிருந்து அர்ஜுனனும் பகவானும் திரும்பி அன்று ஸாயங்காலம் வருகையில், அர்ஜுனன் அபிமன்யு இறந்ததைக் கேள்விப்பட்ட உடன் தானும் இறப்பான் என்ற எண்ணம் பகவானுக்கு வந்தது. உடனே வரும்வழியில் பகவான் தமது மாயாசக்தியால் அக்னியை வலம்வந்து தீயில் விழும் தருணமாக இருந்த ஒரு பிராம்மணன் அர்ஜுனன்முன் தோன்றும்படி செய்தார். அப்பொழுது அர்ஜுனன் பிராம்மணனிடம் இருந்து அவன் துக்கத்தின் காரணத்தை அறிந்துகொண்டு, 'உன் பிள்ளை இறந்தான் என்பதினால் நீ இவ்வாறு தற்கொலை செய்து பாபத்தை ஸம்பாதித்துக் கொள்ளலாமா? மனிதனாக இருப்பவன் இவ்வளவு

துக்கப்படுவது அழகன்று' என்று ஸமாதானப்படுத்தினான். அதற்கு பிராம்மணன் 'உன் பிள்ளை இறந்தால் உனக்கு வருத்தம் தெரியும். இப்பொழுது என் வருத்தம் எவ்வாறு உனக்குத் தெரியும்? ஆகையால் என்னை வீணாகத் தடுக்காதே. நான் இறக்கிறேன்' என்று தீயின் அருகில் சென்றான். அப்பொழுது அர்ஜுனன் 'என் பிள்ளை இறந்தால் நான் உன்னைப்போல் துக்கத்தில் ஆழ்ந்து இறக்கமாட்டேன். நான் புருஷன். உன்னைப்போன்ற பெண்பிள்ளையல்ல' என்று சொல்லவும், பிராம்மணன் திரும்பி, 'நீ இப்பொழுது சொல்லுவது உறுதிதானா. அப்படியாகில் ஸத்யம் செய். அப்படிச்செய்வாயாகில் நான் தீயில் மூழ்குவதில்லை' என்றான். அர்ஜுனன் உடனே முன் பின் யோசிக்காது 'என் பிள்ளை இறந்தாலும் நான் கடவுள் ஸாக்ஷியாக உன்னைப்போல துக்கத்திற்கு ஆளாகமாட்டேன்' என்று வாக்குக் கொடுத்தான். உடனே பிராம்மணன் அக்கினி முதலியன மறைந்தன; அர்ஜுனன் ஸத்யம் மாத்திரந்தான் நின்றது பகவான் அர்ஜுனனை மிகுந்த ஆச்சரியத்தோடு ஏற இரங்கப்பார்த்தார். அர்ஜுனன் ஒன்றும் அறியாதவனாக தன் படை வீடு வந்தான். உடனே அபிமன்யு இறந்ததைக்கேட்டு அக்னியை வளர்த்து துக்காதிகத்தால் அதில் விழ யத்தனம் செய்கையில், பகவான் அவன் எதிர்வந்து 'பிராம்மணனுக்கு ஒரு நியாயம். உனக்கு ஒரு நியாயமோ. இதென்ன பேதபுத்தியப்பா இது' என்று அர்ஜுனன் வழியில் செய்த சபதத்தை ஞாபகப்படுத்தினார். அவனுக்கு துக்கம் அதிகமாக இருந்தபோதிலும் 'நமது வாக்குக்கு விரோதமாக நடக்க முயன்றோமே' என்ற வெட்கத்தால் அவன் தன் துக்கத்தை மனதில் அடக்கி தீயில் மூழ்காதிருக்கவேண்டி வந்தது.

4. மானஸபூஜை:—மிகுந்த வியாகூலத்தோடு அர்ஜுனன் 13ம் நாள் இரவில் உறங்குகையில் ஸ்வப்பனத்தில் பகவானோடு கைலாஸம் சென்றான். அப்பொழுது அவனுக்குத் தன்னைவிட அதிக சிவபக்தி உடையவர் ஒருவரும் இல்லை, பீமன் கேவலம் காட்டாளன் அவனுக்கு பக்தி என்பதே கிடையாது என்ற எண்ணங்கள் இருந்தன. கைலாஸத்தருகில் போகையில் பகவானது மாயையால் ஒரு மனிதன் ஒரு பெரிய வண்டி நிரம்பி வாடிய புஷ்பங்களைக் கொண்டுவருவதை இருவரும் கண்டார்கள். அர்ஜுனன் இதென்ன என்று வண்டி இழுத்து வருபவனைக்கேட்க, வேலையில் கருத்தாக இருந்த வேலைக்காரன் ஒன்றும் மறுமொழி கூறவில்லை. உடனே இருவரும் அவன் என்ன செய்யப்போகிறான் என்பதைப்பார்க்க அவன்பின்னே

செல்ல அவன் அப்புஷ்பங்களை ஒரு மலைபோல் குவித்திருந்த வாடல் புஷ்பக் குவியலிடம் கொண்டுபோய் கொட்டுவதைக் கண்டார்கள். அங்கு நின்றுகொண்டிருக்கையில் அநேக வண்டிகள் நூற்றுக்கணக்காக வாடல் புஷ்பங்களைக் கொண்டுகொட்ட, அதைக் கண்டமாத்ரத்தில் அர்ஜுனனுக்கு அவைகளின் உண்மையை அறியவேண்டும் என்ற அடங்கா ஆவலுண்டாயிற்று. அவன் அவ்வேலை செய்பவரை எவ்வளவோதரம் கேட்டுப் பார்த்தபோதிலும், அவர்கள் மறுமொழிகூடச் சொல்ல ஒழிவின்றி விரைவில் தமது வேலையையே செய்துகொண்டிருந்தனர். வெகு நாழிகை அர்ஜுனன் அவர்களை அடிக்கடி கேட்டதின்பேரில், ஒருவன் மாத்திரம் வெகு கோபத்தோடு பின்வருமாறு சொன்னான். 'எங்களுக்கு வேலையோ அஸாத்யம். நீர் எங்களை இவ்வாறு தடைசெய்வது ஸரியல்ல. 500 வண்டி நிர்மால்யங்கள்தான் நாங்கள் இங்கு கொண்டுவந்து கொட்டி இருக்கிறோம். இன்னும் 500 வண்டி புஷ்பங்கள் சிவபெருமானது பாதத்தில் குவிந்து கிடக்கின்றன. நேற்றுப் பாண்டவ வீரனாகிய பீமஸேனன்செய்த பூஜையில் விழுந்த புஷ்பங்கள் இவை. அவன் இன்று பூஜை தொடங்குவதற்கு இன்னும் கொஞ்ச நாழிகைதான் இருக்கிறது. அதற்குள் நாங்கள் இந்நிர்மால்யங்கள் எல்லாவற்றையும், எடுத்தெறிந்து விட வேண்டும். இனிமேல் எங்களை இவ்வாறு தடைசெய்யாதேயும்,' என்று சொன்னான். இதைக்கேட்டதும் அர்ஜுனனுக்கு ஆச்சரியம் அதிகரிக்க, 'அர்ஜுனனா இவ்வாறு பூஜை செய்வது. அல்லது பீமஸேனனா?' என்று அவன் அந்த வேலைக்காரனை கேட்டான். அதற்கு அவன் 'பீமன்தான் இப்பூஜை செய்தது. அர்ஜுனனது பூஜை எல்லாம் வெறும் ஆடம்பரம் தான்,' என்று மறுமொழி கூறுகையில், அங்கு ஒரு மனிதன் ஒரு சிறு கூடையில் கொஞ்சம் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு வருவதை அர்ஜுனன் கண்டான். உடனே அவனை நோக்கி பகவான் 'இது யார் பூஜை செய்தது' என, அவன் 'இது அர்ஜுனன் என்ற டம்பாசாரியால் செய்யப்பட்ட பூஜை என்றான். அப்பொழுதுதான் 'நான் செய்யும் ஆடம்பரமான பூஜையைவிட பீமன் சிரப்பாட்டிற்கு

முன் சற்று மனதாரச்செய்யும் பூஜையே மேல்,' என்று அர்ஜுன னுக்குப்பட அவன் கர்வம் அடங்கிப்போயிற்று.

5. பகவான் ஸூர்யனை மறைத்தல் :—பகவான் ஸூர்யனை தமது சக்கிராயுதத்தால் மறைத்து அஸ்தமித்ததாக 14 - ம் நாள் ஸாயங்காலம் காட்டினார்.

## 8. கர்ண பர்வம்

1. பகவான் கர்ணனது தர்மத்தை தானம் வாங்குவது:—17-ம் நாள் மாலை அர்ஜுனன் எவ்வளவுதான் பாணங்களை விட்டபோதிலும் கர்ணனை அவனால் காயப்படுத்த முடியவில்லை. இதைக்கண்ட பகவான் இதன் காரணங்களை அறிந்து கொண்டவராய் ஒரு பிராம்மண உருக் கொண்டு யுத்தகளத்தில் கர்ணனிடம்வந்து தமக்கு ஒரு விஷயம் வேண்டும் அதை தானம் கொடுக்கவேண்டும் என்று கேட்டார். அதற்கு கர்ணன் இசைய, 'உன் தர்மங்கள் யாவற்றையும் கொடுத்து விடு' என்று பிராம்மணன் கேட்டார். அப்பொழுது கர்ணன் ஸாயங் காலத்தில் தன்னிடம் இருந்த வஸ்துவைக் கேட்டதற்காக பிராம்ம ணனை மெச்சிக்கொண்டு தன் தர்மங்கள் எல்லாவற்றையும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அவருக்குக் கொடுத்தான். அதன்பின்பு அர்ஜு னனது பாணங்கள் யாவும் அவன்மேல் தைக்க சீக்கிரத்தில் அவன் அன்று இறந்தான்.

2. குந்தீ யுத்தகளத்தில் புலம்பல்:—கர்ணன் அடிபட்டு விழுந் ததும் குந்திதேவி தன் முதற்பிள்ளையாகிய கர்ணன் பேரில் அழுது கொண்டு வந்து விழுந்தாள். இந்த விபரங்கள் யாவும் பாண்டவர் களுக்குத் தெரியவர அவர்கள் எல்லோரும் மிகுந்த வருத்தம் அடைந்தனர்.

## 9. சல்லிய பர்வம்

1. துரியோதனன் மடுவிலிறங்கியது:—18-ம்நாள் நடுப்பகலில் யாவரும் இறந்தபின்பு துரியோதனன் ஓடிப்போய் துவைபாயனஸர ஸில் இறங்கி ஜலஸ்தம்பம் செய்துகொண்டு மரணமடைந்த ஸேனை உயிர்த்து எழ மிருத ஸஞ்சீவி மந்திரத்தை ஒருவரும் அறியாதபடி

தண்ணீரிலிருந்தவாறு விதிப்படி ஜபிக்க யுத்தகளத்தில் இறந்து விழுந்திருந்த பிணங்களது கால் கைகள் அசையத்தொடங்கின. இதனால் பாண்டவர்களுக்கு துரியோதனன் என்ன மாயம் செய்கிருனோ என்ற கவலை வந்தது.

2. **கதாயுத்தம்:**—இந்த யுத்தம் பீமனுக்கும் துரியோதனனுக்கும் நடந்துவருகையில் பீமனது உயிர் நிலையை துரியோதனன் கேட்க அவன் உள்ளபடி தன் தலை தனக்கு உயிர்நிலை என்று சொன்னான். அப்பொழுது பீமனை துரியோதனன் தலையில் அடிக்க அவனுக்கு மிகுந்த களைப்பு உண்டாயிற்று. உடனே அவன் துரியோதனனது உயிர் நிலையைக் கேட்க அவன் தனக்கும் தலைதான் உயிர்நிலை என்று பொய்சொன்னான். உண்மையில் அவனுக்குத் தொடையில் உயிர் நிலை. பீமன் துரியோதனனை எவ்வளவுதான் தலையில் அடித்தும் அவனுக்குக் களைப்பே வரவில்லை. பின்பு பகவானது உத்தரவுப்படி அர்ஜுனன் காட்டிய ஜாடையைத் தெரிந்துகொண்டு பீமன் துரியோதனனைத் தொடையில் அடித்துக்கொன்ருன்.

# சத்தியவல்லி

## ஓர் சிறந்த தமிழ் நாவல்

மிஸ்டர். ஆர். பி. குழந்தைசாமிப்பிள்ளை, பி. ஏ., எல். டி.,
அவர்கள் எழுதியது. சென்னை சர்வகலாசாலை முக்கிய
பரீக்ஷகரான ராவ் ஸாஹேப் மிஸ்டர் T. ராமகிருஷ்ண பிள்ளை, பி. ஏ.,
அவர்கள் எழுதிய சிறந்தமுகவுரையுடன் கூடியது. விலை அணா 12

*ஸத்யமே ஜயம் எனும் படிப்பினையையும், கடவுளை நம்பினோர் கைவிடப் படார் எனும் நீதியையும் கற்பிக்கிறது. ஸர்மஸங்கடங்களிலும், கஷ்டத் திலும் நன்மையையே கைபிடிக்கவேண்டும் எனும் நிலைமையையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருக்கிறது. தவிர, அக்காலங்களில் மனம் அலை பாயும் விதத்தை விவரிப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், யுக்தியின் ஸரசகமும், கதையின் நாட்டியும், மனதை யிழுக்கும்வன்மையும் எவரும் வியக்கத்தக்கவை.*

*இப்புத்தகம், கவர்ன்மெண்டு டிரெயினிங் ஸ்கூல்களுக்கு டெக்ஸ்டு புக் காக ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், அநேகம் பாடசாலைகளிலும்* 3,4,5-ம் *பாரங்களுக்குப் பாடபுத்தகமாக வைத்து நடத்தப்பட்டுவருகிறது.* மிகவும் *எளிய நடையில் எழுதப்பட்டது.* அவசியம் ஒவ்வொரு பெண்டிரும் வாசிக்கவேண்டிய புத்தகம்.

### இப்புத்தகத்தைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்.

*The Standard.*—* * Situations are contrived with skill and the plot is constructed in an appealing way.

*The Hindu:*—* * *We commend the book for ladies and boys.*

*Rev. D. Devapriam, B.A., L.T.*, Head Master, L. M. High School, Shiyali:—Your Tamil Novel *is simply excellent in matter and style. It deserves to be intrdouced as an extra reading book in Schools.*

சுதேசமித்திரன்:—* * * *கதாநாயகியான சத்தியவல்லி எவ்வளவோ கஷ்ட தசைக்கு வந்துகூடத் தனது* சத்தியத்தையும், பிதாவின் ஆக்கினை யையும் *தளரவிடாமல் பாதுகாத்த விதத்தை நூலாசிரியர் மிக நன்றாய் எடுத் துச் சொல்லுகிறார்.*

பூர்ண சந்திரோதயம்.—* * * பெண்பாலார் இப்புத்தகத்தை வாசிப்பார்களாகில் மனத்தூய்மை எய்துவார்கள். நன்மதியும் பெறுவார்கள்.

---

ஜனரல் ஸப்ளைஸ் கம்பேனி, மயிலாப்பூர், மதராஸ்

# LESSONS from GEOLOGY

## பூதத்வ போதினி

By Mr. M. R. Subrahmanyam, B.A., L.T., Assistant, Teachers' College, Saidapet. With numerous illustrations.

**Calico Bound, As. 8; Paper Bound, As. 6.**

சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ் உதவிபோதகரான Mr. எம். ஆர். சுப்பிரமணியம், பி.ஏ., எல்.டி. அவர்கள் எழுதியது. அநேகம் படங்களுடன் கூடியது. காலிகோ பைண்டு, அணா 8; பேபர் பைண்டு, அணா 6.

CONTENTS.


1. The Earth and its crust
2. Rocks and their classification.
3. Fossils.
4. Sedimentary and Aqueous rock.
5. Clayey rocks and coal.
6. Structure of Aqueours rocks.
7. The earth movements and faults.
8. Denudation of rocks in tropical regions.
9. Denudation of rocks in temperate regions.
10. Denudation of rocks in cold regions
11. Volcanoes.
12. Volcanic rocks.
13. Granitic rocks.
14. Metaphorphic rocks.
15. Diamond, Coal and Gold in India.


பொருளடக்கம்.


1. பூமியும் அதன் மேற்பரப்பும்.
2. மலைகளும், அவைகளின் வகுப்பு வகுப்புகளும்
3. சிலா ரூபங்கள்.
4. வண்டல்களாலாகிய அல்லது நீர்ஸம்பந்தத்தாலாகிய மலைகள்
5. மண்மலைகளும் நிலக்கரியும்
6. நீர் ஸம்பந்தத்தாலாகிய மலைகளின் அமைப்பு.
7. பூமி அசைவும் படைகளின் களங்களும்
8. உஷ்ண ப்ரதேசங்களில் மலை உரிதல்.
9. ஸம சீதோஷ்ண தேசங்களில் மலை உரிதல்.
10. குளிர் தேசங்களில் மலை உரிதல்.
11. எரிமலைகள்.
12. எரிமலை ஸம்பந்தமான மலைகள்.
13. கருங்கல் மலைகள்.
14. உருவம் மாறின மலைகள்.
15. இந்தியாவிலுள்ள வஜ்ரமும், நிலக்கரியும், பொன்னும்


சில முக்கிய அபிப்பிராயங்கள்.

**The Madras Mali.**—* * The book is well adpted for introduction in Elementary Schools.

**H. Narayana Row, Esq., M.A., F.G.S.,** Lecturer in Geology, Presidency College, Madras.—* * The author has given a general outline of the subject in an *easy and popular style. I have no doubt that the book will supply a real want* and I hope it will be largely used in Secondary schools and especially teachers.

**The Hindu.**—* * We are sure the pupils of the Elementary and the Secondary Schools and especially the teachers of the Elementary and the Training Schools *will be highly benefited by this book.*

---

# சந்திரசேகரன்

இது 'ஆனந்தமடம்' என்ற தேசபக்தி புகட்டும் நாவலின் ஆசிரியராகிய ஸ்ரீபங்கிம்சந்திர சட்டோபாத்தியாயரால் பங்காளிபாஷையில் இயற்றப் பட்டு அந்தப் பங்காளி பாஷையிலிருந்தே நேராக தமிழில் மஹேச குமார சர்மாவால் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் மூலத்தின் சொன்னயம் பொருணயமெல்லாம் சிறிதேனும் குன்றாமல், கற்பின் பெருமை யையும், வைராக்கியச் சிறப்பையும், தன் மறுப்பின் மாட்சியையும் விசேஷ மாய் விளக்கிய அற்புதக்கதை. அழகாய் வர்ணிக்கப்பட்டது. கற்புநிலையி னின்றும் தவறுவதற்குச் சிறிது முயன்ற சைவலினி யென்னும் பெண்ணுக் குத் தனது பர்த்தா யோகசக்தியால் அருளிய வசீகர நித்திரையின் பிரபாவத் தால் அவள் துர்க்குணம் மாறி கிருதார்த்தமான வைபவத்தை இந்நூலைப் படித்தே அறியவேண்டும். விலை, அணா 8

# சுதேச வைத்திய ரத்தினம்

நம் நாட்டிலுண்டாகும் செடி கொடிகள், காய் கனிகள், கடை மருந்து கள் முதலியவற்றின் குணம், செய்கை, உபயோகம், உபயோகிக்கும் விதம், அவற்றைப் பலநோய்களுக்கும் உபயோகித்துக் குணங்கண்ட ஐரோப்பிய டாக்டர்மார்களின் பெயர்களுடனும், பல நூல்களின் ஆதாரங்களுடனும், ஒவ்வொரு மூலிகைகளுக்கும் தமிழ் இங்லீஷ் பெயர்களுடனும், அந்நோய் களுக்கு வைத்தியருதவியின்றி நாமே செய்துகொள்ளக்கூடிய விபரங்களுட னும் சிறுவர்களும் வாசிக்கக்கூடிய செந்தமிழ் நடையில் வரைப்பட்டிருக் கின்றது. இரண்டாம் பதிப்பு. விலை, ரூ. 1

---

# பிரபாவதி

இது வங்காளி பாஷையில் கனந்தங்கிய நரேந்திரநாத சட்டர்ஜி அவர்கள் இயற்றிய நவீனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. கஷ்டம் கூலிதரும், முயற்சி திருவினையாக்கும், நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினால் வரும் ஸுகம் முதலியவைகளைப் பற்றிய இனிய செந்தமிழ் நவீனம். ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ்வைக்க முடியாமல் படிக்கும்படி செய்யும் திறமையுள்ளது. ஸ்ரீசைல தாதாசாரியாரால் இயற்றியது. விலை அணா 4

## விஜயசுந்தரம்

விஜயசுந்தரம் என்னும் செந்தமிழ்க் கற்பனைக் கதை, பெரும்பாலும் ஆங்கிலேய நாவல்களின் போக்கை யனுசரித்து, எளிய நடையில் நாடகச் சாயலாயும், சம்பாஷணை ரூபமாயும், "கமலாக்ஷி" என்னும் அரிய கற்பனைக் கதையைப்போல் எழுதப்பெற்றுள்ளது. இதிலும் சந்தர்ப்பத்துக்கேற்ற விதம் அழகிய படங்கள் ஏறக்குறைய 20 சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கங்களையும், நன்னெறியையும், செந்தமிழ் நடையையும், உலக தந்திரங்களையும் அறிய விரும்புவோர்க்கெல்லாம் இக்கதை மிகுந்த பயனளிப்பதோடு மனக்களிப்பையும் தரும் என்பதற் கையமில்லை. அன்றியும் நாட்டுக்கோட்டை செட்டிகளுடைய வியாபாரத்திலுண்டாகும் கெடுதிகளும் அக்கெடுதிகள் நீங்கவேண்டிய உபாயங்களும், இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

விலை, காலிகோ பயிண்டு, ரூ. 2—8 ; பேப்பர் பயிண்டு, ரூ. 2—0

## அயாஷா

அல்லது

## ஐயாயிரவருடம் வாழ்ந்த அரசி

இக்கதாநாயகி சுமார் 5000 வருடங்கள் சீவித்திருந்ததாகக் கூறப்படுகிறதும் உண்மையென்றே இந்நூலை ஆங்கிலத்தில் எழுதிய கிரந்தகர்த்தர் கூறுகிறார். இக்கதையால் இறந்தவர் மறுபடி பிறப்ப துண்மையென்றும், பிறப்பு இறப்பைச் சேர்ந்த இன்னும் பல இரகசியங்களும் வெளியாகின்றன. இதில் அடங்கியுள்ள விஷயங்கள் அற்புதத்திலும் மகா அற்புதமாய்த் தோன்றினும் அசம்பாவிதமானவைகளாய்ப் புலப்படவில்லை.

இது இனிமையான எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இது இரண்டு பாகங்களாய், நேர்த்தியான ஹாப்டோன் படங்களோடு அச்சிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகமும் டிம்மி 160 பக்கங்கள் கொண்டது.

முதல் பாகம், அணா 12 ; இரண்டாம் பாகம், அணா 12.

---

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

## ஹைகோர்ட்டு வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ ப. சம்பந்த முதலியார்

### அவர்கள் இயற்றிய நவீன நாடகங்கள்

| | | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| **அமலாதித்யன்.**—இது ஷேக்ஸ்பியா மகாகவி எழுதிய 'ஹாம்லெட்' என்னும் நாடகத்தின் தமிழ் அமைப்பு | | | ... | 1 | 0 |
| லீலாவதி ஸுலோசனு | ... | .. | ... | 0 | 12 |
| இரண்டு நண்பர்கள் | .. | ... | ... | 0 | 12 |
| சத்ருஜித் | ... | ... | .. | 0 | 12 |
| மனோஹரன் | ... | ... | ... | 0 | 12 |
| காலவரிஷி | ... | ... | ... | 0 | 8 |
| யயாதி | ... | ... | ... | 0 | 8 |
| சாரங்கதரன் | ... | ... | ... | 0 | 8 |
| வேதாள உலகம் | ... | .. | ... | 0 | 8 |
| காதலர் கண்கள் | ... | ... | ... | 0 | 12 |
| பேயல்ல பெண்மணியே | .. | ... | ... | 0 | 8 |
| கள்வர் தலைவன் (புதிய பதிப்பு) | ... | ... | ... | 0 | 12 |
| ரத்னுவளி | ... | ... | ... | 0 | 12 |
| பொன் விலங்குகள் | .. | ... | ... | 0 | 8 |
| நற்குல தெய்வம் | ... | ... | ... | 0 | 8 |

BY THE SAME AUTHOR IN ENGLISH

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Harischandra** (A Drama) | ... | ... | ... | 1 | 0 |
| **Yayathi** ( Do. ) | ... | ... | ... | 0 | 8 |

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்ணகி | ... | .. | ... | 0 | 12 |
| பங்கஜாக்ஷி | ... | ... | ... | 0 | 8 |
| கமலினி | ... | . | ... | 0 | 10 |
| மரகதமணி | ... | ... | ... | 1 | 0 |
| ஸுசீலா | ... | ... | ... | 1 | 0 |
| அம்பாலிகை | ... | ... | ... | 0 | 12 |
| சீதாராம் | ... | ... | ... | 1 | 0 |
| தேவலோக கிரிமினல் கேஸ் | ... | ... | ... | 1 | 8 |
| பத்மாவதி, 2 பாகமும் | ... | ... | ... | 1 | 0 |

---

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

## ஸ்ரீமத் பாகவத வினாவிடை, 1-ம் பாகம்

### முதல் ஒன்பது ஸ்கந்தங்களின் கதை அடங்கியது

கபிலவாஸுதேவர், த்ருவர், ப்ராசீன பர்ஹிஸ், ரிஷபயோகி, ஜடபரதர், அஜாமிளன் முதலிய மஹான்களின் சரிதையும், ஸ்ருஷ்டி விஷயம், வருணாசிரம தருமம் முதலிய விஷயங்களும், தக்ஷயாகம், கஜேந்திரமோக்ஷம் முதலிய உபாக்யானங்களும் அமைந்திருப்பதன்றி, மஹாப் பிரளயம், சாஸ்திர சிருஷ்டிக் கிரமம், சாஸ்திர புராண சிருஷ்டிகளின் பொருத்தம், திரிமூர்த்திகளின் ஸமரஸம், நெடுங்கால அளவை ஆகிய இவைகளைப்பற்றிய வியாஸங்களை அநுபந்தமாக உடையது. பரசுராமாவதாரம் வரையுள்ள கதை பொருந்தியுள்ளது. பத்து உயர்ந்த சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது.

படங்களின் விபரம்.—(1) கிருஷ்ண பரமாத்மா வேணுகானம், (2) சுகரம்பா, (3) க்ஷீராப்தி நாதர், (4) வராஹாவதாரம், (5) பகவான் துருவருக்குப் பிரத்யக்ஷமாதல், (6) மத்ஸ்யாவதாரம், (7) கூர்மாவதாரம், (8) நரஸிம்மாவதாரம், (9) வாமனாவதாரம், (10) பரசுராமாவதாரம். படங்கள் அழகாய் வழவழப்பான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை, ரூ. 1

### ம-ா-ா-ஸ்ரீ பண்டித நடேச சாஸ்திரியாரால் எழுதப்பட்டவை

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| திக்கற்ற இருகுழந்தைகள் | | 0 | 12 |
| தீனதயாளு | | 0 | 8 |
| ஸ்ரீ மாமி கொலுவிருக்கை | | 0 | 8 |
| தலையணை மந்திரோபதேசம் | | 0 | 8 |
| முத்திரா ராக்ஷஸம் | | 0 | 4 |
| மிருச்சகடி | | 0 | 4 |
| வேணீ ஸம்ஹாரம் | | 0 | 3 |
| ஷேக்ஸ்பீயர் நாடகக் கதைகள் | | 0 | 6 |
| கோமளம் குமரியானது | | 0 | 8 |
| நளோபாக்கியானம் | | 0 | 12 |
| பாலகாண்டம் | வால்மீகி இராமாயண வசனம் (உயர்ந்தபதிப்பு) | 1 | 12 |
| அயோத்தியாகாண்டம் | | 3 | 0 |
| ஆரண்யகாண்டம் | | 1 | 12 |
| கிஷ்கிந்தாகாண்டம் | | 1 | 12 |
| ஸுந்தரகாண்டம் | | 1 | 12 |

BY THE SAME AUTHOR IN ENGLISH

"Indian Folk Tales," containing 51 interesting tales. 533 pages ... ... ... 2 8

### ஏ. கிருஷ்ணசாமி ஐயா இயற்றியவை

| | | | |
|---|---|---|---|
| வாஸந்திகை | ... | 0 | 8 |
| சபலை | ... | 0 | 8 |

**Address:—The General Supplies Co., Mylapore, Madras.**

## இந்திரஜித்தன் அல்லது கள்ளர்தலைவன்

இது ஒரு அபூர்வமான கள்ளன் கதை. இக்கதையால், ஒருவன் எவ்வளவு சாமர்த்தியமாய் தான் துஷ்ட காரியங்களைச் செய்தாலும் அச்சமயம் அவைகள் வெளிவராமல் மறைபட்டு அவன் க்ஷேமத்தை யனுபவிப்பதுபோல் தோன்றினாலும், முடிவில் யாவும் வெளியாகி அவன் அவமானத்தையும், உலக நிந்தனையையும், துன்பத்தையும் அடைவது திண்ணமென்றும், நேர்மை, சத்தியம், இரக்கம் ஆகிய நற்குணங்களைக் கடைபபிடித்த ஒருவன் தற்காலம், கஷ்ட திசையை யனுபவிப்பதாய் தோன்றினாலும், கூடிய சீக்கிரத்தில் புகழையும் செல்வத்தையும் பெற்று மனோ நிம்மதியோடு க்ஷேமத்தை யனுபவிப்பானென்பது உண்மையென்றும் நன்குவிளங்கும். விலை, அணு 12

## கமலாக்ஷி

கமலாக்ஷி என்னும் செந்தமிழ் கற்பனைக்கதை, பெரும்பாலும் ஆங்கிலேய நாவல்களின் போக்கை அனுசரித்து, எளிய நடையில் நாடகச்சாயலாயும், சம்பாஷணை ரூபமாயும், "விஜயசுந்தரம்" நூலாசிரியரால் எழுதப்பெற்று இரண்டாம் பதிப்பு அச்சாகி விற்பனையாகி வருகிறது. இதில் சந்தாபபத்துக்கேற்ற விதம் அழகிய படங்கள் ஏறக்குறைய 20 சேர்த்திருக்கின்றன. தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கங்களையும், நன்னெறியையும், செந்தமிழ் நடையையும், உலக தந்திரங்களையும் அறிய விரும்புவோர்க் கெல்லாம் இக்கதை மிகுந்த பயனளிப்பதோடு மனக்களிப்பையும் தரும் என்பதற்கு ஐயமில்லை. அன்றியும் பத்தொன்பதாவது அத்தியாயம் தருக்கநெறி பிறழாது சாஸ்திரவிசாரணையைச் செய்யும் நன்மையினையும் அதன் உயர்வினையும் காட்டுவதால் அது அநேகம் பால்யைகளுக்கும் மிகவும் பயன்படும் என்பதற்கு ஐயமில்லை.

விலை, காலிகோ பயிண்டு, ரூ. 2 8: ராபர் பயிண்டு ரூ. 2

## மோஹனு

இந்த நாவலில் இன்றியமையாதிருக்கவேண்டிய பூடணமாகிய கற்பின் தன்மையைப் பற்றியே அறிவுறுத்தக் கூடிய விஷயங்கள் யாவும் அடங்கியிருக்கின்றது. "கற்பெனப்படுவது சொற்திறம்பாமை" என்றபடி, ஒரு ஸ்திரீயானவள் தன் கணவனை யெவ்வாறு மதித்துநடக்கவேண்டுமென்பதும், இன்ப துன்பங்களை யடையுங்காலங்களில் கொழுநனிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டியதென்பதும், தனக்கும் தன் கற்பிற்கும் இடையூறுன ஆபத்துகள் நேர்ந்த காலங்களில் தான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதும், முக்கியமாய் ஸ்திரீகளுக்குவேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் விஷயங்களைப்பற்றியும் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. விலை, அணு 5

## மிஸ்டர் ஆர். எஸ். நாராயணஸாமி அய்யர், B.A., B.L., இயற்றியது

### மாண்டவன் மீண்டமாயம (The Mystery of Revival)

1885-ம் ஆூ நாடெங்கும் பிரபலமாயிருந்த மங்களபுரம் கோலை விஷயமும், அதில் மங்களபுரத்தில் வசித்துவந்த சோமு என்பவர் இறந்ததும், அவர் பிரேதமகப்பட்டதும், அவருடைய கொடும் பகைவனை தர்மராஜு காணுமற்போனதும், அவா மனைவி ஜானகியம்மாள் குற்றஞ்சாட்டப்பட்டு விடுதலையானதும், எவ்வளவோ நுட்பதாசிகளாகிய போலீஸ் நிபுணர்களாலும் கூட இம்மாயக் கொலையின் இரகஸ்யம் இதுவரை கண்டுபிடிக்கப்படாது, மற்ற மாயங்களைடபோலவே இம்மங்களபுரம் கொலையும் மனிதர் மனத்தினின்றும் மாயபபழங்கதையாய் மறைந்ததும், அதன் ரகஸ்யம் கடைசியாகச் சோமுவின் புதல்வன் ராமஸ்வாமியின் முயற்சியாலும், பால்ய வக்கீல் கைலாஸத்தின் புத்திநுட்பத்தாலும் 20 வருஷங்களுக்குப்பிறகு வெளியாகும்படி ஸம்பவித்ததும் இந்நாவலின் முக்கிய கதாம்சமாக அமைந்திருக்கின்றது. விலை, அணு 8

# மானிட ஜீவிய சிந்தாமணி

## (ஆண்மையின் அழிவும் அதனை யகற்றும் விதமும்)

இப்புத்தகம் அமெரிக்காக் கண்டத்திலுள்ள பேர்போன அநேக அரிய பெரிய நவீன சாஸ்திரங்களிலிருந்தும், நமது பூர்வீக கிரந்தங்களிலிருந்தும் எடுத்து எழுதப்பெற்றுள்ளது. மானிடராய்ப பிறந்த ஒவ்வொருவருக்கும் இம் "மானிட ஜீவிய சிந்தாமணி" என்னும் புத்தகம் இன்றியமையாதது. இதில் சரீரதத்வ விளக்கம், ஸ்திரீ புருஷாகளின் ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும், சூதகபந்தம் சூதகப்பெருக்கு, ஆண்மலடு பெண்மலடு, தாது நஷ்டம் முதலிய ரோகங்களின் விபரங்களும், அவற்றிற்கான பரிகாரங்களும், மருத்துவ சாஸ்திரம் சுகாதார சாஸ்திரம், சிசுபரிபாலனம், பால்ய விவாகம், விவாகமும் தேசாச்சாரமும், விவாகம் செய்யத்தகாத குடும்பங்கள், ஆண்பெண் சிசு உற்பத்தி விபரம், பாம்பு, தேள், நண்டுவாக்கல்லி, வண்டுகடி முதலிய விஷக் கடிகளும், அவற்றிற்கான பரிகாரங்களுடனும் இன்னும் இவ்விடத்தில் சொல்லமுடியாத அநேக இரகசியமான விஷயங்களும் அடங்கியது. சித்திரப்படங்களுடன் கூடியது. விலை, ரு. 1 8

---

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

## ராஜம் அய்யர் சரிதை

இது 'கமலாம்பாள்' சரித்திரம் என்னும் அற்புதக்கதையின் நூலாசிரியரும் பிரபுத்த பாரதம் என்ற மாதாந்தப பத்திரிகையை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கிலம் உணரும் திறனுடையவர்களுக்கு நமது வேதாந்த உண்மைகளை எளிய நடையில் ஸுலபமாகத் தெரிவித்தவரும் ஆகிய ஸ்ரீமான் பி. ஆர். ராஜம் அய்யர், பி. ஏ., அவர்கள் சரித்திரம். இதனுடன் இவர்செய்த நூல்களிலிருந்து எடுக்கபபட்டுள்ள உபதேசமொழிகளும், இவர் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய வேதாந்த வியாஸமும் சேர்க்கப்பட்டுள்ளன. அணு 8

## கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து

### ஓர் சிறந்த துப்பறியும் தமிழ் நாவல்

சாந்தமும் அமைதியுமுள்ள ஓர் பெருங்கடல் மத்தியில் அழகிய சந்திரிகையுடன் கூடிய ஓர் இரவில், உத்ஸாகமாய்ச் சென்றுகொண்டிருக்கும் ஓர் பெரிய கப்பலானது திடீரென்று ஆவிற்பவிக்கும் பெரும் புயலால் தாக்கப்பட்டு, அங்குமிங்கும் தங்நிலையற்றுத் தத்தளித்துப் பெருந்துன்பமும் கலக்கமும் அடைந்து கடைசியாய் அப்புயலின் ஆபத்தினின்றும் நீங்கி மறுபடி தந்நிலை யடைவதுபோல், எவ்வளவோ சவுகரியமாயும் சந்தோஷமாயும் வாழ்ந்துவந்த ராமஸ்வாமி சாஸ்திரியார் குடும்பமானது திடீரென்று துன்பத்துக்குட்பட்டு, பலவித கஷ்டங்களனுபவித்துக் கடைசியாய் அவைகளினின்றும் தப்பித்து மறுபடி சவுக்கியமடைந்து வாழநேர்ந்ததே இந்நாவலின் கதாம்சமாகும். விலை, அணு 10

## கம்பனும் கலைமகளும்.

இது ஓர் இனிய செந்தமிழ் சரித்திரம். இதில் கலைமகளின் கருணையும் பெருமையும், கவிச்சக்ரவர்த்தி கம்பரின் சரித்திர விபரம், கம்பர் இராமாயணம் இயற்றிய விபரம், தாசியின் மோசகரமான சாகஸம், கம்பர் சேரதேசமடைந்து சிறக்க வாழ்தல், அம்பிகாபதி ஒட்டக்கூத்தர், காளமேகப்புலவர் முதலிய புரர்தனப் புலவர்களின் பெருமைகளுடன், காதல்மாட்சி, சிநேக வாஞ்சை, யுக்தி புக்திகளின் மகிமை, பக்திரஸம், சிருங்காரரஸம், சோகரஸம், இன்பரஸம் முதலிய நவரஸங்களும் ஊற்றெடுத்தோட பண்டித பாமரரஞ்சிதமாக வரையப்பட்டிருக்கிறது. இதில் சாதுரிய சம்பாஷணைகள் வெகு விநோதமாயிருக்கும். விலை, அணு 4

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

## இதர தமிழ் புத்தகங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இங்கிலீஷ் வைத்திய ஸங்க்ரஹம் | 3 | 8 |
| அனுமான்லிங் | 0 | 12 |
| காமாக்ஷி | 0 | 8 |
| பிரேமகலாவதீயம் | 0 | 12 |
| வத்ஸலா | 0 | 8 |
| கண்மணி | 0 | 3 |
| சின்னத்தம்பி | 0 | 4 |
| லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம் | 0 | 12 |
| சாரதாம்பாள் | 0 | 8 |
| புருஷோத்தமன் | 0 | 10 |
| மாலிகாபூஷணி | 0 | 10 |
| ஆங்கில சிரோமணிகள் | 0 | 12 |
| மோஹனாங்கி | 1 | 4 |
| ஸ்ரீ விவேகானந்த விஜயம் | 1 | 4 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம் | 1 | 4 |
| தாயுமானவர் பாடல் (உயர்ந்த பதிப்பு) | 1 | 0 |
| நைடதம் : மூலமும் உரையும் | 2 | 0 |
| வினோதரஸ மஞ்சரி | 1 | 2 |
| அராபிநைட் கதை : படங்களுடன் | 2 | 8 |
| விக்கிரமாதித்யன் கதை | 1 | 8 |
| தேசபக்தர்கள் சரித்திரம் | 0 | 12 |
| நாலடியார் உரையுடன் | 1 | 2 |
| அம்பாலிகை | 0 | 12 |
| தாமோதரன் | 0 | 12 |
| இளமையும் ஒழுக்கமும் | 0 | 8 |
| சத்தியவல்லி | 0 | 12 |
| பிமலா | 0 | 6 |
| யெலேன் | 0 | 6 |
| கற்பகவல்லி | 0 | 8 |
| திருமாளிகை | 0 | 6 |
| குணசீலன் | 0 | 10 |
| மீனாக்ஷி | 1 | 0 |

### ஜே. ஆர். ரங்கராஜு இயற்றியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| ராஜாம்பாள் | 0 | 12 |
| சந்திரகாந்தா | 0 | 12 |
| மோஹனசுந்தரம் | 0 | 12 |

### விவசாயிகளுக்கு மிகவும் அவச்யமானவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| நெல் | 1 | 0 |
| கரும்பு | 1 | 0 |
| தென்னை | 1 | 0 |
| மாம்பழம் | 0 | 7 |
| விவஸாய போதினி | 1 | 4 |
| விவஸாய விளக்கம் | 1 | 4 |

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

Temple & Co., Madras.